# அரசியல் அறிவியல்

**மேல்நிலை - முதலாம் ஆண்டு**

தீண்டாமை ஒரு பாவச்செயல்
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்
தீண்டாமை மனிதத்தன்மையற்ற செயல்


**தமிழ்நாட்டுப்**

**பாடநூல் கழகம்**

கல்லூரிச் சாலை, சென்னை - 600 006.

© தமிழ் நாடு அரசு
முதற்பதிப்பு 2004
மறு பதிப்பு 2006

*குழுத்தலைவர்*

**முனைவர். சோ. சுப்பிரமணியன்,**
தலைவர், பாடத்திட்டக்குழு,
முன்னாள் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
அரசியல் துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.
"சரசுவதி இல்லம்", 87/25, செட்டித் தெரு, அயன்புரம், சென்னை

*மேலாய்வாளர்கள்*

**முனைவர். வ.நா. விசுவநாதன்**
இணைப் பேராசிரியர்,
அரசியல் துறை, மாநிலக்கல்லூரி,
சென்னை.

**முனைவர் பி. கிருட்டிணமூர்த்தி**
இணைப் பேராசிரியர், அரசியல்
துறை, அண்ணாமலைப்
பல்கலைக் கழகம்
அண்ணாமலை நகர்.

**நூலாசிரியர்கள்**

**திரு. எம். முரளி,**
முதுநிலை விரிவுரையாளர்,
அரசியல் துறை, மாநிலக்கல்லூரி,
சென்னை.

**திரு. என். கே. குமரேசன் ராசா,**
விரிவுரையாளர், அரசியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலை நகர்.

**முனைவர். கா. பழனிச்சாமி,**
விரிவுரையாளர்,
அண்ணா பொது வாழ்வியல் மையம்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை.

**முனைவர். கோ. சுந்தரராமன்**
முதுநிலை பட்டதாரி ஆசிரியர்,
(அரசியல்) எம்.எம்.ஏ.அரசினர்
மேனிலைப்பள்ளி, பல்லாவரம்.
சென்னை.

**திரு.சா. இராசமாணிக்கம்,**
முதுநிலை பட்டதாரி ஆசிரியர், (அரசியல்) அரசினர் ஆண்கள்
மேனிலைப்பள்ளி, ஒரத்த நாடு, தஞ்சாவூர்,

**விலை ரூ.**

பாடங்கள் தயாரிப்பு : தமிழ்நாடு அரசுக்காக
பள்ளிக் கல்வி இயக்ககம், தமிழ்நாடு.

இந்நூல் 60 ஜி எஸ் எம் தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

அச்சிட்டோர் :

# இந்நூலைப் பற்றி

மேல்நிலை முதலாம் ஆண்டு (பதினோறாம் வகுப்பு) அரசியல் அறிவியல் பாடநூல் தமிழ் நாட்டரசாங்கத்தின் பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் இணை இயக்குநர் (ப) அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க எழுதப்பட்டிருக்கிறது. 2004 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் கல்வித்திட்டம் மற்றும் பாடத்திட்டம் ஆகியவற்றை உருவாக்குவதற்கான குறிக்கோள்களை அவர்கள் வல்லுனர்களையும், கல்வியாளர்களையும், அழைத்துப் பேசியபோது எடுத்துக் கூறியதோடு தேவையான செய்திகளையும் கருத்துக்களையும் வழங்கினார்கள்.

பதினோறாம் வகுப்பிற்கான இந்நூல் மாணவர்களுக்கு அரசியல் அறிவியல் பாடத்தை அறிமுகப்படுத்துகிறது. இதனில் அரசியல் அறிவியலில் வரும் நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் தொடர்புடைய அடிப்படைக்கருத்துக்கள், சித்தாந்தங்கள், கொள்கைகள் விளக்கப்பட்டுள்ளன. மேலும் போட்டித் தேர்வுகள் எழுத விரும்புவோர், மற்றும் மேற்படிப்பு படிக்க விரும்புவோர்க்கேற்ற வகையில், அரசியல் அறிவியல் கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

பன்னிரண்டாம் வகுப்பிற்கான பாடநூலில், அரசு நிறுவனங்களின் கட்டமைப்பு, அமைப்பு, மற்றும் பணிகள், அவற்றின் குறிக்கோள்கள், பயன்பாடுகள் பொதுமக்கள் பெறக்கூடிய நன்மைகள் விளக்கப்பட்டுள்ளன. உதாரணம் : அரசாங்கங்கள், நீதிமன்றங்கள், உள்ளாட்சி அமைப்புக்கள் அரசியல் கட்சிகள் போன்றவை.

பொருட்பிழைகள் மட்டுமின்றி அச்சுப்பிழையும் ஏற்படாதவாறு தனிக்கவனத்துடன் இப்பாடநூல் ஆக்கப்பட்டுள்ளது. எனினும்

ஏதேனும் விடுபாடுகள் இருப்பின் அவற்றை பொறுத்தருளுமாறு வேண்டப்படுகிறது.

இப்பாடநூலில் உள்ள விடுபாடுகளுக்கும், குறைகளுக்கும் பாடத்திட்ட குழுத்தலைவரே முழுப் பொறுப்பேற்கிறார். அவர் இப்பாடநூலை உருவாக்கும் சீரிய முயற்சிக்கு குழு உறுப்பினர்கள் அளித்த உதவிக்கும், ஒத்துழைப்பிற்கும் மனமார்ந்த பாராட்டினை தெரிவித்துக் கொள்கிறார்.

தலைவரும், உறுப்பினர்களும் இப்பாடநூலை உருவாக்கும் அரிய வாய்ப்பை நல்கிய பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு, தங்கள் நன்றியறிதலை உரித்தாக்குகின்றனர். இப்பாடநூலை மேலும் செம்மைப்படுத்தற்குரிய ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன.

தலைவர்
மற்றும் உறுப்பினர்கள்
பாடத்திட்ட குழு



பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அரசியல் அறிவியலின் அடிப்படைகள் | 1 |
| 2. | அரசும் அதன் கூறுகளும் | 19 |
| 3. | இறைமை | 34 |
| 4. | அரசியலமைப்பு வகைகள் | 51 |
| 5. | சட்டம், நீதி, சுதந்திரம், சமத்துவம் | 79 |
| 6. | வாக்குரிமை மற்றும் பிரதிநிதித்துவம் | 107 |
| 7. | மக்களாட்சி | 131 |
| 8. | அரசியல் கட்சிகள் | 152 |
| 9. | மக்களாட்சி அதிகாரப் பரவல் | 173 |
| 10. | பன்னாட்டு அரசியல் நிறுவனங்கள் அமைப்பு | 193 |
| **(Reference Books)**நூல்கள் பட்டியல் | | 227 |

## REFERENCE BOOKS


| Name of the Author | Title of the Book |
|---|---|
| Appadorai A | The Substance of Politics |
| Asirvatham E. | Political Theory |
| Barker E. | Principles of Social and Political Theory |
| Basu D.D. | Introduction to the Constitution of India |
| Brown I. | The meaning of Democracy |
| Dicey A.V. | The Law of the Constitution |
| Dubey S.N. | Simple study of Political Science |
| Duverger M. | Political Parites |
| Gettel R.N. | Introduction to Political Science |
| Gilchrist | Principles of Political Science |
| Kapoor A.C. | Principles of Political Science |
| Leacock, Stephen | Elements of Political Science |
| Lindsay | Essentials of Democracy |
| Lobo, Albert S. | Political Theory - an outline |
| Mahajan V.D. | Principles of Political Science |
| Mill J.S. | on Liberty |
| Rajasekaria A.M. and | Outlines of Political Science |
| S. Subramanian | |
| Raphael DD | Problems of Political Philosophy |
| Ruthnaswamy M. | The Making of the State |
| Strong C.F. | Modern Political Constitutions |
| Subramanian S. | Article on Tamil Nadu - Patterns of Panchayat Raj in India. Edited by G. Ram Reddy. |
| Tamil Nadu Tex Book Society Publication | First and Second year Text Books in Political Science- 1978. |

அத்தியாயம் 1

# அரசியல் அறிவியலின் அடிப்படைகள்

## 1.1 அரசியல் அறிவியலின் பொருளும் எல்லைப்பரப்பும்

ஜீன்போடின் (1530 – 1596) எனும் பிரெஞ்சு நாட்டு அரசியல் தத்துவ ஞானி தான் அரசியல் அறிவியல் என்ற சொல்லை உருவாக்கினார். அரசியல் அறிவியல் என்பது சமூக அறிவியலின் ஒரு பிரிவு ஆகும். இன்றைய ‘உலக கிராமம்’ (Global Village) என்ற நிலையில் அரசியல் அறிவியலைக் கற்பது மிகவும் தேவையானதும், முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆகும். அரசைப் பற்றிய படிப்பே அரசியல் அறிவியல் ஆகும். கார்னர் என்ற அறிஞர், அரசியல் அறிவியலின் ஆரம்பமும் முடிவும் அரசு பற்றியது தான் என்று கூறுகிறார். அரசியல் அறிவியல் என்பது, மனிதன் தன்னை எவ்வாறு ஆளுகிறான் என்பது பற்றி கூறுவதாகும்.

கேட்டிலின் என்னும் அறிஞர் “அரசியல் என்பது அரசியலோடு இணைந்த வாழ்க்கை சம்மந்தப்பட்ட செயல்பாடுகள் அல்லது அரசாங்கம் தொடர்புடைய நிறுவனங்களின் பல்வேறு நடவடிக்கைகள் பற்றிய படிப்பாகும்” என்று கூறுகிறார். “அரசியல் என்பது அரசாங்கத்தின் பிரச்சனைகளைப் பற்றியது” என்று R.N. கில்கிரைஸ்ட் கூறுகிறார். கிரேக்க அரசியல் தத்துவ ஞானியான அரிஸ்டாட்டில் என்பவர் (கி.மு. 384 – 322) அரசியல் என்ற சொல்லை முதன்முதலாக பயன்படுத்தினார்.



**அரிஸ்டாட்டில் (கி.மி. 384 - 322)**

அரசியல் என்ற சொல் நகர அரசு என்ற பொருள்படும் போலிஸ் (Polis) என்ற கிரேக்க மொழியிலிருந்துப் பெறப்பட்டது. போலிஸ் அல்லது நகர அரசு என்பது ஒரு சிறிய சுயாட்சியுடைய, தன்னிறைவையுடைய ஓர் அரசியல் சமுதாயத்தைக் குறிப்பிடுகின்றது. கிரேக்கர்கள் 'அரசியல்' மற்றும் 'சமுதாயம்' என்பதை வேறுபடுத்தவில்லை. 'அரசியல் அறிவியல்' என்ற பாடம் முறையாக படிப்பதற்கு கிரேக்க நகர அரசுகள் அடித்தளம் அமைத்துக் கொடுத்தன.

கிரேக்கர்கள் போல் அல்லாமல் நாம் பரந்த நிலப்பரப்பு உள்ள அரசுகளில் வசிக்கிறோம். கிரேக்கர்களுடைய அரசு பற்றிய கருத்து தற்கால அரகளைப் பற்றிய கருத்துக்கும் பொருந்தும்.

பால்ஜேனட் எனும் பிரெஞ்சு ஆராய்ச்சியாளரின் கருத்துப்படி அரசியல் அறிவியல் என்பது சமூக அறிவியலின் ஒரு பகுதி ஆகும். அரசியல் அறிவியல் அரசின் அடிப்படைகளையும் அரசாங்கத்தின் கோட்பாடுகளையும் பற்றியது ஆகும்.

### அரசியல் அறிவியலின் எல்லைப்பரப்பு

எல்லைப்பரப்பு என்பது ஒரு பாடப் பிரிவின் பொருளை அல்லது எல்லைகளை குறிப்பது ஆகும். 1948 ஆம் ஆண்டு, சர்வதேச அரசியல் அறிவியல் சங்கமானது தனது பாரீஸ் மாநாட்டில் அரசியல் அறிவியலின் எல்லைப்பரப்பை பின்வருமாறு வரையறுத்தது.

**I. அரசியல் கோட்பாடு**

1. அரசியல் கோட்பாடு
2. அரசியல் கருத்துகள்



**II. அரசியல் நிறுவனங்கள்**

1. அரசியலமைப்பு
2. தேசிய அரசாங்கம்
3. வட்டார மற்றும் உள்ளாட்சி அரசாங்கம்
4. பொது நிர்வாகம்
5. அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் அரசியல் பணிகள்
6. ஒப்பீட்டு அரசியல் நிறுவனங்கள்

**III. அரசியல் கட்சிகள்**

1. அரசியல் கட்சிகள்
2. குழுக்கள் மற்றும் சங்கங்கள்
3. அரசாங்கத்திலும் நிர்வாகத்திலும் குடிமகனின் பங்கேற்பு
4. மக்கள் கருத்து


**IV. சர்வதேச உறவுகள்**

1. சர்வதேச அரசியல்
2. சர்வதேச அமைப்பு மற்றும் நிர்வாகம்
3. சர்வதேச சட்டம்

அரசியல் அறிவியலின் எல்லைப்பரப்பை பரந்த வகையில் மூன்றாக பிரிக்கலாம்.

1. அரசு தொடர்பான அரசியல் அறிவியலின் எல்லைப்பரப்பு
2. மனித உரிமைகள் தொடர்பான அரசியல் அறிவியலின் எல்லைப்பரப்பு
3. அரசாங்கம் தொடர்பான அரசியல் அறிவியலின் எல்லைப்பரப்பு.

### 1. அரசு தொடர்பான அரசியல் அறிவியலின் எல்லைப்பரப்பு




அரசியல் அறிவியலில் நாம் தற்போதைய அரசின் வகை, அதன் குறிக்கோள்கள், நோக்கங்கள் மற்றும் இந்த குறிக்கோள்களை அடைவதற்கு அரசு கையாளும் வழிமுறைகள் ஆகியன பற்றி கற்கிறோம். இதனை கெட்டல் என்பார் அரசு பற்றிய பகுப்பாய்வு முறை எனக் குறிப்பிடுகிறார். இன்றைய அரசின் வடிவமானது வரலாற்று ரீதியான பகுப்பாய்வில் அரசின் தோற்றம் பற்றியும், வரலாற்று பற்றிய கோட்பாடுகள் பற்றியும் விளக்குகிறது.

அரசியல் அறிவியல் படிப்பானது எதிர்கால அரசு எப்படி இருக்க வேண்டும் என்பதனை கணிக்கிறது. கெட்டலின் கருத்துப்படி அரசியல் அறிவியல் என்பது அரசு எப்படி இருந்தது என்பது பற்றிய வரலாற்று ஆய்வாகவும், தற்போதைய அரசு எப்படிப்பட்டது என்பது பற்றிய பகுப்பாய்வாகவும் மற்றும் அரசு எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றிய அரசியல் நெறி சார்ந்த விவாதமும் ஆகும்.



### 2. மனித உரிமைகள் தொடர்பான அரசியல் அறிவியலின் எல்லைப்பரப்பு

குடிமக்கள், குடிமை, அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகளை பெற்றுள்ளார்கள். இவ்வுரிமைகள் குடிமக்களின் நலன் பொருட்டு அரசினால் பாதுகாக்கப்படவும், பராமரிக்கப்படவும் வேண்டும்.

### 3. அரசாங்கம் தொடர்பான அரசியல் அறிவியலின் எல்லைப்பரப்பு

ஸ்டீபன் லீகாக் எனும் அறிஞர் அரசியல் அறிவியல் அரசாங்கம் பற்றியது ஆகும் எனக் குறிப்பிடுகிறார். அரசாங்கம் என்ற அமைப்பு இல்லாமல் அரசு இயங்க முடியாது. அரசாங்கமானது அரசின் பணியாற்றும் செயல் ஆகும். அரசாங்கத்தின் பல்வேறு வகைகள், அரசாங்கத்தின் அங்கங்கள், அரசியல் கட்சிகள், உள்ளாட்சி சுய அரசாங்கங்கள், நீதித்துறை, சர்வதேசத்துவம் ஆகியன அரசியல் அறிவியலில் அடங்கும்.

## 1.2. அரசியல் அறிவியல் ஒரு கலை அல்லது அறிவியல்

அரசியல் அறிவியல் தந்தை எனக் கருதப்படும் அரிஸ்டாட்டில் அரசியல் அறிவியலை அனைத்து அறிவியல்களிலும் தலையாயது என்கிறார்.

லாஸ்கி, பர்க், மெய்ட்லாண்ட் போன்ற சிந்தனை யாளர்கள் அரசியல் அறிவியல் என்பதற்கு பதிலாக அரசியல் என்ற சொல்லையே பயன்படுத்தினார்கள். மாறாக காட்வின், விக்கோ, ஹியூம், போடின், ஹாப்ஸ், மாண்டெஸ்கியூ போன்ற சிந்தனையாளர்கள் அரசியல் அறிவியல் எனக் குறிப்பிட்டனர்.



***தாமஸ் ஹாப்ஸ் (கி.பி. 1588 - 1679)***

பேராசிரியர் மெய்ட்லாண்ட் என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"நான் அரசியல் அறிவியல் என்ற தலைப்பிலான தேர்வு வினாத்தாளை காணும் போது அந்த வினாக்களுக்காக வருத்தப்படுவதில்லை. ஆனால் அரசியல் அறிவியல் என்ற தலைப்பிற்காக வருந்துகிறேன்". பக்கில் என்பவர் "தற்போதைய அறிவு நிலையில் அரசியல் அறிவியல் என்ற நிலையிலிருந்து விலகி அதே நேரத்தில் கலைகளில் பின்தங்கிய ஒன்றாக உள்ளது" எனக் குறிப்பிடுகின்றார். அரசியல் அறிவியல் ஒரு அறிவியலா அல்லது கலையா என்பது பற்றி பெரிய அளவில் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

முறைமைப்படுத்தப்பட்ட அறிவின் தொகுப்பே அறிவியல் ஆகும். அறிவியல் சில குறிப்பிட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டதாகும். மாறாக கலை என்பது மனித வாழ்வின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் முறைமைப்படுத்தப்பட்ட அறிவாகும்.

பௌதீகம், வேதியியல் போன்ற பௌதீக அறிவியல்கள் ஒரு கருத்தை அல்லது பொருளை அறிவதில் அறிவியல் முறையை



பயன்படுத்துகின்றன. உதாரணமாக புவி ஈர்ப்பு விதி, நீ ஒரு பந்தை மேல் நோக்கி எரிந்தால் புவி ஈர்ப்பு விசையின் காரணமாக அப்பந்து பூமியில் விழுகிறது. அதே போல் இருபங்கு ஹைட்ரஜனும் ஒரு பங்கு ஆக்ஸிஜனும் இணைந்தால் தண்ணீர் ஆகிறது. அறிவியலில் எந்த ஒரு பரிசோதனையையும் எந்த இடத்திலும் எந்த பரிசோதனைக் கூடத்திலும் எத்தனை முறை செய்து பார்த்தாலும் ஒரே விளைவே ஏற்படும். அந்த விளைவு சரியானதாகவும், ஒரே தன்மையுடையதாகவும் இருக்கும்.

வரலாறு, சமூகஇயல், அரசியல் அறிவியல் பொருளியல் போன்ற சமூக அறிவியல்களும் ஒரு சமூகப் பொருளை அறிவதற்கு அறிவியல் முறையை பயன்படுத்துகின்றன. ஆனால் சமூக அறிவியல்களில் பரிசோதனைக் கூடங்கள் அல்லது பரிசோதனைகள் சாத்தியமில்லை. பௌதீக அறிவியல்கள் ஒரு திட., திரவ அல்லது வாயுப்பொருளை ஆராய்கின்றன. ஆனால் சமூக அறிவியல்கள் மனிதர்களைப் பற்றி ஆராய்கின்றன.

பௌதீகப் பொருள்களின் தன்மைகள், துல்லியமானதாகவும், மிகச் சரியானதாகவும் ஒரே தன்மையுடையதாகவும் விளங்குகின்றன. இத்தகைய தன்மைகள் சமூக அறிவியல்களில் சாத்தியமில்லை. அதே நேரத்தில் இதன் காரணமாக அரசியல் அறிவியல் ஒரு அறிவியல் அல்ல என்று நிராகரிக்கவும் இயலாது.

அரசியல் அறிவியல் என்பது ஒரு முழுமையான அறிவியலாக இயலாது என்பது உண்மை. ஏனெனில் அதன் விதிகள், மற்றும் முடிவுகள் ஆகியவற்றை மிகத் துல்லியமாக வரையறுக்க முடியாது. ஏனெனில் அரசியல் நிகழ்வுகளை துல்லியமாக அதனால் கணிக்க

இயலாது. மேலும் சமூக மற்றும் அரசியல் உறவு முறைகள் தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கும். இன்று உண்மை எனத் தோன்றுவதெல்லாம் எதிர்காலத்தில் உண்மை எனத் தோன்றாமல் போகலாம்.

எனவே அரசியல் அறிவியல் ஒரு அறிவியல் என்றும் கலை என்றும் அழைக்கப்படலாம்.

### 1.3. அரசியல் அறிவியலின் இரு முகங்கள்

மோதல் மற்றும் ஒத்துழைப்பு ஆகியன அரசியல் அறிவியலின் இரு முகங்கள் ஆகும். உண்மையில் அவை இரண்டும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை ஆகும். எதிர்ப்பு என்பது விரும்பத் தகுந்ததல்ல, ஆகத் தவிர்க்கக் கூடியதும் அல்ல. மனித சமூகத்தில் மோதல்கள் பலவகைப்படும். சமூக பொருளாதார கலாச்சார மற்றும் உளவியல் காரணங்களுக்காக மோதல்கள் வரலாம். மோதல் என்பது எத்தகைய நிலையில் இருந்தாலும், அதற்கு தீர்வு காணப்பட வேண்டும்.

அரசு சமூகத்தில் இறுதி ஆணையுரிமை (Authority) உடையதாகும். ஒருங்கிணைப்பதன் மூலமாக அரசு தீர்வுகளை காண்கிறது. அரசு சட்டங்களை இயற்றி, விதிகளை உருவாக்கி, அதை சமூகத்தில் நடைமுறைப்படுத்துகிறது. ஒருங்கிணைப்பில் கல்வி ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. பத்திரிக்கைகள், வானொலி, தொலைக்காட்சி, இணையதளம் ஆகிய முக்கியமானவை ஆகும். அரசு காவல்துறை, ராணுவம் மற்றும் சிறைத்துறை போன்றவற்றின் மூலமாக மக்களை கட்டாயப் படுத்தலாம். ஆனால் இவை எல்லாம் வேறு வழி இல்லாத நிலையில் கடைசியாக பிரயோகிக்கப்பட வேண்டும். முக்கியமாக கட்டாயப்படுத்துதல் கடைசி நிலையில்



மட்டுமே பயன்படுத்த வேண்டும். மக்களின் நல்வாழ்வு எல்லா அரசுகளின் கோட்பாடு ஆகும்.

அறிவியல் மற்றம் தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக புதிய வகை மோதல்கள், தோன்றுவதை மறுக்க முடியாது.

மோதல்களை தீர்வு செய்து மக்களின் பொது நல வாழ்விற்கு வகை செய்வது அரசின் பொறுப்பாகும். அதுவே அரசின் நோக்கம் என்பதை மறுக்க இயலாது.

### 1.4. மதிப்பீடுகளின் அடிப்படை மற்றும் ஆய்ந்தறிதல் அடிப்படையிலான அறிவு

1. மதிப்பீடுகளின் அடிப்படை அல்லது பரிந்துரைத்தன்மை உடையன.
2. ஆய்ந்தறிதல் அடிப்படை அல்லது விவரிப்புத்தன்மை உடையன.

மதிப்பீடுகளின் அடிப்படை கோட்பாடுகள் சில தீர்மானங்களின் அடிப்படையிலானவை ஆகும். சில கருத்துக்கள் மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் ஆகியவற்றை சார்ந்ததே மதிப்பீடுகளின் அடிப்படை கோட்பாடுகள் ஆகும். அவை எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றியதாகும்.

அவை பின்வரும் பொருள்களை குறித்தனவாகும்

1. சமூகத்தின் நல்ல முறை
2. அரசின் நோக்கங்கள்



**ஜே.ஜே.ரூசோ (கி.மு. 1712 - 1778)**

பிளாட்டோவின் குடியரசு, ரூசோவின் சமூக ஒப்பந்தம் ஆகியன மதிப்பீடகளின் அடிப்படையிலான நூல்கள் ஆகும். உதாரணமாக இந்திய குடியரசுத் தலைவர் முறை அரசாங்கத்தை ஏற்கக் கூடாது என்று ஒருவர் கூறினால் அந்த கூற்று அவரது மதிப்பீடுகளின் அடிப்படை கூற்றாகும்.

**ஆய்ந்தறிதல் அல்லது விவரிப்புத்தன்மை உடையன**

இவ்வகைக் கோட்பாடுகள் அரசின் கட்டமைப்பு, அரசின் செயல் தொடர் ஆகியன பற்றியது ஆகும். ஒரு பொருள் பற்றி நேரடியான அனுபவம் மூலம் கண்டு அறிவதே ஆய்ந்தறிதல் முறையாகும். மாக்ஸ் வீபரின் "அதிகாரவர்க்கம்" கிராஹம்வேல்ஸின் "அரசியல் மனிதர்களின் தன்மை" ஆர்தர் பெட்டேலியன் "அரசாங்கத்தின் செயல் தொடர்" ஆகியன அரசியலை அறிவது பற்றி ஆய்ந்தறிதல் முறையில் எழுதப்பட்டது. ஒரு அரசியல் கட்சியை விட வேறு ஒரு அரசியல் கட்சி அதிக அளவிலான வாக்காளர் ஆதரவை பெற்றுள்ளது எனக் கூறுவது ஆய்ந்தறிதலில் எண்ணிப்பார்க்கக்கூடிய, ஆய்ந்தறியக் கூடிய, சரிபார்க்கக்கூடிய உண்மையின் அடிப்படையில் ஆனதாகும்.



## 1.5. நடத்தை சார் இயக்கம்

இரண்டாம் உலகப் போரின் (1939 – 45) முடிவுக்கு பின்பு நடத்தை சார் இயக்கம் தோன்றியது. இக்கால கட்டத்தில் நடத்தை சார் சிந்தனையாளர்கள் அரசியல் அறிவியலில் தங்களது முக்கிய பங்களிப்பினை தந்துள்ளனர். கேப்பிரியல், ஆல்மாண்ட், ராபர்ட் எ.தால் (Robert, A. Dhal) டேவிட் ஈஸ்டன் ஆகியோர் அவர்களின் குறிப்பிடத்தக்க சிலர் ஆவர். ராபர்ட் எ.தால் கருத்துப்படி நடத்தை சார் என்பது அரசியல் அறிவியலில் தோன்றிய எதிர்ப்பு இயக்கம் ஆகும். சில அமெரிக்க அரசியல் அறிவியல் அறிஞர்கள் பாரம்பரியமான அரசியல் அறிவியல் வரலாற்று அணுகுமுறை தத்துவ அணுகுமுறை மற்றும் நிறுவன விவரிப்பு அணுகுமுறை ஆகியவற்றின் மீது அதிருப்தி கொண்டு நடத்தை சார் இயக்கத்தை துவக்கினர். இத்தகைய பாரம்பரியமான அணுகுமுறையன்றி வேறு புதிய அணுகுமுறைகளை வகுத்து அவற்றின் மூலமாக அரசியல் அறிவியல் கண்டறிய இயலும் என்பது அவர்களது வாதமாகும். மேலும் அரசியல் அறிவியல் கோட்பாடுகளை முறைமை ஆனதாகவும், சோதிக்கப்பட்டதாகவும் உருவாக்க இயலும் என்று கருதினர்.

**நடத்தை சார் முறையின் நிறைகள்**

1. இவ்வகையில் ஒரு கலாச்சாரம் சார்ந்த நிறுவனங்களை வேறு ஒரு கலாச்சாரம் சார்ந்த நிறுவனங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும் வாய்ப்பு அரசியல் அறிவியல் மாணவர்களுக்கு உதவும்.

2. நடத்தை சார் என்பது வளரும் தன்மை உடையதாகும். அரசியல் முறையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப சமூக முறையில்

ஏற்படும் மாற்றங்களையும் அறிய தக்க வகையில் வளரும் தன்மை கொண்டதாகும்.

3. உலகில் அரசியல் நிகழ்வுகள் எவ்வாறு நிகழும் என "கருதுகோள்" உருவாக்க, மாதிரிகளை வடிவமைக்க இயலும்.

4. "கருதுகோள்களை" (hypothesis) சேகரிக்கவும் மக்களின் கருத்துக்களை அறியவும், அரசியல் மற்றும் சமூக பிரச்சினைகள் முன்பு எவ்வாறு இருந்தன இப்போது எவ்வாறு இருக்கின்றன என்ற அடிப்படையில் கள ஆய்வை மேற்கொள்ளவும் உதவும்.

**குறைகள்**

1. நடத்தை சார் அணுகுமுறை என்பது சிறிய அளவிலான ஆய்வுகளுக்கு மட்டுமே உதவும். நீதி என்றால் என்ன? அல்லது சுதந்திரம் என்பது யாது? போன்ற பொதுவான கேள்விகளுக்கு நடத்தை சார் அணுகுமுறை பதில் காண உதவாது.

2. நடத்தை சார் வாதிகள் அறிமுகப்படுத்திய கருத்துக்கள் அரசியல் அறிவியலில் புதியதாக உருவாக்கப்பட்டவை அல்ல. அவை ஏற்கெனவே இருந்த சில கருத்துக்களுக்கு மாற்றுப் பெயர்கள் என்றே கொள்ள வேண்டும்.

3. இயல்களுக்கு (Inter disciplinary) இடையிலான அணுகு முறையை பின்பற்றுவதன் மூலமாக அரசியலின் பரப்பு கணிசமான அளவு குறைந்துள்ளது.



**பிந்தைய நடத்தையியல்**

1960ம் ஆண்டு பிற்பகுதி காலத்தில் நடத்தை சார் இயக்கத்திற்கு எதிராக ஒரு புது இயக்கம் தோன்றியது. அந்த இயக்கம் பிந்தைய நடத்தையியல் இயக்கம் என்று அழைக்கப்பட்டது. பிந்தைய நடத்தையியல் வாதிகள் அறிவியல் சார்ந்த அணுகுமுறையை நிராகரிக்கவில்லை. அவர்கள் நடத்தை வாதிகளின் தற்போதைய சமூக பிரச்சனைகளை எடுத்து ஆளவில்லை என்பதை குறிப்பிட்டார்கள்.

பிந்தைய நடத்தையியல் வாதிகள் அரசியல் அறிவியல் என்பது மானிட வாழ்க்கை அவற்றில் ஏற்படும் பிரச்சினைகளைச் சார்ந்து அவைகளை தீர்ப்பதாக இருக்க வேண்டுமென கருதினார்கள்.

பிந்தைய நடத்தையியல் காலம், அரசியல் ஆராய்ச்சியில் நுணுக்கங்களை விட பொருளின் சாராம்சத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தது. மேலும், தற்காலத்து பிரச்சனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தது.

டேவிட் ஈஸ்டன் என்பவர் பின்நடத்தையியல் வாதிகளின் குறிப்பிடத் தகுந்தவர். பிந்தைய நடத்தையியல் என்பது செயல் மற்று பொருத்தம் சார்ந்ததாகும்.

## 1.6. அரசியல் அறிவியலும் பிற சமூக மற்றும் மானிட இயல்களும்

சமுதாய அறிவியல்கள் சமுதாயத்தில் வாழும் மனிதனின் நடவடிக்கைகள் பற்றிய படிப்பு ஆகும். அரசியல் அறிவியல், பொருளியல், வரலாறு மற்றும் புவியியல் ஆகியவை சமுதாய அறிவியல்களில் அடங்கும். சமுதாய அறிவியலில் உள்ள ஒவ்வொரு பாடமும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டும்,

ஒன்றை ஒன்று சார்ந்தும், ஒன்றுக்கொன்று உதவியாகவும் இருந்து வருகிறது.

***அரசியல் அறிவியலும் வரலாறும்***

அரசியல் அறிவியலுக்கும் வரலாற்றுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது. சர்.ஜான் சீலி என்ற அறிஞர் அரசியல் அறிவியலுக்கும் வரலாறட்றும் உள்ள தொடர்பை கீழ்க்கண்டவாறு அழகாக விளக்குகிறார்.

“வரலாறும் அரசியல் அறிவியலும் ஒரு செடியின் வேரும் கனியும் போன்றது என்றும் வரலாறு அச்செடியின் வேர் போன்றதும், அரசியல் அறிவியல் அச்செடியினின்று கிடைக்கும் கனி” போன்றதாகும்.

“வரலாற்றினுடைய சுதந்திரத் தன்மையைப் பெறாத அரசியல் கீழ்த்தரமானதாகிறது. அரசியல் நிகழ்ச்சிகளையும், நடவடிக்கைகளையும் விளக்காத வரலாறு இலக்கியமாக அமையும்” என மேலும் அவர் விளக்குகிறார்.

“வரலாறு என்பது கடந்தகால அரசியல், அரசியல் என்பது தற்போதைய வரலாறு” என பிரிமேன் குறிப்பிடுகிறார். மான்டெஸ்கியூ மற்றும் பிரைஸ் போன்றோர் வரலாற்று நிகழ்ச்சிகளை அரசியல் அறிவியல் பாடம் படிப்பதற்கு உபயோகப்படுத்திக் கொண்டனர்.

பிரைஸ் பிரபு அவர்கள் அரசியல் அறிவியல் பாடம் வரலாற்றுக்கும் அரசியலுக்கும் மற்றும் கடந்தகாலம் நிகழ்காலம் ஆகியவற்றின் நடுவே உள்ளது என்றும் வலியுறத்துகிறார். வரலாறும் அரசியல் அறிவியலும் ஒன்றுக்கொன்று உதவியாக இருக்கின்றன.

வரலாறு, கடந்தகால நிகழ்ச்சிகள், இயக்கங்கள், புரட்சிகள் மற்றும் தேசிய போராட்டங்கள் போன்றவற்றின் மூலமாக அரசியல்



நிறுவனங்கள் மற்றும் அரசியல் கொள்கைகள் தோன்றி வளர்ந்த முறையை தெரிவிக்கிறது.

அரசியல் அறிவியலில் பல பிரச்சினைகள், கருத்துக்கள், சொற்கள், கருப்பொருள்கள் பற்றி விவாதிக்கப்படும்போது அவை தோன்றி விதம் வளர்ச்சி ஆகியன கருத்தில் கொள்ளப்படுகின்றன.

***அரசியல் அறிவியலும் பொருளியலும்***

அரசியல் அறிவியலும் பொருளியலும் நெருங்கிய தொடர்புடையன. கடந்த காலத்தில் பொருளியல் அரசியல் அறிவியலின் கிளையாக கருதப்பட்டது. ஆடம் ஸ்மித் (Adam Smith) பொருளாதாரத்தின் தந்தையென போற்றப்பட்டார். ஆடம் ஸ்மித் தன்னுடைய “உலக நாடுகளின் செல்வத்தின் தன்மை மற்றும் தோற்றம் பற்றிய ஆய்வு” நூலில் பொருளியல் அரசியல் அறிவியலின் ஒரு கிளை என்று குறிப்பிட்டுள்ளார். இதுவே “அரசியல் பொருளாதாரம்” என்று (Political Economy) அழைக்கப்பட்டது.

தற்போது அரசியல் அறிவியலும், பொருளியலும் தனித்தன்மை வாய்ந்த பாடங்களாக உள்ளன. பொருளியல் நாம் உற்பத்தி, விநியோகம், பரிமாற்றம் மற்றும் நுகர்வு ஆகியவைப் பற்றிக் கூறும் சமுதாய அறிவியல் ஆகும். எல்லா பொருளியல் செயல்களும் அரசினால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

ஐந்தாண்டு திட்டங்கள், சமதர்ம பாங்குடைய சமுதாயம், அரசாங்கம் பொருளாதார மற்றம் பொது நல செயல்கள் அனைத்தும் அரசியல் அறிவியல் மற்றும் பொருளியல் பாடங்களில் அடங்குகின்றன. பொருளாதாரச் சூழ்நிலைகள் நாட்டின் அரசியல் போக்கை மாற்றி அமைக்கும் வலுவுடையவை. ஒரு நாட்டின்

வலுவான மற்றும் சிறந்த நிர்வாகத்தை பொருத்து தான் ஆரோக்கிய பொருளாதாரம் அமையும்.

### அரசியல் அறிவியலும் புவி இயலும்

அரசியல் அறிவியலுக்கும் புவி இயலுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருக்கிறது. Geo என்பதன் பொருள் 'புவி' graphy என்பது 'விளக்கம்'. Geography என்பது புவி விளக்கம் அல்லது புவிஇயல் என்று சொல்லப்படுகிறது. இவ்வியல் புவி அமைப்பு, கால நிலை, இயற்கை மற்றும் அரசியல் ரீதியான பிரிவுகள், மக்கள் தொகை ஆகியவற்றை பற்றி விளக்குவதாகும். புவி இயல் சூழ்நிலைகள் எவ்வாறு அரசியல் நிறுவனங்களை தாக்கம் செய்கின்றன என்பது பற்றியும் நாம் புரிந்து கொள்ள உதவுகின்றன. புவியியல் அரசியல் (Geo politics) ஒரு தனியான பாடப்பிரிவாகும்.

மாண்டெஸ்கியூ மக்களுடைய சுதந்திரம் அரசாங்கக அமைப்புகள் புவி அமைப்பையொட்டி ஏற்படுகின்றன. பூமி அரசின் இன்றியமையாத அங்கம் என்றார்.

ரூசோ, புவியியல் மற்றும் கால நிலைகளுக்கும் அரசாங்க அமைப்புகளுக்கும் இடையே தொடர்புகள் இருக்கின்றன. வெப்ப கால நிலை சர்வாதிகாரம் தோன்றவும், குளிர்காலம் காட்டுமிராண்டி ஆட்சி ஏற்படவும் இடைப்பட்ட கால நிலை நல்லாட்சி ஏற்படவும் உதவுமென்றார்.

### அரசியல் அறிவியலும் சமூகவியலும்

சமுதாய அறிவியல்களுக்கு வேர் போன்றது சமூகவியலாகும். சமூகவியலின் தந்தை அகஸ்தே காம்தே ஆவார். சமூகவியல் சமுதாயத்தை பற்றி படிப்பதாகும். அரசியல் அறிவியலும்



சமூகவியலும் ஒன்றோடொன்று தொடர்புடையன. அரசியல் அறிவியல் வல்லுநர்கள் மற்றும் சமூகவியல் வல்லுநர்கள் ஒத்துழைத்து சமுதாய மேம்பாட்டிற்காக பாடுபடுகிறார்.

உதாரணமாக, திருமணம் மற்றும் அதன் பிறகு எழும் பிரச்சனைகளான திருமண முறிவு போன்றவை சமூகவியலில் அடங்கும். இது போன்ற சமூகவியல் பிரச்சினைகளை எவ்வாறு தீர்த்து வைத்து மனித வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவது போன்றவை அரசியல் அறிவியலில் அடங்கும். அரசியல் சமூகவியல் (Political Sociology) தற்போது அரசியல் அறிவியல் பாடத்தின் உட்பிரிவாகும்.

## வினாக்கள்

### பகுதி அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்**

1. கீழ்க் கண்டவற்றுள் எது அரசியல் அறிவியலுக்கு அடிப்படையாகும்?

   அ) மக்களாட்சி ஆ) தேசம்

   இ) சோஷலிஸம் ஈ) சமூகவியல்

2. கீழ்க்கண்டவர்களில் எவர் அரசியல் அறிவியலின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்?

   அ) அரிஸ்டாட்டில் ஆ) போடின்

   இ) பிளாட்டோ ஈ) சாக்ரடீஸ்

3. குடியரசு என்ற நூலை எழுதியவர் யார்?

   அ) போடின் ஆ) பிரைஸ்

   இ) மாண்டெஸ்கியூ ஈ) பிளாட்டோ

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. ஜீன்போடின் ______________ நாட்டு அரசியல் தத்துவ அறிஞர்.
2. அரசியல் அறிவியல் கலை மற்றும் __________ ஆகும்.

**III. கீழ்வருவன சரியா அல்லது தவறா என எழுதவும்.**

1. கிரேக்க நகர அரசு அளவில் பெரியதாகும்.
2. புவியியல் அரசியல், அரசியல் சூழ்நிலைகளை கட்டுப்படுத்துகின்றது.

**IV. பொருத்துக.**

1. மதிப்பீட்டின் அடிப்படை- விவரிப்புத் தன்மை உடையன.
2. கண்டறிதல் அடிப்படை - பரிந்தரைத்தன்மை உடையன

## பகுதி ஆ

1. அரசியல் அறிவியலுக்கும் சமூகவியலுக்கும் உள்ள தொடர்பு பற்றி விவரி.
2. “நடத்தை சார் இயக்கம்” பற்றி சிறு குறிப்பு வரைக.

## பகுதி இ

1. அரசியல் அறிவியலின் எல்லைப்பரப்பு மற்றும் முக்கியத்துவம் பற்றி விவரி.
2. பிந்தைய நடத்தையியல் பற்றி விவரி.

## பகுதி ஈ

1. அரசியல் அறிவியலுக்கும் பிற சமூக மற்றும் மானிட இயல்களுக்கும் உள்ள தொடர்பை எடுத்தெழுதுக.

அத்தியாயம் 2

# அரசும் அதன் கூறுகளும்

## 2.1. வரையறை

அரசு என்பது உலகெங்கிலும் காணப்படுவதாகும். சமூக நிறுவனங்களிலேயே அதிக வலிமை மிகு அமைப்பு அரசே ஆகும். அரசு இயற்கையாகவே தோன்றியதொன்றாகும். மனிதன் ஒரு சமூகப் பிராணி ஆவான்.

அவன் தனது இயல்பால் அரசின் பிராணியாகவும் ஆகிறான் என அரிஸ்டாட்டில் குறிப்பிடுகிறார். அவரது கருத்துப்படி மனிதனாக இருப்பதும் ஒரு அரசின் கீழ் வாழ்வதும் ஒன்றே ஆகும்.

ஆங்கிலத்தில் State (அரசு) எனப்படும் சொல் Status எனப்படும் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். நிகோலோ மாக்கியவெல்லி (1469 – 1527) எனும் அரசியல் சிந்தனையாளர் தனது “இளவரசன்” (Prince) என்னும் நூலில் முதல் முறையாக அரசு என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளார்.

அரசு என்பது மனித சங்கத்தின் உயர்மிகு வடிவமாகும். அரசு அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்காக உருவானதாகும். எனவே அரசு அவசியமான ஒன்றாகும்.

அடிப்படைத் தேவைகள், நிறைவடைந்த பின்னரும் மனிதனுக்கு நல்ல வாழ்க்கையை அமைத்து தரவே அரசு தொடர்ந்து இருந்து வருகிறது.

மனிதர்களின் நோக்கங்கள், வெறுப்புகள், ஆர்வங்கள் போன்றவை அரசின் மூலமாக நிறைவேற்றப்படுகின்றன. அரசு என்பது அவசியமான நிறுவனம் என்று ஏற்றுக் கொள்ளப்

பட்டாலும் எந்த இரு வேறு நூலாசிரியர்களும் அரசு பற்றிய ஒரே கருத்தை கொண்டிருக்கவில்லை.

உட்ரோவில்சன் என்பவர், "அரசு என்பது ஒரு வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பில், சட்டத்திற்காக அமையப்பெறும் மக்கள் கூட்டமாகும் என்கிறார்."

அரிஸ்டாட்டில், அரசு என்பது "ஆனந்தமான மற்றும் கௌரவமான வாழ்க்கை அடங்கிய தன்னிறைவான வாழ்க்கை பெறுவதற்காக கிராமங்களும், குடும்பங்களும் இணைந்த ஒன்றியமாகும் எனக் குறிப்பிடுகிறார்."

ஹாலண்ட் கருத்துப்படி "பல்வேறு மனித கூட்டங்களை ஒன்றிணைத்து ஒரு குறிப்பிட்ட எல்லைப் பரப்பில் குடியேறி, அவர்களில் பெரும்பான்மையானவரின் கருத்துக்களை, அதனை எதிர்ப்போரையும் மீறி நிலவச் செய்வதாகும்".

பர்கஸ் எனும் நூலாசிரியர், "மனித வர்க்கத்தின் ஒரு குறிப்பிட்ட பங்கினர் ஒரு அமைப்பாக இருந்து செயல்படுவதே அரசு ஆகும்" என்கிறார்.

சிட்ஜ்விக் கருத்துப்படி "அரசு என்பது, அரசாங்க வடிவில் தனி மனிதர்கள் அல்லது சங்கங்கள் இணைவது ஆகும். ஒரு வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின் மீது அவர்கள் ஒன்றிணைந்து தங்களை அரசியல் ரீதியாக அமைத்துக் கொள்வது அரசு ஆகும்". கார்னர் என்பார், "அரசு என்பது ஒரு மக்கள் கூட்டம் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பில் வசிப்பதாகும். அவர்கள் வெளி சக்திகளுக்கு கட்டுப்படாமல், ஒரு முறையான அரசாங்கத்தை பெற்று தங்களுக்குள் ஏற்பட்ட இயல்பான கீழ்ப்படிதலை அரசிற்கு செலுத்துகிறார்கள்" என்று விளக்குகிறார்.


பேராசிரியர் லாஸ்கி அரசு பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார். "ஒரு நிலப்பரப்பிற்கு உட்பட்ட சமுதாயமானது அரசாங்கம் என்றும்,



குடிமக்கள் என்றும் இரு வேறாக வகுக்கப்பட்டுள்ளது. அவர்களின் உறவுமுறை அரசினுடைய நிர்பந்திக்கும் அதிகாரத்தின் மூலமாக தீர்மானிக்கப்படுகிறது".

## 2.2. கூறுகள்

மேலே தரப்பட்டுள்ள விளக்கங்கள் அடிப்படையில் அரசு கீழே தரப்பட்டுள்ள கூறுகளைக் கொண்டிருப்பதாகக் குறிப்பிடலாம்.




**மக்கள் தொகை**

மக்கள் தான் அரசை உருவாக்குகிறார்கள். மக்கள் தொகை அரசுக்கு முக்கியமான ஒன்றாகும். பண்டைய கிரேக்க சிந்தனையாளர்கள் ஓர் அரசின் மக்கள் தொகை மிகவும் சிறியதாகவும் இருத்தல் கூடாது. மிகவும் பெரியதாகவும் இருத்தல் கூடாது என்று கருதினர். தத்துவ ஞானி பிளாட்டோ ஓர் இலட்சிய அரசில் 5040 குடிமக்கள் வாழ்வது போதுமானது என்று கருதினார். அரிஸ்டாட்டில் மக்கள் தொகையை துல்லியமாகச் சொல்லாமல் மிகக் குறைவாகவும் இருக்கலாகாது. அதே நேரத்தில் மிக அதிகமாகவும் இருத்தலாகாது என்றுரைத்தார். அதாவது ஓர் அரசு தன்னிறைவு பெறுவதற்கு ஏற்றவகையில், அதே நேரத்தில் திறம்பட ஆட்சி செய்வதற்கு ஏற்ற வகையில் மக்கள் தொகை இருக்க வேண்டும் என்றார். ரூஸோ என்பவர் ஓர் இலட்சிய அரசு என்பது 10,000 மக்கள் தொகையுடையதாய் இருத்தல் வேண்டும் என்று கூறினார்.

பிளாட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற சிந்தனையாளர்கள், சிறிய கிரேக்க நகர அரசுகளாக ஏதென்ஸ், ஸ்பார்த்தாவை மனதில் வைத்துக் கொண்டு மக்கள் தொகை எண்ணிக்கையை வலியுறுத்தினார்கள். நவீன அரசுகள் மக்கள் தொகை எண்ணிக்கையில் வேறுபடுகின்றன. இந்தியா 2001 மக்கள் தொகை கணக்கின்படி 102, 70, 15, 247 மக்கள் எண்ணிக்கை உடையதாகும்.

**நிலப்பகுதி**

ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதி இல்லாமல் அரசு இருக்காது. மக்கள் வசிக்க இருப்பிடம் அதாவது நிலப்பகுதி அவசியமாகிறது.

மேலும் மக்கள் தங்களை சமூக மற்றும் அரசியல் சம்பந்தமாக தயார்படுத்திக் கொள்ள நிலப்பகுதி தேவையாகிறது. நிலப்பகுதி என்பது அந்த நாட்டின் நிலம், நீர், ஆகாயம் ஆகியவற்றை தன்னுள் கொண்டது.

நவீன அரசுகள் நிலப்பகுதி அளவில் வேறுபடுகின்றன. குடியுரிமைக்கு நிலப்பகுதி முக்கியமாகும். மக்கள் தொகை போல, நிலப்பகுதிக்கு அளவு கிடையாது. சிறிய மற்றும் அதிக நிலப்பகுதி உள்ள அரசுகள் உள்ளன.

"நிலப்பகுதி இறைமை என்பது அந்தந்த அரசின் எல்லைப் பகுதியினுள் சுதந்திரமாகவும் வெளியிலிருந்து கட்டுப்பாடு இல்லாமல் இருப்பதையும் தற்கால அரசுமுறை வாழ்க்கை குறிக்கும்" என பேராசிரியர் எலியட் என்பவர் கூறுகிறார்.

இந்திய நாட்டின் நிலப்பகுதி 32, 87, 263 சதுர கிலோமீட்டர் ஆகும். இது உலகளவில் கிட்டத்தட்ட 2.4% ஆகும்.



**அரசாங்கம்**

அரசாங்கம் அரசின் மூன்றாவது கூறாகும். அரசாங்கம் இல்லாமல் அரசு கிடையாது. அரசாங்கம், அரசின் ஆக்கக் கூறுகளில் ஒன்று. அரசு என்னும் கப்பலை ஓட்டிச் செல்லும் மாலுமியாக அரசாங்கம் விளங்குகின்றது.

பேராசிரியர் அப்பாதுரை என்பவர் அரசின் விருப்பங்களை நிறைவேற்றும் ஒரு கருவியாக அரசாங்கம் விளங்குகிறது என்கிறார்.

C.F. ஸ்ட்ராங் என்பவர் சட்டத்தை இயற்றி, அமுலாக்க அரசுக்கு அதிகாரம் தேவைப்படுகிறது. அந்த அதிகாரம் அரசாங்கத்திடம் உள்ளது என்று கூறுகிறார்.

**இறைமை**

இறைமை அரசின் நான்காவது கூறாகும். இறைமை என்பது உயர்ந்த மற்றும் தலையாய அதிகாரம் ஆகும். அரசின் இறைமை அதிகாரம், சட்டங்களின் வாயிலாக வெளிப்படுத்தப்படுகிறது. சட்டம் சார்ந்த ஆணையுரிமை (legal authority) தலையாயது.

நவீன அரசுகள் தோன்றும் போது அதனுடன் இறைமைக் கருத்தும் உருவாக்கப்பட்டது. இறைமை என்ற சொல் (Sovereignty) லத்தீன் மொழிச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். அதற்கு உயர்ந்த அதிகாரம் என்று பொருள்.

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த ஜீன் போடின் (1530 – 1596) என்பவர் நவீன இறைமை கோட்பாட்டின் தந்தையாவார்.

இறைமை தன்மை என்பது


1. உள் இறைமை
2. வெளி இறைமை

என இரண்டு வகைப்படும்.

உள் இறைமை என்பதற்கு அரசு தனது எல்லைக்குள் உள்ள குடிமக்கள் மற்றும் சங்கங்கள் மேல் தலைமையான அதிகாரத்தை செலுத்தவல்ல அதிகாரமுடையதென பொருள். வெளி இறைமை என்பது தன் அதிகார எல்லைக்கு வெளியேயுள்ள யாரும் தன்னை கட்டுப்படுத்த முடியாத சுதந்திரமுடையது என பொருள்.

ஹெரால்ட் லாஸ்கி கருத்துப்படி, அரசு இறைமை உடையதாய் இருப்பதால் தான் மற்ற சமுதாய அதிகாரம் மற்றும் மனித சங்கங்களிலிருந்து வேறுபடுகிறது.

கீழ்க்காணும் விளக்கப்படம் வெளிப்புறத்தில் சமுதாயத்தையும், உள்புறத்தில் அரசாங்கத்தையும் காட்டுகிறது.




## 2.3. அரசு மற்றும் சமுதாயம்

சமுதாயம் என்பது தன்னுள், தனிநபர்கள், குடும்பங்கள், குழுக்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

அரசியல் சிந்தனையாளர்கள் அரசு மற்றும் சமுதாயம் ஆகிய இரண்டும் ஒன்றே என்றனர். அரசு என்பது சமுதாயத்தின் பகுதியாகும் எனினும் அது சமுதாயத்தின் உருவமாகி விடாது.



**அரசுக்கும் சமுதாயத்திற்கும் உள்ள வேறுபாடுகள்**

| | அரசு | சமுதாயம் |
|---|---|---|
| 1. | சமுதாயம் தோன்றிய பின்னரே அரசு என்ற அமைப்பு உருவானது | சமுதாயமானது அரசு தோன்றுவதற்கு முன்னரே தோன்றியது. |
| 2. | அரசின் எல்லை வரையறைக்குட்பட்டது. | சமுதாயத்தின் வரையறை பெரியது. |
| 3. | அரசினுடைய நிலப்பரப்பு இறுதியானது. | சமுதாயத்திற்கு எல்லைப்பரப்பு இல்லை. |
| 4. | அரசு என்பது அரசியல் நிறுவனமாகும். | சமுதாயம் என்பது ஒரு சமூக நிறுவனமாகும். |
| 5. | அரசிற்கு சட்டங்களை நடைமுறைப் படுத்தும் அதிகாரம் உள்ளது. | சமுதாயத்திற்கு அத்தகைய அதிகாரங்கள் எதுவும் இல்லை. |

பேராசிரியர் பார்க்கர் "சமூக மற்றும் அரசியல் கோட்பாடுகளின் அடிப்படைகள்" என்ற நூலில் அரசு மற்றும் சமுதாயம் ஆகியவற்றிற்கு இடையேயுள்ள வேறுபாடுகளை பின்வரும் மூன்று அடிப்படைகளில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

**அவை**

1. நோக்கம் அல்லது பணி
2. நிறுவனம் மற்றும் கட்டமைப்பு
3. வழிமுறை

நோக்கம் என்ற அடிப்படையில் அரசு என்பது சட்டரீதியான ஒரு சங்கமாகும். சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கு நிரந்தரமான ஒரு அமைப்பை உருவாக்கி அதனை செயல்படுத்துவதே அரசின் ஒரே நோக்கமாகும்.

ஆனால் சமுதாயம் என்பது பலவகைப்பட்ட சங்கங்களை உள்ளடக்கியது ஆகும். பல்வேறு சட்டம் சாராத நோக்கங்களையும்

கொண்டதாகும். சமுதாயத்தின் பல்வேறு நோக்கங்கள் பின்வருவன ஆகும்.

1. அறிவு சார்ந்தது.
2. நெறிமுறை சார்ந்தது
3. சமயம் சார்ந்தது
4. பொருளாதாரம் சார்ந்தது
5. நுண்கலை சார்ந்தது
6. பொழுதுபோக்கு சார்ந்தது

அரசு மற்றும் சமுதாயத்தின் உறுப்பினர் தன்மை ஒன்றேயாகும். ஆனால் நோக்கங்களில் இரண்டும் மாறுபடுகின்றன. அரசு என்பது மிகப் பெரிய ஆனால் ஒரே ஒரு நோக்கத்திற்காக உள்ளது. சமுதாயம் என்பதோ சில பெரிய நோக்கங்களுக்காகவும், சில சிறிய நோக்கங்களுக்காகவும் உள்ளது. சமுதாயத்தின் நோக்கங்கள் ஆழ்ந்ததாகவும், பரந்ததாகவும் காணப்படுகின்றன.

அமைப்பு ரீதியாக பார்க்கும்போது அரசு என்பது சட்டபடி சார்ந்த ஒற்றை அமைப்பாகும். ஆனால் சமுதாயம் என்பது பல அமைப்புகளை உள்ளடக்கியது. நிறுவனம் என்ற அடிப்படையில் பார்க்கும் போது அரசிற்கு கட்டாய கீழ்ப்படிதலை பெறும் அதிகாரம் உள்ளது. கட்டாயப் படுத்துவதற்கு நிர்பந்திப்பதற்கும் அரசிற்கு அதிகாரம் உள்ளது.

ஆனால் சமுதாயம் மனமுவந்த கீழ்படிதலையே முறையாகக் கொண்டுள்ளது. சமுதாயத்தின் பல்வேறு நோக்கங்கள், ஊக்கமளித்து, இசைவை பெறுவதற்கு வகை செய்கிறது. சமுதாயத்தில் பல்வேறு அமைப்புகள் இருப்பதாக ஒரு சங்கத்திலிருந்து விடுபட்டு, வேறொரு சங்கத்தில் இணைவதற்கு வாய்ப்புள்ளது. நிர்பந்திப்பதன் மூலமாக சங்கங்கள் செயல்பட முடியாது.

## 2.4. அரசு மற்றும் தேசம்

ஆங்கிலத்தில் "Nation" என்ற சொல் நேஷியோ "Natio" என்ற லத்தீன் மொழிச்சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். அதன் பொருள்



பிறப்பு அல்லது இனம் ஆகும். தேசம் என்பதும் அரசு என்பதும் ஒரே பொருளில் சில நேரங்களில் பயன்படுத்தப்படுகிறது.

ஆனால் அவை இரண்டும் வெவ்வேறானவை ஆகும். லீக்காக் என்னும் அறிஞரின் கருத்துப்படி ஒரே வம்சம் மற்றும் மொழி சார்ந்த மக்கள் ஒன்றிணைந்து ஒரு அமைப்பை உருவாக்குவது தேசம் ஆகும். தேசம் மற்றும் அரசிற்கு இடையிலான வேறுபாடுகளை பின்வருமாறு அறியலாம்.

| | அரசு | தேசம் |
|---|---|---|
| 1. | அரசு என்பது பண்டைய காலத்திலேயே இருந்ததாகும். | தேசம் என்பது தற்காலத்தில் உருவாக்கப்பட்ட கருத்தாகும். |
| 2. | அரசானது சட்டம் மற்றும் அரசியல் தன்மை உடையதாகும். | தேசம் என்பது இனம் மற்றும் கலாச்சாரம் சார்ந்ததாகும். |
| 3. | வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பில் மக்களால் சட்டத்திற்கு உட்பட்டு அமைக்கப்பட்டதாகும். | மக்கள் உளரீதியாக இணைந்து ஒன்றாக வாழ வேண்டும் என்ற விருப்பத்துடன் உருவாக்கப்பட்டதாகும். |
| 4. | அரசு இறைமை உடையதாக இருக்க வேண்டும். | இறைமை இல்லை என்றாலும் மக்கள் ஒரே தேசத்தை சார்ந்தவர்களாக தொடர்ந்து வாழ்கின்றனர். |
| 5. | அரசில் பலதரப்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். | தேசம் என்பது ஒரே வகைப் பட்ட மக்களை கொண்டதாகும். |

இரண்டாம் உலகப் போருக்கு பிறகு (1939 – 1945) ஒரு தேசம், ஒரு அரசு என்ற கோட்பாடு செயல்பட்டு வருகிறது.


அந்த வகையில் புதிய அரசுகள் தோன்றும்போது தேச அரசுகளாக உருவாகின்றன. 1947 ஆம் ஆண்டு சுதந்திரமடைந்த நிலையில் இந்தியா ஒரு தேச அரசாக உருவானது. சுய அரசாங்கம் கொண்ட ஒரு தேசம் விடுதலை அடையும் போது ஒரு தேச அரசாக தோன்றுகிறது.

## 2.5. அரசும் அரசாங்கமும்

பேச்சுவழக்கில் அரசு என்பதும், அரசாங்கம் என்பதும் ஒரே பொருளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் உண்மையில் அரசு என்பதும், அரசாங்கம் என்பதும் வெவ்வேறானவை ஆகும். பின்வரும் அட்டவணையிலிருந்து அரசிற்கும் அரசாங்கத்திற்கும் உள்ள வேறுபாடுகளை அறியலாம்.

| | அரசு | அரசாங்கம் |
|---|---|---|
| 1. | அரசு என்பது மக்கள் கூட்டம், நிலப்பரப்பு, அரசாங்கம் மற்றும் இறைமை ஆகிய நான்கு கூறுகளை கொண்டதாகும். | அரசாங்கம் என்பது அரசின் நான்கு கூறுகளில் ஒன்றாகும். |
| 2. | அரசு மூல அதிகாரங்களை பெற்றதாகும். | அரசாங்கத்தின் அதிகாரங்கள் அரசிடமிருந்து பெற்றவை ஆகும். |
| 3. | அரசு என்பது நிரந்தரமான என்றும் தொடரும் ஒரு அமைப்பாகும். | அரசாங்கமானது தற்காலிக தன்மை உடையதாகும். |
| 4. | அரசு என்பது கருத்தை ஒட்டியதாகும். காண முடியாததும் ஆகும். | அரசாங்கம் என்பது காணக்கூடிய ஒரு திட அமைப்பாகும். |






**அரசாங்கத்தின் பணிகள்**

| சட்டமன்றம் | செயலாட்சிக்குழு | நீதித்துறை |
|---|---|---|
| சட்டம் இயற்றல் | சட்டம் இயற்ற மறுத்தல் அல்லது சட்டம் இயற்ற பரிந்துரைத்தல் | சட்டங்களை மறு ஆய்வு செய்தல் |
| செயலாட்சிக்குழு நியமனங்களை உறுதி செய்தல் சட்டம் இயற்ற மறுப்பதை விலக்கல் | சட்டங்களை நிறைவேற்றுதல் | செயலாட்சிக்குழு நடவடிக்கைகளை ஆய்வு செய்தல் தடுப்பாணைகளைப் பிறப்பித்தல் |
| தேசத் துரோகத்துக்கு தண்டனை கொடுத்தல் நீதிமன்றங்களை அமைத்தல் அல்லது கைவிடுதல் | மன்னிப்பு வழங்குதல் நீதிபதிகளை நியமித்தல் | சட்டங்களை விளக்குதல் |

### 2.5.1. செயலாட்சிக்குழு

அரசாங்கத்தின் ஒரு அங்கம் செயலாட்சிக் குழு ஆகும். அரசு செயலாட்சிக்குழு என்ற அரசாங்கத்தின் மூலம் செயல்படுகிறது. சட்டமன்றம் இயற்றிய சட்டத்தை அமுலாக்குவது தான் செயலாட்சிக் குழுவின் பணியாகும். பெயரளவில் செயலாட்சிக் குழு மற்றும் உண்மையான செயலாட்சிக் குழு எனக் குறிப்பிடும் போது இந்தியாவின் குடியரசுத் தலைவர்

பெயரளவில் செயலாட்சிக் குழு எனவும், பிரதமரை தலைவராகக் கொண்ட அமைச்சரவை உண்மையான செயலாட்சிக் குழு எனவும் கூறலாம். நாடாளுமன்ற செயலாட்சிக்குழு தலைவர் சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்கு பொறுப்புடையவரும் ஆவார். இந்திய செயலாட்சிக்குழு பாராளுமன்ற முறையினை சேர்ந்ததாகும்.

செயலாட்சிக் குழுவின் அதிகாரங்களும் பணிகளும்

1. சட்டங்களை அமல்படுத்துதல்
2. அமைதி, ஒழுங்கு இவற்றை நிலை நாட்டுதல்
3. ஆக்கிரமிப்பைத் தடுத்தல்
4. பிறநாடுகளுடன் நேசக் கூட்டுறவு கொள்ளுதல்
5. தேவை ஏற்பட்டால் போர் செய்து நாட்டை பாதுகாத்தல்
6. பெரிய பதவிகளுக்கு நியமனங்கள் செய்தல்
7. நிதி திரட்டுவது, செலவிடுவது
8. சட்ட மன்றம் மற்றும் இதர அலுவல்களைக் கவனித்தல்
9. சட்ட மன்றம் செயல்படாத நாட்களில் அவசரச்சட்டம் பிறப்பித்தல்
10. மக்களின் சமூக, பொருளாதார நிலையைச் சீர் செய்யும் திட்டங்களை நிறைவேற்றுதல்.
11. குற்றவாளிகளை மன்னிக்கவோ, தண்டனையை நிறுத்தி வைக்கவோ, குறைக்கவோ அதிகாரத்தை பயன்படுத்தல்.

### 2.5.2. சட்டமன்றம்

சட்டமன்றம் சட்டம் இயற்றும் கடமையைச் செய்கிறது. அரசியலமைப்பு திருத்தம் கொண்டு வருவதிலும் சட்ட மன்றத்திற்கு முக்கிய பங்கு உண்டு.

சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகள் சட்டமன்றத்தில் ஆலோசனை நடத்தி, விவாதம் செய்து, தீர்மானம்



செய்யப்படுகிறது. பாராளுமன்றங்களின் தாய் என்று அழைக்கப்படுவது இங்கிலாந்து பாராளுமன்றம் ஆகும். இங்கிலாந்து பாராளுமன்றம் தான் உலகிலேயே பழைமையான பாராளுமன்றம் ஆகும்.

லாஸ்கியின் கருத்துப்படி “சட்டமியற்றுதல் ஒன்று தான் சட்டமன்றத்தின் பணி என்பதல்ல. அதன் முக்கிய பணி நாட்டின் நிர்வாகம், மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் முறையாக, சீராக நடக்கிறதா என்பதைக் கவனித்துக் கொள்வதும் ஆகும்.

இந்தியாவில் மத்திய சட்டமன்றம் நாடாளுமன்றம் என்று அழைக்கப்படும். நாடாளுமன்றம் இரு அவைகளை உடையது.

1. மக்கள் அலை அல்லது லோக்சபை (கீழவை)
2. மாநிலங்கள் அவை அல்லது ராஜ்யசபை (மேலவை)

**சட்ட மன்றத்தின் பணிகள்**

1. சட்டம் இயற்றுதல்
2. நிருவாக மேற்பார்வை
3. வரவு செலவு அறிக்கை நிறைவேற்றுதல்
4. பொது மக்களின் குறைகளை கேட்டறிந்து போக்குதல்.
5. மற்ற பணிகள் பற்றி விவரிப்பது.
    1. முன்னேற்றத் திட்டங்களை உருவாக்குதல்
    2. தேசிய கொள்கைகள்
    3. பன்னாட்டு உறவுகளை பராமரித்தல்

### 2.5.3. நீதித்துறை

நீதித்துறை அரசாங்கத்தின் மூன்றாவது முக்கிய அங்கமாகும். சட்டத்திற்கு விளக்கமளித்தல் மற்றும் நீதி நிர்வாகம் செய்தல் நீதித்துறையின் முக்கிய பணியாகும்.

ஒரு சிறந்த அரசாங்கத்தின் ஆதாரமே அதன் திறமையான நீதித்துறை அமைப்புதான் என்று பிரைஸ்பிரபு குறிப்பிடுகிறார். குடிமக்களின் நலம் நீதித்துறையை பொருத்து தான் உள்ளது. நீதித்துறை மக்களாட்சியின் ஒரு தூண். நீதித்துறையின் விளக்கம் நீதி, சுதந்திரம், சமத்துவம் ஆகியன மக்களுக்கு கிடைப்பதற்கு வழிவகை செய்கிறது.

நீதித்துறையின் சுதந்திரத் தன்மையும், நடுநிலை தன்மையும் மக்களாட்சியில் முக்கியமான சிறப்பியல்புகள் ஆகும். இந்திய உச்ச நீதி மன்றம் ஒரு தலைமை நீதிபதியையும் இதர நீதிபதிகளையும் கொண்டிருக்கும். உச்ச நீதிமன்றத்தின் தலைமை இடம் டில்லியில் உள்ளது.

அமெரிக்க உச்சநீதி மன்ற நீதிபதி ஹக்ஸ் (Justice Hughes) குறிப்பிட்டதைப் போல "நாம் அரசியலமைப்புக்கு கட்டுப்பட்டு இருக்கிறோம். ஆனால் அரசியலமைப்பு என்பது நீதிபதிகள் என்ன கூறுகிறார்களோ அதுதான்".

**நீதித்துறையின் பணிகள்**

1. நீதி நிர்வாகம் செய்தல்
2. சட்டம் என்றால் என்ன அதன் பொருள், அதன் எல்லைகள் யாவை என முடிவு செய்தல்.
3. கேட்கப்படும் விளக்கங்கள் பற்றி ஆலோசனை கூறுதல்.
4. சட்டங்களும், உரிமைகளும் பறிக்கப்படும்போது நீதிப்பேராணைகள் மூலம் தடுத்தல்.
5. அரசியலமைப்பு சட்டப் பாதுகாவலனாக இருத்தல்.



## வினாக்கள்

### பகுதி அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்**

1. அரசியல் அறிவியலின் தந்தை யார்?
அ) பிளாட்டோ ஆ) அரிஸ்டாட்டில்
இ) ஹாப்ஸ் ஈ) லாக்
2. மனிதன் ஒரு சமூக விலங்கு என்று கூறியவர் யார்?
அ) அரிஸ்டாட்டில் ஆ) சிசிரோ
இ) மாக்கியவெல்லி ஈ) வாலஸ் கிரஹாம்

**II. கோடிட்ட இடத்தை பூர்த்தி செய்க**

1. பிளாட்டோ கருத்துப்படி ஓர் இலட்சிய அரசின் குடிமக்கள் எண்ணிக்கை ____________________ஆகும்.

**III. கீழ்வருவன சரியா அல்லது தவறா என எழுதுக**

1. இந்திய நாட்டின் நிலப்பகுதி உலகின் 5% பகுதியாகும்.

**IV. பொருத்துக**

1. அரசு - நேஷியோ
2. இறைமை - ஸ்டேடஸ்
3. தேசம் - உயர்ந்த அதிகாரம்

### பகுதி ஆ

1. அரசின் கூறுகள் யாவை?
2. அரசாங்கத்தின் மூன்று அங்கங்களை விவரிக்க.

### பகுதி இ

1. சட்டமன்றத்தின் பணிகளை விவரிக்க
2. நீதித்துறையின் பணிகளை எடுத்தெழுதுக.

### பகுதி ஈ

1. இறைமைக் கருத்தை விளக்கி அதன் தன்மைகளை விவரி.
2. செயலாட்சிக் குழுவின் பணிகளை விவாதிக்க.

அத்தியாயம் 3

# இறைமை

## 3.1. முன்னுரை

இறைமை அரசின் மூலக்கூறுகளில் முக்கியமானதாகும். இறைமை இல்லாமல் அரசு செயல்பட முடியாது. இறைமைதான் அரசை மற்ற சங்கங்களில் இருந்து உயர்வானதாக காட்டுகிறது. இறைமை என்கிற கருத்தை அறிமுகப்படுத்திய பிறகு தான் தற்கால அரசு முழுமை பெற்றதாக கருதப்படுகிறது.

இறைமை என்பது தற்கால அரசியலில் முக்கியத்துவம் பெற்றாலும் அரசியல் அறிவியலின் தந்தை என்று கருதப்படும் அரிஸ்டாட்டில் காலத்திலிருந்தே இது நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கிறது.

அரிஸ்டாட்டில் இறைமையை அரசின் "உயர்வான அதிகாரம்" என்று கூறியிருக்கிறார். இடைக்காலத்தில் ரோமன் சட்ட வல்லுனர்களும் இந்த கருத்தை அதிகமாக அறிந்திருந்தனர்.

ஆனால் ஜீன் போடின் என்பவர் தான் தன்னுடைய "குடியரசைப் பற்றிய ஆறு நூல்கள்" என்ற நூலில் இறைமை என்ற கருத்தை முதன்முதலாக முறைப்படியாக பயன்படுத்தினார்.

## 3.2. பொருள், தன்மை மற்றும் விளக்கங்கள்

இறைமை என்ற சொல்லானது லத்தீன் மொழியில் 'சூப்பரானஸ்' என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். அதன் பொருளானது "உயர்வானது" என்பதாகும்.

இறைமையின் முழுமையான பொருளை அறிந்து கொள்வதற்கு அதைப் பற்றிய பல்வேறு அரசியல் அறிஞர்கள் கூறியுள்ள



விளக்கங்கள் உதவியாக இருக்கும். அவற்றில் சிலவற்றைப் பார்க்கலாம்.

ஜீன் போடின் என்பவர் இறைமை என்பது குடிமக்களின் மீது சட்டத்தால் கட்டுப்படுத்த முடியாத தொடர்ந்து செலுத்தப்படும் உயர்வான அதிகாரம். இதனை அரசு பயன்படுத்துகிறது.

பொல்லாக் (Pollock) என்பவரது கருத்துப்படி, இறைமை என்பது உயர்வான அதிகாரம், அது தற்காலிகமானதோ, மற்றவர்களுக்கு அளிக்கக்கூடியதோ, ஒரு சில சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதோ கிடையாது. உலகில் வேறு எந்த அதிகாரத்திற்கும் பதில் அளிக்கக் கூடியதோ, மாற்றக்கூடியதோ அல்ல என்பதாகும்.

பர்ஜர் (Burger) என்பவர், இறைமையானது, முழுமையானது. வரையறை இல்லாத அதிகாரத்தை மக்களின் மீதும் மற்றும் உள்ள சங்கங்களின் மீதும் செலுத்தக் கூடியதாகும். மக்களிடமிருந்து பணிவை பெறுவதற்கான முழு அதிகாரத்தையும் பெற்றிருக்கிறது என கூறுகிறார்.

டி.எப்.ரசல் (D.F. Russel) இறைமை என்பது அரசியல் சட்டத்தால் கட்டுப்படுத்த முடியாத, பலம் வாய்ந்த, உயர்வான அதிகாரத்தைக் குறிப்பதாகும் என்று விளக்குகிறார்.

லாஸ்கி (H.J. Laski) அவர்களின் கருத்துப்படி, இறைமை என்பது சட்டப்படியாக, தனிமனிதர்களின் மீதும், அல்லது குழுக்களின் மீதும் செலுத்தப்படும் அதிகாரமாகும்.

இது மக்களை பணிய வைக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது.

மேலே கூறப்பட்ட விளக்கங்களில் மாறுபாடுகள் இருந்தாலும், இறைமை என்பது உயர்வான அதிகாரம் என்பதில்

எந்தவித சந்தேகமும் இல்லை. இறைமையின் அடிப்படைக் கருத்தானது, இறைமை அதிகாரம், சட்டத்தை இயற்றவும், கட்டளைகளை இடவும், அரசியல் முடிவுகளை எடுக்கவும் தனி நபர்களையும் மற்றும் உள்ள சங்கங்களையும் தன் ஆட்சி எல்லைக்குட்பட்டவர்கள் மேல் செலுத்துவதாகும்.

இறைமையை இரண்டு விதமாக பிரிக்கலாம்

அ. உள் இறைமை

ஆ. வெளி இறைமை

உள் இறைமை என்பது, இறைமை அதிகாரத்தை பயன்படுத்துபவர் உள்நாட்டில் இருக்கும் தனிநபர்கள் மற்றும் சங்கங்களின் மீது அதிகாரத்தை செலுத்த அதிகாரத்தை பெற்றவராவார்.

வெளி இறைமை என்பது ஒரு நாட்டின் இறைமை அதிகாரத்தை செலுத்துபவர்கள் மீது மற்ற நாட்டவரோ மற்றும் சர்வதேச சங்கங்களோ அதிகாரத்தை செலுத்தாமல் சுயமாக செயல்படுவதேயாகும். தற்கால அரசானது நாட்டின் உள்விவகாரங்களில் உயர்வான அதிகாரத்தையும் மற்ற வெளிநாட்டு அரசாங்கத்தின் கட்டுபாடில்லாமல் இருத்தலாகும்.

இறைமை பின்வரும் தன்மைகளை பெற்றிருக்கிறது.

1. சட்ட அடிப்படையில் இறைமை முழுமையானது.
2. இறைமை நிலையானது. அரசு இருக்கும் வரையில் இறைமையும் இருக்கும். அரசாங்கத்தில் மாற்றம் ஏற்படும் போது இறைமை அழிந்து விடுவதில்லை. ஆனால் அரசாங்க அதிகாரத்தைப் பெறுபவர்களிடம் கொடுக்கப்படுகிறது.



3. அடுத்து அரசின் இறைமையானது பரந்தது. அரசு எல்லைக் குட்பட்டவர்கள் அனைவருக்கும் பொருந்துவனவாகும்.
4. இறைமையை மாற்ற இயலாது. அரசு அழிந்தால் தான் இறைமையும் அழியும்.
5. இறைமையை துண்டு போடவோ, அல்லது பவர் செலுத்தவோ முடியாது. கெட்டல் (Gettel) அவர்களது கருத்துப்படி, "இறைமை முழுமையாக இல்லாவிட்டால் அரசு இருக்க முடியாததாகும். இறைமையை துண்டுபோட்டால் ஒன்றுக்கு மேற்பட்ட அரசுகள் இருப்பதாகும்".

ஆனால் கூட்டாட்சி என்ற கருத்து தோன்றியவுடன், டாக்குவில், வீட்டன் மற்றும் கேலக் போன்ற அறிஞர்கள் இரண்டு இறைமைகள் இருப்பதாக கருத்து தெரிவித்துள்ளார்கள்.

இறைமை பிரத்தியேகமானது. அரசு மட்டும் தான் இறைமை அதிகாரத்தை பெற்று சட்டப்படியாக மக்களை பணிய வைக்கும் அதிகாரத்தை பெற்றிருக்கிறது. இறைமையின் அனைத்து தன்மைகளும் சட்ட இறைமை என்ற கருத்துக்கு வித்தியாசமானதாகும்.

அவை முழுமையான முடியாட்சியினால் பிரதிபலிக்கப் படுகிறது. மக்களாட்சி, கூட்டாட்சி, பன்மை மற்றும் அரசியலமைப்பு படி அமைந்த அரசாங்களில், இறைமை அதிகாரம் எவற்றில் அல்லது எங்கு இருக்கிறது என்பதைக் கண்டறிவது கடினமாகும்.

### 3.3.1. இறைமையின் வகைகள்

இறைமை பல்வேறு வகைப்படும். இறைமையின் இருப்பிடத்தைப் பொறுத்து அது வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**பெயரளவிலான இறைமை**

பெயரளவிலான இறைமை என்பது பெயரளவில் மட்டுமே உள்ளதாகும். இது மன்னரின் அல்லது அரசரின் செயல்படுத்தப் படாத அதிகாரத்தைக் குறிப்பதாகும்.

கொள்கையளவில் அரசர் இன்றும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார். ஆனால் நடைமுறையில் இறைமை அதிகாரம் மற்றவராலோ அல்லது பலராலோ செயல்படுத்தப்படலாம். பெயரளவு இறைமை என்பது அதிகாரத்தின் அடையாளமாகவே மட்டும் இருக்கும்.

பெயரளவுக்கான இறைமை அதிகாரம் உடையவராக பிரிட்டர் நாட்டு அரசர் உள்ளார். அரசர் பெயரளவிற்கான அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார். அவர் உண்மையான இறைமை அதிகாரம் செலுத்தவில்லை.

உண்மையான அதிகாரங்கள் அனைத்து அமைச்சர்களாலும் மற்றும் பாராளுமன்றத்தாலும் செயல்படுத்தப்படுகின்றன. இந்தியாவில் குடியரசுத் தலைவர் பெயரளவிலான இறைமையையும் கேபினட் அமைச்சர்கள் உண்மையான அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார்கள்.

**3.3.2. உண்மை நிலை (De Facto) மற்றும் சட்டநிலை இறைமை (De Jure)**

உண்மைநிலை இறைமை என்பது ஒருவர் சட்டபடியாகவும் அல்லாமல் மற்றும் அரசியலமைப்பு படியும் ஆதரவு இல்லாமல் ஆட்சி செலுத்துவதை கூறலாம். சட்டரீதியான இறைமை என்பது சட்டத்தின் மூலமாக அங்கீகாரம் மற்றும் அரசியலமைப்புபடி பெற்றுள்ள அதிகாரமாகும். புரட்சியின் மூலமாக ஆட்சியில் மாற்றம் ஏற்படும் சூழ்நிலையில் உண்மைநிலை இறைமையும்



சட்டரீதியான இறைமையும் காணமுடியும். உதாரணமாக இத்தாலியில் புரட்சியின் மூலமாக ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போது சட்டரீதியாக ஆட்சியிலிருந்த விக்டர் இம்மானுவேல் அதிகாரம் செலுத்த முடியவில்லை.

ஆனால் புரட்சியின் மூலமாக ஆட்சியை பெற்ற முசோலினி உண்மைநிலை இறைமையைப் பெற்றவராக கருதப்பட்டார். தற்காலத்தில் புரட்சியின் மூலமாக ஆட்சியைப் பிடித்தவர்கள் அனைவரையும் உண்மைநிலை இறைமைக்கு உதாரணமாக கூறலாம்.

அவர்கள் தங்களுடைய அதிகாரத்தை நியாயப்படுத்த பல்வேறு வழி முறைகளை பயன்படுத்துகின்றனர். பொதுவாக உண்மைநிலை இறைமையும் சட்டநிலை இறைமையும் தொடர்ந்து குறுகிய காலத்திற்கு மட்டுமே செயல்படுகின்றன.

உண்மைநிலை இறைமையாளர் சட்டநிலை இறைமையாளராக மாறுவதற்கு அனைத்து முயற்சிகளையும் செய்கிறார். இறுதியாக உண்மைநிலை இறைமையும் சட்டநிலை இறைமையும் ஒன்றோடொன்று சேர்ந்தே செல்ல வேண்டும். இல்லாவிட்டால், இரு இறைமையாளரும் மோதக்கூடிய சூழ்நிலை உருவாகிவிடும்.

உண்மைநிலை இறைமை அதிகாரத்தை சட்டநிலை இறைமை அதிகாரமாக மாற்ற புதிய சட்டங்கள் இயற்றப்படும்.

**3.3.3. சட்டம் மற்றும் அரசியல் இறைமை**

அரசியல் இறைமைக்கும் சட்ட இறைமைக்கும் சில சமயங்களில் வேறுபாடு காணப்படுவது உண்டு. சட்ட இறைமையைப் பெற்றவர் முழுமையானவராகவும் சர்வ வல்லமை பெற்றவராகவும் இருப்பார். தன்னுடைய விருப்பப்படி

செயல்படுவார். இறைமையாளரின் விருப்பமே சட்டமாகும். அதனை யாரும் கேள்வி கேட்கமுடியாது. குடிமக்களுக்கு இறைமையாளரே உரிமைகளை அளிக்கிறார். அவருக்கு எதிராக எவரும் செயல்பட முடியாது.

மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகளை இறைமயை எப்பொழுது வேண்டுமானாலும் எடுத்து கொள்ளலாம். சட்ட இறைமையானது பின்வருமாறு தன்மைகளை பெற்றிருக்கிறது.

1. சட்ட இறைமையானது எப்பொழுதும் தெளிவான மற்றும் முடிவானது.
2. சட்ட இறைமையானது தனிமனிதனிடமோ அல்லது குழுவினிடமோ இருக்கலாம்.
3. தீர்க்கமாக அமையப்பெற்றது. சரியாக சொல்லப்பட்டிருப்பது. அது சட்டப் பூர்வமானது.
4. குடிமக்களுக்கு அளிக்கப்பெற்றுள்ள உரிமைகள் சட்ட இறைமையின் கொடையாகும்.
5. சட்ட இறைமையின் மூலமாக அரசின் கருத்தக்கள் வெளிப்படுத்தப்படுகிறது.
6. சட்ட இறைமையானது முழுமையானது. அதை யாரும் கேள்வி கேட்க முடியாது.

பிரிட்டனில் பாராளுமன்றத்தைச் சார்ந்துள்ள அரசர் சட்ட இறைமை பெற்றவராவார். அமெரிக்காவில் அரசியலமைப்புச் சட்டத்தை திருத்தும் அதிகாரம் பெற்றவை சட்ட இறைமையாக கருதப்படுகிறது.

சட்ட இறைமைக்குப் பின்னால் ஒரு அதிகாரம் இருக்கிறது. அது சட்டத்திற்கு தெரியாது. அது தான் அரசியல் இறைமை.



நடைமுறையில் முழுமையானதும் வரையறை இல்லாததுமான சட்ட இறைமை எங்கும் இல்லை.

ஒரு சர்வாதிகாரி கூட சுயேச்சையாகவும் பிரத்தியேகமாகவும் செயல்பட முடிவதில்லை. சட்ட இறைமையானது பல்வேறு செல்வாக்குகளால் உருவாக்கப்படுகிறது. ஆனால் அது சட்டத்திற்கு தெரியாது. இந்த அனைத்து செல்வாக்குகளும் சட்ட இறைமைக்கு பின்னால் மறைந்திருக்கக் கூடியதாகும்.

அதுவே அரசியல் இறைமை எனப்படுகிறது. பேராசிரியர் கில்கிரிஸ்ட் கருத்துப்படி "அரசியல் இறைமை என்பது சட்ட இறைமைக்கு பின்னால் இருந்து செல்வாக்கைப் பயன்படுத்தக் கூடியதாகும்".

அரசியல் இறைமை என்பது சட்டத்திற்கு தெரியாது. தற்கால பிரதிநிதித்துவ மக்களாட்சியில் அரசியல் இறைமை என்பது மக்களையோ அல்லது தேர்தலில் வாக்களிப்பவர்களையோ அல்லது பொதுக்கருத்தையோ அடையாளமாகக் கொண்டது. அரசியல் இறைமைக்கு எதிராக சட்ட இறைமை செயல்பட முடியாது.

டைசி கூற்றுப்படி, "சட்ட இறைமை தலை வணங்குகிற ஒரு அமைப்பு, சட்டவல்லுனர்களால் அங்கீகாரம் செய்யப்பட்ட ஒரு அமைப்பு இருக்கிறது. அதற்கு அரசில் உள்ள குடிமக்கள் அனைவரும் கீழ்படிகிறார்கள். அதுவே அரசியல் இறைமையாகும்".

அரசியல் இறைமைக்கு சரியான விளக்கம் சொல்வதில் குழப்பம் நீடிக்கிறது. அது தெளிவற்றது, தீர்மானிக்க முடியாதது, துல்லியமாக இருப்பிடத்தை கூற முடியாது. சில அறிஞர்கள் சட்ட இறைமையையும் அரசியல் இறைமையையும் பிரித்துக் கூற முடியாது எனக் கூறுகிறார்கள். ஏனென்றால் இறைமையை பிரிப்பது என்பது நடைமுறையில் முடியாததாகும்.

### 3.3.4. மக்கள் இறைமை

ஒரு அரசில் இறைமை அதிகாரம் மக்களிடத்தில் இருப்பதை மக்கள் இறைமை எனலாம். இந்த கொள்கையானது ரூசோவால் சொல்லப்பட்டு பின்னால் பிரெஞ்சு புரட்சியின் முக்கிய கோரிக்கைகளாக அமைந்தன. மக்கள் இறைமையின் தத்துவத்துவமானது மக்கள் தான் இறைமை அதிகாரத்தை பெற்றிருக்கிறார்கள் என்பதாகும்.

மக்கள் தான் சரியா, தவறா என்பதை நிர்ணயிக்கிறார்கள். இயற்கை சட்டத்தினாலோ, தெய்வீக சட்டத்தினாலோ மக்கள் கட்டுப்படுத்தப் படுவதில்லை. அரசாங்கம் மக்களின் நன்மைக்கான ஒரு கருவியாக செயல்படுகிறது.

அது மக்களுக்கு நேரடியாக பொறுப்பானதாகும். நாட்டில் இருக்கிற சட்டத்தின் அடிப்படையிலே அதிகாரத்தை செலுத்த வேண்டும். மக்களின் கருத்தை ஒதுக்கி விட முடியாது. மக்கள் இறைமைதான் தற்கால மக்களாட்சியின் அடிப்படையாக இருக்கிறது.

## 3.4. ஆஸ்டினின் இறைமைக் கோட்பாடு (ஒருமைவாதக் கருத்து)

பத்தொன்பதால் நூற்றாண்டில், ஆங்கிலேய நாட்டைச் சார்ந்த சட்ட வல்லுனர் ஆஸ்டின் இறைமைப்பற்றிய சட்ட கோட்பாட்டை எடுத்துக் கூறினார். அவருடைய கோட்பாடு இறைமையைப் பற்றிய ஒருமைவாதக் கோட்பாடு என்று அழைக்கப்படுகிறது.

1832 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட "சட்டத்தின் எல்லை தீர்மானிக்கப்படுகிறது" என்ற நூலில் ஆஸ்டின் பின்வருமாறு கூறுகிறார்.

"ஒரு மானிட மேன்மையாளர், தன்னைப் போன்ற உயர்வானவர்க்கு பணிதலை தெரிவிக்காமல், ஒரு குறிப்பிட்ட



சமுதாயத்திலிருந்து பணிதலை பெறுவாரானால், அந்த சமுதாயத்தில் அவர்தான் இறைமை அதிகாரத்தை பெற்றுள்ள மானிட மேன்மையாளராக கருதப்படுகிறார். அந்த சமுதாயம் அந்த மானிட மேன்மையாளரையும் சேர்த்து சுதந்திரமாக செயல்படும் அரசியல் சமுதாயமாகும்".

ஆஸ்டினின் கருத்துப்படி ஒவ்வொரு அரசிலும் பெரும்பான்மையான மக்கள் ஒரு குறிப்பிட்ட நபருக்கு பணிதலை தெரிவிக்கிறார்கள். அந்த அதிகாரத்தை பெற்றவர் முழுமையானவர், வரையறை இல்லாதவர், பிரிக்க முடியாத அதிகாரத்தைப் பெற்று இருக்கிறார்.

ஆஸ்டினின் இறைமைக்கோட்பாடு சட்டத்தின் தன்மையைப் பொறுத்து இருக்கிறது. ஆஸ்டினின் கருத்துப்படி "சட்டம் என்பது உயர்வானவர், தனக்கு கீழ் உள்ளவர்களுக்கு கொடுக்கக் கூடிய கட்டளையாகும்". பின்வருவனவை ஆஸ்டினின் இறைமை கோட்பாட்டின் முக்கிய கருத்துக்களாகும்.

### 3.4.1. ஒவ்வொரு அரசியல் சமுதாயத்துக்கும் இறைமை அதிகாரம் முக்கியமானதாகும்.

**3.4.2.** இறைமையை பெற்றவர் ஒருவராகவோ அல்லது குழுவாகவோ இருக்கலாம். இறைமையை பெற்றவர் ஒரு தனி நபராக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. இறைமை அதிகாரம் பலரிடம் கூட இருக்கலாம்.

ஆஸ்டின் கூறுகையில், "இறைமையை பெற்றவர் ஒரு தனிநபராக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. தற்கால மேலை உலகில் அவ்வாறு இருப்பது மிகவும்

அரிது. ஆனால் தனிமனிதனுக்கு இருக்கக் கூடிய தன்மைகள் அந்த மானிட மேன்மையாளருக்கு இருக்க வேண்டும்".

ஆஸ்டின் கருத்துப்படி, அரசு ஒரு சட்டப்படியான அமைப்பு, அதில் உயர்வான அதிகாரம் இருக்கிறது. அதுதான் அனைத்து அதிகாரங்களுக்கும் ஆதாரமாக இருக்கிறது. ஒவ்வொரு அரசும் கட்டளையிடுகிற மானிட மேன்மையாளரைப் பெற்றிருக்க வேண்டும்.

3.4.3. இறைமை அதிகாரம் பிரிக்க முடியாததாகும். இறைமையை பிரிப்பது என்பது இறைமையை அழிப்பதற்கு சமம்.

3.4.4. இறைமையாளரின் கட்டளைகள் அனைத்து தனிநபர்களுக்கும் சங்கங்களுக்கும் உயர்வானது. அவரின் கட்டளைகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அதில் சரி, தவறு என்ற பேச்சுக்கே இடமில்லை.

3.4.5. இறைமையாளருக்கு பணிவைத் தெரிவித்தல் என்பது வழக்கமாக இருக்க வேண்டும். பணிதல் சமுதாயத்தின் முழுவதிலிருந்தும் வர வேண்டும் என்று அவசியமில்லை. மக்களின் பெரும்பான்மையோரிடமிருந்து பணிதலைப் பெற்றாலே போதும்.

பணிதல் என்பது சமுதாயத்தின் பெருவாரியான மக்களில் இருந்து வர வேண்டும். இல்லாவிட்டால் அது இறைமை அதிகாரமாக கருதமுடியாது.

சுருக்கமாக கூறுகையில், ஆஸ்டினின் இறைமை பிரிக்க முடியாதது, உயர்வானது, கேள்விகேட்க முடியாதது மற்ற இறைமை கோட்பாடுகளைப் போல ஆஸ்டினின் இறைமைக் கோட்பாட்டிலும் குறைகள் கண்டுள்ளனர்.



முதலாவது குறையானது இறைமை அதிகாரம் ஒரு மானிட மேன்மையாளரிடம் இருக்கிறது என்பதை பற்றியதாகும். இறைமை அதிகாரமானது நீதிநெறிகள், பழக்க வழக்கங்கள் மற்றும் மதிப்புமிக்க கருத்துகளால் உருவாக்கப்பட்டிருக்கிறது.

சர் ஹென்றி என்பவர் மகாராஜா ரன்ஜித் சிங்கை உதாரணமாக கூறுகிறார். மகாராஜா எதனையும் கட்டளையிட்டிருக்க வேண்டும். தன்னுடைய வாழ்நாளில் ஒருமுறை கூட, சட்டம் என்று கூறும் அளவில் கட்டளையிடவில்லை. தன்னுடைய குடிமக்கள் ஒழுங்குபடுத்திய சட்டங்கள் நினைவுதெரியாத காலத்தில் இருந்து பழக்கத்தில் இருந்தவற்றில் இருந்து பெறப்பட்டதாகும்.

இரண்டாவதாக, ஆஸ்டினின் இறைமையாளர் அளவிட முடியாத அதிகாரங்களைப் பெற்றிருக்கிறார் என்பது ஏற்றுக் கொள்ள முடியாததாகும். இது கொள்கை அளவில் இருக்கலாமே தவிர நடைமுறையில் இருக்க முடியாது.

லாஸ்கி கருத்துப்படி, "எந்த ஒரு இறைமையாளரும், உலகில் எங்கும் அத்தகைய வரையறை இல்லாத அதிகாரத்தை பெற்றிருக்கவில்லை. அப்படி செய்யப்பட்ட முயற்சியானது தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தில் முடிந்தது".

மூன்றாவதாக ஆஸ்டின் இறைமையை பிரிக்க முடியாதது என்று கூறுகிறார். அதிகாரங்கள் ஒரு நபரிடமோ அல்லது பலரிடமோ இருக்கலாம். கூட்டாட்சி அரசாங்க முறையினால் இதுவும் தவறான கருத்தாக கருதப்படுகிறது. கூட்டாட்சி அரசில் அதிகாரங்கள் மத்திய அரசிடமும் மாநில அரசிடமும் பிரிக்க கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆஸ்டின் சட்டத்திற்கு கொடுத்த விளக்கமும் குறை கூறப்படுகிறது. ஆஸ்டின் கருத்துப்படி, "சட்டம் என்பது உயர்வானவர் தன்னைவிட தாழ்வானவர்களுக்கு இடும் கட்டளைதான்" என்று கூறுகிறார். இதுவும் உண்மையில்லை.

எந்த ஒரு இறைமையாளரும், ஒவ்வொரு நாட்டிலும் காலம்காலமாக தொடர்ந்து பின்பற்றி நடைமுறையில் இருந்து கொண்டிருக்கும் பழக்கவழக்கத்தால் பின்பற்றப்படும் சட்டங்களை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

ஆஸ்டினின் இறைமை கோட்பாடு அரசியல் தத்துவத்தில் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும். அவருடைய இறைமை பற்றிய கருத்து முக்கிய கருத்துக்களை குறுகிய அளவிற்கு கொண்டுபோய் விட்டது. இது சட்ட இறைமையின் தன்மையை பற்றிய ஒரு பகுப்பாய்வு என்று கருதப்படலாம்.

### 3.5. பன்மையாளரின் இறைமை கோட்பாடு

ஆஸ்டினின் ஒருமைவாத அல்லது சட்ட இறைமைக் கோட்பாட்டிற்கு எதிராக கூறப்பட்டதுதான். இறைமையைப் பற்றிய பன்மை வாதக் கோட்பாடு ஒருமைவாதக் கோட்பாட்டின் படி அரசுதான் உயர்வான அதிகாரம் பெற்றது. மற்ற சங்கங்கள் அரசால் உருவாக்கப்பட்டவை. அவை செயல்பாட்டிற்கு இறைமை அதிகாரம் பெற்றவரை நம்பி இருக்கிறது.

பன்மையாளரின் இறைமைக் கோட்பாடு அதை மறுத்த எல்லா அதிகாரம் பெற்ற ஒரே ஒரு நிறுவனம் அரசில் இல்லை என்பதை நிலைநாட்ட முயற்சிக்கிறது.

லாஸ்கி கருத்துப்படி இறைமை என்பது முழுவதுமாகவும் ஒன்றாகவும் இல்லை. அது பன்மையானது, அரசியலமைப்பு படி



அமைந்தது பொறுப்பானது. தனிமனிதன் மீது முழு ஆதிக்கம் செலுத்த அரசுக்கு அதிகாரம் இல்லை.

பொது சேவை செய்யக் கூடிய ஒரு கழகமாக மட்டுமே கருதலாம். மக்களின் பொதுவான நன்மைக்காக பல்வேறு சங்கங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் நிறுவனமாக அது இருக்கிறது.

பன்மை இறைமை கோட்பாட்டின் ஆதரவாளரான எம்.மேக்ஐவர், அரசு, பல்வேறு பணிகளை செய்தாலும், சங்கங்களில் ஒன்றாகும். சட்டத்தின் உயர்வான தன்மைதான் அரசின் சிறப்பான தன்மையாகும் என்று கூறுகிறார்.

அரசின் எல்லைக்குள், அனைத்து மக்களின் மீதும் அனைத்து சங்கங்களின் மீதும் தன்னடைய நலனைக் காட்டுவதால் அரசு சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது. இதனால் அரசு, மற்ற சங்கங்களை விட உயர்வானது கிடையாது.

அரசின் கட்டளைக்கு கீழ்படிய மறுப்பவர்களை தண்டிக்கும் அதிகாரம் அரசிற்கு இருப்பதால் அரசு முழுமையானதாக கருத முடியாது. பன்மையாளரின் இறைமைக் கோட்பாட்டின் படி இறைமையை பிரிக்க முயையும். அதோடு அது ஒரு வரையறைக்குள் தான் செயல்பட முடியும்.

பன்மையாளரின் கருத்துப்படி மக்களின் நன்மைக்காக சமுதாயத்தில் உள்ள பல்வேறு சங்கங்கள் தங்களின் பணிகளை பங்கிட்டு கொள்ள வேண்டும். இந்த கொள்கையானது அதிகாரத்தை பகிர்ந்தளிக்க வேண்டும் என்று கூறுகிறது. பன்மையாளர்கள் அரசுக்கும் அரசாங்கத்திற்கும் வேறுபாடு இல்லை என்று கூறுகிறார்கள். இரண்டுக்கும்

உள்ள வேறுபாடுகள் செயற்கையாக ஏற்படுத்தப்பட்டவையே என்று கூறுகிறார்கள்.

பன்மையாளர்கள் அரசுக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால் அவர்கள் இறைமையை பிரிக்க முடியாது. முழுமையானது என்பதைத் தான் ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள்.

### 3.5.1. பின்வருபவை பன்மையாளரின் இறைமை கோட்பாட்டின் முதன்மையான கருத்துக்களாகும்

1. பன்மைக்கோட்பாடு இறைமை அரசியல் தன்மை வாய்ந்ததெனக் கூறுகிறது.
2. தனிநபர்களின் நலனை பாதுகாப்பதில் அக்கறையுள்ள பல சங்கங்களில் அரசும் ஒன்றாகும்.
3. பல்வேறு சங்கங்களின் செயல்பாடுகளில் மோதல் ஏற்படும்போது அரசு அதை தீர்த்து வைக்கிறது.
4. அரசு மற்ற சங்கங்களைப் போல் உயர்வானத் தன்மையைப் பெற போட்டியிட வேண்டும்.
5. அரசு முழுமையானது அல்ல அல்லது சட்டப்படி உயர்வானதும் அல்ல.
6. சட்டம் இயற்றுவதிலோ அல்லது சட்டத்திற்கான ஆதாரங்களிலோ அரசும் ஒன்று.
7. சட்டம் கட்டளை இடுவதற்கு எதிர்மறையானது.
8. சட்டத்தின் பிறப்பிடமாகவும் சட்டத்தின் பெற்றோராகவும் அரசு விளங்குகிறது.
9. சட்டத்திற்கு கட்டுப்படுவதென்பது கட்டாயப்படுத்துவதல்ல. அதற்கு கட்டுப்பட வேண்டும் என்னும் விருப்பமே ஆகும்.
10. அரசும் அரசாங்கமும் வெவ்வேறானவை அல்ல.



பன்மையாளரின் இறைமை கோட்பாட்டிலும் கூட குறைகள் காணப்படுகின்றன. வர்க்கபேதமற்ற சமுதாயத்தை ஏற்படுத்தாமல் இறைமையை பிரிக்கவும் முடியாது, வரையறையும் ஏற்படுத்த முடியாது.

அரசின் இறைமை அதிகாரத்தை வரையறைக்குள் வைப்பதற்கு வர்க்க பேத மற்ற சமுதாயம் தேவைப்படுகிறது. பல சங்கங்களுக்குள் இறைமை அதிகாரத்தை பிரிப்பது முடியாததாகும். அதே சமயத்தில் சரியானதாகவும் இருக்க முடியாது.

பன்மையாளரின் கருத்து சமுதாயத்தில் குழப்பத்தையும் நிலையற்ற தன்மையையும் ஏற்படுத்தும். சங்கங்களின் தனித்தன்மையும், தனிநபர்களின் சுதந்திரத்தை நிலைநாட்டவும், பன்மையாளர்கள் இறைமை அதிகாரத்தை வரையறைக்குள் கொண்டு வர முயலுகிறார்கள். எனினும் தனிநபர்களின் உரிமையையும், சங்கங்களின் உரிமைகளையும் நிலைநாட்ட, அரசு இறைமை அதிகாரத்தை பெற்றிருக்க வேண்டும்.

அரசு இறைமை அதிகாரத்தை பெற்றிருக்க வில்லை என்றால் தனிநபர்களின் நன்மைக்கும் சங்கங்களின் மேன்மைக்கும் மோதல் ஏற்படும்போது அரசு உதவ முடியாத சூழ்நிலை தோன்றும்.

இவ்வளவு குறைபாடுகள் இருந்தாலும், ஆஸ்டினின் சட்டப்படியான, கடினமான இறைமைக் கோட்பாட்டைத்தான் பன்மையாளர்கள் எதிர்த்தார்கள். பன்மையாளர் இறைமைகோட்பாடு மக்களாட்சி கொள்கைகளையும் மனித நேயத்தையும் ஆதரிக்கிறது. சர்வ வல்லமை படைத்த இறைமையை எதிர்த்தது. இந்த கோட்பாடு, மற்ற சங்கங்களின் முக்கியத்துவத்தையும் குறிப்பிடுகிறது. ஒரு அரசில் உள்ள சங்கங்கள், அரசை போல, வளர்ச்சிப் பணிகளையும்

செய்கிறது. இறுதியாக இந்த கோட்பாடானது, அரசுக்கு ஒரு மனித தன்மையைக் கொடுத்து, சுதந்திரத்திற்கு ஏற்படும் அச்சுறுத்தலையும் தடுக்கிறது.

## வினாக்கள்

### பகுதி அ

I. **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்**

**I.** கீழே தரப்பட்டுள்ளவைகளில் எதிலிருந்து இறைமை வந்தது?

அ) இலத்தீன் சொல்  ஆ)பிரெஞ்சு சொல்

இ) கிரேக்க சொல்  ஈ) ஆங்கிலச் சொல்

**II. கோடிட்ட இடத்தை பூர்த்தி செய்க**

1. ஆஸ்டினின் இறைமைக் கோட்பாடு ________________ இறைமைக் கோட்பாடு என்றும் அறியப்படுகிறது.

**III. கீழ்வருவன சரியா அல்லது தவறா என எழுதுக**

1. இறைமைக்கு இரு கருத்துக்கள் இருக்கின்றன.

### பகுதி ஆ

1. இறைமைக் கருத்தை விளக்குக.
2. பெயரளவில் இறைமை என்பதனை விவரிக்க.

### பகுதி இ

1. இறைமையின் இயல்புகள் யாவை?
2. நடைமுறையிலுள்ள மற்றும் சட்டபடியான இறைமை என்பதனை வேறுபடுத்தி காட்டுக.

### பகுதி ஈ

1. ஆஸ்டினின் இறைமையை விவாதிக்க.
2. பன்மை இறைமைக் கருத்தை விளக்குக.

அத்தியாயம் 4

# அரசியலமைப்பு வகைகள்

## 4.1. அறிமுகம்

அரசியலமைப்பு மற்றும் அரசமைப்பு இரண்டும் நடைமுறையில் உள்ளன. உலகில் உள்ள ஒவ்வொரு நாடும் அரசியலமைப்பை பெற்றிருக்க வேண்டும். அரசியல் அமைப்பின்றி ஒரு நாட்டினை ஆட்சி செய்வது இயலாத காரியம். ஒரு சில விதிமுறைகளும், கட்டுப்பாடுகளும் பல நாடுகளில் இருந்திருக்கின்றன என்பதனை வரலாறு மூலம் நாம் அறிகிறோம். சீரான அமைதியான நாட்டினை உருவாக்க இவைகள் வேண்டும் என்பது தெரியவருகிறது.

குழப்பமின்றி சிறப்பாக ஆட்சி செய்ய அரசியலமைப்பு இன்றியமையாதது. ஜனநாயக நாடு அல்லது சர்வாதிகார நாடாக இருந்தாலும் அதை நிர்ணயிக்க ஒரு சில விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் அவசியம் என்பதை ஒவ்வொரு நாடும் ஏற்றுக் கொள்கிறது. தற்பொழுது விதிமுறைகள் எல்லாம் அரசியலமைப்பு என்ற அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதை நாம் அறிதல் வேண்டும்.

## 4.2. அரசியலமைப்பின் பொருளும், விளக்கமும்

ஒரு நல்ல அரசாங்கத்தின் அமைப்பும் அதன் அதிகாரமும் அரசியலமைப்பின் நிலையை உணர்த்துவதாக அமையும். நற்குடிமகனின் உரிமைகளும், கடமைகளும் அரசியலமைப்பை உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட காலவரையறையில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் ஆவணம் என அரசமைப்பை

கூறுகின்றனர். ஆனால் அது உண்மையல்ல. அரசமைப்பு என்பது எழுதப்பட்டிருக்கலாம் அல்லது எழுதப்படாமலும் செயல்படுத்தப் படலாம் என்பதை உணர வேண்டும்.

சில நேரங்களில் அரசியலமைப்பு நெடுங்காலமாக பின்பற்றப்படும் விதிகளும், பழமொழிகளும், நடைமுறைகளும் கொண்டு உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது என கருதப்படுகிறது. பல அரசியல் அறிவியல் மேதைகள் அரசியலமைப்பு என்ற வார்த்தைக்கு விளக்கம் அளிக்க முயற்சி மேற்கொண்டனர்.

அரசியலின் தந்தை எனப் போற்றப்படும் அறிஞர் அரிஸ்டாட்டில் "குடிமக்கள் அரசின் அங்கம் எனவும் அவர்களுடைய தொடர்புகளை அரசியலமைப்பு ஒன்றோடு ஒனறு தொடர்புபடுத்தி ஒழுங்குபடுத்துகிறதெனவும்" கூறுகிறார்.

உல்சே அரசியலமைப்பு என்பது அரசாங்கத்தின் அதிகாரத்தை பற்றியும், ஆளப்படுவோரின் உரிமைகள் பற்றியும் இவை இரண்டிற்கும் இடையேயுள்ள உறவுகள் பற்றியும், எடுத்துக் கூறும் விதிகளின் தொகுப்பு என்றும் விளக்குகின்றார்.

பிரைஸ் பிரபு கூறுகையில் "ஒரு சமுதாயம் உருவாகி ஆளப்பட ஒட்டுமொத்த சட்டங்களும், மரபுகளும் உள்ளடங்கிய விதிமுறைகளின் பெட்டகமே அரசியலமைப்பு" என்கிறார். பௌசீயர் "ஒரு அரசின் அரசமைப்பு சட்டம் என்பது அரசாங்கம் அமைக்கப்பட்டிருக்கின்ற கொள்கைகளின் அடிப்படையிலும் அந்த அரசின் இறைமை அதிகாரம் யாருக்கு அல்லது எதற்கு தரப்பட்டிருக்கின்றது என்றும் அந்த அதிகாரம் எந்த வகையில் செயல்படுத்தப்படுகின்றது என்றும் எடுத்துக் காட்டும் சட்டமாகும்" என்று விளக்குகிறார்.



"அரசாங்கம் அல்லது சமுதாயத்தில் இறைமை அதிகாரம் தரப்பட்டிருக்கும் முறையை விளக்குவதே அரசமைப்பு சட்டம்" என்று கார்ன்வெல் எடுத்துக்காட்டுகிறார்.

"குடிமக்களுக்கு இன்றியமையாததான சலுகைகள் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு தரப்படும் முக்கியமான உரிமைகளை ஒழுங்குப்படுத்துகின்ற எழுதப்பட்ட அல்லது எழுதப்படாத சட்டங்களே ஒரு அரசின் அரசியலமைப்புச் சட்டமாகும்" என சர் ஜேம்ஸ் மெக்கின்டோ கூறுகிறார்.

"அரசமைப்பு சட்டமே அரசாங்கமாகும்" என்றார் லீகாக். "உயர் அரசாங்கம் ஒன்றின் அமைப்பு முறையை ஏற்படுத்துவது அரசமைப்பு" என்று ஆஸ்டீன் கூறுகின்றார். மேலே கூறப்பட்டுள்ள விளக்கங்களை அடிப்படையாக கொண்டு அரசமைப்பு சட்டம் என்ன என்பதை நாம் கூறலாம். அது

- நாட்டின் ஆதாரச்சட்டமாகும்.
- எழுதப்பட்டோ அல்லது எழுதப்படாமலோ இருக்கலாம்.
- அரசாங்கத்தின் அமைப்பு மற்றும் அதிகாரத்தை விவரிக்கின்றது.
- குடிமக்களின் உரிமையை கூறுகின்றது.
- ஆளப்படுவோருக்கும், அரசாங்கத்திற்கும் இடையே உள்ள உறவைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.
- இதுவே உயர்ந்த சட்டமாகும். இது கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.

### 4.3. அரசியலமைப்பின் தேவை

அமெரிக்காவில் கி.பி. 1776 ஆம் ஆண்டில் புரட்சி ஏற்பட்டது. அதிலிருந்து அனைத்து நாடுகளிலும் அரசமைப்பு அவசியமான ஓர் அடிப்படை ஆவணம் என்று உணரப்பட்டது. இந்த

அரசியலமைப்பு மக்களாட்சியின் அஸ்திவாரம் என்று கருதப்படுகிறது.

கீழே தரப்பட்டுள்ள காரணங்களுக்காக அரசியலமைப்பு தேவைப்படுகிறது.

1. அடிப்படை சட்டம் அரசாங்கத்தின் கடிவாளமாகும்.
2. தனி மனித உரிமையை பாதுகாக்கவும்.
3. சட்டத்தின் ஆட்சி நிலைக்கவும்
4. குழப்ப நிலையிலிருந்து மீட்கவும்
5. இறைமை அதிகாரத்தை வரையறுக்கவும்
6. நிகழ்கால மற்றும் வருங்கால சந்ததிகளின் விருப்பு வெறுப்புகளை கட்டுப்படுத்தவும்.

“அரசமைப்பு மிகவும் அவசியம் சர்வாதிகார ஆட்சியாக இருந்தாலும் கொடுங்கோல் ஆட்சி அரசாக இருந்தாலும் அரசமைப்பு தேவைதான். மேலும் அரசமைப்பு இல்லா அரசு ஒரு குழப்பமான ஆட்சியை அமைத்துவிடும்” என ஜெல்லினிக் கூறுகிறார்.

### 4.4. அரசமைப்பின் உள்ளடக்கங்கள்

ஓர் அரசமைப்பு கீழ்க்கண்டவற்றை பெற்றிருக்க வேண்டும்.

1. நிர்வாக அமைப்பும், நிறுவனமும்
2. அரசாங்க அங்கங்களின் செயல்பாடுகள் அதிகாரங்கள் மற்றும் இடையே உள்ள தொடர்புகள்
3. குடிமக்களின் அடிப்படை உரிமைகள்
4. மக்களுடன் அரசாங்கத்தின் உறவு
5. அரசியலமைப்பு திருத்தம் செய்யும் முறைகள்



மேற்கூறிய அனைத்து கூறுகளிலும் முதல் மூன்று கூறுகளும் இன்றியமையாதவை. மேலும் “பர்ஜெஸ்” என்னும் அறிஞர் அரசியலமைப்பில் சுதந்திரம், அரசாங்கம் மற்றும் இறைமை அவசியம் இடம் பெற்றிருக்க வேண்டுமெனக் கூறுகிறார்.

### 4.5. அடிப்படை உரிமைகளின் தேவை

அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் வழங்கப் பட்டுள்ளது அவசியமாகும். ஏனெனில் அது உறுதியான தீர்மானமான கட்டுப்பாடுகளை அரசாங்கத்திற்கு விதிக்கிறது. மேலும் தனி மனித உரிமைகளை எந்த அரசாங்கமும் மீற இயலாது.

அடிப்படை உரிமைகள் மக்களாட்சியின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்றன. ஏறத்தாழ உலகின் அனைத்து எழுதப்பட்ட அரசியலமைப்புகளிலும் அடிப்படை உரிமைகள் சேர்க்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய அரசியலமைப்பின் பகுதி 3ல் அங்கம் 12 – 32ல் அடிப்படை உரிமைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

அரசியலமைப்பில் உள்ள அடிப்படை உரிமைகளை பாதிக்கும் வகையில் மாநில அரசுகள் சட்டம் இயற்ற இயலாது. இவ்வுரிமைகளை அரசு மீறவும் இயலாது.

மேலும் அடிப்படை உரிமைகளை பறிக்க மாநில அரசுகள் சட்டம் இயற்றினால் அவற்றை நீதிமன்றம் அரசியலமைப்பு சட்டங்களுக்கு முரணானது என அறிவிக்கும்.

அமெரிக்கர்கள் அடிப்படை உரிமைகளுக்கு புனிதத் தன்மையுடன் கூடிய மரியாதையை அளிக்கின்றனர். உரிமைகள் மக்களின் விருப்பத்தின் அடிப்படையிலும், மக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டும் ஓர் எல்லைக்குள் வரையறுக்கப்பட்டுள்ளன. அடிப்படை உரிமைகளுக்கும் ஒரு

கட்டுப்பாடு தேவை. இல்லையென்றால் அப்படிப்பட்ட நிலைமை குழப்பமான சூழ்நிலைக்கு இழுத்துச் சென்று விடும். பல அரசியலமைப்புகள் தேவையான கட்டுப்பாடுகள் விதித்துள்ளன.

### 4.6. அரசாங்க அமைப்பு முறை

அரசமைப்பு என்று அரசின் அமைப்பு மற்றும் அதன் அதிகாரத்தையும் குறிப்பதாகும். அதிகார வரம்புமுறையை கோடிட்டு காட்டுவதே அரசியலமைப்பின் முக்கிய நோக்கமாகும். அரசியலமைப்பு முழுவதும் அரசாங்கத்திற்கு வழங்கும் அதிகாரங்கள் மற்றும் பணிகள் பற்றி சொல்லப்பட்டிருக்கின்றன. எப்படி அரசாங்கம் நிறுவுவது? எப்படி அதன் பணி அமைபும். இக்கேள்விகளுக்கு விரிவாக அரசியலமைப்பில் விடை காணப்படுகிறது.

பரந்த அடிப்படையில் அரசாங்கங்கள் பின்வருமாறு பெற்றிருத்தல் அவசியம்

1. அரசின் ஒவ்வொரு துறைக்கும் அதிகாரங்களை பகிர்ந்தளிப்பது
2. குறிப்பிடத்தக்க அரசாங்க ஏஜென்சிகளில் அமைப்பு இருக்க வேண்டிய முறை
3. அவைகளின் பதவிக்காலம் மற்றும் அதிகாரம் செய்யும் முறை
4. பொதுத் துறை பணியாளர்கள் நியமிக்கப்படும் முறை மற்றும்
5. வாக்காளர் தொகுதிகள் அமைப்பு

ஒரு சில அரசியலமைப்புகள் அரசாங்கத்தின் அதிகாரங்களை தெளிவாகவும், விரிவாகவும் குறிப்பிடுகின்றன. மேலும் ஒரு சில அரசமைப்புகள் அரசாங்கத்தின் பொது தன்மையையே மேலெழுந்தவாரியாக சுருக்கமாக குறிப்பிடுகின்றன.



அமெரிக்கா அரசியலமைப்பில் அதிகாரப் பிரிவினைக் கொள்ளை வலியுறுத்தப்பட்டுள்ளது. மூன்று அங்கங்களான செயலாட்சிக்குழு, சட்டமன்றம் மற்றும் நீதித்துறை ஆகியவைகளின் அதிகாரங்களையும் அவற்றின் அதிகார எல்லையையும் அரசியலமைப்பு தெளிவுப்படுத்துகிறது. மைய, மாநில அரசுகளின் அதிகாரத் தடைகளையும் சமநிலை வழிமுறைகளையும் உள்ளடக்கியுள்ளது.

“உலகில் உள்ள அனைத்து அரசியலமைப்புகளுக்கும் மேலாக, மக்களின் சூழ்நிலைக்கு ஏற்றவகையிலும், எழுதப்பட்ட அரசியலமைப்பின் உயர்விற்கும், அதன் எளிமைக்கும், அழகான நடைக்கும் அருமையான சிறப்பான நீதியியல் முறைக்கும் கொள்கைகள் கடுமையாகப் பின்பற்றப்படுவதற்கும் அதன் விளக்கங்களின் வளையும் தன்மைக்கும் அமெரிக்காவின் அரசியலமைப்பு ஓர் எடுத்துக்காட்டு” என பிரைஸ் பிரபு கூறுகிறார்.

நம் இந்திய அரசியலமைப்பு குறிப்பிடத்தக்க வகையில் அமைந்துள்ள ஓர் அருமையான உயர்வான எடுத்துக்காட்டு என்பது பெருமை தருகிறது.

எதிர்காலத்தில் எவ்விதமான குழப்பமும் ஏற்படாத வகையில், எந்த நடைமுறையையும் விட்டுவிடாமல் நேர்த்தியான முறையில் அரசியலமைப்பு பேரவை கவனம் மேற்கொண்டது சிறப்புடையதாகும்.

நமது இந்திய அரசமைப்பு உலகிலேயே மிகப்பெரிய அரசியலமைப்பு ஆகும் என்று வல்லுநர்களால் கூறப் பட்டுள்ளது. மேலும் வேற்றுமையில் ஒற்றுமை, பல்வேறு விதமான கலாச்சாரம் மொழி, இனம், மதம் மற்றும் பல வேறுபாடுகளைக் கடந்து நிற்கும் பிரமாண்டமான அரசியலமைப்பு எனவும் கருதப்படுகிறது.

கி.பி. 1857 ஆம் ஆண்டு பிரான்ஸ் அரசியலமைப்பு சட்டப்படி எல்லோருக்கும் வாக்குரிமை என்ற கொள்கை அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பதற்கு வகை செய்யப்பட்டிருந்தது. பிரான்ஸ் நாட்டின் பாராளுமன்ற அமைப்பு முறைக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் உள்ள பணிகள் மற்றும் அதிகாரங்கள் குறிப்பிடப்படவில்லை. மேலும் அரசியலமைப்பில் நீதித்துறை அமைப்பு முறையைப் பற்றியும் கண்டுகொள்ளவேயில்லை. இது போன்ற அரசியலமைப்புகள் பொதுவான சுருக்கமான அரசியலமைப்புகளுக்கு உதாரணமாக விளங்குகின்றன. இவ்வாறு அமையும் அரசியலமைப்பு தோல்வியை மட்டுமே தழுவும்.

## 4.7. அரசியலமைப்பு திருத்தமுறைகள்

அரசியலமைப்பு திருத்தம் செய்யும் முறைகள் சில சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. எழுதப்பட்ட அரசியமைப்பு ஒரு சில விதிமுறைகள் பின்பற்றுதல் வேண்டும். இவைகள் எழுதப்பட்ட அரசியலமைப்பிற்கு மிக அவசியம் என கருதப்படுகிறது. அரசியலமைப்பு திரும்தம் செய்யப்படும் முறையானது, அரசியலமைப்பின் புனித தன்மைக்கு உத்திரவாதம் அளிக்கின்றது. மேலும் தனிநபர் சுதந்திரத்திற்கும், அரசியலமைப்பைச் சார்ந்தவைகளுக்கு உத்திரவாதம் அளிப்பது சிறப்பிற்குரியதே.

அரசியலமைப்பு திருத்தம் எளிதான முறையிலும் கடினமான முறையிலும் கையாளப்படுகின்றது. இருப்பினும் இவை எல்லாம் சாதாரணமானவை. இவையே அரசின் இறைமையை வெளிப்படுத்தக் கூடிய வலிமை பொருந்தியதாகும். இதனால் சட்டரீதியான அமைப்பிற்கும் உண்மையான சட்டமியற்றும் நிலைக்கும் இடையே கருத்து வேறுபாடு எழாத வயையில் அமைதல் வேண்டும்.



சாதாரண முறையில் திருத்தம் மேற்கொண்டால் அரசாங்கம் நிலையற்ற தன்மையை அடையலாம். மேலும் கடினமான முறையில் திருத்தம் மேற்கொண்டால் இரண்டு வகையான விளைவுகள் ஏற்படலாம்.

முதலில் பொதுக்கருத்து அடிப்படையில் சட்டரீதியில் அல்லாத நிறுவனங்கள் ஏற்படும். இரண்டாவதாக இது போன்ற நிறுவனங்கள் உருவாக இடம் தராவிட்டால் கலகம் புரட்சி ஏற்பட வாய்ப்பு உண்டாகலாம்.

எனவே, புரட்சி அல்லது நிலையற்ற தன்மையை ஏற்படுத்துகிற மாதிரி அரசியலமைப்பு திருத்த முறைகள் இருக்கக் கூடாது.

“ஓர் அரசியலமைப்பு எந்த சூழ்நிலையில் ஏற்பட்டதோ அந்த சூழ்நிலைக்கும் அதற்கும் பிறகு பல நூற்றாண்டுகளில் ஏற்படும் மாறுதல்களுக்கு இடம் தரும் வகையிலும் செயல்பட வேண்டுமென” ஜென்னிங்ஸ் கூறுகிறார்.

மேலெ சொல்லப்பட்டுள்ள அனைத்தும் எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத அரசியலமைப்புகளுக்குத் தேவையானவையே.

இவை எழுதப்பட்ட அரசியலமைப்பில் சரியாகவும், முடிவாகவும், தெளிவாகவும் உள்ளன. எழுதப்படாத அரசியலமைப்பில் அவை தெளிவாக இல்லை. இவை தான் இரண்டிற்கும் உள்ள வேறுபாடாகும்.

## 4.8. சிறந்த அரசியலமைப்பின் தன்மைகள்

ஒரு நாட்டில் நிலவும் சூழ்நிலைக்கேற்ப அரசியலமைப்பு தகுதியுடையதா, இல்லையா என்பதை அறியலாம். ஒரு குறிப்பிட்ட அரசியலமைப்பு பயன்படக் கூடியது என ஒரு சில நாடுகள்

விரும்பலாம். ஒரு சில நாடுகளுக்கு அவை தேவையில்லை என உணரலாம். (உம்) சுட்டடாட்சி அரசியலமைப்பு இந்திய நாட்டிற்கு பொறுத்தமாக உள்ளது. அதே வேளையில் பாகிஸ்தான், நேபாளம், மியான்மார் போன்ற நாடுகளுக்கு உகந்ததாக இல்லை என்பதை நாம் உணரலாம். இது அந்நாட்டின் சமூக, பொருளாதார நிலைமையைப் பொறுத்தே அமையும். ஒவ்வொரு நாடும் அதற்கேற்ற அரசியலமைப்பைத் தயாரித்துகொள்ளும் உரிமையை பெற்றிருக்கிறது.

ஒரு நல்ல அரசியலமைப்பு கீழ்க்கண்ட தன்மைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**1. தெளிவானது**

ஒவ்வொரு அரசியலமைப்பும் தெளிவாகவும், எளிய நடையில் எழுதப்பட்டும் இருத்தல் வேண்டும். எவ்வித குழப்பமும் ஏற்படுத்தாமல் தெளிவாக இருக்க வேண்டும்.

**2. சுருக்கமாக இருத்தல் வேண்டும்**

அரசியலமைப்பு நீண்டதாக இருத்தல் கூடாது. முக்கியமான அம்சங்கள் இடம் பெற வேண்டும். அதே வேளையில் தேவையற்றது என்று எதையும் ஒதுக்கிவிடக் கூடாது. சிறியதாக, சுருக்கமாக இருக்க வேண்டும் என்பதற்காக விரிவாக சொல்ல வேண்டிய கருத்தை சொல்லாமல் விட்டு விடக்கூடாது.

**3. விசாலமானது**

அரசியலமைப்பு ஒரு நாட்டின் முழுமைக்கும் ஏற்புடையதாக இருத்தல் வேண்டும். கூட்டாட்சி முறையாக இருப்பின் மத்திய, மாநில அரசின் அதிகாரங்கள் தெளிவாக குறிப்பிட வேண்டும்.



**4. நெகிழும் தன்மை**

அரசியலமைப்பு திருத்தம் செய்ய முடியாத கடினத்தன்மையுடன் இருத்தல் கூடாது. தேவையான போது தேவையான திருத்தம் செய்யும் முறையை பின்பற்ற வேண்டும்.

**5. உரிமைகள் பிரகடனம்**

ஓர் நல்ல அரசமைப்பு எல்லா அடிப்படை உரிமைகளையும் பெற்றிருத்தல் வேண்டும். இந்தியா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் குடிமக்களின் உரிமைகள் தெள்ளத்தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

**6. நீதித்துறையின் சுதந்திரம்**

நீதித்துறைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தாலே நல்ல அரசமைப்பிற்குரிய தகுதியை வெளிப்படுத்துதலாகும். நீதித்துறை சுதந்திரமாக பயமில்லாமல் செயல்பட வேண்டும். நீதித்துறை மனித உரிமைகளைக் காப்பாற்றும் கேடயமாக இருத்தல் வேண்டும்.

**7. வழிகாட்டும் நெறிகள்**

ஒரு நல்ல அரசு சிறப்பாக செயல்பட அரசுக் கொள்கையினை நெறிப்படுத்தும் கொள்கைகளை அரசியலமைப்பு பெற்றிருக்க வேண்டும். இக்கொள்கைகள் அரசு சிறப்பாக செயல்பட கிடைத்த வரப்பிரசாதமாக கருதப்படுகின்றன. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து அம்சங்களும் இந்திய அரசமைப்பில் இடம் பெற்றுள்ளன.

## 4.9. அரிஸ்டாட்டிலின் அரசமைப்பு வகைகள்

அரசமைப்பு வகைப்படுத்தல் தற்கால கருத்தல்ல. அரசமைப்பு வகைப்படுத்துதலுக்கு பல அடிப்படையும் ஆதாரங்களும் உள்ளன.

முதன்முதலில் அறிவியல் பூர்வமான முறையில் அரசமைப்பை அரிஸ்டாட்டில் வகைப்படுத்தினார். அவர் கால 158 நாடுகளின் அரசியலமைப்பை படித்து அதன் அடிப்படையிலும் இறைமை அதிகாரத்தை மையமாக வைத்தும் அரசியலமைப்புகளை வகைப்படுத்தினார். மக்களின் நல்வாழ்வை அடிப்படையான நோக்கமாகக் கொண்டவை இயல்பானவை எனவும், அதிலிருந்து மாறுபட்டவை எதிர்மறையான திரிந்தவை எனவும் அவர் விளக்கினார்.

### அரிஸ்டாட்டிலின் அரசமைப்பு வகைகள் பட்டியல்

| ஆட்சியிலுள்ளோர் எண்ணிக்கை | இயல்பானவை | மக்கள் நலனுக்கு எதிரான அரசுமுறை அல்லது திரிந்தவை |
|---|---|---|
| ஒருவர் ஆட்சி | முடியாட்சி | கொடுங்கோலாட்சி |
| சிலர் ஆட்சி | உயர்ந்தோர் குழு ஆட்சி | தன்னல குழு ஆட்சி |
| பலர் ஆட்சி | நல்லாட்சி | மக்களாட்சி |


இறைமை இருக்க வேண்டிய இடம் மற்றும் அரசின் குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டுதான் அரிஸ்டாட்டில் அரசமைப்பை வகைப்படுத்தியுள்ளார். பொதுநலத்தின் அடிப்படையில் தனிநபர் நடத்தும் ஆட்சி மன்னாட்சி சுய நலமுடன் ஆட்சி செய்யப் படுமானால் அதுவே கொடுங்கோலாட்சியாகும்.

சில நல்லோர் ஆட்சி உயர்ந்தோர் குழு ஆட்சியாகும். நாட்டின் நலன் கருதி செய்யும் பலர் ஆட்சி நல்லாட்சி. அதுவே சுயநல



நோக்கத்தோடு நடைபெறுமானால் மக்களாட்சி அல்லது மக்களாட்சி ஆகிறது.

அரிஸ்டாட்டில் அரசுகள் சுழற்சி முறையில் மாறுதல் அடைகின்றன என்கிறார். முடியாட்சி, கொடுங்கோலாட்சிகள் எல்லாம் திசைமாறும்பொழுது அவைகள் உயர்ந்தோர் குழு ஆட்சியாக மாறிவிடும். பின்னர் உயர்ந்தோர் குழு ஆட்சி குழப்பநிலையை அடைந்து அவை தன்னல குழு ஆட்சியாகிவிடுகிறது. தன்னல குழு ஆட்சி நீங்கி உயர்குழு ஆட்சி மலர்கிறது. பின்னர் உயர்குழு ஆட்சி மக்களாட்சியாக மலரும். இதே போல் அரசாங்கங்கள் தொடரும். இதை விளக்கும் வண்ணம் வரைபடம் கீழே தரப்பட்டுள்ளது.




அரிஸ்டாட்டில் அரசமைப்பு வகைகள் விஞ்ஞான ரீதியாகவும், உண்மையாக கொடுக்கப்பட்ட பொழுதிலும், தெளிவானவையாக இல்லை. மேலும் இவைகள் யாவும் அறிவியல் பூர்வமான, தரமான கொள்கைகளைக் கொள்ளவில்லை. ஒரு அரசாங்க முறையிலிருந்து

வேறோடு அரசாங்க முறை ஏற்படுவது சரியாக தெளிவுபடுத்த வில்லை. மேலும் அரிஸ்டாட்டில் மக்களாட்சிக்கு தவறான பொருளைத் தந்துள்ளார். அது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

அரிஸ்டாட்டிலின் மக்களாட்சியைப் பற்றிய கருத்து நடைமுறைக்கு அதாவது இன்றைய கால அரசாங்க முறைக்கு ஏற்புடையதல்ல என பேராசிரியர் ஜான் சீலி கூறியுள்ளார். மேலும் அவர் குறிப்பிடும்பொழுது அரிஸ்டாடடில் "நகர அரசு" களைப் பற்றி அறிந்திருந்தாரே தவிர "நாடு - அரசு" பற்றி அறியவில்லை. மேலும் அரிஸ்டாட்டில் அரசமைப்பு வகைகளில் வரையறுக்கப்படட் முடியாட்சி, தலைவர் முறை அரசாங்கம், ஜனநாயக மற்றும் கூட்டாட்சி அரசு முறைப்பற்றி குறிப்பிடவில்லை. சுழற்சி முறையில் அரசாங்கங்கள் மாறுகின்றன என்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் தெளிவாகவும் இல்லை.

அரிஸ்டாட்டிலுக்குப் பிறகு பல அரசியல் அறிஞர்கள் அரசியலமைப்பை வகைப்படுத்தியுள்ளனர். அறிவியல் மற்றும் நவீன காலத்திற்கேற்ப எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க பட்டியலை ஸ்டீபன் லீகாக் தந்துள்ளார். பின்வருமாறு தற்கால அரசியலமைப்புகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. இயல்பாக மற்றும் இயற்றப்பட்ட அரசமைப்புகள்
2. எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத அரசமைப்புகள்
3. நெகிழா மற்றும் நெகிழும் அரசமைப்புகள்

### 4.10 இயல்பான மற்றும் இயற்றப்பட்ட அரசமைப்பு

விதிமுறைகளின் வளர்ச்சி, தேவை இவைகளின் அடிப்படையில் உருவானதுதான் இயல்பான மற்றும் பரிணாம



வளர்ச்சியினால் உருவாக்கப்பட்ட அரசமைப்பு. பரிணாமத்தின் உச்ச கட்டமாக நாட்டில் உள்ள அரசமைப்பிற்கு வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. அரசமைப்புகள் தயாரிக்கப்படவில்லை. ஆனால் கடந்த காலத்தில் ஏற்பட்டு தொடர்ந்து வளர்ந்த பழக்கவழக்கங்களும், நடைமுறைகளும், மரபுகளும் பஞ்சாயத்துக்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களும் விதிமுறைகளும் தான் அரசமைப்பு ஏற்பட காரணங்களாக இருந்திருக்கின்றன.

இயற்றப்பட்ட அரசமைப்பு முழுக்க மனிதனின் முழு முயற்சியினால் இயற்றப்பட்டதே ஆகும். மனசாட்சிப்படி உருவாக்கப்பட்டதுதான் அரசமைப்புகள். பெரும்பாலும் அரசர்களாலும், பாராளுமன்றத்தாலும், உயர்ந்த அதிகாரம் படைத்தவர்களும் ஏன் அரசமைப்பு பேரவையினாலும் இயற்றப்பட்டவையே. இயற்றப்பட்ட அரசமைப்பின் கூறுகள் அனைத்தும் ஏதேனும் ஒரு ஆவணத்திலோ அல்லது பல ஆவணங்களிலோ எழுதப்பட்டிருக்கும். இயல்பான மற்றும் இயற்றப்பட்ட அரசமைப்புகள் தற்காலத்தில் எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத அரசமைப்பு என பிரிக்கப்பட்டுள்ளன.

### 4.11 எழுதப்பட்ட அரசமைப்பு

எழுதப்பட்ட அரசமைப்பு ஆவண வடிவில் அல்லது நூல் வடிவில் அடிப்படை மற்றும் அரசாங்கங்களின் பல்வேறு அங்கங்களுக்கு தேவையான விதிமுறைகளின் தொகுப்பேயாகும். தீர்க்கமான முறையில் உருவாக்கப்பட்டதே. நேர்மையாக, மனசாட்சிப்படி திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. ஒரு சில நாடுகளில் அரசமைப்பு பேரவையினாலும், மரபுப்படியும் உருவாக்கப் பட்டிருக்கலாம். எழுதப்பட்ட அரசமைப்பு இந்தியநாட்டில் உருவாக்கப்பட்டு மற்றும் அரசமைப்பு பேரவையினால்

ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்திய அரசியலமைப்பின் முகப்புரை பின்வரும் வாசகங்களோடு தொடங்குகிறது. இந்திய மக்களாகிய நாம் இந்திய நாட்டின் அரசமைப்பை ஏற்று இறைமை நிறைந்த மக்களாட்சி குடியரசாக நிறுவுகிறோம்.

நம்டைய அரசமைப்பு பேரவையில் 1949 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் நாள் அன்று இந்த அரசமைப்பினை ஏற்று இயற்றி நமக்கு நாமே வழங்கி கொள்கிறோம் என்ற சொற்களோடு முடிகிறது.

அமெரிக்காவின் அரசமைப்பு, பிரதிநிதிகளின் பிரத்தியேக கூட்டத்தில் அதிபர் ஜார்ஜ்வாஷிங்டன் தலைமையில் தயாரிக்கப்பட்டது. இந்த அரசமைப்பு செப்டம்பர் 17., 1787ல் பிலடெல்பியா மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்னர் அவை மாகாண அரசுகளின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது.

இந்தியா, மியான்மார் மற்றும் அமெரிக்காவின் அரசியலமைப்பு ஒரே தேதியில் உருவாக்கப்பட்ட தனி ஆவணமாக உள்ளது. ஆனால் பிரான்ஸ், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் ஒரு தொடரான சிறு சிறு துண்டுகளாக அரசமைப்பு ஆவணமாக்கப்பட்டுள்ளது. உதாரணம் பிரான்ஸ் அரசமைப்பு மூன்றாம் குடியரசில் தனி ஆவணமாக இல்லை. இவை வெவ்வேறு தேதிகளில் பிப்ரவரி 24 பிப்ரவரி 26 மற்றும் ஜூலை 26 1874 ஆம் ஆண்டு அதாவது அரசியலமைப்பு சட்டங்களாக இயற்றப்பட்டன.

எழுதப்பட்ட அரசமைப்பு இருப்பதனால் சாதாரண சட்டங்களுக்கு அரசமைப்புச் சட்டங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை தெளிவாக அறிய முடியும். அரசமைப்பு சட்டம் என்பது இறைமை அதிகாரம் உள்ள ஆட்சியாளர்களால்



இயற்றப்படுகிறது. இவைகள் சாதாரண நடைமுறையை பின்பற்றி மாற்ற இயலாது. சாதாரண சட்டங்கள் அரசமைப்பு விதிகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். சாதாரண சட்டங்கள் அரசமைப்பு சார்ந்த சட்டங்களினின்றும் மாறுபடும் போது அவை செல்லாதவையாகும்.

**எழுதப்பட்ட அரசியலமைப்பின் நிறைகள்**

1. திடமானது. நிலையானது. குழப்பத்திற்கு இடமில்லை. அடிப்படை விதிகள் எழுதப்பட்டிருப்பதால் விருப்பதிற்கு ஏற்ப அறியலாம். அரசாங்க அங்கங்களின் அதிகாரம் மற்றும் நிர்வாக அமைப்பு முறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. அதைப்பற்றி அறிய குழப்பமோ தகராறோ ஏற்படாது. அவ்வாறு கருத்து வேறுபாடு நிலவினால் நீதிமன்றத்தை அணுகலாம்.
2. மிகுந்த கவனத்துடன் நீண்ட பிரதிவாதத்திற்கு பிறகு எழுதப்பட்ட அரசமைப்பு உருவாக்கப்பட்டள்ளது. நீண்ட அனுபவம் மற்றும் ஆழ்ந்த அறிவை புலப்படுத்துகிறது. தற்காலிக விருப்பு வெறுப்புகளுக்கும் விரைவான தீர்மானங்களுக்கும் இடமில்லை.
3. எழுதப்பட்ட அரசமைப்பு தனி மனிதன் உரிமையை பாதுகாக்கிறது. அரசமைப்பில் உரிமைகள் சேர்க்கப்பட்டுள்ளதனால் இவைகள் சாதாரண சட்டங்களை விட உயர்வாக கருதப்படுகின்றன.

அவ்வாறு இருப்பதால் வெவ்வேறு அரசாங்கங்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப மாற்றுவதிலிருந்து உரிமைகள் பாதுகாக்கப் படுகின்றன.

4. அரசியலமைப்பை அவ்வப்போது உள்ள அரசாங்கங்கள் மாற்றும் போது மக்கள் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப மாற்றப்படுவதினின்றும் அது பாதுகாக்கப்படுகிறது.

5. நெருக்கடி காலத்திற்கு ஏற்றது. அசாதாரண நிலை ஏற்படும் போது எழுதப்பட்ட அரசமைப்பு நிலையாகவும் வழிகாட்டியாகவும் இருக்கும்.

6. கூட்டாட்சி அரசாங்கத்திற்கு எழுதப்பட்ட அரசமைப்பு பொருத்தமானது. ஏனென்றால் மத்திய - மாநில அரசுகளின் அதிகாரங்கள் தனித்தனியாக வழங்கப்பட்டள்ளன.

**எழுதப்பட்ட அரசியலமைப்பின் குறைகள்**

1. திருத்தம் செய்ய கடினமான முறையை பின்பற்ற வேண்டும். நெகிழா தன்மையையும் பழைமை வாதமும் பெற்றுள்ளது.

2. எழுதப்பட்ட அரசமைப்பில் நீதித்துறை பழமைவாதத்தை பின்பற்றும் அரசாங்கம் காலத்திற்கேற்ப சட்டம் கொண்டுவர நினைக்கும் போது, நீதிமன்றம் அரசமைப்பு சட்டத்திற்கு உட்பட்டதா என பார்க்க நேரிடும்.

3. நாட்டின் விதிமுறைகள் மற்றும் குறிகோள்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கி இருப்பதால் எல்லா காலத்திற்கும் இது பொருத்தமானதாக இருக்காது. இது பிற்காலத்தில் வளர்ச்சியைத் தடை செய்கிறது.

4. விரிவான விளக்கமுடையதாக இருப்பதால் சில சமயங்களில் மிகைப்படுத்தப்படட் சட்ட விளக்கத்திற்கு வழி ஏற்படுத்துகிறது.



## 4.12. எழுதப்படாத அரசமைப்பு

ஒரு நாட்டின் அரசியலமைப்பு உருவாவது அந்த நாட்டின் இயல்பான வளர்ச்சியையும் கட்டுப்பாடுகளையும் நடைமுறை களையும் பொறுத்ததாகும். இது ஆவணங்களில் சொல்லப்பட்டிருக்க வேண்டியதில்லை. ஒரு சில எழுதப்பட்டிருந்தாலும் அவை எழுதப்படாத அம்சங்களை விட மிக குறைவாக உள்ளதாக அறியலாம். இதற்கு உதாரணம் இங்கிலாந்து.

**நன்மைகள்**

1. காலத்திற்கேற்ப சூழ்நிலைக்கேற்ப சட்டங்களை மாற்றிக் கொள்ளலாம். தேவைப்படும் பொழுது சட்டங்களை சேர்த்துக் கொள்ளலாம். வரையறை இல்லை. அங்கே வளர்ச்சி உண்டு.

2. வளையும் தன்டையுடையது. பொதுமக்கள் கருத்து ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அவ்வப்பொழுது மாற்றங்களை கொண்டு வரலாம். புரட்சிகள் தேவையில்லை.

3. எழுதப்படாத அரசமைப்பில் மாற்றங்களை எளிதில் கொண்டு வரலாம். எதிர்பாராத நேரங்களில் மாற்றங்கள் செய்வது நன்மை தரும்.

4. பண்பாடுகள் ம்றறும் மரபுகளைக் காப்பாற்றுவதில் அவை சிறப்பானவை. பிரிட்டிஷ் அரசமைப்பு உடைபடாத வரலாற்றினைப் பெற்றுள்ளது. இவ்வளர்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதை வரலாறு மூலம் அறியலாம்.

**எழுதப்படாத அரசியலமைப்பின் குறைகள்**

1. முடிவற்றது. குழப்பம் ஏற்படுத்தக்கூடியது. விதிமுறைகளை சாதாரண மனிதன் அறிந்து கொள்ள வாய்ப்பு இல்லை. எழுதப்படாத அரசமைப்பு உயர்ந்த நேர்மையான

மனப்பாங்கை பெற்றிருப்போரால் தான் செயல்படுத்த முடியும். அதன் தன்மை வேகம் ஆகியவற்றை புரிந்து கொள்ள அவர்களால் தான் முடியும். சாதாரணமானவர்களால் புரிந்து கொள்ளவோ பின்பற்றவோ இயலாது.

2. சில சமயங்களில் நிலையற்ற தன்மையையுடையது.

3. அதிகாரம் வழங்கப்பட்ட நிலையைக் காட்டிலும் நீதிமன்றம் தன்னுடைய அதிகார எல்லையை நீட்டித்துக் கொள்ளும். நீதிமன்றம் தன் விருப்பம் போல சட்ட இயல் மற்றும் அதன் நுணுக்கங்கள் ஆகியவற்றை அதன் விருப்பப்படி எடுத்தாளும்.

4. எழுதப்படாத அரசியலமைப்பு மக்களாட்சிக்கு உகந்ததல்ல என்ற கருத்து வலிமையாக உள்ளது. மக்கள் வரையறுக்கப்பட்ட சட்ட விதிகளைத் தான் விரும்புவர். எழுதப்படாத அரசியலமைப்பு உயர்ந்தோர் குழு ஆட்சிக்குத்தான் பயன்படும்.

## 4.13. நெகிழும் மற்றும் நெகிழா அரசமைப்பு

அரசமைப்பு மற்றும் அதற்கும் சாதாரண சட்டங்களுக்கும் உள்ள உறவு மேலும் அரசியலமைப்பை திருத்தும் முறைகளைப் பொறுத்துதான் அரசியலமைப்பு வகைப்படுத்தப்பட வேண்டும் என்று பிரைஸ் கூறுகிறார். இத்திட்டத்தின்படி இரண்டு வகையான அரசமைப்புகள் உள்ளன. அவை நெகிழும் மற்றும் நெகிழா அரசமைப்புகளாகும்.

## 4.14. நெகிழும் அரசமைப்பு

நெகிழும் அரசமைப்பில் அரசமைப்பு சட்டத்திற்கு சாதாரண சட்டத்திற்கும் எவ்வித வேறுபாடும் இல்லை. இரண்டுமே ஒரே



மாதிரியான முறைகளைப் பின்பற்றியே இயற்றப்படுகின்றன. அரசமைப்பு பொதுவாக மரபுகளின் அடிப்படையிலோ அல்லது எழுதப்பட்டோ இருக்கின்றன. ஒர மாதிரியாகவே திருத்தம் செய்யப்படுகின்றன. அரசியலமைப்புச் சட்டத்திற்கும் சாதாரண சட்டத்திற்கும் திருத்தம் செய்ய எவ்வித பிரத்தியேக நடைமுறையும் பின்பற்றப்படவில்லை.

நெகிழும் அரசியலமைப்பிற்கு சிறப்பான உதாரணமாக இங்கிலாந்து அரசமைப்பை கருதலாம். இங்கிலாந்து பாராளுமன்றமே உயர்ந்த அதிகாரம் அல்லது இறைமை அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது.

பாராளுமன்றம் எந்த சட்டம் வேண்டுமானாலும் இயற்றலாம். அதற்கு தடையேதும் இல்லை.

இயற்றப்பட்ட சட்டம் எதையும் பாராளுமன்றம் மாற்றலாம். அடிப்படை அல்லது அரசியலமைப்பு சட்டங்கள் என இங்கிலாந்து அரசமைப்பில் எவ்வித பாகுபாடும் போல இங்கிலாந்து அரசமைப்பில் எவ்வித பாகுபாடும் குறிப்பிடப்படவில்லை. சாதாரண சட்டங்களை இயற்றுவது போல இங்கிலாந்தில் சாதாரண முறையில் அரசியலமைப்புத் திருத்தங்களையும் கொண்டு வரலாம். பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களை மறு ஆய்வு செய்யவோ ரத்து செய்யவோ நீதிமன்றங்களுக்கு அதிகாரம் இல்லை.

**நிறைகள்**

1. நெகிழும் அரசமைப்பை சாதாரண சட்டங்களைப் போல திருத்தம் செய்யலாம். காலத்திற்கேற்றால் போல் புதிய முறைகளை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

2. வளையும் தன்மை கொண்டுள்ளதால் சுலபமாக மக்களின் தேவைகளை நெகிழும் அரசமைப்பில் கொண்டு வரலாம்.

மக்களின் தேவை அவ்வப்பொழுது நிறைவேற்றப் பட்டுவிட்டால் புரட்சி ஏற்பட வாய்ப்பே கிடையாது. இந்நிலை தான் இங்கிலாந்தில் பல கால கட்டங்களில் புரட்சி ஏற்படாமல் இருந்ததற்கு காரணம் அவ்வப்பொழுது மக்களின் தேவைக்கேற்ப சட்டங்களை இயற்றிக் கொள்வதே ஆகும்.

இதனால் முடியாட்சி முறையிலிருந்து பாராளுமன்ற முறைக்கு இங்கிலாந்து வந்தது இயல்பானது. அதில் வன்முறை ஏதம் இல்லை.

பிரீமேன், பிரிட்டிஷ் அரசமைப்பை பற்றி குறிப்பிடும்பொழுது பிரான்ஸ் நாட்டில் புரட்சி காரணமாக ஐந்து முறை அரசமைப்பு மாற்றப்பட்டதை சுட்டிக்காட்டி பிரிட்டிஷ் நாட்டை பார்த்து பெருமைப்பட்டார்.

3. வளரும் நாடுகளுக்கு நெகிழும் அரசமைப்பு தேவை. வளர்ச்சி அரசமைப்பின் அடிப்படையை பாதிக்காத வண்ணம் அமைந்துள்ளது. மேலும் சமுதாய அரசியல் மாற்றம் சிறப்பாக அமைந்துள்ளது. நெகிழும் அரசமைப்பிற்கு வலுவூட்டம் தருவதாக உள்ளது. அரசியல் மற்றும் சமுதாயத்தை சரியாக மாற்றம் செய்ய எப்பொழுதும் மிகச்சரியான அரசமைப்பு அமைய இயலாது.

4. தேசிய மரபுகளின் அடிப்படையில் நெகிழும் அரசமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. தேவையும் மாற்றமும் நெகிழும் அரசமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. வரலாற்றில் தொடர்ச்சியாக காணப்படுவதாகும். நெகிழும் அரசியலமைப்பு பொது மக்கள் கருத்தை உணரக்கூடிய நாடித்துடிப்பாக உள்ளதோடு மக்களின் எண்ணத்தையும் முன்வைக்கிறது.



“மக்கள் அரசாங்கத்திற்காக நடைமுறைக்கு வருகின்ற அரசமைப்புக்கள் எல்லாவற்றிலும் தேசிய வாழ்க்கையை பிரதிபலித்து இயற்கையாக ஏற்படுவதும் தேசிய அறிவு முதிர்ச்சிக்கு ஏற்ப வளர்ந்து வருவதும் சமுதாய மற்றும் அரசியல் சுதந்திரத்தை ஏற்றுக் கொணடிருக்கிற அரசாங்கத்தின் உணர்வுகளை குறிப்பிட்ட ஒவ்வொரு காலத்திலும் பிரதிபலிப்பதே மிகச் சிறந்தது” என்று நீதியரசர் கூலி என்பவர் குறிப்பிடுகிறார்.

**குறைகள்**

1. மாறிக்கொண்டே இருப்பது மக்களைத் திருப்திபடுத்த பெரும்பான்மையோர், சிறுபான்மையோரின் கணக்கில் நன்மையை கொள்ளாமல் இருக்க வழிவகுக்கும். இத்தகைய அரசியலமைப்பு நிலையான சிறந்த நிர்வாகத்தை தர இயலாது

2. திருத்தம் செய்யும் முறை சுலபமாக உள்ளதால் அரசியலமைப்பு சுலபமாகவும் எளிதாகவும் மாற்றப்படுகிறது. மாறும் தன்மையுடைய மக்களின் பெருவிருப்பத்தை அடிப் படையாகக் கொண்டு மாற்றம் செய்யப்படுகிறது. தீர்மானங்கள் சில நேரங்களில் ஆவேச உணர்ச்சிகள் அடிப்படையில் அமைதி மற்றும் ஒற்றுமை பாதிப்புக்குள்ளாகும். ஸ்திரதன்மைக்கு தொல்லை தரும் நிலையும் ஏற்படலாம். நாட்டின் ஒற்றுமைக்கு பங்கம் ஏற்பட்டு பிரிவினை ஏற்பட வழிவகுக்கலாம்.

பொதுவாக கூட்டாட்சிமுறை அரசாங்கத்திற்கு நெகிழும் அரசியலமைப்பு உகந்தது அல்ல. ஏனெனில், அதில் கூட்டாட்சியில் அங்கம் வகிக்கும் இதர மாநில அரசாங்கங்களின் உரிமைகள் மற்றும் அதிகாரங்கள் உறுதி

செய்யப்பட்டிருக்கலாம். கூட்டாட்சி முறையில் நெகிழும் தன்மையுடைய அரசியலமைப்பு இருந்தால் பின் தரப்பட்டுள்ள இரண்டில் ஒன்று நடைபெற வாய்ப்புள்ளது.

1. அரசின் இதர அரசாங்கங்கள் தனித்தன்மையையும் சுதந்திரத்தையும் இழந்துவிடும். மேலும் மைய அரசு கூட்டாட்சி தன்மைக்கு எதிராக அதிக அதிகாரம் பெற்றதாகிவிடும்.
2. நெகிழும் அரசமைப்பு நிரந்தரமாக இல்லாமல் இருப்பதால் மைய அரசாங்கம் நீங்கலான இதர அரசாங்கங்கள் சுதந்திரமாக செயல்படும்.

அரசமைப்பு சாதாரண முறையில் மாற்றப்படுவதால் அடிப்படை உரிமைகளுக்கு பாதுகாப்பு இல்லை. பதவிக்கு வரும் ஒவ்வொரு அரசாங்கமும் மிக எளிதாக அடிப்படை உரிமைகளை மாற்றும் அல்லது நீக்கம் செய்யும்.

### 4.15. நெகிழா அரசியலமைப்பு

நெகிழா அரசமைப்பில் திருத்தம் செய்ய சில பிரத்தியேக முறைகள் தேவைப்படுகின்றன. நெகிழா அரசமைப்பிற்கு உதாரணங்களாக அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளை குறிப்பிடலாம். நெகிழா அரசமைப்பு சாதாரண சட்டங்களைவிட உயர்வானது. சாதாரண சட்டங்களை மாற்றுவது போல் இல்லாமல் சில குறிப்பிட்ட தனி வழிகள் மூலம் தான் நெகிழா அரசியலமைப்பிற்கு திருத்தம் மேற்கொள்ளலாம். இதனால் திருத்தம் செய்வது கடினமாகும். அரசின் இறைமைக்கு உயர்வு அளிப்பதே நெகிழா அரசியலமைப்பின்



நோக்கமாகும். இத்தன்மைக்கு புனிதத்துவம் வழங்குவது அரசியலமைப்பே ஆகும்.

அமெரிக்க அரசமைப்பு நெகிழா அரசமைப்பிற்கு சிறந்த எடுத்துக் காட்டாக. அமெரிக்க பாராளுமன்றம் அரசியலமைப்பிற்கு எதிராக சட்டம் இயற்ற இயலாது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அமெரிக்க நீதிமன்றம் அரசியலமைப்பின் பாதுகாவலனாக விளங்குகிறது. மேலும் அமெரிக்க பாராளுமன்றமான காங்கிரஸ் அரசமைப்பு சட்டங்களுக்கு எதிராக இயற்றுகின்ற சட்டங்களை நிராகரிக்கவும் செய்யலாம்.

இந்திய அரசியலமைப்பு இங்கிலாந்து அரசமைப்பு போல் நெகிழும் தன்மையும் அமெரிக்கா அரசியலமைப்பு போல நெகிழாத்தன்மையும் பெற்றதல்ல. ஆங்கில அரசமைப்பு போல அதிகப்படியான நெகிழும் தன்மையையோ அமெரிக்க அரசியலமைப்பு போல அதிக நெகிழாத்தன்மையையோ பெற்றில்லாமல் இரண்டிற்கும் இடைப்பட்ட தன்மையை கொண்டுள்ளது.

**நன்மைகள்**

1. நிரந்தரமானது, மாறாத தன்மையுடையது. அனுபவமும் அறிவாற்றல் பெற்றவர்களாலும் எழுதப்பட்டதாகும். இதுவே ஒரு நாட்டின் திறமையை எடுத்துக்காட்டும் அளவுகோல். மக்கள் இதை புனித நூலாக ஏற்றுக் கொள்வதுடன் அதன் வழிமுறைகள் படி நடந்து கொள்ளவும் தயாராக உள்ளனர்.
2. சட்டமன்றத்தின் ஆக்ரமிப்பிலிருந்து அரசமைப்பை பாதுகாக்கின்றது. அரசமைப்பு சட்டம், சட்ட மன்றங்களின் கைப்பாவையாக போய்விடக் கூடாது.

3. அடிப்படை உரிமைகளை பாதுகாப்பது இவ்வகை அரசியலமைப்பே. அடிப்படை உரிமைகள் அரசமைப்பின் ஒரு பகுதியாகும். இவைகளை எளிதில் மாற்றக் கூடாது.

4. சிறுபான்மையினரை பாதுகாப்பது நெகிழா அரசியலமைப்பு. பெறும் பான்மையினர் எடுக்கும் நடவடிக்கைகள் சிறுபான்மையினரை பாதிக்கக் கூடாது. அவ்வாறு பாதிக்கும்போது நீதிமன்றம் அதனை பாதுகாக்க வேண்டும்.

5. நெகிழா அரசியலமைப்பு மக்களின் உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டது. மக்களின் கொந்தளிப்பு உணர்வுகள் அரசியலமைப்பை மாற்றும் முறையை கைவிட்டுவிடக் கூடாது.

6. கூட்டாட்சி ஒற்றுமைக்கும், பலத்திற்கும் பாதுகாப்பிற்கும் நெகிழா அரசமைப்பு முக்கியமாக தேவைப்படுகிறது. நெகிழா அரசியலமைப்பில் தான் கூட்டாட்சிப் பகுதிகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. ஒன்றின் மீது இன்னொன்று ஆதிக்கம் செலுத்த இயலாது. இது நெகிழா அரசமைப்பில்தான் சாத்தியமாகும்.

**குறைகள்**

1. சில நேரங்களில் அரசியலமைப்பு மாற்றம் தவிர்க்க இயலாதது. ஆனால் நெகிழா அரசமைப்பை சுலபமாக திருத்தம் செய்ய முடியாது.

2. நெகிழா அரசமைப்பே எழுதியவர்கள் எதிர்காலத்தைப் பற்றி சிந்திப்பதில்லை. வளரும் நாடுகளுக்கு இவ்வரசமைப்பு தகுந்ததல்ல. மேலும் வளரும் நாடுகளில் அடிக்கடி மாற்றம் தேவைப்படுகிறது.



3. அரசமைப்புச் சட்டத்திற்குள் இயற்றப்பட்ட சட்டங்கள் வருகின்றனவா என உறுதி செய்து கொள்வதே நெகிழா அரசமைப்பில் நீதிமன்றத்தின் கவலையாக இருக்கும்.

குறைகளும் நிறைகளும் இருப்பினும் இன்றைய சூழ்நிலையில் நெகிழா மற்றும் எழுதப்பட்ட அரசமைப்புதான் நல்லது என்ற எண்ணம் அனைவரிடமும் உள்ளது. எழுதப்பட்ட அரசமைப்பில் எதிர்காலத்தில் நாம் கருத்தில் கொள்ள வேண்டியது என்னவென்றால் நெகிழும் தன்மை பொருந்திய ஒரு சில அம்சங்கள் இடம் பெற வேண்டும் என்பது தான். இந்திய அரசமைப்பில் ஒரு சில நெகிழும் மற்றும் நெகிழா அம்சங்கள் இடம் பெற்றிருக்கின்றன. எனவே இந்திய அரசியலமைப்பு இதர நாடுகளுக்கு இவ்வகையில் வழிகாட்டியாக விளங்குகிறது.

## வினாக்கள்

### பகுதி அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்**

1. கீழ்க்கண்ட அறிஞர்களில் யார் அரசியல் தத்துவஞானி இல்லை?

அ) எடிசன் ஆ) காந்தி

இ) பிளாட்டோ ஈ) சீலி

2. இவர்களில் கிரேக்க நாட்டைச் சாராதார் யார்?

அ) அரிஸ்டாடடில் ஆ) பிளாட்டோ

இ) சாக்ரடிஸ் ஈ)மாண்டெஸ்க்யூ

**II. கோடிட்ட இடத்தை பூர்த்தி செய்க**

1. அனைத்து கூட்டாட்சி நாடுகளும் ____________________ அரசமைப்பைப் பெற்றுள்ளன.

2. அமெரிக்க அரசமைப்பு ஒரு ____________________

**III. கீழ்வருவன சரியா அல்லது தவறா என எழுதுக**

1. சிறந்த அரசமைப்பு சுருக்கமாக இருத்தல் வேண்டும்.

2. இந்திய அரசமைப்பு உண்மையான நெகிழா அரசமைப்பு

### பகுதி ஆ

1. அரசமைப்பை வரையறு

2. அரசமைப்பில் இருக்க வேண்டிய அம்சங்கள் யாவை?

### பகுதி இ

1. அரிஸ்டாட்டிலின் அரசமைப்பு பட்டியலை விவரி.

2. சிறந்த அரசமைப்பின் அம்சங்களைக் கூறுக.

### பகுதி ஈ

1. நெகிழும் நெகிழா அரசமைப்பின் குறை நிறைகளை விவரி.

2. எழுதப்பட்ட அரசமைப்பின் குறைநிறைகளை எழுதுக.

அத்தியாயம் 5

# சட்டம், நீதி, சுதந்திரம், சமத்துவம்

## முன்னுரை

இப்பாடப்பகுதி நான்காக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் சட்டம், சுதந்திரம், நீதி மற்றும் சமத்துவம் குறித்து விளக்குகிறது. மக்களுடைய நலன்களைக் கருதி, அவர்களுடைய நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதையும் ஒழுங்குபடுத்துவதையும் தனது தலையாய கடமையாக நவீன கால அரசு கொண்டுள்ளது. அது அவ்வாறான கட்டுப்பாடுகளையும், ஒழுங்குபடுத்துதலையும் நடைமுறைப்படுத்த, பலவிதமான சட்டங்களையும் இயற்றுகிறது. மக்கள் தங்களுடைய ஆளுமையை வளர்த்துக் கொள்ளும் வண்ணம், அவர்களுக்கு வாய்ப்புகள் கிட்டும் வண்ணம் அவர்களுக்கு உரிய சுதந்திரத்தையும் அரசு உறுதி செய்கிறது.

சமத்துவம் என்பது சுதந்திரம் மற்றும் நீதியோடு இயைந்தது. தனி நபர் ஒருவருக்கு ஆள்பவரால் அளிக்கப்பட்ட சட்டபூர்வமான எதிர்பார்ப்புகளையும் அதன் மூலம் அவர்களடையும் பலன்களையும் பெறும் முகத்தான் நீதி செயல்படுகிறது. அத்தனிநபருக்கு அளிக்கப்பட்ட உறுதிப்பாடுகளை நிறைவேற்றாமல் போனாலோ, அவருடைய உரிமைகள் பாதிக்கப்பட்டாலோ, அவ்வினங்களில் நீதி தலையிடுகிறது.

## 5.1. சட்டத்தின் பொருள்

பொதுவாக புரிந்து கொள்ளப்பட்ட அளவில், சட்டம் என்பது, நீதிமன்றங்களால் நடைமுறைப்படுத்தும் விதிமுறைகள் அடங்கிய தொகுப்பு என பொருள்படும். இவை மட்டுமின்றி, மனிதர்களின் சமூக நடத்தைகளோடு தொடர்புள்ள சமூக சட்டங்கள் மற்றும் இயல் அறிவியல் சட்டங்களும் உள்ளன.

அரசியல் அறிவியல் மாணவர்களாகிய நாம் பிற சட்டங்களை விட, அரசியல் சட்டம் என்பதைக் காண்போம். இத்தகைய சட்டங்கள் தனிமனிதர்கள் எவற்றை செய்ய வேண்டும் மற்றும் எவற்றை செய்யக் கூடாது என்பதனை உணர்த்துகின்றன. அவ்வாறான வழிமுறைகள் மீறப்படும் போது அந்நடவடிக்கை தண்டனைக்குரியதாகி விடுகிறது. இதன் மூலம் அரசியல் சட்டம் அல்லது ஏற்பு சட்டம் (positive law) கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதலோடு தொடர்பு கொண்டதாகும். சட்டத்தினை பற்றிய கல்வி சட்டக் கல்வி (Jurisprudence) என்றழைக்கப்படுகிறது.

### சட்டத்தின் வரையறையும், பொருளும்

எந்த இடத்தில் சட்டம் இல்லையோ அங்கு ஒழுங்கு இருக்காது, எங்கே ஒழுங்கில்லையோ, அங்கே மனிதர்கள் என்ன செய்வது, எங்கே செல்வது என்றறியாது காணாமல் போய்விடுவர்.

-மேக். ஐவர்

சட்டம் என்பது ஒரு அரசு வலியுறுத்தும் உரிமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் முறைமைகளாகும் - டி.எச். கிரீன்

சட்டம் என்பது பொது விதி. எத்தகைய நடவடிக்கைகளைச் செய்யலாம் அல்லது செய்யக் கூடாது என்று அது கூறுகிறது. சட்டத்தை மதிக்காமல் மீறுபவர்களுக்கு தண்டனை அளிக்கப்படுகிறது.

## 5.2. சட்டத்தின் ஆதாரங்கள்

எவ்வாறு சட்டம் பிறந்திருக்கக் கூடும். எவை அதற்கு காரணமாக இருந்திருக்கலாம் என்பதனையே சட்டத்தின் ஆதாரங்கள் என்கிறோம்.

மேக் ஐவர் “அரசே, சட்டத்தின் பெற்றோர் மற்றும் குழந்தை” என்கிறார். நவீன காலத்தில், ஒரு மக்கள் நலம் நாடும் அரசில், அரசாங்கத்தின் மூன்று அங்கங்களாக சட்டமன்றம், செயலாட்சிக்குழு மற்றும் நீதித்துறை என்பவற்றில் சட்டமன்றம் சட்டத்தை



இயற்றுகிறது; செயலாட்சிக்குழு (Executiev) இயற்றப்பட்ட சட்டங்களை நடைமுறைப்படுத்துகிறது. நீதித்துறை இயற்றப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்களுக்கு விளக்கம் அளிக்கிறது. சட்டமன்றம் என்பதனைத் தாண்டி, சட்டத்திற்கு பல்வகை ஆதாரங்கள் உள்ளன. அவை

1. வழக்காறுகள்
2. நீதிமன்ற தீர்ப்புகள்
3. அறிவியல் சார்பு விளக்கங்கள்
4. சட்டமன்றம்
5. நீதி, மனசார்பு
6. மதம் என்பன

### 1. வழக்காறுகள்

சமுதாயத்தில் பலவகை இனங்களில், தலைமுறை தலைமுறையாக ஒரு சில நடைமுறைகள் பின்பற்றப்படும். காலப்போக்கில் அந் நடைமுறைகளே “சட்டம்” என்றாகிவிடும். மக்களிடையே நிலவிய உறவுகள் சிக்கலாகாதவரையிலும், பொது நோக்கங்கள் என்பன மிகக் குறைவாக இருந்தவரையிலும், இத்தகைய பழக்க வழக்கங்கள், வழக்காறுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, வாய் வழியாக தலைமுறை தலைமுறையாக உறுதிப்பாட்டுடன் கடைபிடிக்கப்பட்டிருந்தன.

இத்தகைய சம்பிரதாயங்கள் பெரும்பாலும் மதத்தின் சாரத்தையே பெற்றிருந்தன. ஏனெனில் மதம் வேறு, சட்டம் வேறு என்பது அப்போது அறியப்படவில்லை. எனவே வழக்காறுகளில் இருந்து தோன்றிய சட்டங்கள் பேரியற்கையினிருந்து (Supernatu-ral) வந்ததென்றே கருதலாம். பெரும்பான்மையான சம்பிரதாயங்களுக்கு மத சடங்குகள் மற்றும் கடவுள்களின் கோபத்திற்கு ஆளாக வேண்டாம் என்பன போன்ற மூடநம்பிக்கைகளே ஆதாரமாக விளங்கியன.

## 2. நீதிமன்றங்களின் தீர்ப்புகள்

இவை நீதிமன்ற புனராய்வு என்றும் அழைக்கப்படுகின்றன. மாறுகின்ற காலச்சூழலின், புதிய வாழ்க்கை முறைகள் மற்றும் மக்களிடையே ஏற்பட்ட தொடர்புகள் பல்வேறு சிக்கல்களை தோற்றுவித்தன. அத்தகைய சிக்கல்களை தீர்த்து வைக்க வழக்காறுகள் எவ்விதமான தீர்வுகளையும் தரவில்லை. அவ்வினங்களின் இத்தகைய தீர்ப்புகள் சட்டங்களாகி விடுகின்றன. ரோமானிய மற்றும் இங்கிலாந்து அரசர்களின் தீர்ப்புகள் இவற்றை அடிப்படையாக கொண்டவையேயாகும்.

## 3. அறிவியல் சட்ட விளக்கங்கள்

அறிவியல் சார்பான சட்டவிளக்கங்களும் சட்டங்களின் மூல ஆதாரமாக கருதப்படுகின்றன. சட்ட வல்லுநர்கள் தான் நீதிமன்றங்களின் தீர்ப்புகள் அடிப்படையிலும், நீதிபதிகளின் கருத்துக்களையும் ஆய்ந்து சிக்கல்களான பிரச்சனைகளில் தங்கள் மேலான விளக்கங்களை அளிக்கின்றனர். சட்ட உலகத்தில் சட்ட வல்லுநர்களுக்கு இருக்கும் நுணுக்கம், ஆழ்ந்த அனுபவம், விளக்கும் ஆற்றல் ஆகியவை காரணமாக செல்வாக்கு வளர்வதால், நீதிபதிகளும் அம்மாதிரி வல்லுநர்களின் விளக்கங்களை புறக்கணிக்க இயலுவதில்லை. சான்றாக, இங்கிலாந்து நாட்டிலிருந்த பிளாக்ஸ்டன், கோக் போன்றவர்கள் எழுதிய சட்ட விளக்கங்கள் இங்கிலாந்து பாராளுமன்ற சட்டங்களுக்கு சமமானதாக கருதப்படுகின்றன. இது போன்றது தான் ரோமாபுரி சட்ட வல்லுநர்களின் விளக்கங்களுமாகும்.

## 4. சட்டமன்றம்

இக்காலத்தில் சட்டம் இயற்றுவதற்கு உள்ள மற்றும் ஒரு முக்கியமான ஆதாரம், சட்டமன்றமாகும். சட்டமன்றங்கள் சட்டமியற்றும் தொழிற்சாலைகளாக தற்காலத்தில் கருதப்படுகின்றன. சட்ட மன்றங்கள் முன்னால் இயற்றப்பட்ட சட்டங்களை



மாற்றுகின்றன. நடைமுறையிலிருக்கும் சட்டங்களை விட்டுவிடுகின்றன. தேவையான புது சட்டங்களை இயற்றுகின்றன. சட்ட மூலாதாரங்களுடைய தாக்கம் குறைந்து போனாலும், வழக்காறுகள், சமய நடைமுறைகள் மற்றும் நீதிமன்ற முடிவுகளை சட்டமியற்றுவோர் கருத்தில் கொள்கின்றனர்.

## 5. நீதி மனச்சார்பு சட்டம் (Equity Law)


நீதி மனச்சார்பு என்று குறிப்பிடும்போது நீதிபதியின் உள்ளத்தில் உறைந்து கிடக்கும் மனச்சார்பு அல்லது மனசாட்சியையே குறிப்பிடுவதாகும். தீர்ப்புகளிலிருந்து இவ்வகை மாறுபட்டதா என்ற கேள்வி எழக்கூடும். உண்மையில் வழக்கத்திலிருக்கும் சட்டங்களின் அடிப்படையில் தீர்ப்புகள் கூறப்பட்டாலும், சட்டங்களுக்கும் அப்பால் உண்மையான நீதியை நிலைநாட்ட வேண்டிய சட்டத்தை ஒட்டி நம் மனசாட்சியின் அடிப்படையில் தீர்ப்புகளை வழங்கக் கூடும். மாறுபட்ட வாழ்க்கைமுறை மற்றும் சூழல்கள் காரணமாக பழையச் சட்டங்களில் வழக்குகளில் தீர்ப்பு சொல்ல ஆதாரமில்லாத போது, நியாய அநியாயம், பொது அறிவு மற்றும் இயற்கை நீதி போன்றவை நீதி வழங்க உதவுகின்றன. அவ்வகையில் வழங்கப்பட்ட தீர்ப்புகளையே "நீதி மனச்சார்பு சட்டம்" என்று அழைக்கிறோம். இங்கிலாந்து போன்ற நாடுகளில் இச்சட்டம் பரவலாக பயன்படுத்தப்படுகிறது எனலாம்.

## 6. மதம் அல்லது சமயம்

பழக்கவழக்கங்கள், நடைமுறைச் சட்டங்களை ஒட்டியது தான் மதச்சட்டங்களாகும். இவற்றிற்கான அடிப்படை, மக்களிடையே பேணப்படும் மதநூல்களாகும். பழங்காலந் தொட்டே, மனிதர்கள் புலன்களால் அறிய இயலாத ஒரு சக்தியின் பால் தங்களுடைய நம்பிக்கையை வைதது, அச்சக்தியின் வழிகாட்டுதலின்படி, தங்கள் நடவடிக்கையை வகுத்துக் கொள்வதே வாழ்க்கை என கருதினர். மத குருமார்களின் கருத்துக்களும், புனித நூல்களில் றப்படுபவைகளே சட்டத்தின் ஆதாரங்களாக விளங்குவன.

## 5.3. சட்டத்தின் வகைகள்

மேக் ஐவர் சட்டத்தினை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்துகிறார்.




மேற்காண் சடங்களின் விளக்கம் பின்வருமாறு

### 1. இயற்கை சட்டம்

இது இறைமை சட்டம் எனவும் அழைக்கப்படுகிறது. இவ்வகை சட்டம், எங்கும் இயற்றப்பட்ட சட்டமன்று, அது மனிதர்களின் அறிவில் உதித்த சட்டமாகும். அது மனிதர்களால் படைக்கப்பட்ட சட்டமன்று. இயற்கை சட்டம், அதன் பால் உள்ள மதிப்பினாலும், அச்சத்தினாலும் ஒப்புகொள்ளப்படுகிறது.

### 2. நேர்மறை சட்டம்

இது அரசியல் சட்டம் என்றும் அழைக்கப்படுகிறது. இது மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டதாகும். இது இயற்கையானது. அனைவராலும் புரிந்து கொள்ளப்படுவது. இது நாட்டின்



இறையாண்மை சக்தியாகவும் விளங்குகிறது. இவ்வகை சட்டம் மீறப்படும்போது தண்டனைகள் அளிக்கப்படும்.

நாட்டின் இறையாண்மை காட்டும் நெறிப்படி வகுக்கப்பட்டு அந்நாட்டின் எல்லைக்குட்பட்ட பகுதிளில் வசிக்கும் மக்களின் தனிப்பட்ட மற்றும் பொதுவான உறவுமுறைகள் குறித்து இயற்றப்படும் சட்டம் தேசிய சட்டமாகும்.

### 4. சர்வதேச சட்டம்

1780ல் ஜெரமிபெந்தம் என்ற சிந்தனையாளரால் இப்பெயர் அறியப்பட்டது. உலகில் உள்ள நாடுகள் தங்களுக்குள் ஏற்படுகின்ற உறவுகள் மற்றும் அதனை சார்ந்த நடத்தை முறைகள் குறித்து இயற்றப்படுவது “சர்வதேச சட்டம்” என்பதாகும். விட்டன் என்னும் அறிஞர் பன்னாட்டு சட்டம் என்பது “நாகரீக நாடுகள் அவைகளுக்கிடையிலான உறவில் அவைகளை கட்டுப்படுத்துவதாக நடைமுறையில் உள்ள ஒப்பந்தங்கள் மற்றும் வழக்கங்களில் சொல்லப்பட்டிருக்கின்ற விதிகள் (rules) ஆகியவையாகும்” என்று கூறுகிறார்.

“இவ்விதிகள் மீறப்படும்போது அதனால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு நஷ்ட ஈடு பெற சட்டரீதியான உரிமைகள் உண்டு என்றும் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் பன்னாட்டுச் சட்டம் என்பது நாடுகள் ஒவ்வொன்றும் பிற நாடுகளுடன் உறவு ஏற்படுத்திக் கொள்ளும்போது ஏற்றுக் கொண்டுள்ள விதிகள் மற்றும் கடமைகளை அதாகவே தானாக ஏற்று நடந்து கொள்வதால் தான் இருக்கிறது. இதனை தார்மீக ஒழுக்கம் (Positive Morality) என்று விளக்கலாம்.

இதுவே இயற்கைச் சட்டம் (Natural Law) என்றும் அறியலாம். எனவே ஏதனும் ஒரு நாடு அல்லது தேசம் இதர நாட்டிற்கு

தீங்கிழைக்குமானால் தீங்கிழைப்புக்குள்ளான நாடு தன்னால் முடிந்த வரை அந்த தீங்கை தீர்த்துக் கொள்ள வழிகாண வேண்டும். அவசியம் ஏற்படும் போது உதவி செய்ய முன்வரும் நாடுகளின் உதவியை கேட்டும் பெற்று சரி செய்து கொள்ளலாம்.

இம்முறை பன்னாட்டுச் சட்டத்தை எப்போதும் காப்பாற்ற உதவாது. இருப்பினும் தேசத்தின் சிறந்த தலைவர்களாக இருப்பவர்கள் நியாயமானவற்றை நிலைநாட்ட முயற்சிகள் மேற்கொள்வதன் வாயிலாக பன்னாட்டு சட்டத்தை உலக நாடுகள் ஏற்கவும், மதித்து நடக்கவும் தேவையான நடவடிக்கைகளை உரிய நேரத்தில் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலமாகத் தான் “உலக நீதி” (International Justice) வெற்றி பெறும்.

**5. *அரசியலமைப்பு சட்டம்***

நாட்டின் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை தீர்மானிக்கும் அடிப்படை சட்டம், அரசியலமைப்பு சட்டமாகும். அரசாங்கத்தின் கட்டமைப்புகள் மற்றும் அரசின் அங்கங்கள் இவற்றிற்கிடையே நிலவும் தொடர்புகள் ஆகியவற்றை தீர்மானிப்பது அரசியலமைப்பு சட்டத்தின் முக்கிய பணியாகும்.

**6. *சாதாரண சட்டம்***

இது சட்டமன்றம் இயற்றப்படும் சட்டமாகும். ஒரு நாட்டில் வாழும் மனிதர்களை நிர்வகிக்க இயற்றப்படும் சாதாரண சட்டமாகும். அரசியலமைப்பு சட்டத்தை தவிர, ஏனைய முனிசிபல் சட்டங்கள் அனைத்தும் இவ்வகையானதாகும். இது அரசியலமைப்பு சட்டத்தினை சார்ந்திருக்கும் சட்டமாகும்.

**7. *பொதுச் சட்டம்***

தனிமனிதர்கள் மற்றும் நாட்டிற்கிடையேயான உறவுகளோடு தொடர்பு கொண்டது பொது சட்டமாகும். அனைத்து வகை குற்றங்களும் இச்சட்டத்தின் பார்வைக்குட்பட்டதாகும்.



பொது சட்டம் குறித்த வழக்குகளில், நாடே வாதி பிரதிவாதியாக திகழ்கிறது.

**8. *தனியார் சட்டம்***

தனி மனிதர்களுக்கிடையேயுள்ள உறவுகளைப் பற்றியது. உடைமை, வாரிசுரிமை திருமணம், பழித்தல் மற்றும் அவதூறு போன்றவைகளைப் பற்றியது.

**9. *சட்டத்தின் ஆட்சி***

“ஆங்கிலேயர்கள் சட்டத்தினால் மட்டுமே ஆளப்படுகின்றனர். நம்முடைய சகமனிதன் ஒருவன் அத்தகைய சட்டத்தின் ஆட்சி அதிகாரத்தினால் மட்டுமின்றி வேறு எதனாலும் தண்டிக்கப்படக் கூடாது” A.V. டைசி ஆங்கில அரசியலமைப்பு சாசனத்தின் முக்கியமான அம்சம் சட்டத்தின் ஆட்சியாகும். இது பின்னர் அனைத்து ஜனநாயக நாடுகளிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இது சட்டத்தின் ஆட்சி குறித்த சிந்தனை, அரசியல், சுதந்திரம் மற்றும் தனிநபர் விடுதலை குறித்து நடத்தப்பட்ட பல்லாண்டு கால போராட்டத்தின் விளைவாக எழுந்ததாகும். இது நிர்வாக சட்டத்திற்கு எதிரானதாகும். “அரசியலமைப்புச் சட்டத்திற்கு அறிமுகம்” என்ற நூலில் A.V. டைசி என்பவர் சட்டத்தின் ஆட்சி பற்றிய விளக்கங்களை தந்திருக்கிறார்.

***சட்டத்தின் ஆட்சி பொருள்***

சட்டத்தின் ஆட்சி என்பது சட்டத்தின் வழிப்படியே நிர்வாகம் நடைபெற வேண்டும் என்பதாகும். ஏதேச்சதிகார போக்கிற்கு இங்கு இடமில்லை. அனைவரும் சட்டத்தின் பார்வையில் சமம். சட்டத்திற்கு அப்பாற்பட்டவர் யாருமில்லை. ஏதேச்சதிகாரமாக, எந்த அமைப்போ அல்லது மனிதனோ யாரையும் தண்டிக்க இயலாது.

நீதியின் பரிபாலனத்தில் அனைவரும் சமமாகவே நடத்தப்பட வேண்டும். அனைவரும் ஒரே வகையிலான நீதிமன்றங்களில் தான் விசாரிக்கப்பட வேண்டும்.

### அடிப்படை தன்மைகள்

சட்டத்தின் ஆட்சி என்பதற்கு சில அடிப்படை அம்சங்கள் உள்ளன. அவை வருமாறு

**1. யாருக்கும் சிறப்பு உரிமைகள் இல்லை**

ஒரு குறிப்பிட்ட நபருக்கோ, குழுவிற்கோ, எவ்வகை சிறப்பு உரிமைகளோ, சலுகைகளோ சட்டத்தின் ஆட்சியில் கிடையாது. சட்டமே மேலானது தனிநபர் அன்று.

**2. சட்டத்தின் முன் அனைவரும் சமம்**

இனம், மதம், பால் என எக்காரணங்கள் முன்னிட்டும் மனிதனுக்கு மனிதன் வேற்றுமை பாராட்டக் கூடாது. சட்டத்தின் முன் அனைவரும் சமம்.

**3. சட்டத்தின் உணர்வுகளுக்கு முழு முக்கியத்துவம்**

முறையான விசாரணையின்றி எந்த மனிதனும் தண்டிக்கப்படக் கூடாது. நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட, சட்டமீறல்கள் மட்டுமின்றி வேறு எதனாலும் ஒரு மனிதனிடமிருந்து அவனுடைய வாழ்க்கை, விடுதலை மற்றும் சொத்து பிடுங்கப்படாது. சட்டத்தினை மீறி எந்த தனிமனிதரும் இல்லை. அனைத்து மனிதர்களும், குடிமக்கள், அரசு ஊழியர்கள் அனைவர்களுக்கும் சட்டம் பொதுவானதாகும். ஒரே வகையிலான நீதி மன்றங்களில் ஒரே விதமான சட்டத்தின்படி அவர்கள் விசாரிக்கப்படுகின்றனர். சுருங்கக் கூறின், சட்ட விரோ சிறைபிடிப்பு, சட்ட விரோத தண்டனை இவை இரண்டும் சட்டத்தின் மாட்சிமைக்கு எதிரானவை.

### சட்டத்தின் ஆட்சியின் வீழ்ச்சி

ஏ.வி.டைசி கூறிய சட்டத்தின் மாட்சிமையின் முக்கியத்துவம் இப்போது இங்கிலாந்தில் நிலவவில்லை. சட்டமியற்றுதலின் அதிகார பகிர்வு, நிர்வாக தீர்ப்பாயங்களின் தோற்றம், மாறுபடுகின்ற சமூக



பொருளாதார சூழல்கள், மக்கள் நல அரசின் தோற்றம், பலதரப்பட்ட மக்கள் அனுபவிக்கும் பாதுகாப்புகள் காரணமாக, சட்டத்தின் மாட்சிமையின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் குறைந்து வருகின்றது.

### ஆட்சித்துறைச் சட்டம்

சட்டத்தினை பற்றிய கல்வியின் ஒரு பிரிவாக, நிர்வாக சட்டம் விளங்குகிறது. இது நாட்டின் அதிகாரம் குறித்ததாகும். இது தன நபருக்கும், நாட்டிற்கும் நிகழும் சர்ச்சைகள் குறித்து நேரடியாக தொடர்பு கொண்டதாகும். நவீன கால அரசின் செயல்பாடுகள் தொடர்பானதாகும். நிர்வாக சட்டம், அரசியலமைப்பு சட்டத்தினின்று தோன்றியதாகும். அதனால், நிர்வாக சட்டம் அரசியலமைப்பு சட்டத்திற்குட்பட்டதாகும். அரசின் நிர்வாகம், தனிநபர்களை நிர்வகிக்கும் பொருட்டு இயற்றப்பட்டவையே நிர்வாக சட்டங்களாகும்.

### நிர்வாக சட்டங்களின் அடிப்படை தன்மைகளாவன

1. நிர்வாக அதிகாரத்தினரின் அதிகாரங்கள் மற்றும் அவர்களின் அமைப்பு பற்றியது.
2. அதிகாரத்தினரின் அதிகாரங்களின் எல்லையினை தீர்மானிப்பது நிர்வாக சட்டமாகும்.
3. அவ்வாறு உருவாக்கப்பட்ட அதிகாரம் எந்த வகையில் பிரயோகிக்கப்பட வேண்டும் என்பதனை தீர்மானிப்பதும் நிர்வாக சட்டமாகும்.
4. அதிகார வர்க்கத்தினர் மீதான நீதிமன்ற கட்டுப்பாடு மற்றும் இதர கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது நிர்வாக சட்டமாகும். நவீனகால அரசில், நிர்வாக சட்டங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. நிர்வாக இயந்திரத்தின் செயல்பாடுகள் சில சமயங்களில் அரசியலமைப்பு சட்ட நெறிகளில் இருந்து பிறழும் போது, அவற்றை நேர்படுத்த நிர்வாக சட்டம் முக்கிய பங்காற்றுகிறது.

**நீதி**

நீதியோடு நெருங்கிய தொடர்புள்ள கூறுகளாவன

1. சட்டம் 2. சுதந்திரம் 3. உரிமை 4. சமத்துவம்

சகோதரத்துவம் இவ்வரிசையில் சேரும். இப்பாடப்பகுதியில் நீதி பற்றி காண்போம்.

**நீதியின் தோற்றம்**

கருத்து மற்றும் சொல் அல்லது சேர்த்தல் அல்லது பொருத்துதல் என்று பொருள்படும் இலத்தீனிய மொழியினுள்ள "Justia" என்ற சொல்லிலிருந்து நீதி அல்லது Justice பெறப்பட்டுள்ளது.

நீதி ஒரு அதிமுக்கிய கருத்தாக, அரசியல், தத்துவம், சட்டம் மற்றும் நன்னெறி ஆகிய பகுதிகளில் விளக்கப்படுகிறது. பல்வேறு தத்துவ ஞானியரால் நீதி பலவிதங்களில் புரிந்து கொள்ளப்பட்டு, விளக்கமளிக்கப்படுகிறது. நீதி என்ற கருத்தினை குறித்த விசாரணை மனிதர் சிந்திக்கத் தொடங்கிய நாளில் இருந்து வருகிறது எனலாம். எந்த ஒரு நாட்டின் அரசியல் நாகரிகத்தின் முன்னேற்றமும், அந்த நாட்டில் நிலவும் நீதி பரிபாலனத்தை வைத்தே அமைக்கப்படுகிறது எனலாம். நீதி என்ற சொல்லின் பொருள் காலமாற்றத்திற்கேற்பவும், மாறுகின்ற சூழ்நிலைக்கேற்பவும் மாற்றமடைந்த வண்ணம் இருக்கிறது. மதம், அறநெறி, சமத்துவம், சுதந்திரம், சொத்து, சட்டம், அரசியல், பொருளாதார அமைப்பு ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்பு கொண்டதாக நீதி விளங்குகிறது. பல்வகை சமூக அமைப்பு பல்வகையில் நீதியை புரிந்து கொள்கின்றது. நாம் நீதியின் தோற்றம் சமுதாயத்தில் நீதியின் அவசியம் மற்றும் சட்டநீதி குறித்து காண்போம்.

**5.4. நீதி - பொருள்**

நீதி என்ற சொல்லுக்கு சரியான பொருள் உரைப்பது எளிதன்று. நீதியின் உள்ளடக்கம் நீதி பரிபாலனத்தின் தன்மை மற்றும் சிறப்பு



நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன. அரசியல் சிந்தனையாளர்களும், நீதியரசர்களும் பல்வகையில் இதனை வரையறுத்துள்ளனர்.

கடந்த காலத்தில் நீதி என்று அறியப்பட்டது நிகழ்காலத்தில் நீதியாக ஏற்கப்படுவதில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு தர வேண்டிய நிவாரணத்தையும், தவறு செய்த நபர் அல்லது நபர்களுக்கு தண்டனை வழங்குவதே நீதி என எளிமையாக பொருள் கொள்ளலாம். நாட்டின் சட்டம் மற்றும் நீதியின் அடிப்படைக் கொள்கைகளை ஒத்தே நீதி வழங்கப்படுகிறது.

**நீதி குறித்த அரிஸ்டாட்டிலின் கோட்பாடு**

அரிஸ்டாட்டில் நீதியை மூன்று வகையாக பிரிக்கிறார். அவை

1. தண்டனை நீதி : குற்றம் புரிந்தவர்களுக்கு தண்டனை தருவது
2. இழப்பீட்டு நீதி : பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவது
3. மறுபகிர்மான நீதி : சலுகைகள் மற்றும் சுமைகளை பகிர்ந்து கொள்ள செய்வது

நீதி குறித்த அரிஸ்டாட்டிலின் சிந்தனைகள், அவருடைய நூலான "நிக்கோ மேக்கியன் நன்னெறிகள்" ல் காணப்படுகின்றது. ஆடம் சுமித் மற்றும் ஜான் ரால்ஸ் என்பவர்களும் நீதி பற்றி சொல்லியிருக்கின்றனர்.

**5.5. நீதியின் மூலாதாரங்கள்**

நீதியின் மூலாதாரங்கள் என்பது நீதியின் சிந்தனை தோன்ற காரணமாயிருந்தவற்றை ஆய்வதாகும். சர் எர்னஸ்டு பார்க்கர் என்பவர் நீதி கீழ்க்கண்ட ஆதாரங்களிலிருந்து தோன்றியிருக்கக் கூடும் எனக் குறிப்பிடுகிறார்.

**1. சமயம்**

சமயம், நீதியின் கருத்து உருவாக முக்கிய காரணமாக இருந்திருக்கிறது. புனித தாமஸ் அக்வினாஸ் என்பவர்

இயேசுநாதரின் சொல் மற்றும் செயல்கள், தேவாலய குருமார்கள் மற்றும் மதப்போதகர்களின் வாக்குகள் சட்டம் மற்றும் நீதி தோன்ற காரணம் என கூறி வந்தார். கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப்பாண்டவர் இன்றளவும் நீதியின் ஊற்றுக்கண்ணாக அச்சமய மக்களால் மதிக்கப்படுகிறார். இந்து மதத்தை பொருத்தவரை "மனு" சட்டத்தை தந்தவராக கருதப்படுகிறார். இவ்வாறு சட்டம் மற்றும் நீதியின் ஊற்றாக மதம் அல்லது சமயம் விளங்குகிறது எனலாம்.

**2. இயற்கை சட்டம்**

எங்கு சீரான அரசாங்கம் இல்லாதிருந்ததோ அங்கு "வசதி படைத்தவர் வாழ்வதும்" "காட்டுச் சட்டமும்" "வலிமையை உரிமை" என்ற அடிப்படைத் தத்துவம் காட்டுத் தர்பாரில் இருந்திருக்கிது. இயற்கையிலேயே நீதி என்பது மனிதர்களிடத்தில் இருந்திருக்கிறது. ஒவ்வொரு மனிதனின் சிந்தனைக்குள்ளும், எவை செய்யத்தக்கது, எவை செய்யத்தகாதது என்ற எண்ணம் நிலவுகிறது. இவ்வெண்ணமே பிறகு சிந்தனையாக உருவெடுத்து "மனிதன் சுதந்திரமானவன்" "அனைவரும் சமமாக பாவிக்கப்பட வேண்டும்" போன்ற சீரிய சிந்தனைகளை தந்தது எனலாம்.

**3. பொருளியல்**

இயற்கையில் மனிதன் தேவைகளால் உந்தப்பட்டும், வயிற்றுப்பசிக்கு ஆளாகியும், காலப்போக்கில் தன்னுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ளும் நடவடிக்கையில் இறங்குகிறான். அவ்வாறான நடவடிக்கைகளின் எல்லைகள் விரிவடைந்து பலதரப்பட்ட மனிதர்களுடன், பல்வகை நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளும்போது எழுகின்ற கருத்து வேறுபாடுகள், சச்சரவுகள் மற்றும் மோதல்களை தீர்த்து வைக்க அரசு என்ற அமைப்பை நாடும் போது, நீதியின் தேவை நன்கு உணரப்படுகிறது. எனவே பொருளாதாரம், நீதியின் மற்றொரு ஊற்றாகும்.



**4. அறநெறிகள்**

வழங்கப்படும் நீதி அறநெறிக்குட்பட்டு, நியாய மனதோடும், ஒழுக்கத்தின் பால் செய்யப்படுவதாக இருக்க வேண்டும். குற்றமற்றவர்கள் தண்டிக்கப்படக் கூடாது. அதே சமயம் குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பிக்கக் கூடாது. இக்கோட்பாட்டில் உதித்த நீதி இங்கிலாந்தில் தோன்றியது. இங்கிலாந்தில் மக்களாட்சி இல்லாத காலத்தில் நாட்டின் மன்னர் அரசியார் நீதியின் ஊற்றாக கருதப்பட்டார்.

***நீதியின் வளர்ச்சி***

நீதி புலன்களால் அறியமுடியாத பொருளாகும். அதனை உணர மட்டுமே இயலும். சமூக, பொருளாதார, அரசியல், மத, சட்டதுறைகள் அனைத்துடனும் தொடர்பு கொண்டதாகும். நீதி, நிதி வழங்கும் நிறுவனங்களை சார்ந்து இருக்கிறது.

## 5.6. நீதியும், சமுதாயமும்

சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும், தங்களுடைய திறமையை வளர்த்துக் கொள்ள சமமான வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். ஜாதி, நிற, மத இன பாகுபாடுகள் ஏதும் இல்லாது அனைவருக்கும் அத்தகைய சமமான வாய்ப்புகள் அளிக்க, எடுக்கப்படும் முயற்சி நீதியின் மற்றும் ஒரு பரிமாணமாகும்.

அத்தகைய முயற்சியே சமுதாய நீதி எனப்படுகிறது. இந்தியாவில் ஏற்றத்தாழ்வுகள் மிகுந்த சமுதாயமே நிலவுகிறது. அத்தகைய அமைப்பில் சமுதாய நீதி மிக முக்கியத்துவம் பெறுகிறது.

மனிதனை மனிதன் சுரண்டாத சமுதாயத்தில், ஒரு சிலருடைய நன்மைகளுக்காக பலர் துன்பங்கள் அனுபவிக்க வேண்டியதாக இருக்காத சமுதாயத்தில் மட்டுமே சமுதாய நீதியை நிலை நாட்ட இயலும்.

## 5.7. சட்ட நீதி

சட்டநீதி என்பது இயற்கை நீதி, அரசியல் நீதி, சமுதாய நீதி, பொருளாதார நீதி, நிர்வாக நீதி, பகிர்மான நீதி மற்றும் நேர்படுத்தும் நீதி என்னும் வகைகளில் அடங்கும். சட்டம் இயற்றும் வழிமுறைகள் மற்றும் நீதி வழங்கப்படும் முறைகளோடு தொடர்புடையது சட்டநீதி. சட்டநீதி இரு முக்கிய பொருட்கள் உள்ளன.

1. சட்டம் நியாயமானதாக இருக்க வேண்டும்.
2. சட்டத்திற்குட்பட்டே ஒவ்வொருவரும் நீதி பெற வேண்டும்.

### 1. சட்டம் நியாயமானதாக இருக்க வேண்டும்

சட்டம் இயற்றுவது சட்டமன்றத்தின் பணியாகும். இயற்றப்படுகின்ற சட்டம், நியாயமானதாக இருக்க வேண்டும். சட்டமானது சமமாக இருப்பவர்களுக்கு சமமாகவும், சமனற்று இருப்பவர்களுக்கு சமனற்றதாகவும் இருத்தல் அவசியம். மூடத்தனமான, சமுதாய மேம்பாட்டினை அச்சுறுத்தும் பழமைவாத செயல்களை முடிவுக்கு கொண்டுவர அநேக சட்டங்கள் இயற்றப்படும் போது, அச்சட்டங்கள் பழமைவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. ஆனால் இத்தகைய எதிர்ப்புகள் சட்டத்தின் தன்மையை ஒரு போதும் பாதிப்பதில்லை.

இயற்றப்படுகின்ற சட்டங்கள் சரியாக இருக்க வேண்டுமானால், சட்டம் இயற்றுபவர்கள் சரியானவர்களாக இருக்க வேண்டும். மக்களாட்சியில், மக்களுடைய பிரதிநிதிகளே சட்டம் இயற்றுபவர்களாக இருக்கிறார்கள். இது மக்களாட்சியின் சிறந்த பண்பாகும். அநேகமாக அனைத்து மக்களாட்சி நிலவுகின்ற நாடுகளிலும், சுதந்திரமான, நடுநிலையான நீதித்துறை, சட்டமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கள், நியாயமானவைதானா, ஏற்புடையவைதானா என்பதனை ஆராயும். நீதித்துறை அரசியலமைப்பு சட்டத்தின் காவலாளியாகவும், உரிமைகளின்



பாதுகாவலனாகவும் விளங்குகிறது.

இத்தகைய மக்களாட்சிகளில் பெரும்பாலான குணங்களில், சட்டமியற்றும் துறையும், நீதித் துறையும் மோதல்களை கடைப்பிடிக்கும் போது, நிர்வாக நடவடிக்கைகள் ஸ்தம்பித்து விடுகின்றன.

### 2. சட்டத்திற்குட்பட்டே ஒவ்வொருவரும் நீதி பெற வேண்டும்

ஒவ்வொருவரும் பாரபட்சமற்ற முறையில் நீதி பெற வேண்டும். சட்டத்தின்படி அனைவரும் சமமாக பாதுகாப்பு பெற வேண்டும். சமமான சட்ட பாதுகாப்பு என்பதை இருவழிகளில் புரிந்து கொள்ளலாம். முதலாவதாக, நீதி பெறும் முறைகள் எளிமையானதாகவும், சாமானியர்களுக்கு அதிகம் செலவு பிடிப்பதாக இருக்காததாகவும் இருத்தல் வேண்டும். இரண்டாவதாக நீதி வழங்கும் அமைப்புகள் முழு சுதந்திரத்திடனும், எவ்விதமான இடையூறுகள் இல்லாது இருத்தல் வேண்டும்.

செயலாண்மை குழுவின் (Executive Branch) தலையீடு, நீதித்துறையில் அறவே இருத்தல் கூடாது. அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு, நீதித்துறை சுதந்திரமாக செயல்பட வேண்டும் என்பனையே வலியுறுத்துகிறது. அவ்வாறு நீதித்துறை சுதந்திரமாக செயல்படும் வண்ணம், நீதிபதிகளுக்கு வழங்கப்படும் ஊதியம், பணிவிதிகள், தகுதிகள் அமைய வேண்டும். நீதியை வழங்கும் அம்மனிதர்கள் மீது எவ்விதமான அழுத்தமும் இருத்தல் கூடாது.

### சுதந்திரம்

#### சுதந்திரத்தின் பொருள்

சுதந்திரம் எனும் சொல் “லைபர்” என்னும் லத்தீன் மொழியில் வேர்சொல்லாக கொண்ட ஆங்கில சொல் “லிபர்ட்டி” என்பதன் தமிழாக்கமாகும். இந்த லத்தீன் சொல்லுக்கு திட்டவட்டமான பொருள் அளித்தல் இயலாது. ஏனெனில் சுதந்திரம் (லிபர்டி) எனும்

சொல்லும் சரி, விடுதலை (freedom, Independence) எனும் சொல்லும் சரி, பல்வகைகளில் பல்வேறு கருத்துக்களில் உபயோகப்படுத்தப் படுகின்றன. சுதந்திரம் சில சமயங்களில் உரிமை என்ற பொருளிலும் பிரயோகிக்கப்படுகிறது. ஆக, சுதந்திரம், உரிமை ஆகிய மூன்று கருத்துக்களும், சுதந்திரம் எனும் கோட்பாட்டை சுற்றியே அமைந்துள்ளது. எனவே நாட்டின் குடிமக்களுக்கு பேச்சு, எழுத்து, வாழ்தல், பொருளீட்டுதல், மதம், மொழி ஆகிய எல்லாவற்றிலுமே பிறர் தலையீடு இன்றி அனைவரும் அனுபவிக்கப்படும் விடுதலையே சுதந்திரம் என்கிறோம். இம்மாதிரி அனுபவிப்பதிலிருந்து தனி நபர்களையோ மக்களுள் சிறு குழுவினரையோ, பிற தனிநபர்களோ பெருமக்கள் திரளோ தடுப்பதைத்தான் அரசியல் அறிஞர்கள் அநீதி என்பர்.

### 5.8. சுதந்திரத்தின் வரையறைகள்

நாம் செய்ய விழைபவற்றை செய்யும் ஆற்றல் சுதந்திரம்.

- மாண்டெஸ்கியூ

கட்டுப்பாடில்லாமையே சுதந்திரம் - பேராசிரியர் சீலி.

டி.எச். கிரீன் என்ற அறிஞர் சுதந்திரத்தைப் பின்வருமாறு விளக்குகிறார். தான் மட்டுமோ அல்லது மற்றவர்களுடன் சேர்ந்தோ எதையேனும் ஒன்றை செய்யக்கூடிய ஆற்றல் அல்லது அடையும் தன்மையை அடைவதற்கு தேவையான சூழ்நிலைகளை ஏற்படுத்துவதே சுதந்திரமாகும். சுருங்கக்கூறின், சுதந்திரம் என்பது உரிமைகளின் வழிவந்தது. நல்ல ஒழுங்குள்ள சமுதாயத்தில் விருப்பப்பட்ட செயல்களை அதிக கட்டுப்பாடுகளின்றி செய்வதற்கு ஏதுவாக இருக்கும் அதிகபட்ச சாத்தியக் கூறே சுதந்திரமாகும்.


### 5.9. சுதந்திரத்தின் வகைகள்

மேக் ஐவர் மற்றும் லாஸ்கி ஆகியோர் கூற்றுப்படி, சுதந்திரம் பலவகைப்பட்டது. எண்ணம், கருத்து, பேச்சு, செயல்பாடு, தனிமனிதன், பொருளாதார சுதந்திரம் என்பனவாகும். போட்டியில்



ஈடுபடவும், உடன்படிக்கை செய்து கொள்ளவும் உள்ளவையே சுதந்திரமாகும்.

பொதுவாக சுதந்திரம் கீழ்க்கண்டவாறு பிரிக்கப்பட்டுள்ளது.




1. இயற்கை சுதந்திரம்
2. சமூக சுதந்திரம், சமூக சுதந்திரம் பின்வருவன ஆகும்.
    - அ. தனிமனித சுதந்திரம்
    - ஆ. அரசியல் சுதந்திரம்
    - இ. வீட்டு சுதந்திரம்
    - ஈ. தேசிய சுதந்திரம்
    - உ. சர்வதேச சுதந்திரம்
    - ஊ. பொருளாதார சுதந்திரம்
3. தர்மீக சுதந்திரம்

**1. இயற்கை சுதந்திரம்**

ஒரு மனிதன் தான் விரும்புபவற்றை செய்ய, நிலவும் குறுக்கீடுகளற்ற கட்டுப்பாடுகளற்ற சுதந்திரம் இயற்கை சுதந்திரமாகும். இயற்கை சுதந்திரம் என்பதை ஓர் அரசின் கீழ்

மக்களுக்கு அளித்தல் இயலாது. ஏனெனில் இவ்வகை சுதந்திரம் முற்றிலும் கட்டுப்பாடற்றதாகும். இவ்வகையில் அரசு அனுமதித்தால் நாட்டின் குழப்பமும், சட்டமின்மையும் தான் எஞ்சி நிற்கும். இயற்கை சுதந்திரம் எல்லைகளை கடந்து இருப்பதால் அது சுதந்திர நிலைக்கே எதிரானது இதைத்தான் சமுதாய ஒப்பந்தத்தின் கோட்பாளர்களான ஹாப்ஸ், லாக், ரூசோ ஆகியோர்கள் விளக்கினார்கள். அரசு என்கிற அமைப்பு தோன்றுவதற்கு முற்பட்ட காலத்தில் தான் மனிதனுக்கு எந்தவித கட்டுப்பாடும் இல்லாத இயற்கை சுதந்திரம் இருந்த வந்தது. யாரிடம் வலிமை அதிகமாக இருந்ததோ அவரே அளவற்ற சுதந்திரமுடையவராக இருந்திருப்பார்.

### 2. சமூக சுதந்திரம்

சமூக அமைப்பில் அங்கம் வகிக்கும் மனிதன் அவன் வாழ்க்கையில் பெறும் சுதந்திரம் சமூக சுதந்திரத்தைக் குறிக்கிறது. இது, பொதுநலன் கருதி விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு அவன் விரும்பியதை செய்யலாம் என்பதாகும். சமுதாயம் ஏற்றுக் கொண்டிருக்கும் கடமைகள், உரிமைகள் மற்றும் சலுகைகளை அரசும் ஏற்றுக் கொண்டு அவைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது. சமூக சுதந்திரம் பின்வருமாறு பிரிக்கப்பட்டிருக்கிறது.

### அ. தனிமனித சுதந்திரம்

சமுதாய சுதந்திரத்தின் ஒரு பிரிவு தனி சுதந்திரமாகும். இது தனிமனிதனுடைய வாழ்க்கையோடு தொடர்பு கொண்டது. ஒருவன் தான் விரும்பும் செயல் தடையின்றி செய்வதற்கு வழிவகுப்பது தனிமனித சுதந்திரமாகும். அல்லது செய்யப்படக்கூடிய செயல் அம்மனிதனை சமுதாயத்தில் தனித்து இருக்கவும் செய்யக்கூடும்.

### ஆ. அரசியல் சுதந்திரம்

அரசியல் சுதந்திரம் என்பதும், அரசியல் அமைப்பின் கீழ் குறிப்பிட்ட சுதந்திரம் என்பதும் இரண்டும் ஒன்றையே குறிப்பதாகும்.



தாங்கள் விரும்பும் அரசை மக்களே தேர்ந்தெடுப்பது அரசியல் சுதந்திரத்தின் ஓர் வெளிப்பாடேயாகும்.

மக்களாட்சி தேர்தலில் வாக்களிக்கும் சுதந்திரம், முழுத்தகுதியின் அடிப்படையில் தேர்தலில் போட்டியிட சுதந்திரம் அரசாங்க பணிகளில் வேலை வாய்ப்பு பெறுவதற்கு சுதந்திரம் அல்லது உரிமை மற்றும் அரசாங்கத்தின் செயல்பாட்டினை, சட்ட விளிம்பிற்குள் விமர்சிக்க முழு சுதந்திரம் ஆகியவை அனைத்தும் அரசியல் சுதந்திரத்தின் பிரிவுகளாகும்.

### இ. வீட்டு சுதந்திரம்

வீட்டு சுதந்திரம் என்பது குடும்ப அளவில் ஒரு மனிதனால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை பற்றியதாகும். மனைவியை உரிய மதிப்புகளுடன் நடத்துவது, பெற்ற குழந்தைகளை சரியாகப் பராமரித்து சிறந்த குடிமகனாக்குவது சொத்துக்களை ஆண்டு அனுபவிக்க மற்றும் சுயமாக நின்று இயங்கும் அளவிற்கு உரிய உரிமைகள் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றை கொண்டு வாழ்க்கை நடத்த ஏதுவாக இருப்பது வீட்டு சுதந்திரமாகும்.

### ஈ. தேசிய சுதந்திரம்

தேச விடுதலை என்பது தேசிய சுதந்திரத்தின் ஒரு வெளிப்பாடாகும். எந்த ஒரு தேசமும் மற்றொரு தேசத்தின் கீழ் இயங்க வேண்டிய நிர்பந்தமில்லை என்பதே தேசிய சுதந்திரமாகும். சுதந்திரப் போர்கள் நிகழ காரணமாக இருப்பது தேசிய சுதந்திர உணர்வாகும்.

### உ. சர்வதேச சுதந்திரம்

உலகளாவிய நோக்கில், இவ்வுலகத்தின் மீது எவ்விதமான கட்டுப்பாட்டு எல்லைகள் இல்லை என்பதும் பலப் பிரயோகம் என்பதற்கு எந்த மதிப்பும் இல்லை என்பதுமே சர்வதேச சுதந்திரத்தின் முக்கியம்சமாகும். சர்வதேச அளவில், போரொழிப்பது,

கொலையில்லா உலகத்தை நிர்மாணிப்பது, சர்ச்சைகளுக்கு அமைதி வழியில் தீர்வு காண்பது போன்ற சர்வதேச சுதந்திரத்தின் வெளிப்பாடுகளாகும்.

ஊ. பொருளாதார சுதந்திரம் : பொருளாதார பாதுகாப்பும், உணவிற்காக ஒருவர் சம்பாதிப்பதில் வாய்ப்பும், பொருளும் இருத்தல் வேண்டும். நாளைய தேவைகளிலிருந்து ஒருவன் பாதுகாக்கப்படுவது பொருளாதார சுதந்திரமாகும்.

**3. தார்மீக சுதந்திரம்**

சித்தாந்த ரீதியின் கருத்தியலாக எழுந்த சிந்தனை தார்மீக சுதந்திரமாகும். பிளாட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற பண்டைய அறிஞர்களம், ரூசோ, காண்ட், ஹென்ஸ், கிரீன் மற்றும் பொஸான்கே போன்ற பிற்காலத்திய அறிஞர்களும் இது குறித்து அதிகம் சிந்தித்துள்ளனர். ஒவ்வொரு மனிதனுக்கும், தனித்துவம் உள்ளது. அவன் தன் ஆளுமையை மேம்படுத்திக் கொள்ளவே எத்தனிக்கிறான். அதே சமயத்தில் அவன் பிறருக்காகவும் வாழ்பவனாக இருத்தல் அவசியம். அதுவே பரிபூர்ண தன்னையறிதல் எனப்படும்.

## 5.10. தனிமனித சுதந்திரத்தின் முக்கியத்துவம்

சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு தனிமனிதனும், தன்னுடைய சொந்த விருப்பத்தின் பால் வாழ வழிவகுப்பதே தனிமனித சுதந்திரமாகும். மனிதன் தான் சார்ந்திருக்கும் சமூக முறைமையின் மத்தியில் இருக்கிறான்.

மனிதனுடைய மனம், அவனுடைய தேவைகள் மற்றும் விருப்பங்களின் அடிப்படையிலேயே இயங்குகிறது. இயக்கத்தின் போது எதிர்மறை விளைவுகள் நேருமாயின் அவற்றை அவன் ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தை பெற்றிருக்க வேண்டும். அரசு என்பது ஒரு தவிர்க்க முடியாத தீமை. அரசே, ஒருவனுடைய சுதந்திரத்திற்கு எல்லைகளை வகுக்கிறது. பலவிதமான



கட்டுப்பாடுகளை விதிக்கிறது. அத்தகைய எல்லைகளம் கட்டுப்பாடுகளும் மிகவும் அவசியமாகிறது. ஏனெனில் இன்றும் நாம், கட்டுப்பாடுகளற்ற எல்லைகளற்ற அரசினை பெறும் அளவிற்கு வளர்ச்சி பெறவில்லை. சமுதாயம் என்பது பலதரப்பட்ட மக்களை கொண்டதாக உள்ளது. அறிவார்ந்தவர்களும் உள்ளனர். சாமானியர்களும் உள்ளனர். பலசாலிகளும் உள்ளனர் பலவீனமானவர்களும் உள்ளனர்.

இத்தகைய அமைப்பில் ஒருவருக்கொருவர் பரஸ்பர உரிமைகளை, சுதந்திரங்களை அறிந்து ஏற்றுக்கொண்டு இயைந்து வாழ்வதால் மட்டுமே ஒரு அரசு சரிவர இயங்கும். இச்சூழலில், தனிமனித சுதந்திரத்தின் முக்கியத்துவம், அதனை பாதுகாக்க வேண்டிய அவசியமும் எழுகிது.

இயற்கை சூழலை, புவியில் தன்மை மனித உழைப்பு மாற்றும் வல்லமை கொண்டுள்ள போது, உலகில் தேசங்களை, நாடுகளை தோற்றுவிக்க மன ஆற்றலை தகுந்த முறையில் பயன்படுத்தி சிறந்த தேசத்தை, நாட்டை உருவாக்கலாம்.

**சமத்துவம்**

சமத்துவம், அரசியல் அறிவியலின் ஒரு முக்கிய ஆய்வுப் பொருளாகும். நல்லாட்சி, சிறந்த ஜனநாயகம், நல்லரசு போன்ற அநேக கருத்துக்களின் அச்சாணியாக “சமத்துவம் (Equality) திகழ்கிறது. ஆகவே, அரசியல், சமூகம், மதம், இனம், மொழி, பொருளாதாரம், தனிநபர் சமத்துவம் என பல்வேறு வகைகளில் சமத்துவ நிலை உண்டு.

மனித வரலாற்றில் அநேக போராட்டங்கள் இத்தகைய சமத்துவத்தை நிலைநாட்டவே செய்யப்பட்டன என்றால் மிகையாகாது. இக்கோட்பாடு 19ம் நூற்றாண்டில் சுதந்திரத்தைப் போன்றே முக்கியமானதாகக் கருதப்பட்டது.

## 5.11. சமத்துவத்தின் வரையறை

எச்.ஜே. லாஸ்கி "சமத்துவம் என்பது அடிப்படையில் சமன்படுத்தப்படும் செய்வகை" என தமது நூலான "அரசியலில் இலக்கண" த்தில் சமத்துவத்தை வரையறுக்கிறார். அரசியல் சமூகம் ஆகிய இரண்டையும் ஒரு நாணயத்தில் இரு பக்கங்களென்றால், சுதந்திரமும், சமத்தவமும் அதே போல் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் எனலாம்.

**சமத்துவக் கோட்பாடு**

சமுதாயத்தில் உள்ள மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள் என்றாலும், உருவத்தில் உயரமான ஒருவருடன் குள்ளமாக இருப்பவருடனோ, பலமான ஒருவருடன் பலவீனமானவரையோ சமமாக நோக்குவது சரியன்று. சமனற்ற இருவர்களை அவர்கள் "மனிதர்கள்" என்ற ஒரு சொல்லில் விளித்து சமூக நிறுவனங்கள் அனைவரும் சமமே என்ற நிலைப்பாட்டினை நிறுவுகின்றன. மனிதன் என்ற அந்தஸ்தை அனைவருக்கும் தர வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றன.

இந்த நோக்கில் பார்க்கும் பொழுது, சமத்துவம் இரு பரிமாணங்களை கொண்டுள்ளதாக அறியலாம். அவை நேர் சமத்துவம், எதிர்மறை சமத்துவம் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**நேர் சமத்துவம் (Positive aspect of equality)**

அனைவருக்கும் சமஉரிமை, சமமான அந்தஸ்து போன்றவற்றை வலியுறுத்துவது நேர் சமத்துவமாகும். சமுதாயத்தில் வாழும் மனிதர்களை பிறப்பு, நிறம், இனம், மொழி போன்றவற்றை வைத்து எவ்விதத்திலும் சலுகைகள் மறுக்கப்படக் கூடாது என்பதை நேர் சமத்துவம் வலியுறுத்துகிறது.



**எதிர்மறை சமத்துவம் (Negative aspect of equality)**

சமுதாயத்தில் உள்ள அனைவரும் சமமாக பாவிக்கப்பட வேண்டும். பிறப்பு, நிறம், இனம் மொழி போன்றவற்றை வைத்து எவ்விதத்திலும் சலுகைகள் வழங்கப்படக் கூடாது என்பதை எதிர்மறை சமத்துவம் வலியுறுத்துகிறது.

## 5.12. சமத்துவத்தின் வகைகள்

சமத்துவம்

- இயற்கை சமத்துவம்
- சிவில் சமத்துவம்
- அரசியல் சமத்துவம்
- பொருளாதார சமத்துவம்
- பன்னாட்டு சமத்துவம்

***இயற்கை சமத்துவம்***

ஜான் லாக் ரூசோ போன்ற சமுதாய ஒப்பந்த சிந்தனையாளர்கள் மட்டுமே சமுதாயமானது, இயற்கையிலே சுதந்திரமும், சமத்துவமும் கொண்டுள்ளதாக அமைந்திருக்கிறது என கருதினர். நிலவியலில், அவ்வாறான சமத்துவமோ, சுதந்திரமோ இல்லை என்பதே யதார்த்தம். ஆகவே சிந்தனையாளர்கள் உருவகித்த இயற்கை சமத்துவம் வெறும் தோற்றம் அளவிற்கே பொறுத்தமுடையது எனலாம்.

***சிவில் சமத்துவம்***

நாட்டில் இயற்றப்படும் சட்டங்களில் மக்களிடையே வித்தியாசங்களை ஏற்படுத்திவிடக் கூடாது. அப்போது தான் சட்டத்தின் முன் சமத்துவம் இருக்க முடியும். மதம், இனம், சாதி, பால் என்ற எந்த ஒரு அடிப்படையிலும் சாராருக்கு சலுகைகள் வழங்கியும், பிறருக்கு அதே சலுகைகளை வழங்க மறுத்தாலும், சமத்துவம் தனி நபருக்கு மறுக்கப்படுகிறது என பொருள்பட்டு விடும். அவ்வாறு அனைவருக்கும் சமமான, சமத்துவத்தை நிறுவுவதே இராணுவம் சாரா தனிநபர் சமத்துவம் (சிவில் சமத்துவம்) எனப்படும்.

### அரசியல் சமத்துவம்

எல்லாக் குடிமக்களுக்கும், எந்த ஒரு வித்தியாசமும் இன்றி பொதுத் தேர்தலில் வாக்கு அளிப்பதற்கும் போட்டியிடுவதற்கும் உரிமைகளும் வழங்கப்படுமெனில் அத்தகைய சமத்துவமே அரசியல் சமத்துவம் எனப்படும். இந்திய அரசியலமைப்பில் 18 வயது வந்த இந்திய குடிமக்கள் அனைவரும் பொதுவாக வாக்களிக்கலாம் என்ற நிலை உள்ளது.

### சமுதாய சமத்துவம்

தனிநபர் சமத்துவம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், தானாகவே சமுதாய சமத்துவம் அல்லது சமூக சமத்துவம் தோன்றிவிடுகிறது.

சமுதாய சமத்துவம் அரசியலமைப்பு சட்டத்தில் பெருமளவு நம் நாட்டில் நிலை நாட்டப்பட்டுள்ளது. சட்ட திட்டங்கள் ஆயிரம் இருந்தாலும், சமுதாய சமத்துவம் மக்களுடைய மனமாற்றத்தால் மட்டுமே சாத்தியப்பட்டுள்ளது.

### பொருளாதார சமத்துவம்

லாஸ்கி, “அரசியல் சமத்துவத்தை தொடர்ந்து பொருளாதார சமத்துவமும அளிக்கப்பட வில்லையானால், அரசியல் சமத்துவம் என்பது உண்மையாகி விடாது. தற்கால சூழ்நிலையில், மக்களுள் பெரும்பாலோர் பொருளாதார நிலையில் மிகவும் வறியவர்களாக இருப்பார்கள் எனில் அங்கே பொருளாதார சமத்துவம் கிடையாது. அதோடு மட்டுமின்றி வேறு பல சமத்துவ நிலைகள், உரிமைகளும் பொருளின்றி பயனற்றதாகிவிடும். பொருளாதார சமத்துவம் என்றால் அனைத்து குடிமக்களுக்கும் அவர்களது தேவைகளை பூர்த்தி செய்யும் வண்ணம் பொருளாதார மேம்பாட்டை உறுதிப்படுத்துவதே பொருளாதார சமத்துவம் என்பதாகும் என கூறுகிறார்.



### சர்வதேச சமத்துவம்

அனைத்து தேச மக்களும் சமமாக நடத்தப்பட வேண்டும். ஒரு நாடு இன்னொரு நாட்டை சமமாக பாவித்தலும் இதில் அடங்கும்.

## 5.13 சமத்துவத்தின் நோக்கங்கள்

### சமத்துவத்தின் முக்கிய நோக்கங்களாவன

1. எந்த ஒரு தனிநபருக்கும் அல்லது குழுவினருக்கும், வேறு பலருக்கு இல்லாத விசேஷ சலுகைகள் எவையும் அறவே வழங்கப்படக் கூடாது.
2. ஒவ்வொருவரும், அவர்தம் ஆளுமைத்திறனை வளர்த்துக் கொள்ளும் பொருட்டு, சமமாக வாய்ப்புக்கள் பெற வேண்டும்.
3. மக்களிடையே எவ்விதமான பாகுபாடான நிலைப்பாடும் காணப்படக் கூடாது. சலுகைகள் வழங்கப்படக் கூடாது. ஆனால் உரிய காரணங்களை முன்னிட்டு சலுகைகள் வழங்கலாம்.
4. அதிகாரத்தை பெறும் நோக்கில் ஒவ்வொருவருக்கும் சம அளவில் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

## 5.14. சுதந்திரமும் சமத்துவமும்

சுதந்திரம் சமத்துவத்திற்கெதிரானது என்றும், அவ்வாறு இல்லை என்றும் அரசியல் சிந்தனையாளர்கள் தொடர்ந்து வாதிட்டு வருகின்றனர். இரண்டும் ஒரு திசையில் பயணிக்க முடியாது. எனினும், சமத்துவம் இல்லையேல் சுதந்திரம் இல்லை. இதை அடைவதற்கு சுதந்திரம் மிகவும் அவசியமானதாகும்.

**வினாக்கள்**

**பகுதி அ**

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்

1. பின்வருவனவற்றில் எது சட்டத்தின் மூலாதாரம் இல்லை?

அ) ஜாதி　　ஆ) வழக்காறு

இ) சட்டமன்றம்　　ஈ) சமயம்

2. சுதந்திரம் என்பது தடைகள் இல்லாத நிலை என்று யார் சொன்னார்?

அ) போடின் ஆ) பர்க்

இ) கிரீன் ஈ) சீலி

**II. கோடிட்ட இடத்தை பூர்த்தி செய்க**

1. சுதந்திரம் என்னும் சொல் ______________________ என்ற இலத்தீன் மொழிச் சொல்லில் இருந்து வந்தது.

2. சிவில் சமத்துவம் என்பது ______________________

**III. கீழ்வருவன சரியா அல்லது தவறா என எழுதுக**

1. சட்ட நீதி, சட்டத்தை ஆதாரமாகக் கொண்டது.

2. எந்த நாட்டிலும் அயல் நாட்டினருக்கு வாக்குரிமை கிடையாது.

**பகுதி ஆ**

1. சட்டத்தின் பொருள் தருக.

2. சட்டத்தின் ஆட்சியை விளக்குக.

**பகுதி இ**

1. நீதியின் ஆதாரங்கள் யாவை?

2. சமத்துவம் என்பதனை விவரித்து அதன் வகைகளைத் தருக.

**பகுதி ஈ**

1. சட்டத்தின் மூலாதாரங்களை கூறி பன்னாட்டு சட்டத்தின் இயல்பை விவரிக்க.

2. சுதந்திரம் என்பதை விளக்கி தனி நபர் சுதந்திரத்தின் அவசியத்தை விவாதிக்க.

அத்தியாயம் 6

# வாக்குரிமை மற்றும் பிரதிநிதித்துவம்

## 6.1. வாக்குரிமை பற்றிய கொள்கைகள்

குடியாட்சியில் வாக்காளர்கள் முக்கிய பங்காற்றுகிறார்கள். வாக்குரிமை பெற்ற குடிமக்கள் எல்லோரையும் வாக்காளர் தொகுதி என்று குறிப்பிடுகிறோம். குடிமக்களுக்கு அவர்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதற்கு தரப்படுகின்ற உரிமையே வாக்கு அல்லது ஓட்டு என்று குறிப்பிடப்படுகிறது. வாக்கு என்பது குடிமக்கள் அரசியலில் பங்கேற்பதற்கு தரப்படும் அரசியல் உரிமை எனலாம். இவ்வாறு வாக்குரிமை பெறத்தக்கவர்கள் யார்? இந்த வாக்குரிமை பற்றி பல கொள்கைகள் அரசியல் அறிவியலில் சொல்லப்பட்டிருக்கின்றன. தற்போது இந்தியா உள்பட பெரும்பாலான நாடுகளில் வயது அடிப்படையில் வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த உரிமை இந்தியாவில் 18 வயது நிரம்பிய சித்த சுவாதீனமுடைய அனைவருக்கும் பொறுத்தவரை நாட்டிற்கு நாடு இது வேறுபடுகிறது. வாக்குரிமை பற்றிய கோட்பாடுகள் அல்லது கொள்கைகள் பல உள்ளன. அவை பின்வருமாறு.

1. இயற்கையுரிமைக் கோட்பாடு
2. சட்டக் கோட்பாடு
3. நியாயக் கோட்பாடு
4. பழங்குடிக் கோட்பாடு
5. நிலப்பிரபு முறைக் கோட்பாடு

### 1. இயற்கையுரிமைக் கோட்பாடு

இயற்கையுரிமைக் கோட்பாடு மனிதனுக்கு இயற்கையிலேயே வாக்குரிமை உள்ளது எனக் கருதுகிறது. பிறக்கும்போதே ஒவ்வொரு குடிமகனுக்கும் இவ்வுரிமை உள்ளது. அரசு என்ற அமைப்பு

மனிதன் தன் சுய விருப்பத்தோடு உருவாக்கியதாகும். எனவே, அரசாங்கத்தின் செயல்பாடுகளில் பங்கேற்பது மனிதனின் இயற்கை உரிமையாகும்.

**2. சட்டக் கோட்பாடு**

இக்கோட்பாட்டின்படி, வாக்குரிமை என்பது இயற்கை யானதன்று, வாக்களிப்பது பொதுவான பணியாகும். வாக்காளர்கள் அரசாங்கத்தின் ஒரு அங்கமாவர். யார் வாக்களிக்கலாம் என முடிவு செய்வது அரசின் உரிமையாகும். எனவே, வாக்குரிமை எனது நியாயம் சார்ந்தது அன்று சட்டரீதியானதாகும்.

**3. நியாயக் கோட்பாடு**

இக்கோட்பாட்டின்படி, வாக்குரிமை என்பது நியாயமான உரிமையாகும். அரசியல் நிகழ்வுகளில், ஒரு மனிதன் தன் விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கு நியாயமாக அளிக்கப்பட வேண்டிய உரிமையாகும். மேலும் தனிமனிதனின் ஆளுமை வளர்ச்சிக்கு வாக்குரிமை வகை செய்கிறது.

**4. பழங்குடிக் கோட்பாடு**

பழமையான கிரேக்க ரோமானிய அரசுகளில், குடியுரிமை பெற்றவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை வழங்கப்பட்டு வந்தது. குடியுரிமை என்பதும் அனைவருக்கும் வழங்கப்படவில்லை. பொதுவாழ்வில் அரசாங்கப் பணியிலும் தகுதியுள்ளவர்களுக்கு மட்டுமே குடியுரிமை வழங்கப்பட்டது. குடியுரிமை பெற்றவர்கள் மட்டுமே வாக்குரிமை பெற்றார்கள். இவ்வழக்கம் பழங்குடிக் கோட்பாட்டின் அடிப்படையில் ஆனதாகும்.

**5. நிலப்பிரபுமுறைக் கோட்பாடு**

இக்கோட்பாட்டின்படி, சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட அந்தஸ்து உடையவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை வழங்கப்படும். சமூக அந்தஸ்து என்பது சொத்து உடையவர்களைக் குறிக்கின்றது. எனவே



நிலப்பிரபுக்கள் மட்டுமே வாக்குரிமை பெற்றார்கள். இம்முறையையொட்டி, இன்றளவும் சில நாடுகளில் சொத்து என்பது ஒரு தகுதியாக பின்பற்றப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்ட கோட்பாடுகளில், சட்டக்கோட்பாடும், நிலப்பிரபு முறைக் கோட்பாடும், வாக்குரிமைக்கு சில தகுதிகளை வரையறுக்கின்றன. எனினும், தற்கால அரசாங்கம் பெருமளவில் வாக்குரிமையை விரிவாக்கியுள்ளன,

சில அரசியல் சிந்தனையாளர்கள், வாக்களிப்பதை ஒரு பணியாகவே கருதுகின்றனர். அப்பணியை அனைவருக்கும் வழங்க இசைவதில்லை. எனவே தகுதி படைத்தவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை வழங்கப்பட வேண்டுமென வாதிடுகின்றனர். கார்னர் (Garner) எனும் நூலாசிரியர், "வாக்குரிமை என்பது வேறுபாடின்றி அனைவருக்கும் வழங்கப்படக் கூடிய இயற்கையுரிமை அல்ல" என குறிப்பிடுகிறார்.

## 6.2. வாக்குரிமையின் பரிணாம வளர்ச்சி

வாக்குரிமையின் வரலாறு மிக நீண்டதாகும். வாக்குரிமைக்காக பல போராட்டங்களும், புரட்சிகளும் தியாகங்களும் நிகழ்ந்துள்ளன. இது பற்றி (Garner) கார்னர் எனும் நூலாசிரியர், "சென்ற நூற்றாண்டில், வாக்குரிமை தொடர்ந்து விரிவுபடுத்தப்பட்டது, மக்களாட்சியின் வரலாற்றில் மிக முக்கியமாக குறிப்பிடத்தக்கதாகும் என்கிறார். வாக்குரிமை பெறுவதற்கு விதிக்கப்பட்டிருந்த, பாலினம், சொத்து, கல்வித் தகுதி போன்றவை காலப்போக்கில் மறைந்து போயின. இன்று அங்கொன்றும் இங்கொன்றமாக சில நாடுகளில் தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. எனினும், உலகம் சென்று கொண்டிருக்கிறது. ஆரம்ப காலங்களில், பின்வரும் தகுதிகள் விதிக்கப்பட்டிருந்தன. அவையாவன.

**சொத்துரிமை அல்லது வரி செலுத்துதல்**

பத்தொன்பதால் நூற்றாண்டில் சொத்துடைமை என்பது வாக்குரிமைக்கான அடிப்படைத் தகுதியாக இருந்தது. அதே போல்,

வரி செலுத்துவோரும் வாக்குரிமை பெற்று வந்தனர். சொத்து உள்ளவர்களும், வரி செலுத்துவோரும், நம்பகத் தன்மையுடையவர்கள். எனவே அவர்கள் அரசாங்க செயல்பாடுகளில் பங்கு பெறலாம் என்று இதற்கு நியாயம் கற்பிக்கப்பட்டு வந்தது. உதாரணமாக, ஜப்பானிய நாட்டில், 1925 ஆம் ஆண்டு வரை, வரி செலுத்துவோருக்கு மட்டுமே வாக்குரிமை வழங்கப்பட்டு வந்தது. இதனால், வரி செலுத்தாதோருக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டு வந்தது.

**கல்வித் தகுதி**

ஜே. எஸ். மில் போன்ற அரசியல் சிந்தனையாளர்கள், கல்வித்தகுதி உள்ளவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை அளிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். எழுதப்படிக்கத் தெரியாதவர்கள், பொது நிகழ்வுகளில் பங்கேற்கக் கூடாது என வாதிட்டனர். பிரேசில், சிலி (Chile) போன்ற நாடுகளில் எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டுள்ளது. ஆனால், எழுதப்படிக்க தெரிந்தவர்களுக்கு மட்டுமே அரசியல் முதிர்ச்சி இருக்கும் என்பதும், எழுத்தறிவு இல்லாதவர்களுக்கு அரசியல் முதிர்ச்சி இருக்காது என்பதும் ஏற்க முடியாத வாதமாகும்.

**பாலினத்தகுதி**

ஆரம்ப காலம் முதலே ஆண்கள் மட்டுமே அரசியலில் ஈடுபடத் தக்கவர்கள் என்பதும், பெண்கள் வீட்டுப் பணியில் மட்டுமே ஈடுபட வேண்டும் என்பதும் எழுதப்படாத விதியாக இருந்து வந்திருக்கிறது. பெருமளவில் பெண்களுக்கு பொது வாழ்வில் பங்கு மறுக்கப்பட்டு வந்திருக்கிறது. வாக்குரிமையும் இதற்கு விதிவிலக்கல்ல. பிரிட்டன், சுவிட்சர்லாந்து போன்ற நாடுகள் கூட சென்ற நூற்றாண்டின் இடையில் தான் பெண்களுக்க வாக்குரிமை வழங்க முன் வந்தன. ஆனால் சுதந்திர இந்தியாவில்



முதல் பொதுத் தேர்தலிலேயே பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது என்பது பெருமைப்படத்தக்க ஒன்றாகும்.

**தேசியத் தகுதி**

தற்கால அரசுகள் தங்கள் குடிமக்களுக்கு மட்டும் வாக்குரிமை வழங்குகின்றன.

**வயதுத் தகுதி**

வயது என்பது ஒரு முக்கியத் தகுதியாகும். உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் முதிர்ச்சி பெற்றவர்களே நன்கு முடிவெடுக்க இயலும் என்பதால் வயது ஒரு தகுதியாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. உலகளவில் 18 வயது என்பது முதிர்ச்சியுற்ற வயதாகக் கருதப்படுவதால், பல நாடுகளிலும் 18 வயது நிரம்பியவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்படுகிறது. இந்தியாவில், முதலில் 21 வயது நிரம்பியவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டு வந்தது. பின்னர், 1989 ஆம் ஆண்டு முதல் 18 வயது நிரம்பியவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்படுகிறது. குறிப்பான இளைஞர்கள் ஆர்வத்துடன் அரசியலில் பங்கேற்க வேண்டும் என்பதற்காக மறைந்த பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் இந்த உரிமையை வழங்கினார்கள்.

**வயது வந்தோர் வாக்குரிமை**

வாக்குரிமை பற்றி பல்வேறு கோட்பாடுகள், கருத்துக்கள் இருந்தாலும் மக்களாட்சியில் மக்களின் பங்கேற்பே முக்கியமானதாகும். எனவே பெருமளவு மக்கள் பங்கேற்க வாய்ப்பளிப்பதே உண்மையான மக்களாட்சியாகும். அவ்வகையில் இன்று மக்களாட்சி உள்ள பெரும்பாலான நாடுகள், வயது வந்தோர் வாக்குரிமையை நடைமுறைப்படுத்தி வருவது முறையேயாகும்.

## 6.3. வயது வந்தோர் வாக்குரிமையின் நிறைகள்

அ. மக்களாட்சி என்பது மக்கள் இறைமையைக் குறிக்கின்றது. எனவே வாக்குரிமை வயது வந்த அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும். அரசாங்கத்தை உருவாக்கவும், அதனை கட்டுப்படுத்தவும்

மக்கள் இறைமைக்கான ஒரு கருவியே வயது வந்தோர் வாக்குரிமையாகும்.

ஆ. அரசின் சட்டங்கள் அனைவரையும் பாதிக்கின்றன. எனவே, அவ்வாறு அமைக்கப்படும் அரசினை தீர்மானிப்பதில் அனைவருக்கும் பங்களிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமே. **“**அனைவரையும் தொடக்கூடிய ஒன்றை அனைவருமே தீர்மானிக்க வேண்டும்**”.**

இ. வாக்குரிமை என்பது சமுதாயத்தின் ஒரு சாராருக்கு மட்டுமே வழங்கப்பட்டு, பிறருக்கு மறுக்கப்பட்டால், அவ்வாறு உருவாகும் அரசாங்கம், வாக்குரிமை பெற்றவர்களின் நலனில் மட்டுமே நாட்டமுடன் செயல்பட்டு, பிறர் நலனை முற்றிலுமாக புறக்கணிக்க முயலும்.

ஈ. வயது வந்தோர் வாக்குரிமை ஒவ்வொரு தனிமனிதனுக்கும், வளர்ச்சி பெற அவசியமானது ஆகும். ஒரு சாராருக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டால், அவர்கள், தாங்கள் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டவர்கள் என்ற தாழ்வு மனப்பான்மையை வளர்க்கும். அது சமுதாயத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு உகந்ததல்ல.

### 6.4. வயது வந்தோர் வாக்குரிமையின் குறைகள்

இம்முறையில் முதலாவது குறை பாகுபாடின்றி அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்படுவதாகும். அரசாங்கம் பற்றி எவ்விதமான விழிப்புணர்வும் இல்லாதவர்களும் வாக்களிக்க வகை செய்கிறது. இரண்டாவதாக, இந்தியா போன்ற நாடுகளில், எழுத்தறிவு விகிதம் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. வாக்காளர்கள் பெருமளவில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள், வாக்குச்சீட்டில், வேட்பாளரின் பெயரைக் கூட படிக்க இயலாதவர்கள் வெறும் சின்னங்களை வைத்தே அவர்கள் வாக்களிக்கிறார்கள்.



மூன்றாவதாக, அரசியல் கட்சிகள் பாமர மக்களின் குறுகிய மனப்போக்கு, இரக்க குணம் போன்றவற்றை இலக்காகக் கொண்டு பிரசாரம் செய்கின்றன. சாதி அடிப்படையிலும் மத அடிப்படையிலும் வேட்பாளர்களை நிறுத்தி அதை முன்னிறுத்தி வாக்கு கோருகிறார்கள். மக்களும் பரந்த அளவில் சிந்திக்காமல், குறுகிய நோக்குடன் வாக்களிக்கிறார்கள்.

நான்காவதாக பாமர மக்களுக்கு தேசப்பிரச்சனைகளும், நிகழ்வுகளும் முக்கியமாகப் படுவதில்லை. பச்சாதாபம், அனுதாபம் போன்ற உணர்வுகளால் உந்தப்பட்டு வாக்களிக்கிறார்கள்.

### 6.5. வாக்கின் வகைகள்

வாக்கு பல்வேறு வகைப்படும். அவையாவன,

**1. ஒரு நபருக்கு ஒரு வாக்கு**

இதன்படி, தகுதியுடைய அனைவருக்கும், ஒரு வாக்கு மட்டுமே அளிக்கப்படுகிறது. பெரும்பாலும் இம்முறையே பல நாடுகளிலும் பின்பற்றப்படுகின்றது. இம்முறையில் ஒரு வாக்காளர் தனக்கு வழங்கப்பட்டுள்ள வாக்கை ஒருவருக்கு மட்டுமே அளிக்க இயலும்.

**2. ஒற்றை மாற்று வாக்கு**

இம்முறையானது, பல உறுப்பினர் தொகுதி முறைக்கு மிகவும் பொருத்தமானதாகும். இதிலும், ஒரு வாக்காளருக்கு ஒரு வாக்கு மட்டுமே அளிக்கப்படுகிறது. ஆனால், அவர், அதனை தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு முன்னுரிமை அளித்து முதலாவது, இரண்டாவது, மூன்றாவது என அளிக்கலாம்.

ஒருவர், முதலாவது முன்னுரிமை அளித்த வேட்பாளர் போதுமான வாக்குகள் இரண்டாவது முன்னுரிமை நபருக்கு வழங்கப்படும். இந்தியாவில் குடியரசுத்தலைவர், துணைக் குடியரசுத்தலைவர் பதவிக்கு இம்முறை பின்பற்றப்படுகின்றது.

**3. பன்மை வாக்கு**

இம்முறையில், ஒரே வாக்காளருக்கு பல வாக்குகள் வழங்கப்படுகின்றது. சில நாடுகளில், வாக்காளருக்கான தகுதிகள் பல இருக்கும். சொத்து வைத்திருப்போர், வரி செலுத்துவோர், கல்வி தகுதியுடையோர் என குறிப்பிடப்ப்டு இவற்றில் ஏதேனும் ஒன்று இருந்தால் வாக்குரிமை வழங்கப்படும். ஒவ்வொரு தகுதிக்கும் ஒரு வாக்கு என்ற அளவில் சொத்து வைத்திருந்து, வரியும் செலுத்தி, கல்வித் தகுதி பெற்ற ஒருவர் மூன்று தகுதிகளையும் பெற்றிருப்பதால் அவருக்கு மூன்று வாக்குகள் வழங்கப்படும். பெல்ஜியம் நாட்டில் முன்பு, இம்முறை இருந்தது.

**4. வெளிப்படையான வாக்கு**

இம்முறையில் வாக்கு, தான் யாரை ஆதரிக்கிறார் என்பதை வெளிப்படையாக, கையை உயர்த்திக் காட்டியோ, வாய்மொழி யாகவோ தெரிவிப்பார். மான்டெஸ்கியூ எனும் அரசியல் சிந்தனையாளர், இம்முறையை ஆதரிக்கிறார். ஏனெனில், அறிவுள்ள ஒருவர், வெளிப்படையாக அவர் யாரை ஆதரிக்கிறார் என்று தெரிவித்தால் அவர் வழியில், விழிப்புணர்வு இல்லாதவர்களும் தங்கள் ஆதரவை தருவார்கள் என்பதேயாகும். இம்முறையானது பெரிய எண்ணிக்கையிலான வாக்காளர்களிடையே சாத்தியப்படாது. ஆனால், சட்டமன்றம், நாடாளுமன்றம் ஆகிய அவைகளில், ஒரு (மசோதா)) வாக்கெடுப்பிற்கு விடப்படும் போது உறுப்பினர்கள் இவ்வகையில் தங்கள் ஆதரவை அல்லது எதிர்ப்பை பெரும்பாலும் தெரிவிக்கிறார்கள்.

**5. ரகசிய வாக்கு**

இம்முறையில், வாக்காளர் அவர் யாருக்கு வாக்களிக்கிறார் என்பதை பிறர் அறியாவண்ணம் மறைவாகச் சென்று பதிந்து விட்டு வருவார். இம்முறையே இன்று பிரதிநிதித்துவ மக்களாட்சியுள்ள



நாடுகளில் பெருமளவு பின்பற்றப்படுகிறது. வாக்குச் சாவடிகளில் இதற்கென மறைவான தடுப்புகள் இருக்கும். வாக்காளர் அங்கு சென்று, வாக்குச் சீட்டில், தனது வாக்கினை பதிந்து விட்டு, அதனை பிறர் காணாத வண்ணம் மடித்து, வாக்குப் பெட்டியில் சேர்ப்பார். இதனால், யார் எவருக்கு வாக்களித்தார் என்பது ரகசியமாக வைக்கப்படுகிறது. எனவே, வாக்காளர் வேட்பாளர்களின் வெறுப்புக்கு உள்ளாவது தவிர்க்கப்படுகிறது. இந்தியாவில் நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களிலும் இம்முறையே பின்பற்றப்படுகின்றது. மக்களாட்சியில் ரகசிய வாக்கெடுப்பு தற்போது அவசியமானதாகக் கருதப்படுகின்றது.

## 6.6. குடியுரிமை

அரசு என்பது அரசியல் சார்புடைய அமைப்பு அல்லது நிறுவனம். இவ்வரசு மக்களுடைய பொதுநலத்தை பெற்று தருவதற்காக உள்ள அரசாங்கமொன்றையுடையது. மக்கள் என்பது இவ்விடத்தில் குடிமகன் அதாவது குடியுரிமை பெற்றவர் என்பதை குறிக்கும். குடிமகன் என்பதற்கு இரண்டு வெவ்வேறு பொருளுண்டு..7 முதலாவது அதன் குறுகிய பொருளில் ஒரு நகரத்தில் வசிப்பவர் என்பது. இரண்டாவது அதன் விரிவான பொருளில் “ஒரு அரசின் ஆட்சி அதிகாரம் செல்லுபடியாகும் எல்லைகளுக்குட்பட்ட நிலப்பரப்பில் வாழ்பவர்” என்பதாகும்.

அரசியல் அறிவியலின், குடிமகன் என்பவன், ஒரு அரசின் எல்லைப்பரப்பிற்குள் வாழ்ந்து, அதன் செயல்பாடுகளில் பங்கேற்று, சமூக மற்றும் அரசியல் உரிமைகளைப் பெற்றவனாவான்.

## 6.7. குடியுரிமைக் கருத்து

குடிமகன் என்ற கருத்து மிகப் பழமையானதாகும். அரசு தோன்றிய காலங்களில் அதாவது, கிரேக்க, ரோமாபுரி அரசுகளில், குடியுரிமை என்பது அந்நாட்டில் வாழ்ந்த அனைவருக்கும் வழங்கப்படவில்லை. அரிஸ்டாட்டில் போன்ற அரசியல் சிந்தனையாளர்கள், குடியுரிமையை தேர்ந்தெடுக்கும் உரிமை

சிலருக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தினை கொண்டிருந்தனர்.

ஆனால், காலப்போக்கி, அடிமைமுறை ஒழிக்கப்பட்டு, அனைவருக்கும் குடியுரிமை வழங்கும் நடைமுறை ஏற்பட்டது. குடிமக்கள் என்பதும், குடியுரிமை பெறாதவர்கள் அந்நியர் என்பதும் நடைமுறையாயிற்று.

அந்நியர் என்பவர்கள், ஒரு நாட்டின் குடியுரிமையைப் பெறாமல் ஆனால், உதாரணமாக, அயல்நாட்டு தூதுவர்கள், தங்கள் தாய்நாட்டை விட்டு, பணிநிமித்தமாக வேறுநாட்டில் சென்று வசிப்பவர்கள் ஆவார்கள்.

**குடியுரிமை பெறத் தகுதிகள்**

குடியுரிமைக்கான தனிப்பட்ட தகுதிகள் ஏதுமில்லை. எனினும் பழங்காலத்தில் கிரேக்க, ரோமாபுரி அரசுகளில், சொத்து வைத்திருப்போர் மட்டுமே குடிமகனாக ஏற்கப்பட்டனர். தற்போது ஒரு நாட்டின் ஒரு குழந்தை பிறந்தால், அது அந்த நாட்டின் குடிமகனாக ஏற்கப்படுகிறது.

**குடியுரிமையின் வகைகள்**

குடியுரிமை இரண்டு வகைப்படும். அவை

1. இயற்கை குடியுரிமை
2. பெறப்பட்ட குடியுரிமை

**இயற்கைக் குடியுரிமை**

ஒரு குழந்தை எந்த நாட்டில் பிறக்கிறதோ, அது அந்த நாட்டின் குடிமகனாக ஏற்கப்படுகிறது. ஒரு இந்திய தம்பதியினருக்கு, அமெரிக்காவில் குழந்தை பிறந்தால் அது அமெரிக்க குடிமகனாக ஏற்கப்படும். இவ்வாறு பல நாட்டு குடிமக்களும், வேறுநாடுகளுக்கு சென்று வசிக்கும் போது அவர்களுக்கு அங்கு பிறக்கும் குழந்தைகள் அந்தந்த நாட்டு குடிமகன்களாக ஏற்கப்படுகின்றனர்.



**பெறப்பட்ட குடியுரிமை**

ஒருவர் ஒரு நாட்டில் பிறக்கவில்லை என்றாலும், அவர் அந்த நாட்டின் குடியுரிமையைப் பெறுவதற்கு சட்ட ரீதியான வாய்ப்புள்ளது. சட்டப்படி ஒருவர் ஒரு நாட்டில் குறிப்பிட்ட சில காலம் வசித்து வந்தால், அவர் அந்த நாட்டு குடியுரிமை பெறுவதற்கு தகுதியடைவராவார். இந்தியாவில், ஒரு வருட காலம் ஒருவர் தொடர்ந்து வசித்து வந்தால், வெளிநாட்டுக் குடிமகனான அவர், இந்தியக் குடியுரிமைக்கு தகுதியுடையவராவார். அவர் இந்திய அரசாங்கத்திற்கு விண்ணப்பித்துக் குடியுரிமை பெறலாம்.

குடியுரிமை என்பது, வெறும் சட்ட ரீதியான தகுதிமட்டுமன்று, ஒருவருக்கு அந்நாட்டின் பால் ஈர்ப்பும், உள்ளார்ந்த விருப்பமும் இருக்க வேண்டும். இதற்கும் மேலாக, அவர் நல்ல குடிமகனாக இருக்க வேண்டும்.

## 6.8. பிரதிநிதித்துவம் வாய்ந்த வரலாறு

உலகில் இன்றளவில், பெரும்பாலான நாடுகளில் மறைமுக மக்களாட்சியே நடைமுறையில் உள்ளது. மறைமுக மக்களாட்சி, பிரதிநிதித்துவ மக்களாட்சி என்றும் அழைக்கப்படுகின்றது. அரசாங்க அமைப்பு தோன்றிய ஆரம்ப காலங்களில் மக்கள் தொகை மிகவும் குறைவானதாக இருந்தது. எனவே மக்கள் அரசாங்க செயல்பாடுகளில் நேரடியாக பங்கேற்கவும் கருத்து சொல்லவும் முடிந்தது. அரசாங்கமும் முக்கிய பிரச்சனைகளில் மக்களின் கருத்துக்களை நேரடியாக கேட்டறிய முடிந்தது.

ஆனால், காலப்போக்கில், மக்கள் தொகை தொடக்கத்தில் இருந்ததைக் காட்டிலும் அதிகரித்துவிட்டது. அது மட்டுமல்லாமல் அரசின் எல்லைப்பரப்பும் அதிகமாகிவிட்டது. நகர அரசுகள் முறைமாறி நாட்டு அரசுகள் ஏற்பட்டுவிட்டன. இதன் விளைவாக, மறைமுக மக்களாட்சி எனப்படும் பிரதிநிதித்துவ மக்களாட்சி

உருவானது. பிரதிநிதித்துவ மக்களாட்சியில் மக்கள் தங்கள் கருத்துக்களை சொல்லவும், அரசாங்கத்தை கட்டுப்படுத்தவும் வாய்ப்புகள் இருக்கின்றன. இம்முறையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், மக்கள் சார்பாக செயல்படுகிறார்கள்.

***பிரதிநிதித்துவ முறையின் வளர்ச்சி***

ஆரம்ப காலங்களில் அரசாங்கங்களில் பிரதிநிதித்துவ முறை தேவைப்படவில்லை. ஆனால், ரோமாபுரிக் குடியரசு விரிவடைந்த போது மக்களின் நேரடி பங்கேற்பு இயலாமல் போனது. முதன் முதலாக, பிரதிநிதித்துவ முறை கிறித்துவ தேவாலயங்களில் துவங்கியதாக கருதப்படுகிறது. தேவாலய நிர்வாகத்தில் கருத்தறிய கிறித்தவர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட சபையை ஏற்படுத்தினர். இது போல், ஐரோப்பாவிலும், நிலப்பிரபுகள் சமூகத்திலிருந்து சில பிரதிநிதிகளை, அழைத்து அரசர்கள் ஆலோசனை நடத்தினார்கள். பிற்காலத்தில் இம்முறையே பிரதிநிதிகள் சபையாக உருவானது.

இத்தகைய பிரதிநிதிகள், தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லவும். அதற்கான தீர்வுகளைக் காணவும் இச்சபை பயன்பட்டது. இவர்கள் தேசிய பிரதிநிதிகளாகச் செயல்படாமல், தாங்கள் சார்ந்துள்ள பகுதியின் சார்பாக செயல்பட்டார்கள். அக்கால ஊரகங்கள், நகரங்கள் போன்றவை ஒரே இனத்தைச் சார்ந்த மக்கள் வாழும் பகுதியாக விளங்கின.

அவர்களுக்கிடையே நெருக்கமான சமூக உறவுகள் நிலவின. எனவே அவர்களின் பிரதிநிதிகள், தாங்கள் சார்ந்துள்ள சமூக மற்றும் பகுதியின் நலனையுமே முக்கியமாகக் கருதி செயல்பட்டனர். ஒரு உண்மையான பிரதிநிதி, குறுகிய நோக்கமும் வட்டார நோக்கமும் இன்றி, பரந்த நோக்குடனும் தேசிய சிந்தனையுடனும் சிந்திக்கவும் செயலாற்றவும் வேண்டும்.



பிரதிநிதிகள் சபையைப் பற்றி, எட்மன்ட்பர்க் (Edmund Burk) எனும் அரசியல் சிந்தனையாளர் பின்வருமாறு கருத்து தெரிவித்துள்ளார். “நாடாளுமன்றமானது, மாறுபட்ட, முறைபட்ட விருப்பங்களை கொண்ட மக்களுடைய கருத்துக்களுக்காக விவாதம் நடக்கும் மன்றமாக இருக்கக் கூடாது. நாடாளுமன்றம் என்பது நல்ல முடிவுகளை பொதுமக்களின் நன்மைகளுக்காக விவாதிப்பதற்கான ஒரு மன்றமாக செயல்பட வேண்டும்”.

ஆரம்ப காலங்களில், ஒரு இனத்தை சார்ந்த மக்களைக் கொண்டிருந்த பகுதி, நகரமயமாவதினாலும், இடப்பெயர்வு காரணமாகவும், பல இனத்தவர்களும் குடியமர்ந்த பகுதிகளாகிவிட்டன. எனவே ஒரு இனத்தை சார்ந்தவர்களின் பிரதிநிதி என்பது வழக்கொழிந்து ஒரு பகுதியின் பிரதிநிதி என்பது தோன்றியது. தற்போது, ஒரு வரையறுக்கப்பட்ட நிலப் பகுதியே தொகுதி என மாறியுள்ளது. சற்றேக் குறைய ஒரு அளவிலாக மக்கள் தொகுதிக்கென தொகுதியின் நிலப்பரப்பு தீர்மானிக்கப்படுகின்றது. அவ்வப்போது, மக்கள் தொகையில் அளவில் பெரிய மாற்றம் ஏற்படும் போது அதனையொட்டி, தொகுதியின் வரையறை தீர்மானிக்கப்படுகின்றது. எனவே ஒரு உறுப்பினரை, ஒரு தொகுதியின் பிரதிநிதி எனும்போது, அவர், அப்பகுதி அல்லது தொகுதி மக்களின் பிரதிநிதி என்றே கொள்ள வேண்டும்.

இவ்வாறு மாற்றமடைந்த தொகுதி முறையில் சில சிக்கல்கள் உள்ளன. அதாவது, ஒரு தொகுதியில் பலதரப்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். இனத்தால், மதத்தால், ஜாதியால், மொழியால் வேறுபட்டவர்கள் வாழ்கிறார்கள். இவர்களில் யாருடைய கருத்தை பிரதிநிதி பிரதிபலிக்க வேண்டும்? ஏனெனில், சமூகத்தில் பலதரப்பட்டவர்கள் வாழ்வதால், பல முரண்பட்ட கருத்துக்கள் இருக்கும். இப்படி தொகுதி மக்களிடையே மாறுபட்ட அல்லது முரண்பட்ட கருத்துக்கள் இருக்கும் போது அந்த தொகுதியின் பிரதிநிதி, எந்த சாராருடைய கருத்தை சட்ட மன்றத்தில்

பிரதிபலிக்க வேண்டும்? பிரதிநிதித்துவத்தில் எழும் இப்பிரச்சினைகளை ஓரளவு அரசியல் கட்சிகள் தீர்க்கின்றன. அரசியல் கட்சி என்பது, ஒரு கருத்தினை கொள்கையாகக் கொண்ட, அதை முன்னிறுத்தி ஆட்சியை கைப்பற்ற தேர்தலில் பங்கேற்கும் ஒரு அரசியல் குழு அல்து கூட்டமாகும்.

ஒரு தொகுதியின் மக்கள், இன, மத, ஜாதி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, ஏதேனும் ஒரு அரசியல் கட்சியை ஆதரிப்பார்கள். இது பெருமளவில் முரண்பாடுகளை குறைத்து விடுகிறது.

பிரதிநிதித்துவத்திலுள்ள சிக்கல்களை தீர்ப்பதற்கு சில முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை

1. நிலப்பகுதி சார்ந்த பிரதிநிதித்துவம்
2. விகிதாசாரப் பிரதிநிதித்துவம்
3. பணிசார்ந்த பிரதிநிதித்துவம்
4. சிறுபான்மையினருக்கான பிரதிநித்துவம் ஆகும்.

## 6.9. நிலப்பகுதி சார்ந்த பிரதிநிதித்துவம்

பெரும்பாலான நாடுகளில், நிலப்பகுதி சார்ந்த பிரதிநிதித்துவமே பின்பற்றப்படுகின்றது. காரணம் இது மிக எளிதான முறையாகும். இதன்படி, ஒரு அரசு அல்லது மாநிலம் பல்வேறு நிலப்பகுதிகளாக வரையறுக்கப்படுகிறது. எத்தனை பிரதிநிதிகள் வேண்டுமோ அத்தனை நிலப்பகுதிகளாக பிரிக்கப்படுகிறது.

ஒவ்வொரு தொகுதியிலும், ஒரு வேட்பாளர் அல்லது பல வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இதில் எல்லை வரையறை செய்வது எளிதாகும். மேலும் அந்த எல்லைப்பரப்பிற்கு உட்பட்ட அனைத்து மக்களுக்கும் பொதுவானதாகும். தொகுதியின் எல்லைகளை தேவைக்கேற்ப மாற்றியமைப்பதும் எளிதாகும்.



### இம்முறையின் நிறைகள்

1. இம்முறையின் மிக முக்கியமான நிறை, இது எளிமையானது என்பது எளிதாக சாத்தியப்படும் என்பதுமாகும். இம்முறைமையில், வாக்காளர், தன் தொகுதிக்காக, ஒரு வேட்பாளரை பிரதிநிதியாக தேர்ந்து எடுக்கிறார்.
2. வாக்காளர்களுக்கு, தொகுதிபற்றியும் வேட்பாளர்கள் பற்றியும் நல்ல அறிமுகமும் பரிச்சயமும் இருக்கும். வேட்பாளரும் தனது தொகுதிக்குட்பட்டவர்களை நன்கு அறிந்திருப்பார்.
3. தொகுதியின் பரப்பு தெளிவாக வரையறுக்கப்படுவதால், வேட்பாளர், இலக்குடன் செயல்பட்டு பிரச்சாரம் செய்வது எளிதாகும்.
4. இம்முறை பெரும்பாலான நாடுகளில் நடைமுறைப் படுத்தப்பட்டு வெற்றிகரமாகவே செயல்பட்டு வருகின்றது.

### இம்முறைமையின் குறைகள்

1. இம்முறையில், பிரதிநிதிகள் தாங்கள் சார்ந்துள்ள தொகுதியின் நலனையே பிரதானமாகக் கொண்டு செயல்படுவார்கள். இது குறுகிய நோக்கத்தையும் கண்ணோட்டத்தையும் வளர்க்கும் ஒவ்வொரு பிரதிநிதியும் தன் தொகுதியின் வளர்ச்சிக்காக பொதுநலனை புறக்கணிக்கத் துவங்கி விடுவார்.
2. இம்முறை “மண்ணில் மைந்தன்” என்ற கண்ணோட்டத்தை வளர்க்கும். ஒரு தொகுதியைச் சேர்ந்த ஒரு வேட்பாளர், அங்கு போட்டியிடும் மற்ற பகுதிகளைச் சார்ந்த வேட்பாளர்கள் அந்நியன் என்று தனிமைப்படுத்தி, தானே, இத்தொகுதியின் குடிமகன் என்று பிரசாரம் செய்வார்கள்.
3. தொகுதிகள் மக்கள் தொகையின் அடிப்படையில் அமைக்கப் படுவதால், மக்கள் தொகை மாறும் போது தொகுதியின் எல்லைகளும் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளது. அது செலவினத்தை அதிகரிப்பதாகும்.

4. வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பாக இருப்பதால், இடைத்தேர்தல் போன்ற நேரங்களில், தேர்தல் முறைகேடுகள் எளிதாக நடைபெறும். அரசாங்கம் தன் துறை அதிகாரங்களை, ஒருமுகப்படுத்தி துரிதமாக வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றி, வாக்காளர்களை தன் வயப்படுத்த ஏதுவாகும்.

5. இம்முறையில், ஒரு தொகுதியில், பல வேட்பாளர்கள் போட்டியிடும் போது, அவர்களில் அதிக வாக்குகள் பெற்றவர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுகிறார். இதனால், பல நேரங்களில் வெற்றி பெற்றவர் சிறுபான்மை வாக்குகள் பெற்றவராக இருக்கக் கூடும். உதாரணமாக ஒரு தொகுதியில் 1000 வாக்காளர்கள் இருப்பதாகக் கொள்வோம். தேர்தலில், ஏ.பி.சி.டி. என நான்கு கட்சிகள் போட்டியிடுவதாகக் கொண்டால் தேர்தலில் கட்சி ஏ - 400 வாக்குகள் கட்சி - பி 200 வாக்குகள். கட்சி சி - 180 வாக்குகள் கட்சி. பி - 220 வாக்குகள் பெற்றதாகக் கொண்டால், ஏ கட்சியின் வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படுகிறார். உண்மையில் அவர் பெற்ற வாக்குகள் 400 என்பது பெரும்பான்மையல்ல. எனினும் அவரே தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறார்.

6. ஓர் உறுப்பினர் தொகுதி முறையாக இருந்தால் எல்லோருக்கும் குறிப்பாக சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவம் கிடைப்பதில்லை. உதாரணமாக பல மதத்தினர்களும் வாழும் பகுதிகளில் இந்துக்கள் பெரும்பான்மையினராகவும் பிற மதத்தவர் சிறுபான்மையினராகவும் உள்ள தொகுதிகளில், பெரும்பான்மையினத்தவரே வெற்றி பெற முடியும். சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவம் கிடைப்பதில்லை..

இது போலவே சில தொகுதிகளில் ஜாதி உணர்வு மேலோங்கியுள்ளது. அந்த தொகுதிகளில், பெரும்பான்மை ஜாதியினர் மட்டுமே வெற்றி பெற இயலும். சிறுபான்மை ஜாதியினர்



வெற்றி பெற இயலாது. அவ்வகையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பழங்குடியினருக்கும் பிரதிநிதித்தவம் கிடைப்பதில்லை. இந்தியாவில், இக்குறையை நீக்க, இட ஒதுக்கீடு முறை, பின்பற்றப்படுகிறது. சில தொகுதிகள் தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினர்க்கு என ஒதுக்கப்பட்டுள்ளன.

### 6.10 விகிதாசார பிரதிநிதித்தும்

இம்முறையின் அடிப்படை நோக்கம், சமுதாயத்தின் அனைத்து பிரிவினருக்கும் பிரதிநிதித்துவம் அளிப்பதாகும். இவ்வகையில் உருவாக்கப்படும் சட்டமன்றம், அனைத்துப்பிரிவினரின் கருத்தையும் பிரதிபலிப்பதாக இருக்கும். ஒவ்வொரு பிரிவினருக்கும் தத்தம் மக்கள் தொகைக்கேற்ப பிரதிநிதித்துவம் கிடைக்கிறது.

இவ்வகை பிரதிநிதித்துவ முறை நடைமுறைப் படுத்துவதற்கு முன்னதாக, எந்த அடிப்படையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானித்துக் கொள்ள அடிப்படையில் இருக்கலாம். ஒரு சமுதாயத்தில், 70 சதவிகிதத்தினர் x மதத்தினர், 20 சதவிகிதத்தினர் y மதத்தினர், 10 சதவிகிதத்தினர் z மதம் என்று கொண்டால், சட்டமன்றத்தில், 70 சதவிதம் இடங்கள் x மதத்தின் பிரதிநிதிகள், 20 சதவிகிதம் y மதத்தினரின் பிரதிநிதிகள், 10 சதவிகிதம் z பிரதிநிதிகள் என்று தீர்மானிக்கப்படும். இவ்வகையில், சமுதாயத்தின் அனைத்து பிரிவினருக்கும் அவர்தம் மக்கள் தொகைக்கு ஏற்ப பிரதிநிதித்துவம் கிடைக்கும்.

### 6.11. விகிதாசார பிரதிநிதித்துவத்தின் நிறைகள்

ஜே.எஸ்.மில் போன்ற அரசியல் அறிஞர்கள் விகிதாசார பிரதிநிதித்துவத்தை ஆதரிக்கின்றனர். சட்டமன்றமானது, அனைத்து சாராரையும் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். எந்த பிரிவினரையும் பிரதிநிதித்துவம் வழங்காமல் விட்டுவிடக் கூடாது என்கின்றனர்.

பிரதிநிதித்துவ மக்களாட்சியில், ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகள் உள்ளன. ஆனால், உண்மையில், இவை நீங்கலாக, வேறுவகை கருத்துக்களும் நோக்குகளும் அங்கு நிலவும் அவர்களுக்கு, சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் கிடைப்பதில்லை.

ஜே. எஸ். மில் "பிரதிநிதித்துவ மக்களாட்சியில் ஒவ்வொரு பிரிவினரும் விகிதாச்சாரப்படி பிரதிநிதித்துவம் பெற்றிருக்க வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இம்முறையில், சமுதாயத்தின், பெரும்பான்மையினர் பெரும்பான்மை இடத்தையும், சிறுபான்மையினர் சிறுபான்மை இடத்தைப் பெறுவதும், சரியான மக்களாட்சியாகும்.

மேலும் இம்முறையில், தொகுதிகளை அவ்வப்போது வரையறுக்க வேண்டியதோ, மாற்றியமைக்க வேண்டியதோ அவசியமோ இருப்பதில்லை.

## 6.12. விகிதாசார பிரதிநிதித்துவத்தின் குறைகள்

முதலாவதாக, இம்முறையில், சமுதாயத்தில் பலதரப்பட்டவர் களிடையே பிரிவினையை ஏற்படுத்துகிறது. மதம், ஜாதி, மொழி ஆகிய தன்மைகளின் அடிப்படையிலேயே எல்லாரும் வாக்களிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாவதாக, ஒவ்வொரு பிரிவினரும் தங்களுக்கென ஒரு அரசியல் கட்சியை உருவாக்க வகை செய்கிறது. காலப்போக்கில், அனைத்துப் பிரிவினருக்கும் பல்வறே அரசியல் கட்சிகள் உருவாகும் நிலை ஏற்படும். இது அரசியலுக்கு ஆரோக்கிய மானதல்ல. இம்முறை தேசிய ஒருங்கிணைப்புக்கு வழிவகுக்காமல், பிரிவினைக்கு வழிவகுக்கும்.

மூன்றாவதாக, ஜனநாயகம் என்பது பல்வேறு கருத்துக்களையும் ஏற்று இணக்கமாக செயல்படுவதாகும். விகிதாசாரப் பிரதிநிதித்துவம், இணக்கத்திற்கு இடமளிக்காமல் கருத்து வேறுபாடுகளை



அதிகரிக்கும். எந்த நிலையிலும், பல்வேறு பிரிவினருக்கு இடையில் சமரசம் ஏற்பட வாய்ப்பில்லாமல் போகும்.

நான்காவதாக, மதம், மொழி போன்ற பிரிவுகளின் அடிப்படையில் கட்சிகள் தோன்றுவதால், அரசியல் கட்சிகள், தேசிய நலனை கருத்தில் கொள்ளாமல், ஜாதி, மத, மொழி உணர்வுகளை மூலதனமாக்கி, அரசியல் லாபம் தேட ஏதுவாகம். தேசிய நலன் புறக்கணிக்கப்படும்.

ஐந்தாவதாக, அரசியல் கட்சிகள், ஜாதி, மத அடிப்படையில் செயல்படத் துவங்குவதால், கட்சிகளுக்குள்ளும் பிளவுகள், கோஷ்டிகள் உருவாகும் கட்சிகளின் கருத்தியல்கள் (Ideologies) லட்சியங்கள் ஒதுக்கப்பட்டுவிடும். மக்கள் பல்வேறு பிரிவினரும் "ஓட்டு வங்கிகளாக ஆக்கப்படுவார்கள்".

ஆறாவதாக, இவ்வகை முறையில், தொகுதிகள் மிகப் பரந்ததாக இருக்கும். எனவே பிரதிநிதிகள் பிரசாரம் செய்தலும், மக்களை சந்தித்து குறைகள் கேட்டறிவதும் கடினமாகும். பிரசார செலவினமும் அதிகமாகும். இந்தியாவில், மத்தியில் நாடாளுமன்றத்தின் மேல் சபையான மாநிலங்களவைத் தேர்தலில், விகிதாசார முறை பின்பற்றப்படுகின்றது.

உதாரணமாக, தமிழ்நாட்டிற்கு மாநிலங்களவையின் 18 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவை, மாநில சட்ட மன்றத்தில் கட்சிகளின் பலத்தின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. நவம்பர் 2003ல் உள்ளபடி, அ.இ.அ.தி.மு.க, தி.மு.க. காங்கிரஸ் ஆகியன வரிசைப்படி முதல், இரண்டாம், மற்றும் மூன்றாம் இடத்தை பெற்றுள்ளன.

அதற்கு ஏற்றவாறு மாநிலங்களவையில் அ.இ.அ.தி.மு.க 9, தி.மு.க. 7, காங்கிரஸ் 2 என பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன. ஒரு சட்டமன்றத்தில் அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்களைப்

பெற்றுள்ள கட்சி அதற்குத் தகுந்தவாறு மேலவையில் பிரதிநிதித்துவம் பெறும்.

### 6.13 பணிசார் பிரதிநிதித்துவ முறை.

இது மற்றுமொரு பிரதிநிதித்துவ முறையாகும். இதன் ஆதரவாளர்கள், சட்டமன்றத்தில், நிலப்பகுதிகளுக்கு பிரதிநிதித்துவம் தேவையில்லை இம்முறையில் சமுதாயத்திலுள்ள பல்வேறு பணி மற்றும் பொருளாதார பிரிவினருக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்படும். ஒரு தொகுதியில், பல்வேறு வகை பணி சார்ந்தவர்கள். உதாரணமாக. வியாபாரிகள், அலுவலகங்களில் பணிபுரிவோர், தொழிலாளிகள், விவசாயிகள், விவசாயக் கூலிகள் போன்றோர் இருப்பார்கள். இவர்கள் அனைவருக்கும் பணிசார்பு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும். இவ்வகை பிரதிநிதித்துவம் அளிப்பதால், தொகுதியில் உள்ள அனைத்துப் பணியினரின் பொருளாதார நலன்களும் பாதுகாக்கப்படும்.

பொதுவாக நகர தொகுதிகளில், அலுவலகப் பணியாளர்களும், தொழிற்சாலைப் பணியாளர்களும் இருப்பார்கள். ஊரகத் தொகுதியில், விவசாயத் தொழிலாளர்களும், சிறுவியாபாரிகளும் இருப்பார்கள், இவர்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் வகையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும்.

### 6.14 நிறைகள்

இம்முறையில், சமுதாயத்தின் அனைத்து பணிவகையினருக்கும் பிரதிநித்துவம் கிடைக்கும். கோலே (G.D.H.COLE) எனும் அரசியல் அறிஞர், ஒரு குடியாட்சியில் எத்தனை வகைப்பணிகள் உள்ளனவோ, அவை அனைத்தும் சட்டமன்றத்தில் இடம் பெற வேண்டும்” எனக் குறிப்பிடுகிறார். இங்கிலாந்தில் உள்ள குழு சோஷலிச வாதிகள், இதற்கான பணி வகைகளைப் பட்டியலிட்டுள்ளனர். இத்தாலி சர்வாதிகாரியான முசோலினியும்,



ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லாதவர்களும் சோதனை முறையில் பணிசார்ந்த பிரதிநிதித்துவம் அளித்தார்கள். பொருளாதார குழுக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கொண்ட கூட்டுறவு பிரதிநிதித்துவ மன்றமொன்றை இத்தாலியில் முசோலினி நிறுவினர்.

### 6.15 குறைகள்

முதலாவதாக, இம்முறையில் பிரதிநிதிகள் அவர்கள் சார்ந்துள்ள பணி வகையைத்தான் பிரதிபலிப்பார்களேயன்றி, தேசத்தின் நலனை பிரதிபலிக்கமாட்டார்கள்.

இரண்டாவதாக, இம்முறை பலகட்சி முறைக்கு வழிவகுக்கும். ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஒரு பணி வகையை முன்னிறுத்தி தேர்தலில் பங்கேற்கும். பலகட்சி முறையில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காமல் போக வாய்ப்புள்ளது.

மூன்றாவதா, பணிசார்பு பிரதிநிதித்துவ முறையில், முரண்பட்ட பொருளாதார பிரிவுகள் இருப்பதால், நிர்வாகத்தில் பிணிக்கு ஏற்படும். இரு சாராரும் சற்றும் விட்டுக் கொடுக்காமல் உறுதியாக இருப்பது நிர்வாகத்திற்கு ஆரோக்கியமானதாகாது.

முடிவாக கூற வேண்டுமானால், ஜனநாயகம் என்பது ஒருங்கிணைப்பை வளர்க்க வேண்டுமேயன்றி பிரிவினையை வளர்க்கக் கூடாது. பணிகள் பிரதிநிதித்துவம் சமுதாயத்தில் பிளவுகளை உருவாக்கும். இதற்கு மாற்றாக, பணிசார்ந்த, அரசல்லாத அமைப்புகளை உருவாக்கி, தேவையான போது அவர்களது கருத்துக்களை கேட்டறிந்து, சட்டம் இயற்றலாம்.

### 6.16. சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவம்

சிறுபான்மை என்பது குறைவான எண்ணிக்கை உடையவர்களைக் குறிக்கும். சட்ட மன்றத்தில் பெரும்பான்மை கட்சி ஆட்சி அமைக்கின்றது. சிறுபான்மையான கட்சி எதிர்கட்சியாக செயல்பட்டு அரசாங்கத்தை விமர்சிக்கும். இது நீங்கலாக, மொழி,

மதம், இனம் மற்றும் நிறத்தின் அடிப்படையிலும் சிறுபான்மையினர் உள்ளனர்.

உதாரணமாக இந்தியா, மதசார்பற்ற நாடாக இருந்தாலும் மக்கள் தொகையில் பெரும்பான்மையினர் இந்துக்களாவர். கிறித்தவர்கள், இஸ்லாமியர்கள், பார்சிகள், சீக்கியர்கள் போன்றோர் சிறுபான்மை யினராவர். இதைப்போலவே, தமிழ்நாட்டில், தமிழ்மொழி பேசுவோர் பெரும்பான்மையினர், தெலுங்கு, மலையாளம் போன்ற பிற மொழி பேசுவோர் சிறுபான்மையினர்.

அரசாங்கத்தின் சட்டமன்றத்தில், சிறுபான்மையினருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும். ஏனெனில் சிறுபான்மையினர், தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவது இயல்பாக சாத்தியப்படாமல் போகலாம். அதனால் அவர்களுக்கு பிரத்தியேகமாக, பிரதிநிதித்துவம் பெற வகை செய்ய வேண்டும்.

சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவம் வழங்க பல முறைகள் உள்ளன. முதலாவதாக, விகிதாசார பிரதிநிதித்துவ முறையைப் பின்பற்றினால் சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவம் கிடைக்கும்.

இரண்டாவ முறை, சிறுபான்மையினருக்கென சில இடங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும். இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியில் இஸ்லாமியர்களுக்கு சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் அளிக்க வகைசெய்யும் பிரதிநிதித்துவ சட்டம் நிறைவேற்றப்பட்டது.

சுதந்திரத்திற்குப்பின், இந்திய அரசமைப்பில் மத அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. என்றாலும், தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினருக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில், சட்ட மன்றத்திலும், தாழ்த்தப்பட்டவர்கள் மற்றம் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. மேலும் ஊராட்சி அமைப்புகளில், தாழ்த்தப்



பட்டவர்கள், பழங்குடியினர் ஆகியோருக்கும் பெண்களுக்கும் இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இடஒதுக்கீடு, சிறுபான்மையினருக்கும், மற்ற வகையினருக்கும் பிரதிநிதித்துவம் அளிப்பதற்கு ஒரு எளிய வழியாகும். ஆனால் அதே நேரத்தில், மக்களிடையே பிரிவினையை உருவாக்கும். அவர்கள் தேசிய நீரோட்டத்தில் கலக்காமல் தனிமைப்படுத்தப் படுவார்கள். இட ஒதுக்கீடு இருப்பதால், அவர்கள் பொதுத் தொகுதிகளில் போட்டியிட முன்வந்தாலும் பிற பிரிவினர் அதனை மனமுவந்து ஏற்கமாட்டார்கள்.

மேலும், இடஒதுக்கீட்டு முறை, இருசாராரிடமும் வேற்றுமையையும் வெறுப்புணர்ச்சியையும் வளர்க்கிறது. இணக்கமான உணர்வுகளை வளர்ப்பதற்கு மாறாக, பகைமையுணர் வையே வளர்க்கும்.

மக்களாட்சியில் உள்ள பிரச்சனைகளுக்கு இடஒதுக்கீட்டு முறை தீர்வாகாது. எனினும், இதைவிட நல்ல மாற்று முறை சாத்தியப்படும் வரை இது தொடர்வதே ஏற்புடையதாகும்.

## வினாக்கள்

### பகுதி அ

I. **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்**

1. கீழே உள்ளவற்றில் வாக்குரிமை பெறுவதற்கு தேவையானது எது?

   அ. வயது ஆ. கல்வி

   இ. திருமணம் ஈ) சொத்து

2. இந்தியாவில் வாக்குரிமை பெறுவதற்கு குறைந்த பட்ச வயது தகுதி எது?

அ. 18 ஆ. 21

இ. 25 ஈ. 30

II. **கோடிட்ட இடத்தை பூர்த்தி செய்க**

1. விகிதாச்சார பிரதிநிதித்துவ முறை ____________ பிரதி நிதித்துவம் கிடைக்க வகை செய்கிறது.

2. மாண்டெஸ்கியூ என்பவர் ____________ வாக்குரிமயை விரும்புகிறார்.

III. **கீழ்வருவன சரியா அல்லது தவறா என எழுதுக**

1. இந்தியாவில் பெண்களுக்கு வாக்குரிமை இருக்கிறது.

2. இந்திய பிரதம மந்திரி மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப் படுகிறார்.

**பகுதி ஆ**

1. பூகோளரீதியான பிரதிநிதித்துவத்தை விளக்குக.

2. எல்லோருக்கும் வாக்குரிமை என்பது என்ன.

**பகுதி இ**

1. வகுப்புவாத பிரதிநிதித்துவத்தை விளக்குக.

2. வாக்குரிமை பற்றிய கொள்கைகள் என்ன?

**பகுதி ஈ**

1. வயது வந்தோர் வாக்குரிமை பற்றிய சாதக - பாதக கருத்துக்கள் என்ன?

2. குடியுரிமை மற்றும் வாக்குரிமை கருத்துக்கள் பற்றிய கட்டுரை ஒன்று எழுதுக.

மக்கள் தந்துள்ள உரிமை அடிப்படையில்தான் ஆட்சியாளர்கள் ஆட்சி செய்கிறார்கள் என்பதும் அவர்களை அமைதியான முறையில் மாற்ற உரிமை பெற்றிருக்கிறார்கள் என்பதாகும்.

### 7.2. மக்களாட்சியின் வரலாறு

மக்களாட்சியின் வரலாறானது ஒரே சீராகவோ, மித வேகத்துடனோ வளர்ந்ததல்ல என்று புகழ்பெற்ற அரசியல் அறிஞர் சாமுவேல் பி. ஹட்டிங்கன் கூறுகிறார். ஆனால் பல்வேறு வரலாற்று அலைகளால் மக்களாட்சி முன்னேற்றமடைந்துள்ளது. ஹட்டிங்கன் கீழ்காணும் மூன்று வரலாற்று அலைகளால் உருவானது என கண்டறிந்துள்ளார்.

மக்களாட்சியின் முதலாம் அலை பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலிருந்து தொடங்கியது. முதலாம் அலை பெரும்பான்மையான அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆண் குடிமக்கள் வாக்களிக்கும் உரிமை தொடங்கிய காலத்திலிருந்து 1920களில் முடிவடைகிறது. அக்கால கட்டத்தில் 20 நாடுகளில் மக்களாட்சி முறை செயல்முறை படுத்தப்பட்டிருந்தது.

மக்களாட்சியில் முதலாம் அலைவீச்சு மக்களாட்சிக்கு எதிராக ஏற்கெனவே வளர்ந்த முறைக்கு எதிராக மாறியது. 1922ம் ஆண்டு முசோலினியின் பாசிச கட்சி இத்தாலியில் ஆட்சி புரிந்ததிலிருந்து 1942 ஆம் ஆண்டு வரை மக்களாட்சி வீக்கமடைந்தது. அக்காலத்தில் மக்களாட்சியை பின்பற்றுகிற நாடுகளில் எண்ணிக்கை 11 ஆக குறைந்தது.

மக்களாட்சியின் இரண்டாம் அலை நேச நாடுகள் இரண்டாம் உலக போரில் வெற்றி பெற்றதிலிருந்து தொடங்கியது. இரண்டாம் அலை படிப்படியாக வளர்ந்து 1962 ஆம் ஆண்டில் 36 நாடுகள் மக்களாட்சி முறையை பின்பற்றும் அளவிற்கு வளர்ந்தது. இரண்டாம் அலையும் 1970 களில் குன்றத் தொடங்கியது. அக்கால கட்டத்தில்



மக்களாட்சியை பின்பற்றும் நாடுகளின் எண்ணிக்கை 30 ஆக குறைந்தது.

1974 ஆம் ஆண்டு முதல் மக்களாட்சியின் மூன்றாம் அலை தொடங்கியது என்கிறார் ஹட்டிங்கன். மேலும் 30 நாடுகள் மக்களாட்சி முறையை பின்பற்றும் நாடுகளின் எண்ணிக்கையில் சேர்ந்து இரு மடங்காக மக்களாட்சியை பின்பற்றும் நாடுகள் உலகில் உயர்ந்தன.

சாமுவேல் ஹட்டிங்கன் உலகத்தில் பல்வேறு பகுதிகளில் நிகழும் சிக்கலான அரசியல் மற்றும் கலாச்சார சக்திகளை ஆராய்ந்த போதிலும் அவரால் மக்களாட்சிக்கு முடிவான ஒரு விளக்கத்தை அளிக்க முடியவில்லை.

ஹட்டிங்கன் மக்களாட்சியின் மூன்றாம் அலையும் குன்ற எப்பொழுதும் வாய்ப்புள்ளதாக கூறுகிறார். அப்பொழுது மக்களாட்சியின் நான்காம் அலைக்கான வாய்ப்பு இருப்பதாக கணித்துள்ளார். அது இருபத்தொன்றாம் நூற்றாண்டில் நடக்கலாம் என்று கூறுகிறார்.

பெரும்பாலான ஹட்டிங்கன் எழுத்துக்கள் பொருளாதார முன்னேற்றமே மக்களாட்சி வளர வாய்ப்புள்ளதாக கூறுகின்றன. அத்தகைய வாய்ப்புகள் அரசியல் தலைவர்களின் கையில்தான் உள்ளதாக கூறுகிறார்.

மக்களாட்சியை நேரடி மக்களாட்சி மற்றும் மறைமுக மக்களாட்சி என இரு வகையாக பிரிக்கலாம்.

### 7.3. நேரடி மக்களாட்சி

நேரடி மக்களாட்சி முறையில் அனைத்து குடிமக்களும் எவ்வித இடைப்பட்ட பிரதிநிதிகளில்லாமலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பணியமர்த்தப்பட்ட அலுவலர்கள் இல்லாமலும் மக்களாகவே நேரடியாக பொது முடிவுகளில் கலந்து

கொண்டு பொது முடிவுகளை எடுக்கும் முறை நேரடி மக்களாட்சி எனப்படும்.

நேரடியான மக்களாட்சி முறையை நடைறைப்படுத்த குறைந்த எண்ணிக்கையிலான மக்கள் உள்ள சமூகத்தின் அமைப்பில் அல்லது இன குழுக்களில் தான் நேரடி மக்களாட்சி முறை நடைமுறைப்படுத்த முடியும். எடுத்துக்காட்டாக தொழிற்சங்கத்தின் குறைவான எண்ணிக்கை உள்ள கிளை கழகத்தில் உறுப்பினர்கள் ஒரு சிறு அறையில் ஒன்று கூடி தங்களுடைய கருத்துக்களை விவாதித்து, பெரும்பாலான உறுப்பினர்களின் விருப்பம் அல்லது வாக்களிப்பின் மூலம் ஒரு முடிவை எட்டுவதாகும்.

பண்டைய கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் நகரத்தில் தான் உலகத்தில் முதன்முதலாக நேரடியான மக்களாட்சி முறை செயல்பட்டுக் கொண்டிருந்தது. அந்நகரில் 5000 மக்களிலிருந்து 6000 மக்கள் வரை ஒன்று கூடி தங்களுடைய பொது முடிவுகளை எட்டினர். தற்பொழுது சுவிட்சர்லாந்து நாட்டில் தான் நேரடியான மக்களாட்சி முறை தேசிய அளவில் இன்றளவும் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.

### 7.4. மறைமுக மக்களாட்சி

ஒவ்வொரு குடிமகனும் தன்னுடைய நாட்டிற்காக நேரடியாகவோ அல்லது சுதந்திரமாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாகவோ அரசாங்கத்தில் பங்கெடுத்துக் கொள்வது மறைமுக மக்களாட்சி எனப்படும்.

குடிமக்களின் விருப்பமே அரசாங்க அதிகாரத்தின் அடிப்படையாக அமைதல் வேண்டும். மேலும் அம்மக்களின் விருப்பமான தொடர்ந்து நேர்மையாக நடைபெறும் தேர்தல்களால், ஆளப்படுதல் வேண்டும். அனைவரும் எவ்வித பாகுபாடின்றி சமமாக தேர்தல்களில் மறைமுக வாக்களிப்பின் மூலமாகவோ அல்லது சுதந்திரமாக வாக்களிப்பதன் மூலமாகவோ தேர்ந்தெடுக்கும் முறையாகும். இந்திய குடியரசு இவ்வகையான மக்களாட்சிக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.



வாக்களிக்கும் முறை மக்களாட்சிக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கிறது. அது தலைவர்கள் சரியான பாதையில் செல்லவும், அவர்கள் மக்களுக்க பணியாற்றவும், எவ்வாறு அவர்கள் பணியாற்றினார்கள் என்பதை மக்கள் தெரிந்து கொள்ளவும் உதவுகிறது.

தேர்தல்கள் நடக்கும் காலகட்டத்தில் குடிமக்கள் அவர் களுடைய வாக்கை அவர்கள் விரும்பியவருக்கு வாக்களிக்கலாம். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மக்களின் பிரதிநிதிகளாவார்கள். அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை பதவி வகிக்க தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

அப்பிரதிநிதிகள் வாக்காளர் தொகுதிகளிலோ அல்லது வகுப்புவாரி பிரதிநிதித்துவ அடிப்படையிலோ அல்லது அவ்விரண்டும் சேர்ந்த பிரதிநிதித்துவ முறையில் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.

### 7.5. அரசியலமைப்பு மக்களாட்சிகள்

மக்களாட்சிகள் பெரும்பாலும் எழுதப்பட்ட அரசியலமைப்பை கொண்டோ அல்லது நாட்டின் மிக உயர்வான சட்டத்தை அடிப்படையாக கொண்டோ செயல்படுகின்றன. அச்சட்டங்கள் சட்டமியற்றுபவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து சட்டமியற்று வதற்கும் துணைபுரிகின்றன.

எழுதப்பட்ட அரசியலமைப்பில் மக்கள் தங்கள் உரிமைகளை அனுபவிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மக்களாட்சியின் உண்மையான வலிமையே அடிப்படை உரிமைகளையும், சுதந்திரத்தையுமே சார்ந்துள்ளது எனலாம்.

அடிப்படை உரிமைகளும், மக்களின் சுதந்திரமுமே மக்களாட்சி வெற்றிகரமாக செயல்பட உதவுகிறது. பல நாடுகளில் அடிப்படை உரிமைகள் மக்களை காப்பதற்காக அரசியலமைப்பிலேயே அதன் பகுதியாக எழுதப்பட்டிருக்கின்றன. இவ்வரசியலமைப்பே இதர அமைப்புகளும் சட்டங்களும் என்ன என்பதை எடுத்துக் காட்டுகிறது.

பெரும்பான்மை பலம் கொண்ட அரசாங்கம் அதன் விருப்பப்படி மாற்றங்கள் கொண்டு வருவதை தடை செய்வதற்காக ஏதேனும் ஒரு தனிப்பெரும்பான்மை அல்லது வாக்காளர்க் கருத்தக் கணிப்படிடையில் தான் திருத்தச் சட்டம் கொண்டு வர வேண்டுமென்று அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 7.6. மக்களாட்சியின் இன்றியமையாதவைகள்

பெரும்பாலான மக்களாட்சிகள் சுதந்திரமான, நியாயமான தேர்தல்கள் நடத்தி தங்களை உண்மையான மக்களாட்சி நாடுகள் என்று கூறுகின்றன. அவ்வகையான மக்களாட்சிக்கு தேவையான அடிப்படை கொள்கைகள் என சிலவற்றை அரசியல் அறிஞர்கள் தந்துள்ளனர்.

தேர்தல்களை மட்டுமே வைத்து ஒரு நாட்டை மக்களாட்சி நாடு என்று கூறிவிட முடியாது. மக்களாட்சி முறையை பின்பற்றும் நாடுகள் மற்றும் மக்களாட்சி பற்றிய கொள்கைகளை ஆராய்ந்து அதனடிப்படையில் கீழ்க்கண்டவை மக்களாட்சி முறைக்கு இன்றியமையாதவை என உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இவற்றின் அடிப்படையில் ஒரு நாடு மக்களாட்சிதானா மற்றும் அது இவற்றை பின்பற்றுகிறதா என்று தெரிந்து கொள்ளலாம்.

1. அரசாங்கத்தின் பொது முடிவுகள் மற்றும் அதன் கொள்கைகளின் கட்டுப்பாடு அந்நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் இருத்தல் வேண்டும்.
2. பிரதிநிதிகள் அவ்வப்போது நடக்கும் நியாயமான தேர்தல்களின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
3. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அரசியலமைப்பிற்கு உட்பட்ட தங்களுடைய அதிகாரங்களை செயல்படுத்த வேண்டும்.
4. வயது வந்த அனைவருக்கும் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை இருத்தல் வேண்டும்.



5. வயது வந்த அனைவரும் அரசாங்கப் பதவிகள் பெற உரிமை பெற்றிருக்க வண்ேடும்.
6. குடிமக்கள் அனைவருக்கும் தங்களுடைய அரசியல் சார்ந்த கருத்துக்களை அரசின் தண்டனையில்லாமல் வெளிபடுத்துவதற்கான உரிமையை பெற்றிருத்தல் வேண்டும்.
7. குடிமக்கள் அனைவருக்கும் அரசின் கொள்கைகளை தெரிந்து கொள்வதற்கு தேவையான பல்வேறு மாற்று செய்தி சாதனங்கள் வாயிலாக கொள்கைகளை தெரிந்து கொள்வதற்கான உரிமை பெற்றிருக்க வேண்டும்.
8. குடிமக்கள் சுதந்திரமாக கழகங்களை அமைப்பதற்கும், சங்கங்கள் அமைப்பதற்கும், அக்கழகங்களால் சுதந்திரமான அரசியல் கட்சிகளை தோற்றுவிப்பதற்கும், பல்வேறு தன்னலக் குழுக்களை அமைப்பதற்கும் உரிமை பெற்றிருத்தல் வேண்டும்.
9. அரசாங்கமானது தன்னாட்சி உடையதாகவும், அது வேறு எந்தவித வெளிகட்டுபாடுகளால் கட்டுப்படாமல் சுதந்திரமாக செயல்படுவதாகவும் இருக்க வேண்டும். (குறிப்பாக ஒப்பந்தங்கள் போன்றவை) மேற்கூறப்பட்ட தேவைகள் எந்த நாட்டில் பின்பற்றப்படவில்லையோ அந்நாடுகளை உண்மையான மக்களாட்சி என்று கூறமுடியாதென அரசியல் அறிஞர்கள் கூறுகிறார்கள்.

### மக்களாட்சியின் திறனாய்வு

குடிமக்களுக்கு மக்களாட்சியை பற்றி கற்பிப்பது, அக்கற்பிப்பவர்களால் மக்களுக்கு அவர்களை சுற்றியுள்ள சமூக, அரசியல் மற்றும் பொருளாதார நிகழ்வுகளை பற்றித் தெரிந்து கொள்ளவும் ஆராய்வதற்கும் உதவியாக இருக்கிறது.

மக்களாட்சி பற்றிய கல்வி குடிமக்கள் அரசாங்கத்தின் செயல் பாடுகளை பற்றி கடுமையாக விமர்சனம் செய்வது, அதிகாரத்தை எவ்வாறு அரசாங்கம் பயன்படுத்துகிறது, மற்றும் தேர்தல்களின் போது வெளியிடப்படும் வாக்குறுதிகளை அடுத்த தேர்தலுக்குள்

அரசாங்கம் செயல்படுத்தியுள்ளதா என்பதை பற்றி குடிமக்கள் தெரிந்து கொள்ள உதவுகிறது.

கற்றறிந்தவர்களின் பல்வேறு விமர்சனங்களால் ஒரு நல்ல கட்டமைப்பை உருவாக்குவது, அதன்மூலம் மற்ற கற்றறிந்தவர் களும் எவ்வாறு நல்ல விமர்சனங்களை அமைதியாக மக்களாட்சியில் செயல்படுத்துவது ஆகியவை மக்களாட்சி ஆய்வில் முக்கியமானது.

**மக்களாட்சி முறையிலான சமுதாயம்**

மக்களாட்சி என்பது அரசியலமைப்பில் சொல்லப்பட்டுள்ள விதிகள் மற்றும் வழிமுறைகளை ஆதாரமாகக் கொண்டு செயல்படும் அரசாங்கம் என்பதாகும். மக்களாட்சி முறையில் அரசாங்கம் ஒரு அங்கம் தான். அது பல்வேறு வகையான சமூக நிறுவனங்களையும், அரசியல் கட்சிகளையும், பல்வேறு கழகங்களையும் ஒன்றிணைந்து செயல்படுகிறது.

இவ்வாறு பல்வேறு சமூக, அரசியல், பொருளாதார நிறுவனங்கள் மக்களாட்சி முறையிலான சமூகத்தில் காணப் படுவதால் அதை நாம் பன்முதன்மை என்கிறோம். அந்நிறுவனங் கள் தொடர்ந்து செயல்பட அரசாங்கத்தின் சட்டத்தையோ, அதிகாரத்தையோ சார்ந்திருப்பதில்லை.

**மக்களாட்சியின் தூண்கள்**

- மக்கள் இறைமையை பெற்றிருத்தல்
- அரசாங்கம் மக்களின் விருப்பத்தின் அடிப்படையில் அமைக்கப் பெற்றிருத்தல்.
- பெரும்பான்மையோர் ஆட்சி
- மனித உரிமைகளை பாதுகாத்தல்
- சிறுபான்மையினரின் உரிமைகளை மதித்தல்
- சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்கள்



- சட்டத்தின் முன் அனைவரும் சமம்
- சட்டமுறைகளைப் பின்பற்றி நடத்தல்
- அரசியலமைப்பில் அரசாங்கத்தின் எல்லையை வரையறை செய்திருத்தல்.
- சமூக, அரசியல் மற்றும் பொருளாதார பன்மைத்துவம்

## 7.7 மக்களாட்சியின் நன்மைகள்

1. ஒவ்வொரு குடிமகனும் அரசாங்கத்தில் பங்கெடுத்துக் கொண்டு அரசாங்கம் சிறப்பாக செயல்பட ஒத்துழைப்பது மக்களாட்சியின் மிக பெரிய நன்மையாகும்.
2. மக்களாட்சியில் பொதுமக்கள் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார விசயங்களில் நன்கு சிறப்பாக விழிப்புடன் இருக்க இது வழிவகை செய்கிறது.
3. மக்களாட்சியில் பொதுமக்களிடையே தேசிய உணர்வை வளர்த்து மக்களை இரத்த புரட்சிகள் ஏற்படாவண்ணம் தடுக்கிறது.
4. மக்களாட்சி, நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக உள்ளது. மேலும் சமூக மாற்றங்கள் அமைதியான முறையில் நிகழ, மக்களாட்சி முறையில் இடமளிக்கிறது.
5. மக்களாட்சி குடிமக்களுக்கு பேச்சுரிமை, கூடுவதற்கான உரிமை, செயல்படுவதற்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது.
6. மக்களாட்சி, சுதந்திரம் மற்றும் சமத்துவம் மனித வளர்ச்சிக்கு உதவவதற்கு பாதுகாப்பளிக்கிறது.

## 7.8. மக்களாட்சியின் குறைகள்

1. மக்களாட்சி சில சமயங்களில் சிறுபான்மையினரின் கருத்துக்கள் நல்லதாக இருந்தாலும், பெரும்பான்மையினரின்

கருத்துக்களை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்துகிறது.

2. அரசியல் கட்சித் தலைவர்கள் அரசாங்கத்தில் பதவியில் இருப்பவர்கள், அரசியல் கட்சி உறுப்பினர்களையும் மக்களாட்சி கட்டுப்படுத்தும் அதிகாரம் பெற்றிருப்பது மக்களாட்சியின் ஒரு குறைபாடாகும்.

3. மக்களாட்சி தனிமனிதன் கருத்துக்களை பிரதிபலிப்பதை ஊக்கப்படுத்துவதில்லை.

4. மக்களாட்சி அதிக செலவினங்களை கொண்ட அரசாங்கத்தைக் கொண்டுள்ளது. தேர்தல்கள் அடிக்கடி நடைபெறுவதால் மக்களின் வரிப்பணம் வீணாகிறது.

5. மக்களாட்சியில் கையூட்டுகளையும், அதிகாரிகளின் சட்ட மீறல்களையும் தடுக்க முடிவதில்லை.

6. மக்களாட்சியில் அரசாங்கத்தில் ஒன்றும் அறியாத புதியவர்கள் அதிக அளவில் பங்கெடுத்துக் கொள்ள முடிகிறது. இது சாதாரண மக்கள் மற்றவர்கள் மேல் ஆதிக்கம் செலுத்தும் போக்கை ஏற்படுத்துகிறது.

### 7.9. நேரடி மக்களாட்சியின் கருவிகள்

மக்களாட்சி இருவகைப்படும் என்று ஏற்கனவே நாம் பார்த்தோம். அவைகளாவன.

1. நேரடி மக்களாட்சி 2. மறைமுக மக்களாட்சி

**நேரடி மக்களாட்சியின் கருவிகள் கீழ்வருமாறு**

1. தொடக்கவுரிமை
2. பொதுமக்கள் வாக்கெடுப்பு
3. திரும்ப அழைத்தல்



மேற்கண்ட கருவிகள் நேரடி மக்களாட்சி சிறப்பாக செயல்பட உதவும் கருவிகளாகும். இவை சுவிஸர்லாந்து நாட்டில் இன்றளவும் செயல்பட்டு வருகின்றன. நேரடி மக்களாட்சி முறையை பல்வேறு நாடுகளில் நடைமுறை படுத்த முனைந்தாலும் அவை வெற்றிகரமாக செயல்படவில்லை. இனி நேரடி மக்களாட்சியின் கருவிகளை பற்றி விரிவாக காண்போம்.

**1. தொடக்கவுரிமை**

தொடக்கவுரிமை என்பது நேரடி மக்களாட்சியின் ஒரு வழிமுறையாகும். அம்முறையில் வாக்காளர்கள் சட்டமன்றத்தில் மக்களுக்கு தேவையான சட்டங்களை இயற்றவில்லை என்று கருதினால் குடி மக்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கு அதைக் கொண்டு வந்து அதற்காக தேவைப்படும் சட்டமியற்ற விழைவது தொடக்கவுரிமை எனப்படும்.

தொடக்கவுரிமையை நடைமுறைப்படுத்த சில வழிமுறைகளும், குறைந்தபட்ச தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். அக்குறைந்தபட்ச தேவைகளின் மிக முக்கியமான ஒன்று. குறைந்த பட்சம் 50,000 வாக்காளர்கள் அரசாங்கத்திற்கு தங்களுடைய மனுவை செலுத்தி தங்களுக்கு தேவையான சட்டத்தை இயற்ற அரசாங்கத்தை வேண்டுவதாகும். அரசாங்கம் அம்மனுக்களை ஏற்றுக்கொண்டு சட்டமியற்றலாம் அல்லது மறுக்கலாம். ஆனால் அம்மக்களின் கோரிக்கைகள் பெரும்பான்மை மக்களின் ஆதரவை பெற மிக முக்கிய காரணியாக அமைந்து அரசாங்கம் சட்டமியற்ற விழையலாம்.

**2. பொதுமக்கள் வாக்கெடுப்பு**

பொதுமக்கள் வாக்கெடுப்பு என்பதும் நேரடி மக்களாட்சியின் ஒரு வழிமுறையாகும். இவ்வழிமுறையின்படி தேசிய பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட முக்கியமான மசோதா பொது மக்கள் வாக்கெடுப்புக்கு விட்ட பின்பே சட்டமாகும். அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட மசோதாக்களை குடிமக்கள் ஏற்கலாம் அல்லது

ஏற்க மறுக்கலாம். மக்கள் ஏற்றுக் கொண்டால் சட்டமாகும். மக்கள் வாக்கெடுப்பு முறையில் இரு வகைகள் உள்ளன.

அவையாவன. 1. கட்டாய வாக்கெடுப்பு 2. விருப்ப வாக்கெடுப்பு. இவ்விரு வகைகளிலும் சில வழிமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன.

**3. *திரும்ப அழைத்தல்***

மக்களாட்சியில் வாக்காளர்கள் அவர்கள் பிரதிநிதிகளை தேர்தல் மூலம் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். அவர்கள் தேசிய சட்டமன்றம், ஊராட்சி மன்றங்களுக்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அவர்களுடைய பதவிக்காலம் முடியும்வரை பதவி வகிக்க முடியும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தங்களுடைய கடமைகளையும் பொறுப்புக்களையும் சரிவர செய்யாமல் இருக்கலாம்.

அச்சமயங்களில் வாக்காளர்கள் அப்பிரதிநிதிகளின் செயல்பாட்டில் திருப்தியில்லை எனில் அவர்களை சரிவர செயல்பட கட்டாயப்படுத்த முடியாது. குடிமக்கள் அடுத்த தேர்தல்கள் வரை காத்திருந்து அப்பிரதிநிதிகளுக்கு பதில் மாற்று பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது. அவர்களை பதவி நீக்கம் செய்யவும் முடியாது.

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை பதவி நீக்கம் செய்து அவர்களுக்கு பதில் வேறொரு பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் முறை ‘திரும்ப அழைத்தல்’ எனப்படும். இம்முறை சில நாடுகளில் பின்பற்றப்பட்டு வருகின்றது. அவைகளில் மிக முக்கியமான நாடு சுவிஸ்சர்லாந்தும், அமெரிக்க ஐக்கிய நாடுகளும் ஆகும்.

## 7.10. இந்திய குடியரசில் அடிப்படை உரிமைகள்

சில உரிமைகள் அத்தியாவசிய தேவையாகும். அவ்வுரிமைகள் மனிதன் உயிர் வாழ்வதற்கு தேவையானவை ஆகும். இவ்வகையான உரிமைகள் தனிமனிதனின் சுதந்திரத்திற்கும், தனிமனிதன் நல்வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உதவுகின்றன.



இவ்வகையான உரிமைகள் அரசியலமைப்பில் இணைக்கப்பட்டுள்ளன. தற்கால எல்லா மக்களாட்சி நாடுகளிலும் எடுத்துக்காட்டாக இந்தியா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இவ்வகையான அடிப்படை உரிமைகள் குடிமக்களுக்கு அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ளன. இந்தியாவில் இவ்வகையான அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பின் பகுதி 111இல் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் அவ்வுரிமைகள் முழுமையாக இல்லை. சில நியாயமான தடைகள் அவ்வுரிமைகளை அனுபவிப்பதற்கு அரசியலமைப்பிலேயே கூறப்பட்டுள்ளன. இந்தியாவில் அடிப்படை உரிமைகளை நீதிமன்றத்தில் கோரி பெறலாம். அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பு விதி 12 முதல் 35 வரை கூறப்பட்டுள்ளன. உச்ச நீதி மன்றமும், உயர் நீதிமன்றங்களும் குடிமக்களின் அடிப்படை உரிமை பாதிக்கப்பட்டால் விதிமுறை நீதிப்பேராணை (writ) மூலம் அவைகளை செயல்படுத்த அதிகாரம் பெற்றுள்ளன. குடிமக்களின் அடிப்படை உரிமை பாதிக்கப்பட்டால் அவர்கள் நேரடியாக உயர்நீதிமன்றங்களுக்கோ, உச்ச நீதிமன்றத்திற்கோ சென்று நீதிப்பேராணை அடிப்படையில் குறைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

முதலில், சொத்துரிமை இந்திய அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த சொத்துரிமை 1978 ஆம் ஆண்டில் 44வது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் நீக்கப்பட்டது.

***சமத்துவ உரிமை***

மதம், இனம், சாதி அல்லது பிறப்பின் அடிப்படையில் உள்ள வேறுபாடுகளை இந்திய அரசியலமைப்பு தடை செய்கிறது. இந்திய அரசியலமைப்பு, எல்லோருக்கும் வேலை வாய்ப்பிலும், அரசாங்கத்தில் வேலை செய்யவும் சமமான உரிமையை உறுதி செய்துள்ளது. இச்சமத்துவ உரிமைகளில் சில விதிவிலக்குகள் உள்ளன. அவை பின்வருமாறு

இந்திய அரசியலமைப்பில் சமுதாயத்தில் நிலவிடும் ஏற்றத்தாழ்வை நீக்கும் பொருட்டு தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பிலும், பதவி உயர்விலும் இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

### சுதந்திர உரிமை

இந்திய அரசியலமைப்பு விதி 19 கீழ்காணும் ஏழு அடிப்படை உரிமைகளை குடிமக்களுக்கு உறுதி செய்கிறது.

அ. சுதந்திரமான பேச்சுரிமை மற்றும் கருத்துக்களை வெளியிடுவதற்கான உரிமை

ஆ. சுதந்திரமாக எவ்வித ஆயுதங்களில்லாமல் கூடுவதற்கான உரிமை.

இ. சுதந்திரமாக அமைப்புகளையும், சங்கங்களையும் அமைப்பதற்கான உரிமை.

ஈ. சுதந்திரமாக இந்தியா முழுவதற்கும் எப்பகுதிக்கும் செல்வதற்கான உரிமை.

உ சுதந்திரமாக இந்தியாவின் எந்த பகுதியிலும் குடியிருப்பதற்கும், வாழ்வதற்கும் உண்டான உரிமை.

ஊ. சுதந்திரமாக இந்தியாவில் எப்பகுதியிலும் (ஜம்மு மற்றும் காஷ்மீர் தவிர) சொத்துக்களை வாங்குவதற்கும், விற்பதற்கும், நிரந்தரமாக வைத்துக் கொள்ளும் உரிமை.

எ. சுதந்திரமாக எந்தவித தொழிலையும், வேலையையும், வியாபாரம் செய்வதற்கான உரிமை.

மேற்கூறிய அரசியலமைப்பு விதி 19இன் கீழ் இவ்வுரிமைகளை அனுபவிக்க சில நியாயமான தடைகளை அரசியல் சட்டம் விதித்துள்ளது.



### தனிமனித வாழ்க்கை பாதுகாப்பு மற்றும் தனிமனித சுதந்திர உரிமைகள்

தனிமனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி இந்திய அரசியலமைப்பால் உறுதி செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்பு விதி 21இன் கீழ் எந்தவொரு மனிதனும் அவனுடைய வாழ்க்கை மற்றும் அவனுக்குள்ள உரிமைகளை வரையறுக்கப்பட்ட சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள முறைகள் அடிப்படையில் மட்டுமே தடுக்க முடியும் என்று கூறுகிறது.

1. எந்தவொரு குடிமகனும் சட்டத்தை மீறினாலன்றி அவனை தண்டிக்க முடியாது.
2. எந்தவொரு குடிமகனுக்கும் சட்டத்தை மீறினால் சட்டத்தில் வரையறுத்துள்ள தண்டனைகளை மட்டுமே அவனுக்கு அளிக்க முடியும்.
3. எந்தவொரு குடிமகனும் ஒரே குற்றத்திற்காக இருமுறை தண்டிக்கப்படக் கூடாது.
4. எந்தவொரு குடிமகனும் குற்றம் செய்யப்பட்டதாக நிரூபிக்க அவன் செய்த குற்றத்திற்காக அவனுக்கு எதிராக சாட்சி சொல்ல வற்புறுத்த முடியாது.

### சுரண்டலுக்கு எதிரான உரிமை

அரசியலமைப்பு விதி 23, விபச்சாரம், கொத்தடிமை மற்றும் 14 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை தொழிற்சாலைகளிலோ, குவாரிகளிலோ மற்றும் விபத்து ஏற்படக் கூடிய தொழில்களிலோ வேலைக்கு அமர்த்துவதை தடை செய்கிறது.

### சமய உரிமை

இந்திய அரசியலமைப்பு குடிமக்கள் அனைவருக்கும் சுதந்திரமாக எந்த மதத்தையும் தழுவுவதற்கான உரிமையை அளித்துள்ளது. அவ்வுரிமைகளுக்கு அரசாங்கம் சில சமயங்களில்

எடுத்துக்காட்டாக, பொது அமைதி, உடல்நலம் போன்றவற்றிற்கு நியாயமான தடைகளை விதிக்கலாம். மேலும் எந்தவொரு குடிமகனும் எந்த மதத்தை பின்பற்றவோ, நேர்மையான வழியில் மதத்தை பரப்பவோ அரசியலமைப்பால் சுதந்திரமளிக்கப் பட்டுள்ளது.

இந்திய அரசியலமைப்பு அரசால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்களில் சமயம் சம்பந்தப்பட்ட கல்வியை தர தடை விதித்துள்ளது.

***கல்வி மற்றும் கலாச்சார உரிமை***

இந்திய அரசியலமைப்பு சிறுபான்மையினர் சுதந்திரமாக தங்களுடைய சமயத்தையோ, கலாச்சாரத்தையோ, மொழியையோ உரிமையை அளித்துள்ளது.

அனைத்து சிறுபான்மையினருக்கும் அவர் மத அடிப்படையிலோ, மொழி அடிப்படையிலோ இருந்தால் அவர்கள் தங்களுக்கென கல்வி நிறுவனங்களை அமைப்பதற்கும், அந்நிறுவனங்கள் எவ்வித வேறுபாடின்றி அரசு உதவி அளித்தவை அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

***அரசியலமைப்பு சம்பந்தப்பட்ட தீர்வுகள்***

அரசியலமைப்பு விதி 32ன் கீழ் அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று உச்சநீதி மன்றத்திடம் விண்ணப்பிக்க உரிமை இருக்கிறது. உச்ச நீதி மன்றம் நீதிப்பேராணைகள் பிறப்பிக்கும் அதிகாரம் பெற்றிருக்கிறது. உச்சிநீதிமன்றம் ஆட்கொணர்தல் (Habeas Corpus) செயலுறுத்தல் (Mandamus) தடைவிதித்தல் (Prohibition) தகுதி முறை வினவுதல் (Quo warranto) மற்றும் நெறிமுறை உறுத்தல் (Certiorari) போன்ற நீதிப்பேராணைகளை பிறப்பிக்கவும் அவைகளைப் பின்பற்ற வற்புறுத்தவும் அதிகாரமுடையது.



நீதிமன்றங்களால் நடைமுறைப்படுத்தப்படாத உரிமைகளுக்கு அர்த்தமில்லை. அம்பேத்கார் கருத்துப்படி அரசியலமைப்பின் 32 வது விதி அரசியலமைப்பின் இதயமும் உயிருமாகும்.

***உரிமைகளும் பாராளுமன்றமும்***

24வது அரசியலமைப்பு திருத்தச் சட்டப்படி, பாராளுமன்ற விதி 368ல் சொல்லப்பட்டிருக்கிற முறைகளைப் பின்பற்றி திருத்தச் சட்டம் கொண்டு வருவதன் மூலமாக அடிப்படை உரிமைகளை மாற்றவோ, திருத்தவோ, நீக்கவோ அதிகாரம் பெற்றிருக்கிறது.

***அடிப்படை உரிமைகளும் அரசு வழிகாட்டு நெறிகளும்***

25ம் மாற்றச்சட்டம் விதி 31C-யை அரசியலமைப்பில் புகுத்தியது. இவ்விதியின் படி வழிகாட்டு நெறிகளை நடைமுறைப்படுத்த பாராளுமன்றம் சட்டம் இயற்ற முடியும். இச்சட்டம் நீதிமன்றங்களின் அதிகாரம் மற்றும் பணி எல்லைக்குள் வராது. அரசியலமைப்பு விதிகள் 14, 19 மற்றும் 31 இச்சட்டத்தை பாதிக்காது.

42வது மாற்றுச்சட்டம் அடிப்படை உரிமைகளைக் காட்டிலும் வழிகாட்டு நெறிகள் முன்னுரிமை பெற்றவை என்றும் மேலானவை என்றும் மாற்றம் செய்துள்ளது.

## 7.11. அடிப்படை கடமைகள்

உலகிலுள்ள 50 நாடுகளின் அரசியலமைப்பில் அடிப்படைக் கடமைகள் பட்டியல் தரப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 30 நாடுகளின் அரசியலமைப்புகளில் உரிமைகளும் கடமைகளும் ஒரே அத்தியாயத்திலும் இதர நாடுகளில் தனித்தனி அத்தியாயங்களிலும் இவை தரப்பட்டிருக்கின்றன. இந்திய அரசியலமைப்பு பகுதி 4அ-ல் இக்கடமைகள் வருகின்றன. 1976ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 42வது மாற்றுச்சட்டம் 51 அ என்ற விதியைச் சேர்த்தது. இதன்படி 10 கடமைகள் உள்ளன.

*அவை வருமாறு*

1. அரசியலமைப்பில் சொல்லப்பட்டுள்ள அதன் நோக்கங்கள், நிறுவனங்கள், தேசியக் கொடி மற்றும் தேசிய கீதம் ஆகியவற்றுக்கு மரியாதை தந்து அதன்படி நடத்தல்.
2. தேசிய மற்றும் சுதந்திர போராட்டங்களின் உயர்ந்த நோக்கங்களை ஏற்று பின்பற்றுதல்
3. இந்தியாவின் இறைமை, ஒற்றுமை மற்றும் ஒருமைப் பாட்டையும் பாதுகாத்தல் மற்றும் நிலை நாட்டுதல்
4. நாட்டைப் பாதுகாத்தல் மற்றும் அவசியமான போது நாட்டுச் சேவை செய்தல்.
5. சமயம், மொழி, வட்டாரம் அல்லது குறுகிய பிரிவுகளைத் தாண்டி வந்து இந்திய மக்களிடையே சகோதரத்துவம், ஒன்றுபட்ட உணர்வு ஆகியவற்றை ஏற்படுத்துதல் பெண்களின் கண்ணியத்தைக் களங்கப்படுத்தும் பழக்கவழக்கங்களை தவிர்த்தல்.
6. நமது விலை மதிப்பற்றதும் பலவகைப்பட்டதும் தொன்றுதொட்டு வருவதுமான பண்பாடுகளை பாதுகாத்தல்.
7. விஞ்ஞான பூர்வமான உணர்வுகள், மனித நேயம் மற்றும் அறிவியல் ஆராய்ச்சி மற்றும் சீர்திருத்தங்களை ஏற்படுத்துதல்.
8. காடுகள், ஏரிகள், ஆறுகள், காட்டுவிலங்குகள் மற்ற உயிரினங்கள் உள்பட உள்ள இயற்கை சூழ்நிலைகளை பாதுகாத்து அவற்றை மேம்படுத்துதல்.
9. பொது உடைமைகளை பாதுகாத்தல் மற்றும் வன்முறையை விலக்குதல் மற்றும்.
10. முன்னேற்றப் பாதையில் நாடு முனைந்து சிறப்புகள் பெற தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் முயற்சிகள் மேற்கொள்ளுதல்.

மேலே தரப்பட்டுள்ள கடமைகளின் முக்கிய நோக்கம் மக்களுடைய மனப்பான்மை மற்றும் எண்ணம் ஆகியவற்றில்



மாறுதல்களை ஏற்படுத்தி நாடு அமைதியான வழிகளில் சமுதாய வளர்ச்சியைப் பெற வேண்டும் என்பதாகும்.

## 7.12. மானிட உரிமைகளும் மக்களாட்சியும்

மானிட உரிமைகள் பிரகடனம் குறிப்பிடுவதாவது, “மனிதர்கள் அனைவரும் பிறப்பால், கண்ணியத்தால் மற்றும் உரிமைகளால் சுதந்திரமானவர்கள். அவர்களிடம் காரண காரியங்கள் மற்றும் நியாய உணர்வு அடிப்படையில் எல்லோரும் சகோதர எண்ணத்துடன் செயலாற்ற வேண்டும் என்ற நோக்கம் இருக்கிறது”.

1949ம் ஆண்டு டிசம்பர் 10த் தேதி ஐக்கிய நாடுகள் கழகம் பொதுப் பேரவை மானிட உரிமைகள் பிரகடனத்தை அங்கீகரித்தது. இப்பிரகடனம் உலக முழுவதும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10ம் தேதி மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.

அந்த நாளில் மனிதர்கள் அனைவரும் சுதந்திரம் மற்றும் உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள் என்று கொண்டாடப்படுகிறது. இவ்வுரிமைகள் தனிப்பட்டோருக்கும் அரசுக்குமிடையேயுள்ள உறவை ஒழுங்குப்படுத்துகின்றன. தனிமனிதனுக்கு இழைக்கப்படும் அநீதியைக் காப்பாற்றுதல் அரசின் கடமையாகும். எல்லா மக்களும் அவர்களின் தரம் மதிப்பு ஆகியவைகளில் பிறப்பால் சமமானவர்கள். அவர்களுக்கு அத்தகைய பாதுகாப்பைப் பெற உரிமையுண்டு. இவையே மனித உரிமைகள் பற்றி உலகமுழுவதும் எழுந்துள்ள சட்டங்களுக்கும் சட்ட மற்றும் நீதிமுறைகளுக்கும் ஆதாரமாகும். மனித உரிமைகள் மூன்று வகைப்படும்.

1. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள். இவற்றில் உயிர் பாதுகாப்பு, பேச்சு, வாக்கு, தனிமனித பாதுகாப்பு மற்றும் ஒழுக்கம் ஆகிய உரிமைகள் அடங்கும்.
2. பொருளாதார சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகள். இவற்றில் கல்வி, உறைவிடம், நல்வாழ்வு மற்றும் வேலை ஆகியவைக்கான உரிமைகள்.
3. கூட்டு உரிமைகள் : சுயநிர்ணயம், அமைதி மற்றும் ஏற்றுக் கொள்ளத்தக்க சுற்றுச்சூழல் சம்பந்தப்பட்ட உரிமைகள்

**மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கான அவசியம்**

1. மனித ஊாமைகளை மதிக்கும் தேசீய சட்டங்களை இயற்றுதல். உம். கொடுமைப்படுத்துதல் இரக்கமற்ற கெடுதல்கள் செய்தலை தடுத்தல்.
2. தேசப்பாதுகாப்பு சம்பந்தமான சட்டங்கள் அடிப்படையில் கைது செய்யப்படுபவர்களுக்கு தேவைப்படும் வழக்குரைஞர் கள், துரிதமான விசாரணை, வழக்கு சம்பந்தப்பட்ட குற்றப்பத்திரிக்கைகள், சுதந்தரமான நீதிமன்றங்களுக்கான உத்திரவாதம் தருதல்.
3. பெண்கள், குழந்தைகள், அகதிகள், அடைக்கலம் விரும்புபவர்கள், சிறுபான்மையினர் மற்றும் ஒதுக்கப்பட்ட மக்கள் சம்பந்தப்பட்ட தேவைகளைக் கவனித்தல்.
4. தவறாக செலுத்தப்படும் அதிகாரத்திற்கு எதிரான தடைகள் மற்றும் சமநிலை ஏற்படுத்தல் அளவில்லாத அரசு அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் ஏற்பாடுகள்.
5. பன்னாட்டு மனித உரிமைகள் பாதுகாப்புத் தலங்களைத் தோற்றுவித்தல்.
6. மனித உரிமைகள் மற்றும் பாதுகாப்பு தேசப்பாதுகாப்புக்கு எதிராக இல்லாமல் இணைந்துள்ள நிலைமை. இவைகள் பன்னாட்டுச் சட்டத்திற்கும் பன்னாட்டு உரிமைகளுக்கும் உட்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படுதல்.

## வினாக்கள்

### பகுதி அ

I. **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்**

1. எத்தகைய முறையில் அரசாங்கத்தில் வாக்காளர்கள் மறைமுகமாக பங்கேற்கிறார்கள்?

   அ. நேரிடை மக்களாட்சி ஆ. முடியாட்சி

   இ. சிறுகுழுவாட்சி ஈ. பிரதிநிதித்துவ மக்களாட்சி



2. எது நேரிடை மக்களாட்சியின் கருவி அல்ல?

   அ. துவக்கம் ஆ. கெரிமாண்டரிங்

   இ. குடியொப்பம் ஈ. திரும்பப் பெறுதல்

II. **கோடிட்ட இடத்தை பூர்த்தி செய்க**

1. மக்களாட்சி மக்களுக்காக, மக்களால் நடத்தப்படும் ____________ அரசாங்கம் என்று விளக்கப்படுகிறது.
2. சிறுபான்மையினரின் உரிமைகள் ____________ பத்திரமாக இருக்கின்றன.

III. **கீழ்வருவன சரியா அல்லது தவறா என எழுதுக**

1. நேரிடை மக்களாட்சி மற்றும் சுவிட்சர்லாந்து இரண்டும் ஒன்றே.
2. சொத்துரிமை இந்தியாவில் அடிப்படை உரிமை.

### பகுதி ஆ

1. மக்களாட்சியை விளக்குக.
2. சர்வாதிகாரம் என்பதை விவரிக்க.

### பகுதி இ

1. நேரடி மக்களாட்சியின் அம்சங்களை விவரி.
2. அரசியலமைப்பு மக்களாட்சியை விளக்குக.

### பகுதி ஈ

1. பிரதிநிதித்துவ மக்களாட்சி முறையின் நிறைகள் மற்றும் குறைகளை விவரிக்க.
2. அடிப்படை உரிமைகள் மற்றும் அடிப்படை கடமைகள் பற்றி கட்டுரையொன்று எழுதுக.

அத்தியாயம் 8

# அரசியல் கட்சிகள்

## 8.1. அரசியல் கட்சிகளின் தோற்றம்

நாகரீகம் தோன்றிய காலத்திலிருந்து மக்கள் சமூக, கலாச்சார, பொருளாதார மற்றும் அரசியல் போன்ற பொதுவான நோக்கங்களுக்காக கூட்டாகச் சேர்ந்து பெரிய அமைப்புகளை ஏற்படுத்தி செயல்பட்டு வருகின்றனர். கட்சி என்பது கூட்டு வாழ்க்கைக்கான அமைப்பேயாகும். நிறுவப்பட்ட சமுதாயம் மட்டுமே கட்சி எனப்படும். அரசியல் கட்சி என்பது 200 ஆண்டுகட்குட்பட்ட ஒரு நவீன நிகழ்வாகும்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளை உருவாக்கியவர்களுக்கு கட்சி அமைப்பு முறையில் நம்பிக்கையில்லை. இதனுடைய தாக்கம் மிகவும் மோசமானதாகயிருக்குமென அவர்கள் எண்ணினார்கள். 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா, வடஅமெரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் தான் முதன் முதலாக கட்சியும், கட்சி அமைப்புகளும் ஏற்படுத்தப்பட்டன. அதன்பின்பு தான் மற்ற நாடுகளில் இவை முழுவீச்சில் ஏற்படுத்தப்பட்டன.

அரசியல் கட்சிகள் குடியாட்சி முறை பின்பற்றப்படும் நாட்டிற்கு மிகவும் அவசியமானவை. தற்போதைய உலகில் குடியாட்சிகள் பிரதிநிதித்துவ தன்மையை கொண்டிருக்கின்றன. இத்தகைய குடியாட்சி அமைப்புகளில் அரசியல் கட்சிகள் மக்களுக்கு அரசியலில் ஆர்வத்தை ஊட்டி பங்கேற்க கற்றுத்தருகின்றன.

## 8.2. கட்சி அமைப்பு முறை விளக்கம்

அரசியல் வாழ்க்கையில் தங்களுக்குள் சில கொள்கைகளையும், கோட்பாடுகளையும் ஏற்படுத்திக் கொண்டு நாட்டை வளர்ச்சிப்



பாதையில் கொண்டு செல்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பே கட்சி என்பதாகும்.

1. எட்மண்ட் பர்க் என்பவர் “தங்களது கூட்டு முயற்சியால் குறிப்பிட்ட சில கொள்கைகளின் மீது தேசிய ஆர்வத்தை உருவாக்கி ஒத்த கருத்தை ஏற்படுத்தும் மக்கள் கூட்டமைப்பிற்கே அரசியல் கட்சி” என குறிப்பிட்டுள்ளார்.
2. ஸ்டீஃபன் லீகாக் : குடிமக்கள் ஒன்று திரண்டு அரசியல் பிரிவுகளை ஏற்படுத்தி ஒன்றாகச் செயல்படும் கூட்டமே அரசியல் கட்சி எனப்படுகிறது.
3. கில் கிரைஸ்ட் : ஒத்த அரசியல் கருத்துக்களை செயல்படுத்தும் ஒரு மக்கள் கூட்டமைப்பு அரசியல் கட்சி எனப்படுகிறது.

## 8.3. அரசியல் கட்சிகளின் தேவை

ஒரு தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கம் அல்லது தேர்ந்தெடுக்கப்படும் அமைப்புகளுக்கு அரசியல் கட்சி என்பது மிகவும் அவசியம். மக்கள் மற்றும் அரசாங்கம், வாக்காளர்கள் மற்றும் பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்குமிடையே ஒரு உறவை ஏற்படுத்தும் பாலமாக அரசியல் கட்சிகள் செயல்படுகின்றன.

ஒரு அரசியல் முறையில் நாட்டின் சமுதாயத் தேவை மற்றும் குறிக்கோளை அடையும் வழிகாட்டியாகவும், எண்ணங்களையும், கருத்துக்களையும் வெளிப்படுத்தும் கருவியாகவும் அரசியல் கட்சிகள் செயல்படுகின்றன. இவை, சில சிறந்த கருத்துக்கள் மற்றும் அரசயில் கொள்கைகளை வழங்கி அரசியல் மதிப்பீட்டினை உயர்த்துகின்றன.

மேலும் மக்களுக்கு அரசியல் பாடம் கற்றுக் கொடுத்து சமுதாய பிரச்சினைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை ஒன்று திரட்டி அரசியல் மற்றும் தேர்தலில் பங்கேற்கச் செய்வதும், நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்காகவும் பாடுபடச் செய்வதே கட்சிகளின் பணியாகும்.

கட்சிகள் தலைமையை உருவாக்கும் நோக்கத்துடன் மக்களில் ஒரு சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பயிற்சியளித்து உள்ளாட்சியிலிருந்து சட்டமன்றம், பாராளுமன்றம் மற்றும் அமைச்சரவையில் பங்கேற்கும் அளவிற்கு அவர்களைத் தயார் செய்யும் நோக்கத்தையும் அரசியல் கட்சிகள் செய்கின்றன.

அரசியல் கட்சிகள் அரசியல் அதிகாரத்தை ஏற்றிச் செல்லும் வாகனங்களாகும். இவை கல்லாமை மற்றும் தீண்டாமை போன்ற சமுதாயக் கொடுமைகளை வேரோடு அழிக்கப் பாடுபடுவதுடன், பஞ்சம், வெள்ளம் போன்றவை மக்களைத் தாக்கும் பொழுது அவற்றிலிருந்து மக்களை கைதூக்கி விட்டு காப்பாற்றுவதற்காகப் பாடுபடுகின்றன. இவை அரசியலுக்காக மக்களை ஒன்று திரட்டி, ஆள் சேர்க்கும் பணியில் ஈடுபடுகின்றன. மேலும் இவை மக்கள் நலனுக்காக சமுதாய நல விழாக்களை நடத்துகின்றன.

## 8.4. கட்சிகளின் வகைகள்

கட்சிகளை அவைகளின் நோக்கம், கொள்கை மற்றும் தங்களின் லட்சியங்களையடையக் கடைபிடிக்கும் வழிமுறைகளைக் கணக்கில் கொண்டு நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவைகள் 1. பழமைவாதிகள் 2. மிதவாதிகள் 3. பிற்போக்குவாதிகள் 4. தீவிரவாதிகள் போன்றவையாகும். இவை தவிர, இடது சாரிகள் மற்றும் வலது சாரிகள் உள்ளனர். அடிப்படை மாற்றங்களையும், சீர்திருத்த சட்டங்களையும் அறிமுகப்படுத்த விரும்பும் கட்சிகள் இடது சாரிகள் என அழைக்கப்படுகின்றன.

மெதுவாக, நிதானமாக, மென்மையாக மாற்றங்களை வரவேற்பவர்கள் வலதுசாரிகள் எனவும் அழைக்கப்படுகின்றனர். சில சமயங்களில் ஒரே கட்சிக்குள் இடதுசாரிகள் மற்றும் வலதுசாரிகள் உள்ளனர். உதாரணத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (இடதுசாரி) மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி என இரு பிரிவு உள்ளனர் (வலதுசாரி).



பிறகட்சிகள் கீழ்க்கண்டவற்றினடிப்படையில் வரிசைப்படுத்தப் படுகின்றன.

1. அரசியல் கட்சிகளில், ஒரு கட்சி, இரண்டு கட்சி மற்றும் பல கட்சிகள் முறை ஆதிக்கம் செலுத்துகின்றன.
2. கட்சிகளின் அமைப்பில் உள்ள முக்கிய குணாதிசயங்கள் யாவையெனில், சில கட்சிகள், தலைவனையும் சில கட்சிகள் கொள்கைகளையும், சில அமைப்புகள் ஆர்வத்தையும் முன்னிலைப்படுத்தி செயல்பட்டு வருகின்றன.
3. கட்சிகள் தேசத்தின் எந்தெந்தப் பகுதியில் ஏற்படுகின்றனவோ அப்பகுதியின் செல்வாக்கைப் பயன்படுத்தி நாட்டிற்குள் ஊடுருவிப் பரவுகின்றன. இவை தேசிய கட்சிகள், மண்டலக் கட்சிகள் மற்றும் உள்ளூர் கட்சிகள் என செயல்படுகின்றன.
4. மௌரிஸ் துவேகர் என்பவர் தெரிவித்துள்ள நான்கு முனைகட்சி அமைப்பு அவை.

   கட்சியின் உட்குழு (caucus)

   உட்பிரிவு (the branch)

   அணு (cell) மற்றும்

   இராணுவம் (Militia) என்பவையாகும்.

**மக்கள் கட்சி (Mass Party)**

மக்கள் கட்சி என்பது கிளைவகையைச் சேர்ந்தது. இதில் யார் வேண்டுமானாலும் உறுப்பினராகலாம். இது மத்திய தலைமைக்கு உட்பட்டதாகும். இது நிரந்தரமான கட்சி.

இது ஆண்டுமுழுவதும் செயல்பட்டுக் கொண்டிருக்கும். இதன் கிளைகள் நாடு முழுவதையும் உள்ளடக்கி வெவ்வேறு பகுதி மக்களையும் சேர்த்திருப்பது இதன் பலமாகும்.

மேற்படி கிளைகள் கட்சியின் ஆண்டு மாநாட்டிற்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கின்றன. கட்சி மாநாடு, கொள்கையை உருவாக்கும் அமைப்பாக உள்ளது.

**மக்கள் கட்சிக்கு உதாரணம்**

1. ஆங்கிலேய தொழிலாளர் கட்சி (The British Labour Party)
2. ஜெர்மனியின் சமூக குடியரசுக் கட்சி (German Social Democratic Party)
3. இந்திய காங்கிரஸ் கட்சி (Indian National Congress)
4. பாரதிய ஜனதா கட்சி (Bharathia Janatha Party)

## 8.5. ஒற்றைக் கட்சி (Single Party System)

ஒற்றைக்கட்சி அமைப்பில் ஒரே ஒரு கட்சி தான் இருக்கும். இந்த நாட்டின் சட்டம் மாற்று கட்சிகளை அனுமதிக்காது. 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்ட ரஷ்யப் புரட்சியே ஒற்றைக்கட்சி அமைப்பு உருவாவதற்கு அடிகோலியது. இதற்கு உதாரணம் கம்யூனிஸ்ட் சீனா.

**நன்மைகள்**

1. வீண் விவாதங்களில் நேரத்தை வீணாக்காமல் அரசாங்கம் திறமையாக செயல்படும்.
2. உயர்ந்த தேசீய ஒழுங்குமுறையினருக்கும்.
3. அரசியல் எதிர்க்கட்சியினர் இருக்கமாட்டார்கள்.
4. அனைத்து துறைகளிலும் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும் வாய்ப்புண்டு.

**தீமைகள்**

1. கட்சிக்கும், அரசாங்கத்திற்கும் வேறுபாடு இருக்காது.
2. இதில் சட்டமன்றம் கொள்கை உருவாக்கும் அமைப்பாக இருக்கும். அங்கு மனம் திறந்த விவாதங்களுக்கோ, செயலாற்றும் தன்மைக்கோ இடமிராது.
3. இத்தகைய கட்சி ஆட்சி சர்வாதிகார ஆட்சிக்கும் ஏதேச்சதிகாரத்துக்கும் வழிவகுக்கும்.
4. மக்கள் இரக்கமற்ற முறையில் ஒடுக்கப்படுவார்கள்.



5. தனிமனித ஆளுமைக்கு இங்கு மதிப்பிராது.
6. மக்களால் எந்த உரிமையையும் அனுபவிக்க முடியாது.

## 8.6 இருகட்சி முறை

இரு கட்சிகள் இருக்கும். அதில் ஒன்று ஆளும் கட்சி, மற்றொன்று எதிர்கட்சி. இதற்கு உதாரணம்,

1. இங்கிலாந்து - இங்கு பழமைவாத கட்சி மற்றும் தொழிலாளர்கட்சி ஆகிய இருகட்சிகள் உள்ளன.
2. ஐக்கிய அமெரிக்க நாடுகள் **(USA)** - ஜனநாயகக் கட்சி மற்றும் குடியரசுக்கட்சி என்பன.

**நன்மைகள் :**

1. பாராளுமன்ற அரசாங்க முறையில் நிலையான ஆட்சியை கொடுக்கும்.
2. இரு கட்சி அமைப்பில் தான் உண்மையான இரு கட்சிமுறையை ஏற்படுத்த முடியும்.
3. கட்சிகள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளதால் மக்கள் கருத்தை உருவாக்குவது எளிதாகும்.
4. வாக்காளர்கள் இக்கட்சிகளின் கொள்கைகளையும், திட்டங்களையும் நன்கு அறிந்து கொண்டு அவர்களுக்கு பிடித்தமான கட்சியை தேர்ந்தெடுக்கலாம்.
5. எதிர்க் கட்சி சிறப்பாகப் பங்காற்ற முடியும். அரசாங்கத்திடம் உள்ள நிறை குறைகளை சுட்டிக்காட்ட முடியும்.

**தீமைகள் :**

1. அமைச்சரவை எதேச்சைதிகாரத் தன்மையை அதிகரித்து சட்டசபையின் கௌரவத்தைக் குறைக்கும்.
2. ஆளும் கட்சி கொடுங்கோன்மை ஆட்சி புரியும் நிலை ஏற்படும்.

3. சிறுபான்மையினரின் வெவ்வேறு வகையான ஆர்வங்கள் மற்றும் கருத்துக்கள் மறுக்கப்படும்.
4. கட்சி மற்றும் கட்சித் தலைவன் மீது ஒரு கண்மூடித்தனமான விசுவாசம் ஏற்படும்.

## 8.7 பலகட்சி அமைப்பு

சமுதாய அமைப்பில் ஏற்பட்ட பிளவுகளும் தேசிய அளவில் ஏற்பட்ட வேறுபாடுகளும் பலகட்சி முறை அமைப்பு உருவாவதற்குக் காரணம். இதில் இரண்டுக்கு மேற்பட்ட கட்சிகள் இருக்கும். இதற்கு இந்தியா மற்றும் பிரான்சு நாடுகள் உதாரணமாகும்.

**நன்மைகள்**

1. மந்திரி சபை எதேச்சதிகாரம் இருக்காது.
2. தனிமனித சுதந்திரம் அதிக அளவில் இருக்கும். பலவிதமான கருத்துக்கள் இக்கட்சிகளால் பிரதிபலிக்கப்படும்.
3. இம்முறையினால் வெவ்வேறு வகையான நலன்கள் பாதுகாக்கப்பட்டு அவைகளுக்கு போதிய பிரதிநிதித்துவம் கிடைக்கும்.
4. இம்முறையில் வாக்காளர்களுக்கு தங்கள் விருப்பப்படி முடிவெடுக்க அதிக அளவு வாய்ப்பு கிடைக்கும்.

**தீமைகள்**

1. நிலையான அரசாங்கம் இருக்காது.
2. அரசியல் கட்சிகளில் பலபிரிவுகள் உண்டாவதால் நாட்டில் குழப்பம் ஏற்படும்.
3. கட்சிகள் மக்களை எதிரி கூட்டங்களாகப் பிரிக்கும்.
4. எந்த மந்திரி சபையாலும் மக்களுக்கு எவ்விதமான நன்மையும் செய்ய இயலாது. கூட்டணி மந்திரிகள் குறுகிய காலத்திற்கே பதவியில் இருப்பார்கள்.
5. பணம் கொடுத்து ஓட்டுவாங்கும் முறை ஏற்பட்டு அரசியல் புனிதத்தைக் கொடுக்கும்.



## 8.8 தன்னார்வ அமைப்புகள்

அனைத்து சுதந்திர நாட்டிலும் மக்களின் பலவகையான ஆர்வங்களை வெளிப்படுத்தும் முகமாக பல தன்னார்வ அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கும். இவை தங்களுக்குள்ளும் அரசாங்கத்திற்கிடையிலும் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு செயல்படுகின்றன.

இத்தன்னார்வ அமைப்புகள் மக்களின் ஆர்வத்தை அதிகப்படுத்தி அரசியல் கட்சிகளுக்கு பக்கபலமாக இருப்பதுடன் அவற்றின் நோக்கத்தை நிறைவேற்றஉதவுகின்றன. இவை அரசியலில் அங்கீகாரம் பெற்ற சாதனமாகவும், வெளிப்படையாகவும் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டவை.

ஆனால்தன்னார்வ அமைப்புகள் அசாதாரனமானவையாக இருக்கும். இவை ரகசியமாக செயல்படும். இவர்கள் எதையும் ரகசியமாக திட்டம் தீட்டி செயல்படுத்துபவை. சிலசமயங்களில் இத்தன்னார்வ அமைப்புகள் பிறரால் ஏற்றுக் கொள்ளப்படாதவை யாகவும் இருக்கும்.

பேராசிரியர் ஃபைனர் என்பவர் இதனை 'பெயரிடப்படாத பேரரசு' எனவும் மற்றவர்கள் இதனை " கண்ணுக்குப் புலப்படாத அரசாங்கம்" எனவும் "அங்கீகாரமற்ற அரசாங்கம்" எனவும் குறிப்பிடுகின்றனர்.

தன்னார்வ குழுக்களைச் சேர்ந்தவர்கள் சமூக பொருளாதார மற்றும் அரசியல் நோக்கங்களுக்காக கூட்டம் சேர்ந்து அமைப்புகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். உதாரணமாக விவசாயிகள், தொழிற் சாலைகளில் பணிபுரியும் தொழிலாளிகள், வியாபாரிகள் மற்றும் வர்த்தகர்கள் போன்றோரும் மருத்துவ நிபுணர்கள், வக்கீல்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் போன்றோரும் பொது நோக்கங்களுக்காகப் போராடவும், தமக்குள் ஒத்தகருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும்

தங்களுக்குள் அமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டு செயல் படுகின்றனர்.

இவர்கள் பொதுமக்களிடம் சாதக கருத்தை உருவாக்குவார்கள். தங்களுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கட்சித்தலைவர்கள், அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகளுக்கு ஆதரவாக மூன்று வகைப்படும்.

1. சங்கம் சார்ந்த அமைப்புகள்
2. நிறுவனம் சார்ந்த அமைப்புகள்.
3. குறிப்பிட்ட காரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட தற்காலிக் அமைப்புகள்.

**1. சங்க அமைப்புகள்**

உதாரணம் : வர்த்தக அமைப்புகள் வியாபார அமைப்புகள், தொழிலாளர்கள் அமைப்புகள், சிறுகடை வியாபாரிகள் அமைப்புகள், மற்றும் வக்கீல் சங்கங்கள்.

**2. நிறுவன அமைப்புகள்**

உதாரணம் : சேவை அமைப்புகளான இராணுவம், காவல் துறை, சீரியல் பணி அதிகாரிகள், கல்வித்துறை ஊழியர்கள் அறிவியல் கூடம் மற்றும் பொதுநிறுவனத்துறை பிரிவுகள்.

**3. குறிப்பிட்ட முக்கிய காரணங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்புகள்**

தற்காலிக தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஏற்படுத்தப்படும் தன்னார்வ அமைப்புகள் அந்தத் தேவைகள் நிறைவேற்றப்பட்டவுடன் கலைக்கப்படும். உதாரணம், விஷால் ஹரியானா இயக்கம், தமிழ்நாட்டிற்கும், ஆந்திராவிற்கும் இடையேயுள்ள தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கவும், கர்னாடகா மற்றும் மகாராஷ்டிராவுக்கு இடையேயான எல்லை பிரச்சினை தீர்க்க ஏற்படுத்தப்பட்ட அமைப்புகள்.



**தன்னார்வ அமைப்புகளின் பணிகள்**

இவற்றின் பணியாற்றும் நடைமுறை அரசியல் அமைப்பு முறைகளுக்கேற்ப வேறுபட்டு கீழ்க்கண்ட 5 காரணிகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

1. அரசியல் நிறுவன அமைப்புகளின் தன்மை அல்லது வகை.
2. கட்சி அமைப்பு முறையின் இயல்பு.
3. தலைவர்கள் மற்றும் மக்களின் நடவடிக்கை மற்றும் அரசியல் பண்பாடு.
4. தன்னார்வ அமைப்பின் வகை மற்றும் பிரச்சினைகள்.
5. சம்பந்தப்பட்ட தன்னார்வ அமைப்புகளின் தன்மை மற்றும் வகை.

வெவ்வேறு வகையான கட்சி அமைப்புகள் வெவ்வேறு விதமான தன்னார்வ அமைப்பு செயல்பாடுகளை ஏற்படுத்துகின்றன. எந்நாட்டில் கட்சி அமைப்பு பலவீனமாக உள்ளதோ அந்த நாடுகளில் தன்னார்வ அமைப்புகள் தாங்களாக செயல்படுகின்றன. சில நாடுகளில் இந்த அமைப்புகள் அரசியல் கட்சிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்துள்ளன.

தன்னார்வ அமைப்புகளின் பணி நாட்டின் பொருளாதார பண்பாட்டு அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. ஒவ்வொரு தன்னார்வ அமைப்பும் அதன் இயல்பு மற்றும் குணாதிசயங் களுக்கேற்ப தங்களது அணுகுமுறை மற்றும் பிரச்சினைகளைக் கையாளும் திறமை ஆகியவற்றை ஏற்படுத்திக் கொள்கிறது.

தன்னார்வ அமைப்புகளால் சட்டப் பூர்வமான மற்றும் சட்டத்திற்குப் புறம்பான விஷயங்களுக்காகப் பணம் பயன்படுத்தப் படுகின்றன. அரசியல் நடவடிக்கைகளில் மக்கள் தொடர்பை அதிகப்படுத்துவதும், பிரச்சினைகளைப் பிரபலப்படுத்துவதற்கு மீடியாக்களைப் பயன்படுத்துவதும் மிகவும் அவசியமானதாகும். பலவீனமான மனம் கொண்ட அதிகாரிகள், மந்திரிகள் அரசியல்

கட்சிகள் மற்றும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு லஞ்சம் கொடுப்பது தெரிந்த விஷயமாகும்.

தன்னார்வ அமைப்புகள் மக்களின் நலனுக்காக அதாவது அமைதிக்காகவும், ஆயுதக்குறைப்பு, சுற்றுப்புறசூழல் பாதுகாப்பு, பிரிவினைவாத எதிர்ப்பு ஜாதி சமத்துவம், மனித உரிமை மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றுதல் போன்றவற்றை காப்பதற்கான இவர்கள் வித்தயாசமான அணுகுமுறையைக் கடைபிடிக்கின்றனர். இவர்கள் இரக்கம், கருணை, நல்ல உணர்வு ஆகியவற்றைப் பயன்படுத்தி அனைத்து கட்சிகளிடமும் ஒற்றுமையை ஏற்படுத்தி பொதுமக்களிடம் நல்ல கருத்தை உருவாக்குவதற்காகப் பாடுபடுகின்றனர்.

சுருங்கக் கூறின் அரசியல் கட்சிகளைப் போல் அல்லாமல் தன்னார்வ அமைப்புகள் அதிகாரத்தைக் காப்பற்றுவதற்காகப் பாடுபடுவதில்லை. அவர்களின் நோக்கம் அளவானதாகவும், குறிப்பிடத்தக்கதாகவும் இருக்கும். குடியாட்சி நன்கு செயல்படுவதற்குத் தேவையான தொடர்புகளை இவர்கள் ஏற்படுத்தித் தருகின்றார்கள்.

## 8.9 பொதுமக்கள் கருத்து

நவீன ஜனநாயக ஆட்சியில் மக்கள் கருத்து மிகவும் முக்கியமான பங்காற்றுகிறது. ஜனநாயகம் என்பது மக்களுக்காகவும், மக்கள் கருத்தினடிப்படையிலும் ஒப்புதலின் பேரிலும் ஏற்படுத்தப்படுவது என விவாதிக்கபடுகிறது.

சர்வாதிகார ஆட்சியில் கூட மக்கள் கருத்துக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. மக்கள் கருத்து என்பது, ஒரு பிரச்சினையின் மீது ஒரு குழு உறுப்பினர்கள் எண்ணங்களின் வெளிப்பாடேயாகும். இந்தக் கருத்து தேர்தலின் போதும், முறையான சட்டம் இயற்றும் போது கொள்கை முடிவெடுக்கும் போதும் வெளிப்படும்.



### பொதுமக்கள் கருத்தின் முக்கியத்துவம்

பொதுமக்கள் கருத்து என்பது நவீன காலத்தில் ஒதுக்க முடியாத ஒரு மிகப் பெரிய சமூக மற்றும் பொருளாதார சத்தியாகும். அனைத்துக் கட்சிகளும் மக்கள் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன.

மக்கள் கருத்தை உருவாக்குவதற்காக செலவழிக்கப்படும் பணம் அவர்களுக்கும் நாட்டிற்கும் நன்மை தருவனவாகவே யிருக்கும் என்று கருதப்படுகிறது.

ஒரு அரசாங்கத்தின் வெற்றி மக்களின் நன் மதிப்பைப் பொறுத்தே அமைகிறது. மக்களின் விழிப்புணர்ச்சியே வெற்றிகரமான குடியரசை ஏற்படுத்தும். மக்கள் கருத்து ஆளுபவர்களின் அதிகாரத்தை அதிக அளவில் கட்டுப்படுத்துகிறது.

மக்கள் கருத்துக்கு எதிராக எடுக்கப்படும் தீர்மானங்கள் அந்தக்கட்சிக்கும், அரசாங்கத்துக்கும் கேடு விளைவிப்பதாக இருக்கும்.

### மக்கள் கருத்துக்குத் தேவையான சூழ்நிலைகள்

1. மக்களின் சிந்தனைத்திறன்.
2. தேசியப் பிரச்சினைகளில் மக்களுக்குள்ள ஆர்வம்.
3. குழுக்கள் அமைத்தல்.
4. அரசியல் தலைவர்களின் வழிகாட்டுதல்.
5. எழுத்தாளர்களின் பங்கு.
6. சமூக ஆர்வம் மற்றும் ஒற்றுமையாக இருத்தல்.

### பொதுமக்கள்கருத்து - பகுத்தாராய்தல்

மேற்கத்திய நாடுகளுக்கும், பின்தங்கிய நாடுகளுக்குமிடையே பொதுமக்கள் கருத்தில் மிகப்பெரிய வேறுபாடுகள் உள்ளன. மேற்கத்திய மக்கள் மிகவும் படித்தவர்கள். எனவே அவர்களிடம் ஒரு உறுதியான கருத்தை மிகச் சுலபமாக விதைக்க முடியும்.

ஆசியா, மற்றும் ஆப்பிரிக்கா போன்ற பின்தங்கிய நாடுகளில் இது முடியாது.

இந்தியாவில் அதிக அளவு மக்கள் கிராமங்களில் தான் வசிக்கிறார்கள். இவர்கள் போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்களிலிருந்து தனிமைப் படுத்தப்பட்டதால் தங்களுக்கென்று ஒரு கருத்தை அவர்களால் ஏற்படுத்திக் கொள்ள இயலவில்லை.

பொதுவாக மக்கள் கருத்து என்பது இந்தியாவில் பெரும் நகரங்களில் தான் தோன்றும். எனவே, அரசியல் கட்சிகள் தங்கள் கவனத்தை நகரங்களின் மீது செலுத்தி கிராமங்களைப் புறக்கணித்துவிடுகின்றன. தேர்தல் நேரங்களில் மட்டும் இவர்கள் கிராமங்களுக்குச் சென்று தங்கள் கருத்துக்களை மக்கள் மீது திணிப்பர். இதனை மக்களும் கண் மூடித்தனமாக ஏற்று செயல்படுவார்கள்.

இந்தியாவைப் பொறுத்தவரை ஆட்சியாளர்கள் அவர்களின் நல்ல குணங்களை வைத்துத் தீர்மானிக்கப்படாமல், ஜாதி, மதம் போன்ற பிற விஷயங்களைக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றனர். இந்த நிலை மாற்றப்பட வேண்டும். மக்கள் கருத்து ஒரு அரசாங்கத்தின் மீது எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்துகிறதோ அந்த அளவிற்கு அது முக்கியத்துவம் பெறுகிறது.

## 8.10 மக்கள் தொடர்பு சாதனங்களின் பங்கு

சினிமா என்பது மக்களுக்குப் படிப்பினையையும், பொழுது போக்கினையும் கொடுக்கும் ஒரு பாரம்பரியம்மிக்க சாதனமாகும். இது நுட்பமான முறையில் மக்களிடம் பொதுக் கருத்துக்களை உருவாக்கக் காரணமாக உள்ளது. இது ஒரு மிக சக்தி வாய்ந்த மக்கள் தொடர்பு சாதனமாகும்.

மின்னணு புரட்சியானது நாட்டின் மூலை முடுக்கு களிளெல்லாம் ஊடுருவிப் பாய்ந்துள்ளது. ரேடியோ, டெலிவிஷன் மற்றும் வி.சி.ஆர் போன்றவை செய்திகள், முக்கியதகவல்கள், விளம்பரங்கள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களை



பலதரப்பட்ட மக்களுக்கும் கொண்டு செல்லும் மிகப்பெரிய சாதனங்களாகவுள்ளன.

ஒலி-ஒளி அமைப்பானது படிப்பறிவற்றவர்களுக்குக் கூட அதன் தாக்கத்தை எற்படுத்துகிறது. கடமைகள், வீடுகள், காய்கறி அங்காடிகள் மற்றும் தெரு முனைகள் ஆகிய இடங்களில் இந்தத் தொலைத் தொடர்பு சாதனங்கள் இருப்பது தொடர்பு அமைப்புகள் மற்றும் சமுதாய வாழ்க்கை ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தி பெரிய மாற்றங்களை உண்டாக்குகின்றன.

பொதுக்கருத்தை உருவாக்குவதிலும், தகவல்களின் அளவை அதிகரிப்பதிலும், விழிப்புணர்ச்சியை விரிவாக்குவதிலும், புதிய அணுகுமுறைகளையும் கருத்துக்களை உருவாக்குவதிலும் மின்னணுசாதனம் மறைமுகமாகவும் நேரடியாகவும் உதவி வருகிறது.

### பத்திரிகை சாதனம்

தினசரி பத்திரிகைகள், வாரஇதழ்கள் மற்றும் மாதஇதழ்கள் போன்றவை அச்சு சாதனங்களாகும். இவை பொதுக்கருத்தை உருவாக்கி அதில் தாக்கத்தை ஏற்படுத்துவதில் சக்தி வாய்ந்த தனி ஏஜென்ஸிகளாகச் செயல்படுகின்றன. பேசுமளவில் வார்த்தைகளைவிட எழுதப்படும் எழுத்துக்கள் மக்களிடம் புனிதத்தன்மை வாய்ந்ததாகவும், சட்டப் பூர்வமானதாகவும் கருதப்படுகின்றன.

செய்தித் தாள்கள் தினமும் விஷயங்களை பல இடங்களுக்குப் பரவச் செய்வதுடன் உண்மை மற்றும் தகவல்களுடன் பத்திரிகை தலையங்கத்துடன் கூடிய விமர்சனங்கள், ஆய்வாளர்கள் மற்றும் வல்லுநர்களின் கருத்துக்கள் போன்றவை பொதுக் கருத்தை உருவாக்குவதற்கு தினமும் நல்ல தீனியாக விளங்குகிறது.

## 8.11 தேர்தல் நடத்துவதற்கான அமைப்பு

சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல் நடத்தும் முறைமைக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் தந்தை

எனப்படுபவர்கள் அதிமுக்கியத்துவம் கொடுத்தனர். எங்கு நேர்மையான சுதந்திரமான தேர்தல் நடக்கிறதோ அதுதான் ஒரு சிறந்த ஜனநாயக அமைப்பின் இருப்பிடமாகும் என அவர்கள் கருதினார்கள்.

எனவே, அதன்படி மேற்பார்வையிடிவதற்கும், வழிபடுத்து வதற்கும், மற்றும் கட்டுக் கோப்புடன் தேர்தல் நடத்துவதற்காகவும் தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டது. அந்தந்த நேரத்திற்குத் தகுந்தமாதிரி வாக்காளர் பட்டியல்களில் திருத்தம் செய்வதும், பட்டியல்கள் தயார் செய்வதும் இந்த ஆணையத்தின் பணியாகும்.

இவ்வாணையம் பாராளுமன்றம், சட்டமன்றம், குடியரசுத் தலைவர் குடியரசு துணைத் தலைவர் ஆகியோரைத் தேர்ந்தெடுப்பதற்கும் தேர்தல் நடத்துகிறது.

**தேர்தல் ஆணையம்**

இவ்வாணையம் தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் இதர சில தேர்தல் ஆணையர்கள் அடங்கியதாகும். இவ்வாணையத்தின் உறுப்பினர்களை தேவையான போது குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

இவர்கள் குடியரசுத்தலைவரால் 5 ஆண்டுகளுக்கு நியமிக்கப்படுகிறார்கள். இவர்களது பணியும், பணிக்காலமும் பாராளுமன்றத்தால் நியமிக்கப்படுகிறது. இவர்கள் பணியிலிருக்கும் போது பணி விதிகளை மாற்ற இயலாது.

உச்ச நீதிமன்ற நீதிபதியைப் பதிவியிலிருந்து எடுக்க எந்த விதியைக் கடைபிடிக்கப்படுகிறதோ, அதே விதியின்படிதான் தலைமை தேர்தல் ஆணையரையும் நீக்க முடியும் எனவே, நினைத்தவுடன் இவரை பதிவியிலிருந்து நீக்கமுடியாது. இவரை இவை வரம்புமீறும் ஆட்சியாளர்களிடமிருந்து பாதுகாக்கிறது.

ஒவ்வொரு மாநிலத்திலும் தேர்தல் ஆணையத்தின் கிளைகளிருக்கும் இதற்கு அந்தந்த மாநிலங்களை கலந்தாலோசித்து



ஒரு முதன்மைத் தேர்தல் அதிகாரியை தேர்தல் ஆணையர் நியமிப்பார். அவர்கள் மாநிலங்களில் தோதல் நடத்த நிலையான தேர்தல் அதிகாரிகளாகவும் அமைப்பாகவும் செயல்படுவார்கள்.

தேர்தல் ஆணையத்தில் பணியாற்றுவோர் எண்ணிக்கை குறைவாக இருக்கும். ஆனால் தேருதல் காலங்களில் தேவையான அதிகாரிகளும், பணியாளர்களும் பணியில் அமர்த்தப்படுவர். (உ.ம்) அரசுத்துறைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள்.

**தேர்தல் ஆணையத்தின் அதிகாரங்களும் பணிகளும்**

இந்திய தேர்தல் ஆணையத்திற்கு பரந்த அதிகாரமும் பணிகளும் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகள்

1. தேர்தல் சமயங்களில் வாக்காளர் பட்டியல் தயார் செய்தல், திருத்தம் செய்தல், அப்போதைக்கப்போது சரிசெய்தல் போன்றவை.
2. தேர்தல் மற்றும் உபதேர்தல் நடத்துதல் மற்றும் கண்காணித்தல்.
3. பாராளுமன்றம் மற்றும் சட்டமன்ற தேர்தலுக்கு வாக்காளர் தொகுதியை பிரித்துத்தருவதும், அவர்களுக்கு தொகுதியை ஒதுக்கித் தருவதும்.
4. தேர்தல் திட்டம் வகுத்துக் கொடுத்தல், வேட்புமனுதாக்கல் செய்வதற்கும் தேதிகுறித்துக் கொடுப்பது, தேர்தலுக்கான ஆயத்தம் செய்வது தேர்தல்முடிவை அறிவிக்கும் தேதி போன்றவற்றைத் தீர்மானிப்பது.
5. குடியரசுத்தலைவர் மற்றும் ஆளுனருக்கு (அந்தந்த மாநிலங்களிலுள்ள) தேர்தல் நிலவரம், வேட்பாளர்களின் தகுதியின்மை போன்றவற்றைத் தெரிவிப்பதும்.
6. தேர்தல் நடைபெறும் நேரங்களில் வேட்பாளர்கள் மற்றும் வாக்காளர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டு மென்பதற்கான நடத்தை விதிகள் தயார் செய்து அறிவித்து

அவற்றை நடைமுறை படுத்த வற்புறுத்துவது. தேர்தல் செலவுகளுக்கு வரம்பு ஏற்படுத்திக் கொடுப்பது மற்றும் வேட்பாளர்கள் தேர்தல் செலவு பற்றிய அறிக்கை கொடுக்கும் பொழுது அவைகளை சரிபார்த்தல்.

தேர்தலில் போட்டியிடும் கட்சிகளுக்கு சின்னம் ஒதுக்கித்தருதல் அவர்கள் வானொலி மற்றும் தொலைக்காட்சியைப் பயன்படுத்தவேண்டிய நேரத்தைக் குறித்து மதிப்பிடுவது தீர்த்து வைப்பது.

## 8.12 தேசியக் கட்சி

பூகோளப் பிரிவு மற்றும் பரப்பு அடிப்படையில் நான்கு வகையான நட்சிகள் உள்ளன, அவை

1. தேசிய கட்சிகள்.
2. மாநிலகட்சிகள்.
3. ஒரு சில மாநிலங்களுக்கு மட்டும் தொடர்புடைய கட்சிகள் **(trans regional parties).**
4. உள்ளூர்கட்சிகள்.

1954-ல் நடந்த லோக்பாவிற்கான பொதுத்தேர்தலின்போது குறைந்தது நான்கு மாநிலங்களிலாவது 4 சதவீதத்திற்குக் குறையாத வாக்குகள் பெற்ற சில கட்சிகளை தேசியக் கட்சிகளாக இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

**அவை**

1. காங்கிரஸ்கட்சி.
2. பாரதிய ஜனதா கட்சி.
3. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.ஐ)
4. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (சி. பி. எம்)



## 8.13 மாநில கட்சி (Regional Party)

இந்தியாவில் மாநிலக்கட்சிகள் அந்தந்த மாநில அடிப்படையிலும், குடியாட்சிமுறைப் பண்பாடு. சமூக பொருளாதார மற்றும் குடிமக்களிடையே நிலவும் பிரிவுகளுக்கு ஏற்ப தோன்றியிருக்கின்றன.

(உ.ம்) இந்தியாவில் அஸ்ஸாம், நாகலாந்து, மிசோரம், பஞ்சாப், ஒரிசா, ஆந்திரா மற்றும் தமிழ்நாடு.

இவை ஒவ்வொன்றும் தனக்கென சில திட்டங்களையும், மாநில தன்னாட்சியை நிறைவேற்றும் எண்ணமும் கொண்டவை. இந்தியா போன்ற கூட்டாட்சி நாடுகளில் தான் வேற்றுமையில் ஒற்றுமையை பார்க் இயலும்.

**முதல்வகை**

இந்தியாவில் மூன்று வகையான மாநிலக் கட்சிகள் உள்ளன. இவற்றில் முதலாவது காங்கிரஸ் அதிருப்தியாளர்கள் தோற்றுவித்ததாகும்.

இவைகள் காளான்கள் போல் மறைந்து விட்டன. தற்காலிகப் பிரச்சினைகளுக்காக தோன்றியவை இவை, பேரம் பேசுவதற்கான சக்தியை இவை பெற்றன. (உ.ம்.) வங்காள காங்கிரஸ், கேரளா காங்கிரஸ், உட்கல் காங்கிரஸ், தெலுங்கானா பிரஜா கமிட்டி.

**இரண்டாவது வகை**

மலைவாழ் ஜாதியினர் கட்சிகள் மலைவாழ்மக்களின் ஒற்றுமை அடிப்படையில் மத்திய அரசிடமிருந்து தங்கள் இனத்தவருக்கு அதிக சலுகைகள் பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்டவை. இவைகள் தங்களின் முழு சுதந்திரத்திற்காகப்பாடுபட்டன. இந்த இயக்கங்களின் செயல்பாடு ராணுவ இயக்கங்கள் போலிருக்கும். (உம்) நாகா தேசியக் குழு, மிசோரம் தேசிய முன்னனி, காரோ தேசியக் குழு, மணிப்பூர் தேசிய மக்கள் கட்சி போன்றவை.

*மூன்றாவது வகை*

தம்ழ்நாடு, ஆந்திரா, பஞ்சாப், ஜம்மு காஷ்மீர் மற்றும் அஸ்ஸாம் போன்ற பெரிய மாநிலங்களில் ஏற்பட்டவை. இக்கட்சிகள் மிகப்பெரியவை. பலகட்சி முறையைக் கொண்ட இந்தியாவில் கட்சிகள் மிகப் பலம் வாய்ந்தவைவையாக அமைக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு அதிக அளவில் வாக்காளர்கள் உள்ளதால் தங்கள் கட்சி உறுப்பினர்களை லோக்சபா மற்றும் ராஜ்யசபாவிற்கு தேர்ந்தெடுத்து அனுப்பி பாராளுமன்றத்தில் உள்ள ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையில் சமநிலையாளர்களாக செயல்படுகின்றனர். இதற்கு (உம்.) தி.மு.க, அ.இ.அ.தி.மு.க, அசாம் கணபரிஷத், பிஜூ ஜனதா தளம், திரிணாமுல் காங்கிரஸ்.

## 8.14 ஜாதிக்கட்சி

பொதுவாக மக்கள் அவர்கள் வசிக்கும் பகுதி, தொழில், ஜாதி, சமுதாயம், மதம், மற்றும் இனம் ஆகியவற்றின் அடிப்படையில் பிரிக்கப்படுகின்றனர். சிலசமயங்களில் அவர்களின் உடல் நிறத்தினடிப்படையிலும் பிரிக்கப்படுகின்றனர்.

இந்தியாவைப் பொறுத்தவரை மக்கள் பல்வேறு குழுக்களைச் சேர்ந்தவர்களாகவுள்ளனர். அதில் ஜாதி ஒருவகை, இத்தகைய பிரிவு இந்தியாவில் மட்டும்தான் உள்ளது. இந்தியாவில் பலவகையான ஜாதி அமைப்புகள் உள்ளன. இந்து மதத்திலுள்ள சாதிப் பிரிவினை வாதம் தான் இதற்குக் காரணம்.

பொதுவாக பெரிய கட்சிகள் ஜாதியைப் பொருட்படுத்து வதில்லை. இருப்பினும் தேர்தல் சமயங்களில் ஜாதியும் முக்கிய பங்குவகிக்கிறது. தங்கள் ஜாதியைச் சார்ந்த தலைவர்களையும், கட்சியையும் தான் மக்கள் ஆதரிக்கின்றனர்.

தங்கள் ஜாதியைச் சார்ந்த மக்களுக்கு அரசிடமிருந்து அதிக சலுகைகளைப் பெற்றுக் கொடுக்கவும், பாதுகாப்புக் கொடுப்பதற்குமே இத்தகைய ஜாதிக் கட்சிகள் ஏற்படுத்தப் படுகின்றன. தாம் விரும்பும் சலுகைகளைப் பெருவதற்காக இத்தகைய ஜாதிக்கட்சிகள் பெரிய கட்சிகளின் ஆதரவைப் பெறவிழைகின்றன.



## 8.15 வகுப்புவாதக் கட்சி

இனஉணர்வுகள் மற்றும் இனநம்பிக்கையின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டவை ஏற்படுத்தப்பட்டவை தான் வகுப்புவாதக் கட்சிகள். இவைகளும் சாதிக் கட்சிகளைப் போன்று குறிப்பிட்ட இனமக்களைக் கொண்டவையாகும்.

இவற்றின் நோக்கம் தம் இனமக்களுக்கு பாதுகாப்பு மற்றும் அரசிடமிருந்து தம்இனமக்களுக்கு அதிக சலுகைகள் பெறுவதுமாகும். இவர்கள் சுயலாப விரும்பிகளாகவும் இருப்பர்.

இக்கட்சிகள் பொதுவாக மற்ற கட்சிகளின் எண்ணங்களுக்கு எதிராகவே செயல்படுகின்றன. எனவே, ஜாதி, மத, நிற உணர்வில்லாத பிறகட்சிகள் இவர்களுக்கு ஆதரவு கொடுப்பதில்லை. இத்தகைய கட்சிகள் தேசிய உணர்வுகளுக்கு விரோதமாகச் செயல்படுவதால் நாம் இவற்றை ஆதரிக்கக்கூடாது.

### வினாக்கள்

### பகுதி - அ

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. இந்திய தேசீயக் காங்கிரசை தோற்றுவித்தவர்

அ) எ.ஓ. ஹியூம் ஆ) அன்னிபெசண்ட்

இ) மகாத்மா காந்தி ஈ) நேதாஜி

2. எப்போது அ.இ.அ.தி.மு.கழகம் தோற்றுவிக்கப்பட்டது?

அ) 1948 ஆ) 1972

இ) 1977 ஈ) 1980

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. இந்தியா ———— கட்சி முறையைப் பெற்றிருக்கிறது.
2. தெலுங்கு தேசம் ———— கட்சியாகும்.

**III. கீழ்வருவன சரியா அல்லது தவறா என எழுதுக.**

1. தேசியத் தேர்தல்கள் தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படுகின்றன.
2. பொதுக்கருத்தை உருவாக்குவதில் பொதுக்கருத்து சாதனங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன.

**பகுதி - ஆ**

1. அரசியல் கட்சியின் தேவையை விவரிக்க.
2. வகுப்புவாதக் கட்சியின் தீமைகளை விளக்குக.

**பகுதி - இ**

1. இருகட்சி முறையின் நிறைகள் மற்றும் குறைகளை விவாதிக்க.
2. மக்கள் கட்சி என்றால் என்ன?
3. ஒரு கட்சி முறை என்பதனை விளக்கி அதன் நிறைகள் மற்றும் குறைகளை எழுதுக.
4. தேர்தல் முறையை விவரித்து தேர்தலை நடத்துவதில் தேர்தல் ஆணையத்தின் பங்கை விளக்குக.



**அத்தியாயம் - 9**

# மக்களாட்சி அதிகாரப்பரவல்

## 9.1 அறிமுகம்

மக்களோடு தொடர்புடைய நிறுவனங்கள் எதுவாயினும் அந்நிறுவனங்கள் சார்ந்த முக்கியமான கருத்துக்கள் இரண்டு. அவை ஒன்று அதிகார குவிப்பு மற்றும் அதிகாரப் பரவலாகும். இந்த கருத்துக்கள் அந்த நிறுவனங்கள் அவற்றினுடைய கடமைகளையும், பொறுப்புகளையும் நிறைவேற்றுவதோடு தொடர்புடையவை ஆகும். உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்கள் அவற்றிலும் குறிப்பாக குடியாட்சி அல்லாத அரசாங்கங்கள் அதிகாரங்களை செயல் துறையிடம் குவித்து வருகின்றன. இவ்வாறு அதிகாரங்கள் குவிக்கப்பட்ட போதும் அத்தகைய அரசாங்கங்கள் முழுமையாக திருப்தி அடைவதில்லை.

இது ஒரு முடிவில்லாத நிகழ்வு. இவ்வாறு தனி ஒருவரிடமோ அல்லது குறிப்பிட்ட ஏதேனும் ஒரு ஆதிக்க அதிகாரம் செலுத்தும் அமைப்பிடமோ அதிகாரத்தை குவிக்கும் போக்கு மக்களாட்சி அரசாங்கம் ஏற்படுகின்ற வரையிலும் இருந்து வந்துள்ளது.

இதற்கு பல காரணங்கள் உண்டு. அவற்றில் முக்கியமானவை கீழேத் தரப்பட்டுள்ளன.

1. பரந்த அளவிலான தொழில் நுட்ப அடிப்படையில் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டது.
2. கீழ்மட்டத்திலுள்ள நிறுவனங்களின் அதிகாரங்களை மேலும் மேலும் எடுத்துக் கொண்டது.
3. ஆட்சியாளர்கள் இடையே சுயக் கட்டுப்பாடு இல்லாமல் போனது.

4. குறுகிய காலத்தில் நேர் வழியில் அல்லாமல் குறுக்கு வழிகளில் செல்வந்தராக வேண்டும் என்ற மக்களின் மனப்பான்மை.

5. மேல்மட்ட அரசியல் வாதிகளிடையே நிகழும் அதிகார பேராசை, மற்றும்

6. உற்பத்தியாளர்கள் மற்றும் உபயோகிப்பவர்களிடையே நேரடி தொடர்பு இல்லாமல் போனது.

மேலே கூறப்பட்ட காரணிகள் அரசாங்கங்கள் பொது மக்களுடைய சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் தொழில் நுட்ப வாழ்க்கையை ஒழுங்குபடுத்துவதற்கான அதிகாரங்களை பெறுவதற்கு கட்டாயப்படுத்தின். இவைகளின் தாக்கத்தால் தற்கால மக்கள் அவர்களின் துவக்கம், முன்னேற்றம், தன்னம்பிக்கை போன்ற தகுதிகளை இழந்தார்கள். அவர்களுடைய எதிர்ப்பார்க்கின்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டார்கள். இவ்வாறு அவர்கள் தங்களின் முக்கியத்துவத்தை இழந்து அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு தகுதியும், திறமையும் அற்றவர்கள் ஆனார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் குடியாட்சி முறைகளில் அதிகார பகிர்வு வேண்டுமென்ற போக்கு ஏற்பட்டது. இது அதிகார குவிப்புக்கு எதிர்மறையானது. இந்தியாவில் சுதந்திரம் கிடைத்த உடனேயே பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில் மக்களே அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கான முயற்சிகள் தொடங்கப்பட்டன.

### 9.2 மக்களாட்சி அதிகாரப் பரவல் விளக்கம்

மக்களாட்சி என்பது மக்களால் நடத்தப்படும் ஆட்சி என்று பொருள்படும். இதில் மக்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். மக்களுக்கு முக்கியத்துவம் தந்து ஊக்கப்படுத்துகின் பொழுது மக்களாட்சி குறிக்கோள்களை அடைவது எளிதாகிறது. கிரேக்கத்



தத்துவ ஞானி அரிஸ்டாட்டில் மக்களுடைய நன்மைகளையும் முன்னேற்றத்தையும் அடைவதற்காக அரசு தொடர்ந்து செயல்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளார். அதுவே இக்கால மக்களாட்சியின் குறிக்கோளும் ஆகும். இதை அடைவதற்கு பொறுப்புகளும் நடைமுறைப்படுத்த வேண்டிய பணிகளும் பரவலாக்கப்பட வேண்டும். இதையே பரவலாக்குதல் என்று கூறுகிறோம்.

மக்கள் நலன் சார்நத திட்டங்களை மக்கள் பங்கு கொண்டு அவர்களின் உழைப்பால் குறிக்கோள்களை அடைகின்றபொழுது மக்களாட்சி த்துவங்கள் அடிப்படையில் அவை நிறைவேற்றப்படுகின்றன என்பது தான் மக்களாட்சி அதிகாரப்பரவல் என்பதான் பொருளாகும். அதிகாரப் பரவலின் முக்கியமான பகுதி முடிவெடுக்கும் உரிமையை மேல்மட்டத்திலிருந்து அடுத்த மட்டங்களில் உள்ளவர்களுக்கு தருவதாகும். அதிகாரப் பரவல் என்பது அடுத்தடுத்த நிலைகளிலுள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மக்களுடைய ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் அவர்களே அதனை செய்து முடித்துக்கொள்ள வகை செய்யும் முறையில் பணிகளையும் வளங்களையும் தருகின்ற தொடர்ந்து செயல்படும் நிகழ்வு ஆகும்.

மக்களாட்சி அதிகாரப்பரவலின் மற்றும் ஒரு அம்சம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அரசாங்க பிரதிநிதிகளின் அதிகார எல்லைக்குள் அரசாங்கத்தின் அதிகாரவர்க்கம் பணியாற்றுமாறு செய்வதாகும். இத்தகைய அதிகாரப் பரவலுக்கு அடுத்தடுத்த மட்டங்களிலுள்ள மக்கள் முடிவெடுப்பது, நிறைவேற்றுவது, அவைகளை விளக்குவது அரசாங்கத்தால் கிடைக்கும் நன்மைகளை பகிர்ந்து கொள்வது போன்ற செயல்பாடுகளுக்கு தேவையான வட்டாரவாரியான வட்டார அமைப்புகளை ஏற்படுத்துவதாகும்.

**அதிகாரப்பரவல் மற்றும் அதிகார ஒப்படைப்பு**

அதிகாரப்பரவல் (decentralisation) மற்றும் அதிகார ஒப்படைப்பு (delegation) வெவ்வேறானவை. இரண்டும் ஒன்றாகாது அதிகாரப்பரவல் மேல் மட்டத்தில் அதிகாரத்திலுள்ளவர்கள் சில அதிகாரங்களை கீழ்மட்டத்திலுள்ளவர்களுக்கு அதாவது அடுத்த நிலையில் உள்ளவர்களுக்கு முடிவெடுக்கும் அதிகார உரிமையை தருவதாகும். ஆனால் அதிகாரஒப்படைப்பு என்பது மேல் மட்டத்திலுள்ளவர்கள் அடுத்த மட்டங்களில் உள்ளவர்களுக்கு மேல் மட்டத்திலுள்ளவர்களின் பிரதிநிதிகளாக செயல்படுபவர்களுக்கு குறிப்பிட்ட பணிகளை மாற்றி தருவதாகும். இந்த ஏற்பாட்டின்படி முடிவுகள் எடுக்க அவைகளை நிறைவேற்றுவதற்கு உத்தரவு பிறப்பிக்க அவர்களுக்குள்ள உரிமைகளை மேல்மட்டத்திலுள்ள வர்கள் அவர்களிடமே வைத்துக் கொள்கிறார்கள். அவர்கள் பொறுப்புகளையும் கடமைகளையும் மாற்றித் தருவதில்லை. அவர்கள் செய்வதெல்லாம் கீழ்மட்டத்திலுள்ளவர் அல்லது மக்களுடைய பிரதிநிதிகள் என்னென்ன பணிகளை செய்ய வேண்டுமே அவைகளை நிறைவேற்றுமாறு பணிப்பதே ஆகும்.

இத்தகைய அதிகாரப்பரவலை காலஞ்சென்ற பிரதம அமைச்சர் நேரு அவர்கள் “பஞ்சாயத்து ராஜ்ஜியம்” அல்லது “பஞ்சாயத்து ஆட்சி” என்று குறிப்பிட்டார்கள். எனவே அதிகாரப்பரவல் என்ற கருத்து பஞ்சாயத்து அமைப்புகளை குறிப்பிடுவதாக உள்ளது.

## 9.3 தல சுய ஆட்சி என்பதன் பொருள்

தல சுய ஆட்சி என்பது தனது நிறுவன அமைப்பு முறையிலும், பணிகளிலும், குறிக்கோளிலும் அரசாங்க அமைப்பினின்று வேறுபடுகிறது. கிராமங்களிலும் நகரங்களிலும் வாழும் மக்களின் நல்வாழ்வை உயர்த்துவதற்கான வழிமுறைகளை வகுத்து அவைகளை செல்வனே செயல்படுத்துவதே தல சுய ஆட்சி



நிறுவனத்தின் முக்கிய குறிக்கோளாகும். இது, அரசாங்க அமைப்பிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்றால் சட்டமன்ற, ஆட்சித்துறை, நீதித்துறை ஆகிய மூன்று அமைப்பு முறைகளைக் கொண்டது அரசாங்கம். நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் மட்டுமன்றி அந்நாட்டின் தேசிய வருமான வழிமுறைகளும், அந்நாட்டின் அரசாங்க அதிகார எல்லைக்குள் அடங்கும். அதனுடைய செயல்முறைகள் சமூக பொருளாதார கலாச்சார அரசியல் தன்மை வாய்ந்தவை. அதனுடைய பொறுப்பின் கீழ் நாட்டின் செல்வ நிலையை பெருக்குதல் மக்களின் நல்வாழ்விற்கான வழிமுறைகளைக் கொண்டு வருதல் போன்ற ஒரு நாட்டை ஆளுவதற்கு தேவையான எல்லா வழிமுறைகளும் அதனுடைய பொறுப்பின் கீழ் வரும். எனவே, ஒரு நாட்டின் அரசாங்கத்தின் அதிகார வரம்பு அந்நாட்டின் எல்லை முழுவதிலும் எல்லா மக்களிடமும் பரவியிருக்கிறது. ஆனால், தலசுய ஆட்சி நிறுவனம் நாடு முழுவதும் அல்லாமல் அங்கங்கு பல பகுதிகளில் வாழும் மக்கள் தொகையின் நலனுக்காக செயல்படுகிறது. ஒரு பகுதி எல்லைக்குள் எழும் சிக்கல்கள் போன்றவைகள் அதனுடைய அதுகார வரம்பிற்குட்பட்டவை. தல சுய ஆட்சி நிறுவனம் அரசினால் இயற்றப்பட்ட சட்டத்தின் மூலம் அமைக்கப்படுகிறது. அந்நிறுவனத்தின் பணிகள் எந்த நிலையில், அது எந்த முறையில், செயல்பட வேண்டும் போன்ற எல்லா விவரங்களும் அச்சட்டத்திலேயே குறிக்கப்பட்டிருக்கிறது. எனவே தல சுய ஆட்சி நிறுவனம் அரசாங்கத்திற்கு உட்பட்ட ஒரு நிறுவனம். ஆதலால், அரசாங்கத்தை விட குறைவான மதிப்பையே பெற்றுள்ளது.

## 9.4 தல சுய ஆட்சியின் அவசியம்

தல சுய ஆட்சி சில காரணங்களால் ஒரு அவசியமான நிறுவனமாகிறது. தற்காலத்தில் அரசியலமைப்புப் பெரியதாயும் அதன் பணிகள் பெருகியும் காணப்படுகின்றன. அரசு பெரிய அமைப்பாகவும் அதில் வாழும் மக்கள் தொகையும் பெருகி

இருப்பதால் ஒரு நாட்டின் அரசாங்கம் சிறந்த முறையில் செயல்படவும் அதன் பல்வேறான பகுதிகளில் வாழும் மக்களின் குறிப்பிட்ட தேவைகளை கவனிக்கவும் கடினமாயிருக்கிறது. ஒரு நாட்டில் எழும் சிக்கல்கள் இடத்திற்கிடம் மாறுபட்ட தன்மையுடையவை. ஒரே தன்மையுடையவை அல்ல. எல்லா சிக்கல்களையும் ஒரே மாதிரியான முறையில் தீர்வு காண முடியாது. எனவே அதிகாரத்தைப் பிரித்து பன்முகப்படுத்தி அந்தந்த தலங்களிலுள்ள மக்களிடம் ஒப்படைப்பதன் மூலம் அவர்களே தங்களது தலங்களின் தேவைகளை ஆர்வத்துடன், செயல்படுத்த முடிகிறது. உதாரணமாக சுகாதாரம், தண்ணீர் வசதி, தொடக்க நிலைப்பள்ளி, போக்குவரத்து வசதி இவைகளை தல சுய ஆட்சி நிறுவனங்களால் தல மக்களுக்கு சிறந்த முறையில் செய்து தர முடியும். ஒற்றை ஆட்சியிலுள்ள (Unitary state) மத்திய அரசாலோ அல்லது கூட்டாட்சியிலுள்ள (Federation) மாநில அரசுகளாலோ இவைகளைத் திறமையாக செயல்படுத்த முடியாது. தல சுய ஆட்சியினால் பல நன்மைகள் ஏற்படுவதால் அது ஒரு அவசியமான நிறுவனமாகிறது. கில்க்ரைஸ்டு (Gilchrist) என்பவர் திறமைக் காரணமாகவே தல சுய ஆட்சி மிக அவசியமாகிறது என்று கூறுகிறார். அரசாங்கத்தில் பலதரப்பட்ட நடவடிக்கைகளில் குறிப்பிட்ட சிலவற்றிற்கு மக்கள் அதிக முக்கியத்துவம் அளிக்கிறார்கள். இவைகள் திறமையான முறையில் செயல்படுத்தப்பட வேண்டுமென்றால் வேலைகள் யாரிடம் ஒப்படைக்கப்படுகின்றனவோ அவர்கள் மக்களால் இருக்கவோ, எடுக்கவோ இருக்கும்படியான அதிகார கட்டுப்பாட்டில் இருந்தால்தான் சாத்தியமாகும்.

தல சுய ஆட்சியின் அவசியத்திற்கு இரண்டாவது காரணமாக சிக்கனத்தை சொல்லலாம். அந்தந்த தலங்களின் தேவைகளை அந்தந்த தலங்களே கவனித்து, அவைகளுக்கான செலவுகளையும் அவைகளே ஏற்றுக் கொள்ள வேண்டும். சில சமயங்களில்



அரசாங்கம் மானியங்களை, சில கட்டுத்திட்டங்களை ஏற்படுத்தி வழங்க நேரிடும்; அல்லது அரசாங்கம் உள்ளாட்சி மன்றங்களுக்கு (Local Bodies) சில குறிப்பிட்ட காரியங்களுக்கு கடன் பெற அதிகாரம் வழங்கும்; அல்லது உள்ளாட்சி மன்றங்கள் தங்கள் எல்லைக்குட்பட்ட மக்களிடம் வரி விதிக்கும் அதிகாரத்தை சில வரம்புகளுக்குட்பட்டு வழங்கலாம். வரி விதித்து நிதி பெறுவது உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒரு முக்கிய ஆதாரம். இப்படி வரி கொடுக்கும் மக்கள் உள்ளாட்சி மன்றங்களுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். அதன் மூலம் செலவையும் நிர்வாகத்தையும் அவர்கள் பெரும்பாலும் கட்டுப்படுத்துகிறார்கள் என்று கூறலாம்.

மூன்றாவதாக, பிரதிநிதித்துவ அரசுமுறையை மக்களுக்கு கற்றுணர்த்தும் ஒரு செயலியாக (Agency) இருக்கிறது. தற்கால அரசு முறையில் குடிமக்கள் நேரடியாக, தேசிய ஆளுகையில் பங்கெடுப்பது, ஐந்து வருடத்திற்கு ஒரு முறை வரும் தேர்தல்களின் போது தங்களது வாக்குகளை போடும்பொழுதுதான். இதனால் அரசியல் விவகாரங்களில் பங்கின்மை காரணமாக அதிருப்தி அல்லது ஆர்வமின்மை ஏற்படுவது சகஜமாகிறது. தல சுய ஆட்சிமுறை அவர்களை பொது விவகாரங்களில் ஈடுபடுத்துகிறது. இதனால் அதில் சிறந்த பயிற்சியை அளிக்கும் பள்ளியைப் போல் அது அமைகிறது.

நான்காவதாக, தல சுய ஆட்சி அரசாங்கத்தின் வேலை பளுவை குறைக்க உதவுகிறது. மேலும் தங்களின் நிர்வாகத்திலும், வரி வசூலுத்து தருவதிலும் அரசாங்கத்திற்கு உதவியாய் உள்ளன.

கடைசியாக இவை வரப்போகும் சட்டங்களுக்குத் தேவையான விவரங்கள், ஆலோசனைகள் ஆகியவைகளைத் தருகின்றன.

இதனால் அரசாங்கத்தின் கொள்கைகளை உறுதிப்படுத்தவும், சட்ட மன்றங்களில் தகுந்த சட்டங்களை கொண்டு வரவும் சாத்தியமாகிறது.

இதிலிருந்து தல சுய ஆட்சி முறை என்றால் என்னவென்பதும் தற்கால ஜனநாயக அரசிற்கு அவை எவ்வளவு முக்கியமானவை என்றும் தெளிவாகிறது.

## 9.5 தல சுய ஆட்சியின் சில பொதுவான பணிகள்

தல சுய ஆட்சிகளின் பணிகளை விரிவாக இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம். ஒன்று கட்டாயப் பணிகள் (Obligatory), மற்றொன்று விருப்பப்பணிகள் (Discretionary) தெருக்கள், பொது இடங்கள் இவைகளுக்கு விளக்குகள் போடுதல், தண்ணீர் வசதி, தீயணைப்பு, பிறப்பு இறப்பு பதிவு, தொடக்கக் கல்வி, மருத்துவமனை போன்ற பொது நலத்திற்கு அவசியமானவை கட்டாயப்பணிகளாகும். விருப்பப் பணிகளாவன: பூங்காக்கள் பொது தோட்டங்கள், நூலகங்கள், நீச்சல் குளங்கள், மனமகிழ் மன்றங்கள் போன்ற வசதிகள் செய்து தருவனவாகும்.

## 9.6 வேறு சில சந்தர்ப்பங்களில் தல சுய ஆட்சி நிறுவனம் செய்யும் பணிகள்

சில மாறுபட்ட சந்தர்ப்பங்களில் வேறு சில குறிப்பிட்ட பணிகளையும் தல சுய ஆட்சி மேற்கொள்கிறது.

அ) தலங்களில் சுய ஆட்சி உறுப்புகளாக இருந்து பணிபுரிந்து.

ஆ) தலங்களில் பொதுநலச் சேவைகள் செய்வதன் மூலம் தனிப்பட்டவர்களை நல்ல குடிமக்களாக்குவது:

இ) கிராம நகரப் பகுதிகளில் சீரான திட்ட வளர்ச்சிகள் கொண்டுவர உதவுதல்:

ஈ) தல வருவாய் வாய்ப்புகளைப் பெருக்கிப் பொதுநலத்திற்கு உபயோகப்படுத்துதல்;

உ) கூட்டான முறையில் சமூக, பொருளாதார, கலாசார வளர்ச்சிகளுக்கு உதவுதல்.



சுருங்கக் கூறின் தல சுய ஆட்சி மன்றங்கள் குறிப்பாக இந்தியாவில், "அந்தந்த தலங்களில் தேசியத் திட்டங்களைச் செயல்படுத்தும் செயலிகளாக (agencies) மட்டுமன்றி, மக்களாட்சியின் முதன்மையான உறுப்பாகச் செயல்படுகின்றன. சமூக நலன், உள்ளாட்சிப் பணிகள் முதலியவைகளை ஏற்றுக் கொள்ள அவைகளே சிறந்த நிறுவனங்கள் ஆகும். குடிமக்களுக்குப் பொது சுகாதாரம் போன்ற வசதிகள் மட்டுமன்றி மகப்பேறு, குழந்தைகள் நலம், குடும்ப நலத்திட்டம், கல்வி, வீட்டு வசதி, சேரி ஒழிப்புப் போன்ற சமூக நலத் திட்டங்கள் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு வேண்டிய மக்கள் ஆதரவு, ஒத்துழைப்பு இவைகளை ஒன்று திரட்டுகிறது.

## 9.7 தல சுய ஆட்சி சிறந்த முறையில் செயல்பட வேண்டிய தேவைகள்

தல சுய ஆட்சி சிறந்த முறையில் செயல்பட வேண்டுமென்றால் அதற்கு சம்மந்தப்பட்ட அரசாங்கத்தின் ஊக்கமும் வழிகாட்டலும் மேற்பார்வையும் மிக அவசியம். மேற்பார்வை என்றால் உள்ளாட்சி நிர்வாகத்தில் தேவையற்ற முறையில் குறுக்கிட வேண்டும் என்று பொருளல்ல. தல மக்கள் தங்களது புத்திக் கூர்மையைத் தாங்களாகத் தொடங்கிச் செய்வதற்காக வழி வகைகளும், வாய்ப்புகளும் கொடுக்கப்பட வேண்டும். மேலும், உள்ளாட்சி முறை வெற்றிகரமாகப் பணிபுரிய வேண்டுமென்றால் மக்கள் மனமுவந்து அதன் பணிகளில் பங்கெடுக்கவும் புதிய கருத்துகளையும் முறைகளையும் செயல்படுத்தவும் ஆர்வம் காட்ட வேண்டும்.

இதற்கு இன்றியாமையாதது மக்கள், கல்வி அறிவு படைத்தவர்களாகவும், நல்ல ஆட்சிப் பொறுப்புணர்வு உள்ளவர்களாகவும் இருத்தலே ஆகும். மேலும், உள்ளாட்சியின் பணிகள் பெருகிக் கொண்டே போவதால் அவைகளுக்குப்

போதுமான வருமான வழிகள் தேவைப்படுகின்றன. அவ்வாறு வருமான வழி முறைகள் இல்லையேல் தலப்பிரச்சனைகள் புறக்கணுக்கப்படுவதுடன் உள்ளாட்சி நிர்வாகத்திலும் மக்கள் ஆர்வத்தை இழப்பர்.

## 9.8 தல சுய ஆட்சி முறைகளின் குறைபாடுகள்

தல சுய ஆட்சி முறையில் சில குறைபாடுகள் உள்ளன. தல சுய ஆட்சி முறையினால் மக்களிடம் குறுகிய மனப்பான்மை வளர வாய்ப்புள்ளது. நாட்டில் எழும் ஒவ்வொரு பிரச்சனையையும் தங்களது தலங்களின் கண்கொண்டே பார்க்கக்கூடும்.

இதனால் தேசிய நன்மை பாதிக்கப்படலாம். மேலும் உள்ளாட்சி நிர்வாகத்திலும் கட்சி அரசியலின் தீமைகள் நுழைந்து விடுகின்றன. திறமையற்றவர்கள் கூடத் தங்களது செல்வாக்கினால் கட்சிகளின் சார்பில் வேட்பாளர்களாக நின்று உள்ளாட்சி நிறுவனங்களைக் கைப்பற்றித் தங்களது சுயநலத் தேவைகளுக்குப் பயன்படுத்லாம். திறமையான உள்ளாட்சி நிர்வாகமுறைகூட இதனால் திறனற்றுப் போகிறது.

இக்குறைகளுக்குத் தீர்வு என்னவெனில் ஒவ்வொரு குடிமகனும் தன்னுடைய பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும். தங்களது நலன்கள் இது போன்ற திறமையற்றவர்கள் பதவியில் இருந்தால் பாதுக்கப்படும் என்று உணர்ந்தார்களேயானால் அத்திறனற்றவர்கள் பதவியில் இருக்கவே முடியாது. அவர்கள் அப்படியே பதவிக்கு வந்தாலும் பொறுப்புணர்வுள்ள குடிமக்கள் அவர்களை அடுத்த தேர்தலிலேயே எடுத்துவிட முடியும்.

உள்ளாட்சி முறை சரிவர செயல்படவில்லையென்றால் அதற்குக் குடிமக்களது அலட்சிய மனப்பான்மையும் பொறுப்பற்ற தன்மையும் ஒரு முக்கியக் காரணமாகும். காலதாமதமின்றி வரிகளை ஒழுங்காகச் செலுத்த வேண்டியதும் இப்பொறுப்புணர்ச்சிகளில்



ஒன்றாம். ஒவ்வொரு குடிமகனும் தான் சமூகத்தின் ஒரு பகுதி என்றும், தன்னுடைய ஒத்துழைப்பு இருந்தால்தான் நகரம் அல்லது கிராம வாழ்க்கை முறை வளமுறும் என்றும் உணர வேண்டும்.

சுருங்கக் கூறின், சமூக நல உணர்வை அவன் வளர்த்துக் கொள்ள வேண்டும். இவ்வுணர்வு இருந்தால்தான் சமூகம் வளமுற்றுத் தல சுய ஆட்சி நிறுவனமும் சிறப்பான முறையில் செயல்படும்.

## 9.9 தல சுய ஆட்சி முறை தோன்றிய விதம்

ஆங்கில அரசின் கீழ் இந்தியா இருந்தபோது தல சுய ஆட்சி சில குறிப்பிட்ட காரணங்களுக்காக எழுந்தது. அப்பொழுது இருந்த முக்கியக் காரணம் என்னவெனில், வியாபாரத்தைப் பெருக்கவும் சில சிக்கல்களைத் தீர்க்கவுமேயாகும்.

முதல் முதல் எழுந்த உள்ளாட்சி சட்டம் 1842 ஆம் ஆண்டு வங்காள மக்கள் சட்டம் என்ற பெயருடன் வந்தது. இச்சட்டம் வங்காள மாநிலத்திற்கு மட்டும் சோதனை முறையில் பார்ப்பதற்காக வந்தது. இச்சட்டத்தின் மூலம், உண்டாக்கப்பட்ட தல நிறுவனங்கள் சரியானபடி இயங்கவில்லை. இது எடுக்கப்பட்டு 1850 ஆம் ஆண்டு சட்டம் XXVI ஒன்று இந்தியா முழுவதுக்குமாகக் கொண்டுவரப்பட்டன. இதன் விளைவாகப் பல சுய ஆட்சி நிறுவனங்கள்–உதாரணமாக, கல்கத்தா, பம்பாய் போன்ற நகரங்களில் நகராட்சி மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

தல சுய ஆட்சி நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்படுவதற்காக 1870 ஆம் ஆண்டு இந்தியாவில் வைசிராயாக இருந்த மேயோபிரபு நிதிமுறையை பன்முகப்படுத்துவதற்கான ஆணையைப் பிறப்பித்தார்.

இவ்வாணையின் குறிக்கோள் என்னவெனில் கல்வி, பொதுநலம், சுகாதாரம், மருத்துவ வசதி இவைகளை வளர்க்கவும் உள்ளாட்சி நிறுவனங்களைப் பலப்படுத்தி சுய ஆட்சி முறையை

வளர்ச்சிபெறச் செய்யவுமேயாகும். தல சுய ஆட்சி முறை வளர்ச்சியின் அடுத்த கட்டம் 1882ஆம் ஆண்டில் தொடங்கியது. இந்த ஆண்டில் ரிப்பன் பிரபு தமது சொந்தக் கவனிப்பால் பொது விவகாரங்களில் நிறைய சந்தர்ப்பங்களையும் பொறுப்புகளையும் இந்தியர்களுக்கு அளித்தார்.

1906 ஆம் ஆண்டு தல சுய ஆட்சி தனது வளர்ச்சி முறையில் மற்ற ஒரு கட்டத்தைத் தாண்டியது. அந்த ஆண்டு ராயல் கமிஷன் அதிக முறையில் அதிகாரத்தைப்பன்முகப்படுத்தவதற்கான சிபாரிசைச் செய்தது. அதிக அதிகாரப் பொறுப்பு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் கைகளைப் பலப்படுத்துவது போன்றவை, அக்கமிஷன் செய்த சிபாரிசுகளில் சிலவாகும். அமலும், நிதிமுறை திருப்தியற்ற முறையைக் கண்டு அக்கமிஷன் அரசியல் அமைப்பின் சட்டவரம்பிற்குள் தல நிறுவனங்கள் தாங்களே வழிமுறைகளை முடிவு செய்ய அனுமதிக்க வேண்டுமென்ற சிபாரிசையும் செய்தது. 1918ஆம் ஆண்டில் இந்திய அரசு அக்கமிஷனின் சிபாரிசுகளில் பலவற்றை ஏற்றுக்கொண்டது.

அதன்பேரில் தல நிறுவனங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரித்து. இதிலிருந்து ஆரம்பித்து குறிப்பாக மாண்டேகு செம்ஸ் போர்டு அறிக்கை, இந்திய அரசின் 1918ஆம் ஆண்டு தீர்மானம், இவைகளின் மூலமாக உள்ளாட்சி நிறுவனங்களின் வளர்ச்சி 1947 ஆம் ஆண்டுவரை அதிகரித்துக் கொண்டே போயிற்று.

1947ஆம் ஆண்டு இந்தியா சுதந்திம் அடைந்ததும் உள்ளாட்சி மன்றங்களின் பணிகளும், நிர்வாக முறைகளும் தகுந்த சட்டமாற்றங்களுடன் எல்லா மாநிலங்களிலும் ஜனநாயக முறையாக்கப்பட்டன. கிராமப்புறங்களில் அரசு வளர்ச்சி மிக அவசியம் எனக் குறிப்பாக வலியுறுத்தப்பட்டது. காந்தியடிகள், கிராமப்புறங்கள் முதன்மையான முறையில் முன்னேற வேண்டும்



என்ற கருத்தைக் கொண்டிருந்தார். நகர வளர்ச்சியும், இயந்திரத் தொழில் வளர்ச்சியுமே தற்கால நாகரிகத்தின் தீமைகளுக்கு அடிகோலாகுமென்றும் இவைகளைத் தீர்க்கும் மருந்து எதுவெனில் அக்காலங்களில் இருந்ததுபோல் கிராமங்கள் தன்னிறைவுத் தன்மையை உடையவையாக இருக்கவேண்டுமென்று எண்ணினார். சுதந்தர இந்தியாவின் தலைவர்கள் காந்தியடிகளின் சீடர்கள் என்ற முறையில் அவரது கருத்துகளுக்கு மதிப்புக் கொடுத்து அவைகளைச் செயலாக்க வேண்டுமென்று ஆர்வம் கொண்டிருந்தனர். 1947ஆம் ஆண்டிலிருந்து வெளிவந்த பஞ்சாயத்து அரசுகளும் காந்தியடிகளின் தத்துவச் செல்வாக்கினால் உந்தப்பட்ட அரசியல் தலைவர்களால் கொண்டு வரப்பட்டவையே யாகும். தல சுய ஆட்சி முறையின் வளர்ச்சி முழுவதையும் இங்கு விவரிக்க இயலாத காரணத்தால் மேற்கோள் நூற்பட்டியலில் (Bibliography) புத்தகங்களின் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

## 9.10 இந்திய தல சுய ஆட்சி நிறுவனங்களின் வகை

விரிவாக எடுத்துக் கொண்டால் இந்தியத் தல சுய ஆட்சி நிறுவனங்களை இரு பிரிவாகப் பிரிக்கலாம். அவையாவன; 1) நகர சுய ஆட்சி நிறுவனங்கள், 2) கிராம சுய ஆட்சி நிறுவனங்கள்.

நகர ஆட்சி நிறுவனங்கள் : (Urban Self-Governing Bodies)

***இந்தப் பிரிவின்கீழ்***

1. மாநகராட்சிகள் கார்ப்பரேஷன்கள்
2. நகராட்சிகள் முனிசிபாலடிகள்
3. இராணுவக்கூட வாரியங்கள் (Cantonment Board)
4. நகர்ப்புறக் குழுக்கள் (Township Committees) ஆகியவை அடங்கும். இந்நிறுவனங்களின் அந்தஸ்து, அமைப்புமுறை, பணிகள் அனைத்தையும் அரசாங்கமே நிர்ணயிக்கிறது.

இதற்குத் தக்கவாறு அவ்வப்பொழுது சட்டங்களும் கொண்டுவரப்படுகின்றன.

### கிராமப்புற சுய ஆட்சி அமைப்புகள்

இவ்வகையில் பஞ்சாயத்து அமைப்புகள் வருகின்றன. இவ்வமைப்புக்கள் கிராம மக்கள் அவர்களுடைய அலுவல்களையும் தேவைகளையும் அவர்களே பெற்றுக் கொள்ள உதவுகின்றன. இது கிராமப்புற மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கும் பண்டைக்கால கிராமப்புற அமைப்புகளின் மறுமலர்ச்சிக்கும் வகை செய்யும் என்பது காந்திஜி போன்ற பெருந்தலைவர்களின் கருத்தாகும்.

இந்தியாவில் வட்டார சுய ஆட்சி நிறுவனங்களின் தகுதி, அமைப்பு மற்றும் பணிகள் சட்டப்படி ஏற்படுத்தப்படுகின்றன. இவைகளில், சுதந்திரத்திற்குப்பிறகு அமைக்கப்பட்ட உயர்மட்ட குழுக்கள் பலவற்றின் பரிந்துரைகளின் அடிப்படையில் பல சீரிய மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. இவைகள் இங்கே பின்வரும் பக்கங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

### கிராமப்புறங்களில் தல சுய ஆட்சி (Self-gpvernment in Rural Areas)

### பஞ்சாயத்து அமைப்புகள் (Panchayati Raj Bodies)

தல சுய ஆட்சி முறையின் அவசியம், முக்கியத்துவம் இவைகளைப்பற்றி அத்தியாயத்தின் ஆரம்பத்தில் பார்த்தோம். நகரங்கள், பேரூர்கள் இவைகளில் மட்டும் தல சுய ஆட்சியை நிறுவினால் போதாது. இந்திய மக்கள் தொகையின் எழுபது விழுக்காட்டிற்கும் மேற்பட்டவர்கள் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். இம்மக்கள் நிர்வாக முறையில் எதுவும் பங்கெடுத்துக் கொள்ளவில்லை என்றால் தல சுய ஆட்சி முறையின் குறிக்கோளே முழுமை பெறாமல் வீணாகிவிடும். எனவே, இம்மக்கள் தங்கள் நலனைத் தாங்களே நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் வழிமுறைகளைக் கொண்டுவர வேண்டும்.



காந்தி அடிகள் போன்றோர் விரும்பிய பொருளாதார நிலையில், செழுமை அப்போதுதான் ஏற்படும். மேலும், சுய ஆட்சி முறைக்குத் தேவையான பயிற்சியும் அவர்களுக்குக் கிடைக்கின்றது. புதிய முறைகளைக் கொண்டு வருவதற்கான ஊக்கமும் நம்பிக்கையும் அவர்கள் பெறுகிறார்கள்.

இக்குறிக்கோள்களை மனத்தில் வைத்தே, இந்தியா சுதந்திரம் அடைந்ததும் பஞ்சாயத்து அரசு முறை எல்லாக் கிராமப்புறங்களிலும் கொண்டுவரப்பட்டது. தற்பொழுது பஞ்சாயத்து அரசு முறையே கிராமத்தின் மையமாக அமைந்துள்ளது. இதனைக் கொண்டு வருவதற்கு முன் இந்தியத் தலைவர்களும், அரசாங்கமும் இதனால் என்னென்ன சிக்கல்களும், பிரச்சனைகளும் எழலாம் என்று அறிந்து கொள்வதற்காகப் பல குழுக்களை அமைத்தனர். உதாரணமாக, பலவந்தராய் மேத்தா தலைமையில் 1957, பஞ்சாயத்து நிதிநிலையை ஆராய சந்தானம் தலைமையில் 1963 பஞ்சாய்த்து நிறுவனங்களின் மறு அமைப்புகளுக்கு அசோக்மேத்தா தலைமையில் 1978ல் அமைக்கப்பட்ட குழுக்களை உதாரணமாகச் சொல்லலாம்.

இப்படிப்பட்ட கமிட்டிகளின் அறிக்கைகளை, சிபாரிசுகளை ஒட்டியும், சமூக வளர்ச்சி, கிராமப்புற அபிவிருத்தித் திட்டங்களுக்காக உண்டான திட்டக்குழு, போன்ற அமைப்புகளின் பயிற்சிகளை ஒட்டியும் ஒரு பரந்த அடிப்படை கொண்ட பஞ்சாயத்து அரசு அமைப்பு 1958ல் ஏற்படுத்தப்பட்டது.

1958ஆம் ஆண்டு தொடங்கி அதற்குப் பிறகும் மாநில அரசாங்கங்களால் கொண்டுவரப்பட்ட சட்டங்களின் மூலம் இவவமைப்பு நடைமுறையில் இயங்க ஆரம்பித்த, இருந்தும் பஞ்சாயத்து நிறுவனங்கள் எம் முறையில் இருக்க வேண்டுமோ அம்முறையில் இல்லை என்றும் நாட்டில் ஜனநாயகம் பலமான அடித்தளத்தைப் பெறவில்லை., என்றும் பலர் கருதுகின்றனர். ஆனால், பஞ்சாயத்து நிறுவனங்கள், தொடர்ந்து பணி புரிவதையும் கிராம, சமூகப் பொருளாதாரப் புனரமைப்பிற்கு அவைகள்

இன்றியமையாதவை என்பதையும் எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள்.

## 9.11 தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாயத்து அரசு அமைப்பு

தமிழ்நாட்டில் பஞ்சாயத்து அரசு முறை, 'தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம்' 1958-ன் படி ஏற்படுத்தப்பட்டது. இந்த முறை கிராமப் பஞ்சாய்த்து அடிப்படையில் அமைந்துள்ளது. இதற்கு மேலாகப் பஞ்சாயத்து ஒன்றியங்களும், மாவட்ட வளர்ச்சிக் குழுக்களும் உள்ளன. இந்தப் புதிய அமைப்பு முறையில், மாவட்ட கழகங்கள் (Boards) அகற்றப்பட்டுப் பஞ்சாயத்து ஒன்றியங்கள் அவற்றின் வாரிசுகளாக ஆயின.

பஞ்சாயத்து ஒன்றியத்தின் பரப்பளவு சமூக பரப்பளவு சமூக முன்னேற்றத் திட்டத்திலுள்ள அபிவிருத்தி பிளாக்குகளின் சம எல்லை அமைப்புகளாக அமைக்கப்பட்டன. கிராம மட்டங்களின் மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கொண்ட பஞ்சாயத்துக் கவுன்சில்களில் இருக்கின்றன. மேற்படி உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கின்றனர். இப்பொழுது பஞ்சாயத்துத் தலைவரையும் நேரிடையாக மக்களால் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு முயற்சி இருக்கிறது. பஞ்சாயத்து யூனியனில் அதன் அதிகாரத்திற்குட்பட்ட பஞ்சாயத்துக் கவுன்சில்களின் தலைவர்கள் அங்கத்தினர்களாக உள்ளனர். இவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாயத்து அரசு நிறுவனங்களின் அமைப்பைக் கீழ்கண்டவாறு விவரிக்கலாம்.

1. பஞ்சாயத்துக்கள்
   அ) கிராமப் பஞ்சாயத்துகள்
   ஆ) நகரப் பஞ்சாயத்துகள்
2. பஞ்சாயத்து யூனியன்



3. மாவட்ட அபிவிருத்திக் கஷன்சில்
4. மாநில மட்டத்திலுள்ள பஞ்சாயத்து அபிவிருத்தி

**ஆலோசனைக் குழுக்கள்**

மேற்கூறப்பட்ட அமைப்புகள் 1994ம் ஆண்டுவரையும் அதற்கு பிறகு புதுச்சட்ட அடிப்படையில் தேர்தல்கள் நடைபெறும் வரை வழக்கில் இருந்தன.

## 9.12 தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம், 1994

தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் தமிழ்நாட்டில் பஞ்சாயத்து அமைப்பு வளர்ந்த வரலாற்றில் முக்கியமானதொரு மைல் கல்லாகும். தல சுய ஆட்சி நடைமுறை தமிழ்நாட்டில் இதற்கு முன்பு எதிர்பார்த்த அளவிற்கு சிறப்பாக அமையவில்லை. எனவே தேசீய மட்டத்திலும், மாநிலங்கள் மட்டத்திலும் இவைகள் சிறப்பாக செயல்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று எல்லோரும் விரும்பினார்கள். நாட்டிலுள்ள பெரிய மற்றும் சிறிய அரசியல் கட்சிகளும் பஞ்சாயத்து அமைப்பை பற்றி நன்றாக அறிந்திருந்தவர்களும் அக்கருத்தை ஆதரித்தார்கள், எனவே பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் இந்த அமைப்புகளை வலுப்படுத்துவதற்கு 1985-ம் ஆண்டு முயற்சிகள் அப்போது அவர் எதிர்பார்த்த அளவிற்கு வெற்றி பெறவில்லை.

அவருக்குப்பிறகு தேசீய முன்னணியின் திரு. வி.பி.சிங் சட்டமியற்றுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியும் வெற்றி பெறவில்லை. பிறகு காங்கிரஸ் கட்சியை சேர்ந்த திரு.பி.வி. நரசிம்மராவ் அவர்கள் பிரதம மந்திரியாக இருந்த போது எதிர்க்கட்சிகளின் ஆதரவோடு 73-வது அரசியலமைப்பு திருத்த சட்டம் 1992-ம் ஆண்டு டிசம்பர் மாதம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் இந்தியாவிலுள்ள மொத்த மாநிலங்களில் 50 விழுக்காடு மாநிலங்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டபோது 1993-ம் ஆண்டு மே மாதம் நடைமுறை படுத்தப்பட்டது.

இது திரு. ராஜீவ் காந்தி அவர்களின் கனவை நினைவாக்கியது என்று சொல்லலாம்.

இச்சட்டம் பஞ்சாயத்து அமைப்புகள் அவற்றின் கடமைகள் மற்றும் பொறுப்புகளை தீவரமாக செய்து முடிப்பதற்கு உதவியாக இருந்தது. இச்சட்டம் பிற்காலத்தில் பல முக்கியமான மாறுதல்கள் ஏற்பட வகை செய்தது.

இந்திய கூட்டாட்சியிலுள்ள ஒவ்வொரு மாநிலமும் இந்த பஞ்சாயத்துராஜ் சட்டத்தை நிறைவேற்றவது கட்டாயமாக்கப்பட்டது. பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பது சட்டப்படியானது. ஏதேனும் ஓர் மாநிலம் இந்த சட்டப்பூர்வ கடமையை நிறைவேற்ற தவறினால் அதற்கு மைய அரசின் மானியங்கள் பெற தகுதி கிடையாது என்பது கட்டாயமாக்கப்பட்டது.

மக்களுடைய அன்றாட வாழ்வோடு தொடர்புடைய தெளிவாக கூறப்பட்டுள்ள 29 கடமைகளை பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் முடிவெடுக்க அதிகாரம் தரப்பட்டன.

முடிவுகளை நிறைவேற்றவதைப் பொறுத்தளவில் அவற்றின் பணி முன்பிருந்திருந்ததைப் பொறுத்தளவில் அவற்றின் பணி முன்பிருந்திருந்ததைக் காட்டிலும் சிறப்பாக அமைந்தது. இவைகள் அந்த அந்த மாநிலங்களின் பிரதிநிதிகளாக செயல்படவேண்டும்.

பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுடைய அதிகாரங்கள் பணிகள் எல்லாம் இந்த பஞ்சாயத்து ராஜ் சட்டத்தில் தெளிவாக எடுத்து சொல்லப்பட்டு இருக்கின்றன.

**தமிழ்நாட்டில் பஞ்சாயத்து ராஜ் அமைப்பு முறை**

73- வது அரசியலமைப்பு திருத்த சட்ட அடிப்படையில் தமிழ்நாட்டு அரசாங்கம், தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்டம் 1994ஐ இயற்றியது.

இச்சட்டத்தின் அடிப்படியில் தமிழ்நாட்டில் தற்போது பஞ்சாயத்து அமைப்புகளின் எண்ணிக்கை கீழ்கண்டவாறு உள்ளது.



1. 12619 - கிராம பஞ்சாயத்துக்கள்
2. 385 - ஊராட்சி ஒன்றியங்கள், மற்றும்
3. 29 - மாவட்ட பஞ்சாயத்துகளும் உள்ளன.

இவ்வமைப்புகள் தற்போது முழு வீச்சில் பணியாற்றி வருகின்றன. மக்கள் பிரதிநிதிகள் அவர்களின் பகுதி மற்றும் சமுதாயம் தொடர்புடைய ஒவ்வொரு செயலிலும் தீவிர ஈடுபாடு கொண்டு செயலாற்றுகிறார்கள். இச் சட்டத்தினுடைய முழு விபரங்களும் அதனால் ஏற்பட்ட மாறுதல்களும் முன்னேற்றங்களும் 12 ஆம் வகுப்பிற்கான பாடத்தில் தொடர்ந்து விரிவாக சொல்லப்பட்டிருக்கின்றன.

## வினாக்கள்

### பகுதி - அ

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக**

1. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் எந்த அமைப்பு தல சுய ஆட்சியின் கீழ் வரவில்லை.

   அ) கிராம பஞ்சாயத்து   இ) தாலுகா அலுவலகம்

   ஆ) சமிதி   ஈ) ஜில்லா பரிஜத்

2. பின்வருவனவற்றைப் பொருத்துக.

   அ) அசோக் மேத்தா - மூன்று அடுக்கு முறை

   ஆ) பல்வந்தராய் மேத்தா - கிராமப்பஞ்சாயத்து

   இ) தலைவர் - மாவட்ட பஞ்சாயத்து

   ஈ) பெருந்தலைவர் - இரண்டு அடுக்கு முறை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. தல சுய ஆட்சி அரசாங்கங்கள் மானியங்கள்____________ இருந்து பெறுகின்றன.

2. கடைசியாக இயற்றப்பட்ட பஞ்சாயத்துராஜ் சட்டம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது.

**III. கீழ்வருவன சரியா அல்லது தவறா என எழுதுக**

1. தற்கால பஞ்சாயத்து முறை அமைப்பிற்கு ராஜீவ்காந்தி முதல் முயற்சி எடுத்துக் கொண்டார்.
2. பஞ்சாயத்துராஜ் அமைப்புகளுக்கு மாநில தேர்தல் ஆணையம் தேர்தல்களை நடத்துகிறது.

**பகுதி - ஆ**

1. தல சுய ஆட்சி என்பது என்ன?
2. கிராம பஞ்சாயத்தை விவரி.

**பகுதி - இ**

1. அதிகார பரவல் கருத்தை விளக்குக.
2. 73- வது அரசியலமைப்பு திருத்த சட்டத்தின் முக்கியத்தை விளக்குக.

**பகுதி - ஈ**

1. பஞ்சாயத்து ராஜ் அமைப்பு முறையை விளக்குக.
2. இந்தியாவின் தல சுய ஆட்சியின் வரலாற்றை பற்றி எழுதுக.



**அத்தியாயம் - 10**

# பன்னாட்டு அரசியல் நிறுவனங்கள் அமைப்பு

## 10.1 அறிமுகம்

உள்நாடு மற்றும் உலகநாடுகளின் உறவுகளில் ஏற்படும் மாறுதல்கள், மற்றும் சமுதாயத்தை பன்னாட்டு போக்கு என்ற சொல் குறிப்பிடுகிறது.

பன்னாட்டு உறவுகளின் தன்மையையும் போக்குகளையும் அறிவதற்கு பல அணுகுமுறைகள் இருக்கின்றன. அவைகளில் இரண்டு அணுகுமுறைகள் இந்த அத்தியாயத்தில் விளக்கப் படுகின்றன. அவை,

1. வரலாற்று அணுகுமுறை; மற்றும்
2. நிறுவன அணுகுமுறை

## 10.2 வரலாற்று அணுகுமுறை

கடந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளை கருத்தில் கொண்டு பன்னாட்டு உறவுகளை அறிந்துக் கொள்ளும் முறைக்கு வரலாற்று முறை என்று பெயர். இம்முறை இரண்டு முக்கிய அம்சங்களை அழுத்தமாக குறிப்பிடுகிறது.

1. உள்நாடு மற்றும் பன்னாட்டு உறவுகளின் போக்கு நிலையானதாக இல்லாமல் அவ்வப்போது மாறுகின்ற தன்மையை உடையதாக இருக்கிறது.
2. தற்கால உலக நாடுகளின் போக்கு அதன் அம்சங்களை மற்றும் வரலாற்றை ஆதாரமாகக் கொண்டு அறிய முற்படுகின்ற பொழுது ஒவ்வொரு நாடும் முக்கியமானதாகும்.

## 10.3 நிறுவன அணுகுமுறை

பன்னாட்டு உறவுமுறையில் உள்ள அம்சங்களை அறிய முற்படுகின்றபொழுது வரலாற்று மற்றும் நிறுவன அணுகுமுறைகள் முக்கியமானவைகள் ஆகும்.

இவ்வணுகுமுறைகளைத் தெளிவாக அறிந்துகொள்வதற்காக அவை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன.

1. முதல் பகுதி வரலாறு மற்றும் நிறுவனங்களின் தன்மையை விளக்குகிறது.
2. இரண்டாவது பகுதி வட்டார மற்றும் பன்னாட்டு நிலையங்களின் அமைப்பு, அவை எவ்வாறு செயல்பட்டன மற்றும் எந்த அளவிற்கு வெற்றி பெற்றன போன்ற கருத்துக்களை விளக்குகின்றன.

தற்போது உலகமயமாக்கப்பட்ட பொருளாதார முறை மற்றும் தொடர்பு துறையில் ஏற்பட்டிருக்கின்ற பெரும் மாறுதல்களை உலக நாடுகள் அமைப்பில் நாம் காண்கிறோம். அத்தகைய சூழ்நிலைகளில் வாழ்கின்ற அளவிற்கு நாம் உள்ளாக்கப்பட்டிருக்கின்றோம்.

உள்நாடு மற்றும் உலக நாடுகளில் உறவுகளில் ஏற்படும் தொடர்ச்சி மற்றும் மாறுதல்களுக்கு ஏற்ப பன்னாட்டு வரலாற்று எழுதப்படுகிறது. இதனைத் தெளிவாக அறிந்துக் கொள்வதற்காக சில நிறுவனங்கள் சார்ந்த கருத்துக்கள் இந்த அத்தியாயத்தில் விளக்கப்பட்டிருக்கின்றன.

மாணவர்கள் பன்னாட்டு அமைப்புகள் எதற்காக எவ்வாறாக ஏற்படுத்தப்பட்டன அல்லது விட்டுவிடப்பட்டன மற்றும் அவைகள் எவ்வாறு சமூக ஒழுங்கு மற்றும் முன்னேற்றம் கருதி மாற்றி அமைக்கப்பட்டன என்ற விவரங்களையேல்லாம் தெரிந்துக் கொள்வது அவசியமாகும்.

குழப்பமான சூழ்நிலையில் முன்னேற்றமோ நிலையான தன்மையோ அமைதியான முறையில் மாறுதல்கள் ஏற்படவோ முடியாது என்பது தெளிவாக வேண்டும்.

எனவே போராட்டங்கள் மற்றும் குழப்பமான சூழ்நிலைகளை விளக்கி அமைதி எவ்வாறு ஏற்படவேண்டும் மாறுபட்ட நிலைகள் எவ்வாறு தோற்றுவிக்கப்பட வேண்டும் இதற்கு கூட்டு முயற்சியும்



ஒத்துழைப்பும் எவ்வளவு அவசியமானது என்பதை அறிய வேண்டும்.

உள்நாட்டு, வெளிநாட்டு உறவுகளில் குழப்பங்கள் ஏற்படுவது இயல்பானதே. இவைகளை சமாளித்து அமைதியையும் ஒழுங்கையும் எவ்வாறு ஏற்படுத்த வேண்டும் என்பதையும் சம்மந்தப்பட்ட மக்களினுடைய முன்னேற்றத்திற்கு எத்தகைய நடவடிக்கைகளை எடுத்து அவற்றை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்பன போன்ற கருத்துக்களை எல்லாம் அரசியல் அறிவியல் மாணவர்கள் தெரிந்து கொள்வது மிக அவசியமாகதாகும்.

மேற்க்கூறப்பட்ட கருத்துக்களை தெரிந்து கொள்கின்ற முறையில் தேசிய, வட்டார மற்றும் பன்னாட்டு ஏற்பாடுகள் என்னென்ன செய்யப்பட்டன, அவைகள் எந்த அளவிற்கு சம்மந்தப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு பயன்பட்டன என்பதை சில உலக அமைப்புகளையும் அவற்றின் நடைமுறைகளையும் கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

இதற்கு உதாரணமாக, உலகநாடுகள் கழகம், ஐக்கிய நாடுகள் அமைப்பு, அணிசேரா நாடுகள் அமைப்பு, மற்றும் தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பு ஆகிய நிறுவனங்களைக் கூறலாம்.

### 10.4 பன்னாட்டு அரசியல் நிறுவனங்களின் தொடர்ச்சி மற்றும் மாறுதல்

பன்னாட்டு அமைப்பு, நாடுகளில் எல்லைகள், அவைகள் பின்பற்றும் விதிகள், நடைமுறைகள், அவற்றிற்கு கிடைக்கின்ற வளங்கள் ஆதாரங்கள் மற்றும் அவைகளை நடைமுறைப்படுத்துகின்ற முறையில் மாறுபடுகின்றது.

நாடுகளுக்கிடையே உள்ள தொடர்புகள், அவைகள் அமைந்திருக்கின்ற இடங்கள் மற்றும் காலங்களைப் பொறுத்து அமைகின்றன. அவை சூழ்நிலைகளுக்கேற்ப மாறுபடும் தன்மையுடையவை.

இந்த மாறுதல்களுக்கேற்பவோ அந்தந்த நாடுகளில் செயல்படுகின்ற நிறுவனங்களுடைய திறமைகளுக்கும் அனுபவங்களுக்கும் ஏற்பவோ அவற்றினுடைய வரலாறுகள் அமைகின்றன அரசியல் துறையில் ஏற்படும் இழப்புகள் மற்றும் சாதனைகள் அதற்கு தகுந்தாற்போலவே சிறந்ததாக மற்றும் நிலையானதாக அல்லது தற்காலிகமானதாக மற்றும் சிறப்பற்றதாக மாற்றம் பெறுகின்றன.

குறிப்பாக 1648-இல் செய்துகொள்ளப்பட்ட வெஸ்ட் பாலியர் ஒப்பந்தம் உலகநாடுகள் அமைப்பில் பல நிகழ்வுகளை ஏற்படுத்தி மாற்றங்கள் செய்வதற்கு காரணமாக இருந்தது. அவற்றை முழுவதுமாக வரலாற்று நூல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

இந்த ஒப்பந்தத்திற்கு பிறகு 1917-ஆம் ஆண்டில் சோவியத் குடியரசுத் தோன்றியது. ஐக்கிய அமெரிக்க நாட்டிற்கு பெரிய சவாலாக வளர்ந்தது. அதனால் பன்னாட்டு அரசியலில் பல மாற்றங்களும் உயர்வுத் தாழ்வுகளும் ஏற்பட்டன. ஆனால் சோவியத் குடியரசு மறைந்த பிறகு பன்னாட்டு உறவுமுறைகளில் பெருத்த மாற்றங்கள் ஏற்பட்டன. ஐக்கிய அமெரிக்க நாட்டிற்கு ஏற்பட்ட சவாலும் அத்துடன் ஒழிந்தது.

## 10.5 இன்றைய உலக அமைப்பு முறை

சோவியத் யூனியன் மறைவுக் காரணமாக இரண்டாக பிரிக்கப்பட்டிருந்த இருமுனை (Bipolar) உலக அமைப்பு மறைந்தது சோவியத் குடியரசு இருந்த வரையிலும் சில நாடுகள் அமெரிக்காவை ஆதரிப்பவை என்றும் வேறு சில நாடுகள் சோவியத் யூனியனை ஆதரிப்பவை என்றும் உலகம் பிளவுப்பட்டிருந்தது.

சோவியத் யூனியன் மறைவிற்குப் பிறகு உலகம் ஒரு முனை உலக அமைப்பாக (Uni polar) அதாவது அமெரிக்கா ஒன்றே உலகம் முழுவதும் ஆதிக்கம் செலுத்தும் செல்வாக்குள்ளதாக இருந்து வருகிறது.



## 10.6 ஒரு நாட்டு ஆதிக்கம்

1991-ல் நடைபெற்ற வளைகுடா நாடுகளுக்கு இடையிலான போர் ஒரு நாட்டு ஆதிக்கத்திற்கு வழி ஏற்படுத்தியது 1990-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2-ம் தேதி குவைத் அரசு மீது ஈராக் அரசு போர்த்தொடுத்தது.

இதனை எதிர்த்து ஐக்கிய நாடுகள் கழக அமைப்பின் தீர்மானத்தை ஒட்டி ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்து. வளைகுடா போரின்போது எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பின்படி அமெரிக்கா ஐக்கிய நாடுகள் ஐக்கிய நாடுகள் கழக அமைப்பையும் மிஞ்சியதாக அதையும் கட்டுப்படுத்துவதாக இருந்தது என்று தெரிய வந்தது.

இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நாடுகளின் மேலாதிக்கம் மறைந்து ஒரு நாட்டு மேலாதிக்கம் நடைமுறையில் இருக்கின்றபோது சிறிய நாடுகள் மதிக்கப்படாமல் அவைகளுக்கு தீங்கு இழைக்கும்போக்கு அதிகரித்து வருகிறது.

## 10.7 உலக நாடுகள் கழகம் (League of Nations)

உலக நாடுகள் கழகம் ஐக்கிய நாடுகளில் கழகம் தோன்றுவதற்கு முன்னோடி அமைப்பாக அமைந்தது. இரண்டும் ஒரே மாதிரியான காரணங்களுக்காக, ஒரே மாதிரி சூழ்நிலைகளில் ஏற்பட்டன.

முதலாம் உலகப்போர் முடிந்து வர்சேல் ஒப்பந்த அடிப்படையில் உலக நாடுகளிடையே ஒத்துழைப்பு, அமைதி ஏற்படுத்துதல் மற்றும் தேச பாதுகாப்புக்கு உறுதியளித்தல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 1919-ம் ஆண்டு உலக நாடுகள் கழகம் தோற்றுவிக்கப்பட்டது.

அதே காலகட்டத்தில்தான் உலக தொழிலாளர் அமைப்பும் ஏற்படுத்தப்பட்டது. இரண்டாம் உலகப்போர் ஏற்படுவதை தடுக்கத் தவறிய காரணத்தால் உலக நாடுகள் கழகம் செயலற்றதாயிற்று.

**உலக நாடுகள் கழக தோல்விக்கான காரணம் (1921-1939)**

அரசியலில் உலக நாடுகள் கழகம் தோற்றுவிக்கப்பட்டதுதான் முக்கியமான ஒரு உலக நிறுவனத்திற்கு உதாரணமாகும். இதன் தோல்விக்கு முக்கியமான காரணம் அப்போது நடைமுறையில் இருந்த நாடுகள் அமைப்பை அப்படியே பராமரிக்க வேண்டும் என்ற நோக்கமேயாகும்.

அதாவது வர்சேல் ஒப்பந்தத்தின் படி நடைமுறைக்கு வந்த உலக அமைப்பை பராமரிப்பதே ஆகும். இதர முக்கியக் காரணங்கள் வருமாறு;

1. அது உலக அமைப்பு என்ற தன்மையை இழந்தது.
2. அது ஐரோப்பியர்களின் மடமாக செயலாற்றியது.
3. அமெரிக்க மேல் சபை உலக நாடுகள் கழக ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தது. அதனால் இக்கழகத்தை ஏற்படுத்துவதற்கு காரணமாக இருந்த அமெரிக்கா மற்றும் அதன் தலைவர் உட்ரோவில்சன் அதில் உறுப்பினராக சேரமுடியாமல் போனது.
4. 1931-ஆம் ஆண்டு மஞ்சூரியா மீதான ஜப்பான் ஆக்கிரமிப்பை தடுக்க முடியாமல் போனது.
5. 1931-ஆம் ஆண்டு முசோலினி அபிசினியாவை ஆக்கிரமித்தப் பொழுது தடைச் செய்ய முடியாமல் போனது.
6. ஐரோப்பாவின் இதர பகுதிகளில் குடியாட்சிகள் மறைந்து சர்வாதிகார ஆட்சிகள் ஏற்பட்டது.
7. ஜெர்மனியில் ஹிட்லர் ஆட்சிக்கு வந்தது. அவருடைய சோசலிசக் கட்சி அங்கு முக்கிய பங்கு வகித்தது.
8. உலகப் பொருளாதாரத்தில் இக்கழகத்திற்கு எவ்வித பங்கு பணியும் இல்லாமல் போனது.
9. இக்கழகத்திற்கு அமெரிக்கா தரவேண்டிய சந்தா தொகையை 25 விழுக்காடு அளவிற்கு குறைத்தது.



10. ஆக்கிரமிப்பு அரசுகளின் அடாவடித்தனத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனது.

**இக்கழகத்தின் வெற்றிகள்**

1. 1932-ம் ஆண்டு ஆயுத ஒழிப்பு மாநாடு நடைபெற முயற்சி எடுத்துக்கொண்டது.
2. அபின் மற்றும் மயக்கந்தரும் மருந்துப் பொருட்கள் வியாபாரத்தை வெற்றிகரமாக கட்டுப்படுத்தியது.
3. இக்கழகத்தின் அனுபவங்கள் ஐக்கிய நாடு கழகங்கள் அமைப்பிற்கு பொருத்தமானதாக அமைந்தது.

## 10.8 ஐக்கிய நாடுகள் கழக அமைப்பு (The United Nations Organisation)

ஐக்கிய நாடுகள் கழகம் என்ற பெயர் அமெரிக்க ஜனாதிபதியான ரூஸ்வெல்த் என்பவரால் தேர்ந்தெடுக்கப்பட்டு 1942-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி ஐக்கிய நாடுகள் கழக பிரகடனத்தில் முதன்முதலாக உபயோகத்திற்கு வந்தது. இரண்டாவது உலகப்போரின் போது எதிரிநாடுகளுடன் போரை தொடர்ந்து நடத்துவதற்கு 22 நாடுகளின் பிரதிநிதிகள் ஒத்துழைப்பு அளிப்பதாக வாக்குறுதித் தந்தார்கள். பிறகு 1945-ம் ஆண்டு ஐம்பது நாடுகள் அடங்கிய மாநாடு சான்பிரான்சிஸ்கோ நகரில் நடைப்பெற்றது.

அமெரிக்க, இங்கிலாந்து, சோவியத்யூனியன் மற்றும் சீன நாட்டு பிரதிநிதிகள் கொடுத்த ஆலோசனையின் பேரில் 1944-ம் ஆண்டு அக்டோபர் மாதம் டம்பார்ட்டன் ஒக்ஸ் என்ற ஊரில் நடந்த மாநாட்டில் ஐக்கிய நாடுகள் கழகசாசனத்தின் உள்ளடக்கங்கள் முடிவுச் செய்யப்பட்டது.

1945-ம் ஆண்டு சூன் மாதம் 26-ம் தேதி ஐம்பது நாடுகளின் பிரதிநிதிகள் இந்த சாசனத்தில் கையெழுத்திட்டனர். இந்த மாநாட்டில் கலந்துக்கொள்ளாமல் இருந்த போலண்ட்டு நாடு பிறகு தன்னுடைய கையெழுத்தை இட்டத்தின் மூலமாக அவற்றின் எண்ணிக்கை 51-ஆயிற்று.

1945-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ம் நாள் ஐக்கிய நாடுகள் கழகம் அதிகாரப்பூர்வமாக நடைமுறைக்கு வந்தது. இந்த அடிப்படையில் ஐக்கிய நாடுகள் கழக தினம் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 24-ம் தேதி எல்லா நாடுகளாலும் கடைப்பிடிக்கப் படுகிறது.

1945-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற்ற யால்தா (Yalta) மாநாட்டில் ஐக்கிய நாடுகள் கழக அமைப்புக்கான முடியும் அக்கழக சாசனத்தில் சேர்க்கப்பட வேண்டிய அம்சங்களும் சர்ச்சில், ரூஸ்வெல்த் மற்றும் ஸ்டாலின் ஆகியத் தலைவர்களால் முதன்முதலில் ஏற்றக்கொள்ளப்பட்டன. அதற்கு சான்பிரான்சிஸ்கோ மாநாடு இறுதி வடிவம் கொடுத்து மேலே சொல்லப்பட்டபடி ஐக்கிய நாடுகள் கழகம் செயலாற்றத் தொடங்கியது.

ஐக்கிய நாடுகள் கழக பேரவை 1948-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ம் தேதியன்று உலக மனித உரிமைகள் பிரகடனத்தை அறிவித்தது.

1. விதி1- அப்பிரகடனத்தின் விதி 2-ன் படி மக்கள் அனைவரும் பிறப்பினால் சமமானோர்கள். அவர்களுக்கு மரியாதையும் உரிமைகளும் சமஅளவில் உண்டு. அவர்கள் அனைவரும் அவர்கள் மனசாட்சிப்படி நடந்துக்கொண்டு மற்றோர்களை சகோதரத்துவ அன்போடு நடத்த வேண்டும்.

2. விதி2-ன் படி எல்லா மக்களும் இனம், நிறம், மொழி, சமயம், அரசியல் மற்றும் கருத்துக்கள் அடிப்படையிலோ ஆண் பெண் என்ற அடிப்படையிலோ வித்தியாசம் இல்லாமல் எல்லா சுதந்திரங்களையும், உரிமைகளையும் பெற்றுள்ளார்கள் என்று கூறுகிறது.



வில்சனால் வற்புறுத்தப்பட்ட கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட உலக நாடுகள் கழகத்தின் கொள்கை பெரும்பாலானவை ஐக்கிய நாடுகள் கழகத்தின் கொள்கைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

### ஐக்கிய நாடுகள் கழக சாசனம் (UNO Charter)

ஐக்கிய நாடுகள் கழக சாசனம் அதில் அங்கம் வகிக்கும் நாடுகளுடைய உரிமைகள் அவை நிறைவேற்ற வேண்டிய கடமைகள் மற்றும் அக்கழகத்தின் உறுப்புகள் அதைப்பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ஆகியவற்றை விரிவாக எடுத்துரைக்கிறது.

### நோக்கங்கள்

ஐக்கிய நாடுகள் கழக சாசனத்தில் உலக அமைதி மற்றும் உலக நாடுகளின் பாதுகாப்பு முக்கியமான நோக்கங்களாக சொல்லப்பட்டிருக்கிறது.

1. உலகநாடுகளுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்துதல்.
2. பொருளாதார சமூக பண்பாடு மற்றும் மனிதாபிமான பிரச்சனைகளை தீர்த்து வைப்பதில் ஒத்துழைத்தல்.
3. சுதந்திரம் மற்றும் உரிமைகளை மதித்து அவைகளுக்கு ஆதரவுத் தருதல்.
4. மேற்கூறியவற்றை அடைவதற்கு வழிவகைகள் கண்டு அவை நிறைவேற கருவியாக இருத்தல்.

### அமைப்பு

ஐக்கிய நாடுகள் கழகத்தின் ஆறு முக்கிய உறுப்புகள் உள்ளன. அவை

1. பொதுப்பேரவை
2. பாதுகாப்பு மன்றம்

3. பொரளாதார மற்றும் சமுதாய மன்றம்

4. தர்மகர்த்தா கழகம்

5. உலக நீதி மன்றம்

6. செயலகம்

இவைத் தவிர ஐக்கிய நாடுகள் கழகத்தைச் சேர்ந்த பதினைந்து பிரதிநிதி மன்றங்களும், இவை எல்லாவற்றிற்கும் பொதுவான பல்வேறு இதர அமைப்புகளும் உலகெங்கும் இருக்கின்றன. இவைகளுடைய நோக்கங்களும் திட்டங்களும் உலகளாவியவை.

**ஐக்கிய நாடுகள் கழக குடும்பம்**

மேற்க்கூறப்பட்ட அமைப்புகளோடு குழந்தைகள் நல நிதிக் கழகம், முன்னேற்ற திட்ட குழு இன்னும் சிறப்புமிக்க இதர பிரதிநிதி மன்றங்கள் பல உள்ளன. இவையெல்லாம் உலக நாடுகளில் சமுதாய முன்னேற்றம் பொருளாதார வளர்ச்சி மற்றும் தேவைப்படும் உதவிகள் சீர்த்திருத்தங்கள் ஆகியவற்றிற்கு தகுந்த ஆலோசனைகள் வழங்குவதோடு அவற்றிற்கு பொருளாதார உதவிகளையும் செய்து வருகின்றன.

**ஐக்கிய நாடுகள் கழக பொதுப் பேரவை**

இப்பேரவை ஐக்கிய நாடுகள் கழகத்தின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஆதாரமாக இருக்கிறது. அதில் உறுப்பு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இருக்கிறார்கள். ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரே ஒரு வாக்கு மட்டும் தரப்படுகிறது. அமைதி, பாதுகாப்பு புது உறுப்பினர்களை அனுமதித்தல் மற்றும் நிதி சம்மந்தப்பட்ட பிரச்சினைகள் பற்றிய முடிவுகளை பேரவை எடுக்கிறது.

**பொதுப் பேரவையின் குழுக்கள்**

பேரவையில் குழுக்களின் எண்ணிக்கை ஆறு.

1. முதல் குழு, ஆயுத ஒழிப்பு மற்றும் உலக நாடுகளின் பாதுகாப்புப் பற்றியது.



2. இரண்டாவது குழு, பொருளாதார மற்றும் நிதி சம்மந்தப்பட்டது.
3. மூன்றாவது சமூக மனிதாபிமான மற்றும் பண்பாடுப் பற்றியக் குழு.
4. நான்காவது, காலனி ஒழிப்பு மற்றும் சிறப்பு அரசியல் நிலை.
5. ஐந்தாவது நிரிவாகம் மற்றும் வரவுச் செலவுத் திட்டம் பற்றிய குழு.
6. ஆறாவது, சட்டம், நீதி பற்றிய குழு.

குறிப்பிட்டச் சில பிரச்சினைகள் குழுக்களின் முழுக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்டு கூட்டம் முடிவில் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. குழுக் கூட்டங்களில் முடிவுகள் சாதாரன பெரும்பான்மை அடிப்படையிலேயே எடுக்கப்படுகின்றன.

இவ்வாறு குழுக்களால் எடுக்கப்படும் முடிவுகள் பொதுப்பேரவையின் பார்வைக்கு அனுப்பப்படுகின்றன. பொதுப் பேரவையில் கலந்துக் கொண்டுள்ள பல்வேறு அரசாங்கங்களின் பிரதிநிதிகள் சம்மந்தப்பட்ட பொருள்கள் மற்றும் பிரச்சனைகள் பற்றிய கருத்துக்களையும் அவற்றின் நிறைவுகளையும், குறைகளையும் எடுத்துரைக்கின்றனர்.


பேரவையில் விவாதங்கள், எடுத்துக் கொள்ளப்பட்டப் பொருள்களின் தராதர அடிப்படையில் நடைப் பெறுகின்றன. விவாத முடிவில் வாக்கெடுக்கப்பட்டு பெரும்பான்மை அடிப்படையில் நிறைவேற்றப்படுகின்றன.

இவ்வாறு பொதுப் பேரவையால் ஏற்றுக் கொள்ளப்படும் தீர்மானங்கள் ஐக்கிய நாடுகள் கழகத்தின் பணிகளுக்கு ஆதாரமாகும்.

மேல்சொல்லப்பட்டவாறு எடுக்கப்பட்ட முடிவுகள் கீழே தரப்படும் முறைகளின் அடிப்படையில் நடைமுறைப் படுத்தப் படுகின்றன.

ஆயுத ஒழிப்பு, அமைதி காத்தல், வளர்ச்சி மற்றும் மனித உரிமைகள் பற்றி பொதுப் பேரவையால் நியமிக்கப்படும் குழுக்கள் மற்றிம் இதர அமைப்புக்கள் இவற்றைப் பற்றி விவாதித்து தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

**ஐக்கிய நாடுகள் கழகத்தின் அமைப்பு**




சில சமயங்களில் பொதுப் பேரவையால் அழைக்கப்படும் உலக மாநாடுகளிலும் இவை விவாதிக்கப்பட்டு நிறைவேற்ற நடவடுக்கைகள் எடுக்கப்படுகின்றது.



ஐக்கிய நாடுகளின் கழக பொதுச் செயலர் மற்றும் செயலகம் அந்த செயலகத்தில் பணிபுரியும் பல நாடுகளைச் சேர்ந்த ஊழியர்கள் போன்றவர்களாலும் நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

**பணிகளும் அதிகாரங்களும்**

**பொதுப்பேரவை**

**பொதுப் பேரவையின் பணிகளும் அதிகாரங்களும் வருமாறு,**

1. உலக அமைதி காத்தல், உலக நாடுகளின் பாதுகாப்பை உறுதி செய்ய ஆயுதங்கள், மற்றும் போர்க்கருவிகள் பற்றி தீர்மானிக்கப்பட வேண்டிய கொள்கைகள் அவற்றை நிறைவேற்றுவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி ஆலோசித்து முடிவெடுத்தல்.
2. ஐக்கிய நாடுகள் கழக நிறுவனங்களின் பணிகள் மற்றும் அதிகாரங்கள் பாதிக்கப்படும்போது அதைப் பற்றி ஆலோசித்து முடிவெடுத்தல்.
3. உலக அரசியல் நடப்புகள், வளர்ச்சி, பன்னாட்டு சட்டம், மனித உரிமைகள், மனித சுதந்திரம், மற்றும் பொருளாதார, சமூக, கல்வி, சுகாதாரம் மற்றும் பன்பாட்டுத் துறைகளில் எடுக்கப்பட வேண்டிய முடிவுகள் பற்றி ஆய்வு செய்தல்.
4. நாடுகளுக்கு இடையே ஏற்படும் சச்சரவுகளை அமைதியான முறையில் தீர்த்து வைக்கக் கூடிய பரிந்துரைகள் பற்றி முடிவெடுத்தல்.
5. பாதுகாப்பு மன்றம் மற்றும் சமுக பொருளாதார மன்றம் ஆகியவற்றிற்கு தற்காலிகமாக நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினாகளைத் தேர்ந்தெடுப்பது.
6. பன்னாட்டு நீதி மன்றத்திற்கு நீதிபதிகளை தேர்ந்தெடுத்தல்.
7. ஐக்கிய நாடுகள் கழக பொதுச் செயலரை தேர்ந்தெடுத்து நியமித்தல்.

8. பொதுப்பேரவையின் வருடாந்திர கூட்டங்கள் செப்டம்பர் மாதத்தில் தொடங்குகின்றன. ஒவ்வொரு வருடமும் நடைபெறுகின்ற கூட்டத்திற்கானத் தலைவர் அப்போதே தேர்ந்தெடுக்கப்படுவார். இருபத்தொரு துணைத் தலைவர்கள், முக்கியக் குழுக்களின் தலைவர்கள் எல்லோரும் கூட்டத் தொடக்கத்திலேயே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பூகோள ரீதியாக ஆப்ரிக்கா, ஆசியா, மேற்கு ஐரோப்பா, இலத்தீன் அமெரிக்கா, கரிபியன் மற்றும் மேற்கு ஐரோப்பாவைச் சேர்ந்தவர்கள் இப்பதவிகளுக்கு தேர்வு செய்யப்படுகிறார்கள்.

9. ஆண்டு தோறும் நடைபெறுகின்ற முறைப்படியான கூட்டங்கள் தவிர தனிக்கூட்டங்களும் கூட்டப்படலாம். இக்கூட்டங்கள் பொதுப்பேரவை உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் அல்லது பாதுகாப்பு மன்ற உறுப்பினரில் யாராவது ஒருவர் கேட்டுக் கொள்ளும்பொழுது கூட்டப்படுகின்றன. வருடாந்திரக் கூட்டங்கள் கூடும்போது பொதுப் பேரவையில் பொதுவான விவாதங்கள் நடைபெறுகின்றன. இத்தகைய கூட்டங்களில் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் கலந்துக் கொண்டு உலக நிலவரம், உலக அரசியல் இவை பற்றிய பிரச்சனைகளை அவர்களுடைய உரைகளில் குறிப்பிட்டு பேசுவது நடைமுறையில் இருந்து வருகிறது.

***பாதுகாப்புச் சபை***

பாதுகாப்புச் சபையின் தலையாயப் பொறுப்பு பன்னாட்டு அமைதியையும், பாதுகாப்பையும் உறுதி செய்வதாகும். அது அதனுடைய பணிகளை தொடர்ந்து செய்வதற்கு வசதியாக உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நிரந்தரமாக தங்கியிருப்பார்கள்.

எப்பொழுதெல்லாம் அமைதிக்கு பங்கம் விளைகிறதோ, அப்பொழுதெல்லாம் பாதுகாப்புச்சபை உடனடியாக கூடி தனது பரிந்துரைகளை போரில் ஈடுபட்டுள்ள நாடுகளை அமைதியான



முறையில் ஒப்பந்தம் ஏற்படுத்த முனையும். பல விஷயங்களில், பாதுகாப்புச்சபை நேரடியாகவே தனது சோதனை செய்யவும், சமாதானப்படுத்தவும் விழையலாம். பாதுகாப்புச்சபை சிறப்பு தூதுவர்களையும், பிரதிநிதிகளையும் அல்லது பொதுச் செயலாளரை அத்தூதுவர்களை நியமிக்க பணிக்கலாம். மேலும் பாதுகாப்புச்சபை அமைதியான முறையில் போரை முடிவுக்கு கொண்டுவரலாம். எப்பொழுதெல்லாம் நாடுகளுக்கிடையேயான பிணக்குகள் போருக்கு இட்டு செல்கிறதோ அப்பொழுதெல்லாம் பாதுகாப்புச்சபையின் முழு முதன் நோக்கம் போரை முடிவுக்குக் கொண்டுவருவதாகும்.

பல நேரங்கள் பாதுகாப்புச்சபை போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்த பாடுபட்டு போட்டி நாடுகளுக்கிடையே பிணக்குகளை தீர்த்து வைக்கிறது. பாதுகாப்புச்சபையே ஐ.நா அமைதிப்படையை அனுப்பி அமைதியான முறையில் போரை தீர்த்து வைக்க உதவுகிறது.

பாதுகாப்புச்சபை அமைதிக்கு பங்கம் விளைவிக்கின்ற நாட்டின் மீது பொருளாதார தடை விதிக்கவும், கூட்டாக இராணுவ நடவடிக்கையும் மேற்கொள்ளலாம். ஐ.நாவின் எந்த உறுப்பு நாடு ஏதேனும் பாதுகாப்புச்சபையின் நடவடிக்கைக்கு எதிராவோ, பணிய மறுக்கவோ செய்தால் அவ்வுறுப்பு நாட்டின் உரிமைகளையும் சலுகைகளையும் ஐக்கிய நாடுகள் கழக பொதுச் சபையிலிருந்து நீக்கலாம். பாதுகாப்புச்சபை ஐ.நா வின் உறுப்பு நாடுகள் ஐ.நா வின் சாசனத்தை மதிக்காமல் இருந்தால் ஐ.நா உறுப்பு நாட்டிற்கான பிரதிநிதித்துவத்தை நீக்கலாம். பாதுகாப்புச்சபையின் உறுப்பினரல்லாத ஐக்கிய நாடுகளின் சபையின் உறுப்பு நாட்டை பாதுகாப்புச்சபையின் விவாதங்களில் பங்கேற்க அழைக்கலாம். ஆனால் அந்நாட்டிற்கு வாக்களிக்கும் உரிமையில்லை. மேலும், ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளிடையேயும், உறுப்பு நாடுகள் அல்லாத நாடுகளுக்கிடையே பிணக்குகளை தீர்த்து வைக்க உதவுகிறது. அந்நாடுகளையும் விவாதங்களுக்கு அழைக்கலாம்.

பாதுகாப்புச்சபையின் தலைவர் ஆங்கில எழுத்து முறையில் மாதம் ஒரு முறை சுழற்சி முறையில் உறுப்பு நாடகளுக்கிடையே தேர்ந்தெடுக்கப்படுகின்றார். பாதுகாப்பு சபையின் 15 உறுப்பு நாடுகள் உள்ளன என ஏற்கனவே பார்த்தோம். ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகள் தவிர 10 நிரந்திரமில்லாத உறுப்பு நாடுகள் பொதுச் சபையின் மூலம் இரண்டாண்டுகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

**பாதுகாப்புச்சபையின் நிரந்தர உறுப்பு நாடுகள்**

1. அமெரிக்க ஐக்கிய நாடுகள்
2. ரஷ்யா
3. ஐக்கிய இங்கிலாந்து
4. பிரான்ஸ்
5. சீனா

ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு வாக்கு என்ற முறையில் முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு 9 வாக்குகள் தேவைப்படுகின்றன. அவ் 9 வாக்குகளில் 5 நிரந்தர உறுப்பு நாடுகளின் வாக்குக் கட்டாயம் தேவை. தீமானம் ஒன்றை ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளும் ஏற்றுக் கொள்ளும் விதி “வல்லரசு ஒற்றுமை” என்று அழைக்கப்படுகிறது.

இவற்றில் ஒன்று ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும் அத்தீர்மானம் நிறைவேறாது. அம்முறை தடுப்பாணை (Veto) அதிகாரம் எனப்படும். ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளும் பாதுகாப்புச்சபையில் எடுக்கப்படும் முடிவுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். பாதுகாப்புச்சபையின் முடிவுகளை உறுப்பு நாடுகள் ஏற்றுக் கொள்வது கட்டாயமாகும்.



**பொருளாதார மற்றும் சமூக கழகம்**

ஐக்கிய நாடுகள் கழகத்தைச் சேர்ந்த 14 ஏஜென்சிகளின் அலுவல்களை இது ஒருங்கிணைக்கிறது. மேலும் பத்து பணிசார்ந்த கழகங்கள் மற்றும் ஐந்து பிரதேச கழகங்கள் மற்றும் பதினொன்று ஐக்கிய நாடுகள் கழக நிதி நிறுவனங்கள் சம்மந்தப்பட்ட திட்டங்கள் கொள்கைகள் ஆகியவைகளை இக்கழகம் பரிசீலித்து ஐக்கிய நாடுகள் கழகத்திற்கு மேற்கொண்டுநடவடிக்கைகள் எடுக்க பரிந்துரைக்கிறது. இக்கழகம் வேலைவாய்ப்பு பொருளாதார வளர்ச்சி சமூக முன்னேற்றம் ஆகிய துறைகளில் உயர் நிலையை எட்டுவதற்கு உறுப்பு நாடுகளுக்கு உதவுகிறது. இந்த பணிக்காக கிட்டத்தட்ட 2100-க்கும் அதிகமான கல்வியாளர்கள், வர்த்தகப் பிரதிநிதிகள் மற்றும் இதர அமைப்புக்களை இது கலந்து ஆலோசிக்கிறது. இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டு இதன் தலைவராக எச்.ஈ. கேர் ரோசந்தால் என்பவர் இருக்கிறார். இக்கழகம் அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தைக் கூட்டி முடிவெடுப்பதற்கு தேவையாக உள்ள ஆலோசனைகளை வழங்குகிறது.

**தர்மகர்த்தா கழகம்**

1994-ஆண்டு நவம்பர் மாதம் 1-ஆம் தேதி முதல் இக்கழகம் செயல்படவில்லை. கடைசியாக இருந்த தர்மகர்த்தா நாடான பலோ 1994-ம் ஆண்டு அக்டோபர் முதல் தேதி சுதந்திரம் பெற்றது. இக்கழகம் செய்ய வேண்டிய கடமை அத்துடன் முடிந்துப் போனது.

இக்கழகம் சுதந்திரம் பெறாமல் இருந்த நாடுகளுக்கு சுதந்திரம் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை நோக்கமாகக் கொண்டிருந்தது. முதலாம் உலகப்போருக்கும் இரண்டாம் உலகப்போருக்கும் பின்னால் சுமார் 100 நாடுகள் சுதந்திரம் பெற வேண்டியவைகளாக இருந்தன. இவற்றில் பல அவைகளாகவே விடுதலைப் பெற்றுவிட்டன.

விடுதலைப் பெறாமல் இருந்த இதர நாடுகளுக்கு சீனா, பிரான்ஸ், ரஷ்யா, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து விடுதலைப் பெற்றுத் தரும் பணியை இது மேற்கொண்டிருந்தது. இப்பணியை சம்மந்தப்பட்ட நாடுகளிலிருந்து விண்ணப்பங்களைப் பெற்று அவற்றின் மேல் நடவடிக்கை எடுத்து விடுதலைப்பெற்றுத் தரும் பணியை இது செய்தது.

### உலக நீதி மன்றம்

ஐக்கிய நாடுகள் கழகத்தில் இது ஒரு முக்கியமான அங்கமாகும். நீதிமன்றம் நெதர்லாந்து நாட்டில் தி.ஹேக் என்ற ஊரில் "அமைதி அரண்மனை" என்ற கட்டிடத்தில் துவக்கப்பட்டு 1946-ஆம் ஆண்டு பணியாற்றத் தொடங்கியது. இது உலக நாடுகள் கழகத்தால் ஏற்படுத்தப்பட்ட உலக நீதி மன்றத்தின் மறுபதிப்பாகும்.

### இந்நீதிமன்றத்தின் பணிகள்

இந்த நீதி மன்றம் இரு வகையான பணிகளைச் செய்கிறது. முதலாவது ஐக்கிய நாடுகள் கழகத்தில் உறுப்பினர்களாக உள்ள நாடுகளுக்கிடையே ஏற்படும் சட்டம் மற்றும் நியாய அடிப்படையில் ஏற்படும் தாவாக்களில் பன்னாட்டுச் சட்ட அடிப்படையில் அவைகளைத் தீர்த்து வைக்கிறது.

இரண்டாவதாக ஐக்கிய நாடுகள் கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனங்களுக்கிடையே சட்ட சம்மந்தமான பிரச்சனைகள் ஏற்படும்போது அவைகள் பற்றி ஆலோசனை வழங்குகிறது.

### நீதிமன்றத்தின் அமைப்பு

இந்த நீதிமன்றத்தில் மொத்தம் 10 நீதிபதிகள் இருக்கின்றார்கள். இவர்களின் பதவிக்காலம் 9 ஆண்டுகள் ஆகும்.



மூன்றில் ஒரு பங்கு நீதிபதிகள் மூன்றாண்டுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பதவிக்காலம் முடிந்தாலும் அவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம் இந்த நீதிபதிகள் பல்வேறு நாடுகளை சேர்ந்தவர்களாக இருப்பார்கள்.

அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்களோ அந்த நாட்டில், உயர் நிலையில் உள்ள நீதிமன்றத்தில் நியமிக்கப்படுவதற்கு என்னத் தகுதிகள் வேண்டுமோ அந்தத் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். இவர்கள் அவர்கள் சேர்ந்த நாட்டினுடைய பிரதிநிதிகளாகக் கருதப்படமாட்டார்கள்.

இந் நீதிமன்றம் உலகத்தில் நடைமுறையில் இருந்து வரும் பண்பாடு, மற்றும் நீதி வழங்கும் முறைகளை பிரதிபலிப்பதாக செயல்பட வேண்டும். இந்த நீதிபதிகள் ஐக்கிய நாடுகள் கழக பொதுப் பேரவையால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதனை பாதுகாப்புச் சபையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

### ஐக்கிய நாடுகள் கழக செயலகம்

ஐக்கிய நாடுகள் கழகத்தில் பல்வேறு பகுதிகளில் இயங்கும் அலுவலகங்களில் பல்வேறு நாடுகள் சேர்ந்தவர்கள் அலுவலர்களாக நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் ஐக்கிய நாடுகள் கழகத்தில் கொள்கைகயையும் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தும் பணிகளை செய்கிறார்கள்.

இவர்களுக்கெல்லாம் தலைவராக பொதுப்பேரவையால் பரிந்துரைக்கப்பட்டு பாதுகாப்புக் சபையால் நியமிக்கப்படுகின்ற பொதுச் செயலாளர் தலைமை வகிக்கிறார். இவருடைய பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும். இவர் மீண்டும் இந்த பதவிக்கு நியமிக்கப்படலாம்.

செயலகத்தில் பணிகள் பலதரப்பட்டவை இவற்றில் முக்கியமானவை உலக அமைதிக்கான நடவடிக்கைகளை செயல்படுத்துவது அரசுகளுக்கிடையே ஏற்படும் சச்சரவுகளில்

சமரசம் செய்வது சமூக பொருளாதார துறைகளில் ஏற்படும் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றின் அடிப்படையில் தேவையான திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதல், மற்றும் மனித உரிமைகள் மீறப்படாமல் பாதுகாத்தல் போன்றவையாகும்.

இச்செயலகம் ஐக்கிய நாடுகள் கழகம் என்னென்னப் பணிகளையும் கடமைகளையும் செய்து வருகிறது என்பதை தகவல் தொடர்பு சாதனங்கள் மூலமாக அவ்வப்போது உலக நாடுகளுக்குத் தெரிவிப்பது. உலகப் பிரச்சனைகள் பற்றி மாநாடுகள் நடத்துவது, மற்றும் ஐக்கிய நாடுகள் கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அதிகாரப்பூர்வமான மொழிகளுக்கு மொழி பெயர்ப்புகளை இதர மொழிகளில் வெளியிடுவது ஆகிய பல பணிகளைச் செய்து வருகிறது.

ஐக்கிய நாடுகள் கழகத்தின் தலைமையகம் அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரில் இயங்குகிறது. இதனுடைய கிளைகள் பல நாடுகளில் இருக்கின்றன. அவற்றில் குறிப்பிடத் தக்கவை அடிஸ் அபாபா, பேங்காக், பேரூட், ஜெனிவா, நைரோபி, சாண்டியாகோ மற்றும் வியன்னா நகரங்களில் செயல்படுகின்றன.

## 10.9 ஐக்கிய நாடுகள் கழகத்தின் இதர பிரதிநிதித்துவ அமைப்புகள்

**ஐக்கிய நாடுகள் கழகத்தின் முக்கிய அமைப்புகள்**

- ஐக்கிய நாடுகள் கழகத்தின் உணவு மற்றும் வேளாண்மை **(FAO)**-க் கழகம்.
- சர்வதேச அணுசக்தி அமைப்பு **(IAEA),** வியன்னா, ஆஸ்திரியா
- சர்வதேச விமானப் போக்குவரத்து அமைப்பு **(ICAO)** மனிடிரியல் – கனடா,



- சர்வதேச ஆட்சிப் பணி ஆணையம், **(ICSC)** நியூயார்க், ஐக்கிய அமெரிக்கா.
- பன்னாட்டு நீதிமன்றம் **(ICJ)** திஹேக், நெதர்லாந்து.
- பன்னாட்டு முன்னேற்ற அமைப்பு **(IDA)** வாஷிங்டன் ஐக்கிய அமெரிக்கா, (உலகவங்கி குழு)
- பன்னாட்டு நிதி – வேளாண்மை வளர்ச்சி வங்கி **(IFDA)** – ரோம், இத்தாலி.
- உலக தொழிலாளர்கள் அமைப்பு **(ILO)** ஜெனிவா, சுவிட்சர்லாந்து.
- பன்னாட்டு கடல்வாழ் அமைப்பு **(IMO)** லண்டன், இங்கிலாந்து.
- உலக நிதி நிறுவனம் **(IMF)** வாஷிங்டன் ஐக்கிய அமெரிக்கா.
- சர்வதேச பெண்கள் முன்னேற்றம், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி அமைப்பு **(INSTRAW)** சாந்தே டோமின்கே.
- பன்னாட்டு தொலை தொடர்பு மையம் **(ITO)** ஜெனிவா, சுவிட்சர்லாந்து.
- உலக வர்த்தகமையம் **(ITC)** - ஜெனிவா, சுவிட்சர்லாந்து **(UNCTAD / WTO)**
- ஐக்கிய நாடுகளின் கூட்டு செயல் திட்டம் – **HIV / AIDS (UNAIDS)** ஜெனிவா, சுவிட்சர்லாந்து.
- செய்தி சாதனமும் அமைதி நிறுவனமும் **(University of Peace)** பாரிஸ், பிரான்ஸ்.
- ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நலநிதி **(UNICEF)** நியூயார்க், ஐக்கிய அமெரிக்கா நாடுகள்.
- ஐக்கிய நாடுகளின் வார்த்தக முன்னேற்ற மாநாடு **(UNCTAO)** ஜெனிவா, சுவிட்சர்லாந்து.
- ஐக்கிய நாடுகளின் சர்வதேச மருந்து கட்டுப்பாடு **(Drug Control)** திட்டம் **(UNDCP)** வியன்னா, ஆஸ்திரியா.

- ஐக்கிய நாடுகளின் பெண்கள் நல முன்னேற்ற நிதி. (UNIFEM) - நியூயார்க், ஐக்கிய அமெரிக்க நாடு.
- ஐக்கிய நாடுகளின் முன்னேற்ற திட்டங்கள் (UNDP) நியூயார்க், அமெரிக்க ஐக்கிய நாடு.
- ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு (UNESCO) பாரிஸ், பிரான்ஸ்
- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டப்பணிகள் (UNEP) நைரோபி - கென்யா
- ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையம், (OHCHR) ஜெனிவா, சுவிட்சர்லாந்து.
- ஐக்கிய நாடுகளின் தொழில் துறை முன்னேற்ற அமைப்பு (UNIDO) வியன்னா, ஆஸ்திரியா
- ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதி - (UNFPA) நியூயார்க், ஐக்கிய அமெரிக்க நாடு.
- ஐக்கிய நாடுகளின் பல்கலைக்கழகம் (UNU) டோக்கியோ, ஜப்பான்.
- ஐக்கிய நாடுகள் தொண்டர்கள் (UNU) பான், ஜெர்மனி
- பன்னாட்டு அஞ்சல் கழகம் (UPU) பெர்ன், சுவிட்சர்லாந்து
- பெண்கள் காப்பகம் - நியூயார்க், அமெரிக்க ஐக்கிய நாடு
- உலகவங்கி குழுமம் - வாஷிங்டன், அமெரிக்கா ஐக்கிய நாடு
- உலக உணவு திட்டம் (WFD) ரோம், இத்தாலி
- உலக சுகாதார நிறுவனம் (WHO) ஜெனிவா, சுவிட்சர்லாந்து.
- உலக அறிவுசார் பொருள் கழகம் (WIPO) ஜெனிவா, சுவிட்சர்லாந்து
- உலக வானிலை அமைப்பு (WMO) ஜெனவா, சுவிட்சர்லாந்து
- உலக சுற்றுலா அமைப்பு - மேட்ரைட் - ஸ்பெயின்
- உலக வர்த்தக மையம் - (WTO) ஜெனிவா, சுவிட்சர்லாந்து



## I. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு : (SAARC)

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் ஒத்துழைப்புக் கழகம் துவங்க 1980-இல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு 1981-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கையின் தலைநகர் கொழும்புவில் முதல் மாநாடு நடைப்பெற்றது. இதில் ஏழு நாடுகளைச் சேர்ந்து வெளிநாடு அல்வல்களை கவனிக்கும் செயலர்கள் கலந்துக் கொண்டார்கள். இவர்கள் பிறகு ஒரு குழுவாக அமைந்து சார்க்கில் அங்கம் வகிக்கும் நாடுகளின் நோக்கங்கள் மற்றும் பணிகளை முடிவுச் செய்தனர். அவற்றை இந்த நாடுகளைச் சேர்ந்த உயர்மட்டத் தலைவர்கள் ஏற்றுக் கொண்ட பிறகு நடைமுறைக்கு வந்தன கூட்டுறவு, வேளாண்மை, ஊராக முன்னேற்றம், செய்தித் தொடர்பு, வானிலை, நல்வாழ்வு மற்றும் மக்கள் தொகை பற்றியத் துறைகளில் இந்த நாடுகள் எல்லாம் கூடி காண வேண்டிய வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை முடிவுச் செய்து நடைமுறைப்படுத்த ஏற்றுக் கொள்ளப்பட்டது.

### இவ்வமைப்பின் உறுப்பினர்கள்

பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலத்தீவுகள் நேபாளம், பாகிஸ்தான் மற்றும் ஸ்ரீலங்கா ஆகியவை அங்கம் வகிக்கின்றன.

### நோக்கம்

இக்கூட்டமைப்பிலுள்ள மக்களுடைய தன்மைபிக்கை ஒத்துழைப்பு ஆகிய துறைகளில் இதர வட்டார அமைப்புகள், உலக அமைப்புகளோடு தொடர்பு வைத்துக் கொண்டு தேவையான உதவிகளை பெற்று வளர்ச்சிக்கு ஒன்றுபட்டு பணியாற்றுதல்.

### வெளியுறவு அமைச்சர்களின் நிலைக் குழு

இந்நிலைக்குழுவில் உறுப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் அங்கம் வகிக்கிறார்கள். தேவைக்குத் தகுந்தார் போல இக்குழு அதன் கூட்டங்களை நடத்தலாம் இருப்பினும் வருடத்தில்

இரண்டு முறைகள் தான் கூட்டங்கள் நடைப்பெறுகின்றன இக்குழுவினுடைய பணிகள் நிறைவேற்றத்திற்கு தேவையான உபக்குழுக்கள் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றன. இக்குழுவுக்கு செயலகம் ஒன்று இருக்கிறது. இதனுடைய நிதி ஆதாரம், பணிகள், கடமைகள் மற்றும் இதர அம்சங்கள் அதனால் ஏற்படுத்தப்படும் திட்டக்குழுவால் முடிவுச் செய்யப்படுகிறது.

**செயலகம்**

இதனுடைய செயலகத்தில் ஆறு நெறியாளர்கள் மற்றும் பொதுப் பணியாளர்கள் இருக்கிறார்கள். இதனுடைய தலைமைச் செயலர் உறுப்பு நாடுகளின் அமைச்சர்கள் குழுவால் இரண்டு ஆண்டு பதவிக் காலத்திற்கு நியமிக்கப்படுகிறார். இச் செயலகம் உறுப்பு நாடுகளுக்கு இடையே உள்ள ஒற்றுமை, மற்றும் கூட்டுறவை வளர்க்க அதனால் இயன்ற அனைத்தையும் சிறப்புடன் செய்து வருகிறது.

## II. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு (ASEAN)

1967-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8-ஆம் நாள் இவ்வமைப்பு பேங்காக் நகரில் தோற்றுவிக்கப்பட்டது. இதில் இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் தொடக்கத்தில் சேர்ந்தன. பிறகு 1999-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ஆம் நாள் கம்போடியாவும் அதில் சேர்ந்துக் கொண்டது. தற்போது இந்தியாவும் அதனுடைய தோழமை நாடாக இருந்து வருகிறது.

**நோக்கங்கள்**

**இவ்வமைப்பின் நோக்கங்கள் வருமாறு**

தென் கிழக்கு ஆசிய நாடுகளின் ஓட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி சமுதாய மேம்பாடு மற்றும் பண்பாட்டு வளர்ச்சி ஆகியவற்றை அறிந்து முன்னேற்றம் காண்பதற்கான நடவடிக்கைகளை அமைதியாக முறையில் செய்வது.



2-வது ஐக்கிய நாடுகள் கழக கொள்கைகள் அதன் முடிவுகள் வழிக்காட்டுதல்களை ஆதாரமாகக் கொண்டு உறுப்பு நாடுகளில் சட்டம் ஒழுங்கு மற்றும் நீதி ஆகியவற்றைப் பின்பற்றி இந்த நாடுகளின் உறுதியான நிலை மற்றும் அமைதி ஆகியவற்றிற்காகப் பாடுபடுதல்.

**அமைப்பு**

இவ்வமைப்பின் கொள்கை முடிவிற்கு உறுப்பு நாடுகளின் தலைவர்கள் அல்லது அரசாங்கத் தலைவர்கள் பொறுப்பேற்கும் குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அல்லாமலும் வெளியுறவு அமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்று இதற்கு உதவியாக இருந்து அவ்வப்போது தகுந்த ஆலோசனைகளை வழங்கிவருகிறது.

இக்குழுக்களின் கூட்டம் ஆண்டுக்கொரு முறை நடைப்பெறுகிறது. தேவைப்படும்பொழுது கூட்டங்களை நடத்தவும் வகைச் செய்யப்பட்டிருக்கிறது.

இக்கூட்டங்களில் வேளாண்மை, காடுகள், பொருளாதாரம், எரிசக்தி, சுற்றுச்சூழல், நிதி ஆதாரங்கள், செய்தித் தொடர்பு, முதலீடு செய்தல், தொழிலாளர் நலம், ஏழ்மை ஒழிப்பு, அறிவியல் குற்றங்கள், சுற்றுலா இளைஞர்நலன் மற்றும் முன்னேற்றம் ஆகிய பொருள்கள் பற்றி விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்படுகின்றன.

இவ்வமைப்பிற்கு அமைச்சர் தகுதியுடைய பொதுச் செயலர் ஒருவர் நியமிக்கப்படுகிறார். இவர் ஐந்தாண்டு காலம் பதவியில் இருப்பார். இவருக்கு உதவியாக இதர அலுவலர்கள் திறந்த முறை தேர்வுக் கொள்கை அடிப்படையில் உறுப்பு நாடுகளைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

இவ்வமைப்புக்கு உதவியாக பிரதிநிதிக்குழுக்கள் பலவும் பல நாடுகளில் தகவல்கள் சேகரித்து வேண்டிய உதவிகளை அவ்வப்போது செய்கின்றன.

**அரசியல் கூட்டுறவு**

சகிப்புத்தன்மை அடிப்படையல் பிரதேச ஒற்றுமை உறுதிப்பாடு மற்றும் முன்னேற்றம் ஆகிய துறைகளில் இந்நாடுகள் அரசியல் முடிவுகளை எடுக்கின்றன. இவைகளை நிறைவேற்றும்போது தன்னம்பிக்கை, தற்காப்பு, கூட்டுறவு, சகோதரத்துவம் மற்றும் ஒருவரை ஒருவர் மதித்து நடக்கும் கொள்கைகள் அடிப்படையில் அரசியல் முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

இதனால் ஏறத்தாழ 30 ஆண்டுக்காலமாக இந்நாடுகளில் ஒற்றுமை நிலவுகிறது. எதிர்ப்பு அநேகமாக இல்லை.

**பொருளாதார மற்றும் பணிசார் ஒத்துழைப்பு**

இக்கூட்டமைப்பு தோன்றிய போது உறுப்பு நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் மற்றும் வியாபாரம் சொல்லும்படியாக இலலை. ஆனால் 1967 முதல் 1970 வரை அதற்கும் பிறகு 1977 வரையிலான காலக் கட்டங்களில் இந்த நாடுகள் இத் துறைகளில் பல சலுகைகளை அளித்தன.

அதனால் வர்த்தகம் நிதி மற்றும் பொருளாதாரத் துறைகளில் முதலீடு செய்யும் துறையில் தடைகள் நீக்கப்பட்டன. இதனால் நெடுஞ்சாலைகள், இரயில்வே அமைப்புகள், முக்கியமானத் துறைமுகங்கள் மற்றும் கால்வாய், கடல் மற்றும் விமானப் போக்குவரத்துத் துறைகளில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன.

இதன் காரணமாக எல்லாத் துறைகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களும் வளர்ச்சிகளும் ஏற்பட்டதனால் மக்களினுடைய நலன் பாதுகாக்கப்படுகிறது.

**வெளியுறவுகள்**

2020-ஆம் ஆண்டுக்குள் விரைந்து முன்னேற்றம் காண வேண்டும் என்ற குறிக்கோளோடு இக்கூட்டமைப்பு நாடுகள் இதர உலக நாடுகளுடன் தங்களுடைய சாதனைகள் வளர்ச்சிகள், முன்னேற்றம் ஆகியவற்றை பகிர்ந்துக் கொள்கின்றன.



இந்த அடிப்படையில் 1992-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்த நாடுகளின் உச்சி மாநாட்டில் உலகில் உள்ள இதர நாடுகளோடு தொடர்ந்து நல்லுறவுகளை ஏற்படுத்திக் கொண்டு முன்னேற்றம் காண வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. எனவே ஆஸ்திரேலியா, கனடா, சீனா, நியூசிலாந்து, கொரியா போன்ற நாடுகளோடு நல்லுறவுகள் ஏற்படுத்திக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**III. அணிசேரா இயக்கம் (NAM)**

அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியன் நாடுகளுக்கிடையே 1949-89 ஆகிய காலக்கட்டத்தில் பனிப்போர் நடந்த போது அணிசேரா இயக்கம் தோன்றியது. இவ்வியக்கம் ஆரம்பத்தில் எழை நாடுகளுக்காக என்று ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் பிறகு எண்ணெய் வளம் மிக்க நாடுகளும் இதன் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

1995-ஆம் ஆண்டு இதன் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 113. இதனில் 85 எண்ணெய் உற்பத்திச் செய்யும் நாடுகள் இருந்தன. உலகப் பொருளாதார அடிப்படைக்கு மேல் வருமானமுள்ள நாடுகள் ஏழு மட்டுமே இருந்தன.

ஆனால் அணிசேரா நாடுகளினுடைய கூட்டு மக்கள் தொகை உலக மக்கள் தொகையில் பாதிக்கு மேலாகும். அணிசேரா இயக்கம் என்பது கொள்கை அல்ல. ஆனால் ஒரு நடைமுறை. இந்த இயக்கம் எந்த அணியையும் சேர்ந்திராமல் நடுநிலை வகித்தது.

துவக்கம் : சில சமயங்களில் பொதுப் பேரவையால் அழைக்கப்படும் உலக மாநாடுகளிலும் இவை விவாதிக்கப்பட்டு நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகளின் கழக பொதுச் செயலர் மற்றும் செயலகம் இந்த செயலகத்தில் பணிபுரியும் பல நாடுகளைச் சேர்ந்த ஊழியர்கள் போன்றவர்களாலும் நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

உலக நாடுகள் அமெரிக்காவையும் சோவியத் யூனியனையும் தலைமையாகக் கொண்ட தனித்தனி அணிகளாக பிளவுப்பட்டிருந்தன. இருப்பினும் 1920-இல் முன்றாம் அணி ஒன்று அணிசேரா இயக்கமாக தோன்றியது.

இந்த இயக்கம் இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு சுதந்திரம் பெற்ற நாடுகளை கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்தோனேசியாவில் பாண்டுங் என்ற நகரில் 1955-இல் ஒரு மாநாடு நடைப்பெற்றது. இந்த மாநாட்டில் அணி சேரா நாடுகள் இயக்கம் ஆரம்பிக்க பூர்வாங்க முயற்சிகள் நடைபெற்றன.

இதில் இந்தியப் பரதமர் பண்டித ஜவஹர்லால்நேரு, கானா நாட்டு பிரதமர் என்குரமா எகிப்து நாட்டுத் தலைவர் அப்துல் நாசர், இந்தோனேசியா நாட்டுத் தலைவர் சகர்ணோ மற்றும் யூகோஸ்லோவியா நாட்டுத் தலைவர் டிட்டோ ஆகியவர்கள் எல்லோரும் சேர்ந்து பெல்கிரேடு நகரில் நடைப்பெற்ற மாநாட்டில் இவ்வியக்கத்தை 1961-இல் ஏற்படுத்தினார்கள்.

**பனிப்போரின்போது அணி சேரா இயக்கம்**

பனிப்போர் நடைபெற்றக் காலத்தில் இவ்வணியைச் சார்ந்த நாடுகளை தங்களின் பக்கம் இழுக்க அமெரிக்காவும் சோவியத் யூனியனும் பல முயற்சிகளை மேற்கொண்டன. அவற்றிலிருந்து தான் அஸ்வான் நதி அணைக்கட்டு கட்டுவதற்கு எகிப்து நாட்டிற்கு சோவியத் யூனியன் செய்த பொருளுதவியாகும்.

வட அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகளைப் போல அணிசேரா நாடுகள் ஒற்றுமையாக இருக்க முடியவில்லை. இதனால் வல்வரசுகள் அவைகளை தங்கள் பக்கம் இழுப்பதற்காக பொருளாதார மற்றும் இதர உதவிகளை செய்ய முன் வந்தன.

இந்த இயக்கத்தில் சேர்ந்ததின் காரணமாக அணிசேரா நாடுகளின பலம் மற்றும் மதிப்பு உயர்ந்தது.

ஐக்கிய நாடுகள் கழக பேரவையிலும் இதர அமைப்புகளிலும் அணிசேரா நாடுகள் பல சமயங்களில் ஒன்று சேர்ந்து



செயலாற்றினார்கள் இருப்பினும் வல்லரசுகளின் ஆதிக்கத்தையும் அவர்களுடைய பலத்தையும் இவர்களால் சந்திக்க முடியவில்லை இவ்வியக்கத்தில் ஆரம்பத்தில் 25 நாடுகளும் அதன்பிறகு 113 நாடுகளும் பார்வையாளர் தகுதியுடைய 17 நாடுகளும் 2000-ம் ஆவது ஆண்டில் அங்கம் பெற்றிருந்தன.

இவ்வியக்கத்தில் ஆசியா, ஆப்ரிக்கா, தென் அமெரிக்கா, மத்திய அமெரிக்கா, கரிப்பியன், மால்டா போன்ற பகுதிகளைச் சேர்ந்த நாடுகள் சேர்ந்திருந்தன. யூகோஸ்லோவியா மட்டும் தான் ஐரோப்பாவைச் சார்ந்த நாடாகும். இவ்வியக்கம் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை அதன் கூட்டத்தை நடத்தியது.

பனிப்போர் முடிந்த பிறகு இவ்வியக்கம் தோற்றுவிக்கப்பட்ட முக்கியக் காரணி இல்லாமல் போயிற்று. இருப்பினும் ஏழ்மையை அகற்றுதல் சுற்றுசூழலைப் பாதுகாத்தல் அணுகுண்டு தயாரிப்பதை தடுத்தல் மற்றும் போதைப் பொருட்கள் கடத்தலை ஒழித்தல் ஆகிய நோக்கங்களை அடைவதற்காக இந்த இயக்கம் தொடர்ந்து இயக்குகிறது.

**அணிசேரா இயக்கத்தின் தற்கால பொருத்தம்**

பனிப்போர் முடிவிற்கு வந்துவிட்டாலும் தீவிரவாதம், புறக்கணித்தல், கொடூரத்தன்மை வாய்ந்த தேசியம், பயங்கரவாதம், உலக அழிவிற்கு வழிவகுக்கும் ஆயுதக்குவிப்பு போன்ற சக்திகள் இன்றும் உலகை பயமுறுத்திக் கொண்டு இருக்கின்றன.

அது மட்டுமல்லாமல் உலக மயமாக்குதலில் புதுப்புது பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவை எல்லாம் தற்கால உலகப்பொருளாதாரம், நாடுகளுக்கிடையேயான ஒற்றுமை ஆகியவற்றை பாதிக்கின்றன.

இவற்றை எதிர்கொள்வதற்கும் அவைகளால் ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கும் தற்சால உலகமைப்பில் அணிசேரா நாடுகள் பெரும் பங்காற்ற முடியும். (உ.ம்) முதலீட்டாளர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் பன்னாட்டு

வர்த்தக அமைப்புகள் இதர நாடுகளில் அவர்கள் மேற்க் கொண்டுள்ள வர்த்தகத்தில் ஏற்படும் சட்டப்பிரச்சினைகள் மற்றும் உலகம் தழுவிய இயற்கை சூழல்கள் சட்டப்பிரச்சினைகள் மற்றும் உலகம் தழுவிய இயற்கை சூழல்கள் பராமரிப்பு வர்த்தக மற்றும் பொருளாதார நடவடிக்கைகளிலும் பெரிய நாடுகளின் பாதிப்பு இல்லாமல் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

ஜி.8 நாடுகளுடைய பாதிப்பு நடவடிக்கைகளை எதிர்த்து பொருளாதார துறையில் பின்தங்கிய நாடுகளுக்கு உதவி செய்ய முடியும்.

**இவைகள்**

1. ஐக்கிய நாடுகள் கழகம் மற்றும் பாதுகாப்பு சபை எடுக்கும் முடிவுகளுக்கு கட்டுப்படாமல் இருத்தல்.
2. எதேச்சதிகார போக்குகளை பின்பற்றி மற்ற நாடுகளை துன்புறுத்தும் அடாவடி நாடுகளின் போக்கு, மற்றும்.
3. மூன்றாவது உலக நாடுகளுடைய பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக முன்னேற்றத்தை தடைப்படுத்தும் முயற்சிகள் ஆகிய துறைகளில் அணி சேரா நாடுகளின் இயக்கம் சிறந்த பணியாற்ற முடியும்.

மேலே கூறப்பட்ட துறைகளில் இந்தியா தகுந்த நடவடிக்கை களை எடுத்து விரைவான முன்னேற்றம் காண்பதற்கு சிறந்த பணியாற்ற முடியும். அணிசேரா நாடுகளிடையே புதுஉத்வேகம் தற்போது காணப்படுவதால் இந்தியா, இந்த துறையில் முயற்சி மேற்கொள்வது பொருத்தமாக இருக்கும்.

குறிப்பாக பெரும் வல்லரசுகளின் போட்டியில்லாமல் ஒரே ஒரு வல்லரசு என்ற நிலைமையில் உலகம் இப்போது முன்பைக் காட்டிலும் இன்னும் சிறப்பாக செயலாற்ற முடியும். அதற்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்ற கருத்து நிலவுகிறது.



**உலக அரசியலமைப்பின் பண்புகள்.**

இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் உலக அமைப்பின் பண்புகள் என கீழ்க்கண்டவற்றை குறிப்பிடலாம்.

**கொள்கைப்பிடிப்பு**

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோஷலிசக் கொள்கைகள் மறைந்து மக்களாட்சி முறை சார்ந்த முதலாளித்துவ போக்கு தற்போது மேலோங்கி இருக்கிறது.

அமெரிக்காவை சேர்ந்த மக்கள் தொடர்பு சாதனங்கள் பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களின் அபகரிக்கும் போக்கு பொருளாதார சுரண்டல் ஆகிய பண்புகள் தொழிற் நுட்ப வளர்ச்சி காரணமாக தற்போது மேலோங்கி இருக்கிறது. சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் அமெரிக்கா, மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கம் மேலோங்கி உள்ளது.

**குறிக்கோள்கள்**

ஜி. 7 நாடுகள் அமைப்பு அவர்களுடைய நிதி நிறுவனங்கள் வளர்நதுவரும் உலக வர்த்தகம் ஆகியவை இதர நாடுகளின் வளர்ச்சியில் பெரும் பங்கு வைக்கின்றன.

இவை யெல்லாம் சரியான முறையில் நடைபெறுவதாக எடுத்துக் கொள்ள முடியாது. ஏனென்றால் ஜி.7-நாடுகள் நல்லா வகையிலும் பலம் பொருந்தியவை. இவைகளன் ஆதிக்கத் திலிருந்து பாதுகாத்துக் கொள்ளுதல் பெரிய நோக்கமாகும்.

**அதிகார விநியோகம்**

இரு உலக ஆதிக்க சக்தி மறைந்த ஒரே உலகமென்ற யுத்தி மேலோங்கியிருக்கிறது. இதில் முன்னணியில் இருப்பது ஜி.7-நாடுகள்.

இந்த நாடுகள் அமெரிக்கா மற்றும் பன்னாட்டு நிதி நிறுவனம் ஆகியவற்றின் ஆதரவோடு மூன்றாவது உலகம் என்று

சொல்லப்படுகின்ற முன்னேறிவரும் நாடுகளின் மேல் ஆதிக்கம் செலுத்துகின்றன. இந்த ஆதிக்கத்தின் தன்மையை பின் வருமாறு குறிப்பிடலாம்.

அ) பாதுகாப்பு – உலக முழுவதற்கும் தலைமை தாங்குவதற்கான ராணுவ வளர்ச்சியும் மற்றும் அதிகாரத்தையும் அமெரிக்காப் பெற்றுள்ளது.

ஆ) பண்பாடு – அமெரிக்கா, ஜெர்மனி மற்றும் ஜப்பான் ஆகிய கூட்டமைப்பின் பங்கு செய்து கொள்ளப்பட்ட குழுவின் அதிகாரம் மேலோங்கி இருக்கிறது.

இ) அரசியல் / இராஜ தந்திரம் – வளர்ச்சி காணாத நாடுகளின் கட்டுப்படுத்தும் தன்மை இப்பொழுது குறைந்துவிட்டது. இருப்பினும் அந்தந்த பகுதிகளில் மூன்றாம் உலகத்தை சேர்ந்த நாடுகளுடைய முக்கியத்துவம் குறையாமல் அவ்வாறே இருக்கிறது.

**இந்தியாவிற்கு சாதகமான சூழ்நிலைகள்**

இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகள் சேர்ந்த நாட்டிற்கு இப்போதுள்ள உலக நடப்பில் சாதகம் மற்றும் பாதகமான சூழ்நிலைகள் இருக்கின்றன.

அவைகள இந்தியாவிற்கு நன்மை தரக்கூடிய சில கீழே தரப்பட்டு இருக்கின்றது.

அ) அமெரிக்காவோடு உள்ள உறவில் தற்போது பாகிஸ்தானைக் காட்டிலும் இந்தியாவிற்கு சாதகமான சூழ்நிலைகள் இருக்கின்றன. ஏனெனில் இந்தியா, பரப்பளவிலும் மக்கட்தொகையிலும் பொருள் விற்பனைச் சந்தையிலும் மற்றும் இதர துறைகளிலும் மேலோங்கி நிற்கிறது. இதனால் ஜி7 நாடுகள் அதிக அளவில் இந்தியாவிற்கு உதவி செய்ய விரும்பலாம்.



ஆ) இரு உலக பேரரசுகளுக்கிடையேயான போட்டிகள் தற்போது மறைந்து விட்டதனால் அமெரிக்காவோடு உள்ள இந்தியா உறவு மேம்பட்டுக் காணப்படுகிறது.

இ) சமீபத்தில் இந்தியா மற்றும் சீனா அரசுகளுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தம் ரஷ்யாவினோடு உள்ள உறவுகளை பாதிக்காது என தோன்றுகிறது.

ஈ) தெற்காசிய நாடுகளில் இந்தியாவிற்குள்ள முக்கியத்துவம்.

உ) ரஷ்யா மற்றும் இதர சோவியத் குடியரசுகளிலிருந்து நவீன ஆயுதங்களை செலவில்லாமல் பெற்று இந்தியாவினுடைய தொழிற் நுட்பத்தை வளர்த்துக்கொள்ளும் சூழ்நிலை.

ஊ) இதர நாடுகளில் முதலீடு மற்றும் உயர் தொழிற்நுட்ப பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

எ) உலகப்பொருளாதாரத்தில் இந்தியா தனக்கென சில பகுதிகளை தேர்ந்தெடுத்து அதனுடைய ஏற்றுமதிக்கு ஊக்கம் அளிக்க முடியும்.

ஏ) மூன்றாம் உலக நாடுகளின் வளர்ச்சியடைந்த நாடு என்ற அடிப்படையில் அவைகளுக்கு தலைமை ஏற்கும் தகுதியுடையது.

ஐ) இந்தியாவும், பிரேசிலும் ஓர் புதிய உலகத்தையும் அதற்கான சூழ்நிலையையும் வெற்றிகரமாக செயல்படுத்தக்கூடிய நிலையில் இருக்கின்றன.

**இந்தியாவின் முன் உள்ள சவால்கள்**

அ) ஐக்கிய நாடுகள் கழகத்தில் பாதுகாப்பு சபையில் இந்திய நிரந்தர உறுப்பினர் ஆகவேண்டும் கட்டாயம்.

ஆ) பொருளாதாரத் துறையில் இந்தியா வளர்ந்த நாடுகளோடு போட்டியிட வேண்டிய சூழ்நிலை.

இவைகளை இந்தியா சமாளிக்க கூடிய வளர்ச்சி அடைகின்ற போது இப்பகுதியில் இந்தியாவின் ஆதிக்கம் மேலோங்கும்.

## வினாக்கள்

### பகுதி - அ

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக**

கீழ்வருவனவற்றுள் எது உலக அமைப்பு இல்லை

(அ) சார்க்

(ஆ) ஐக்கிய நாடுகள் கழகம்

(இ) பன்னாட்டு நிதி நிறுவனம்

(ஈ) பன்னாட்டு மனித உரிமை கழகம்.

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக**

பாதுகாப்பு சபையில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை

**III. சரியா அல்லது தவறா என எழுதுக**

ஐக்கிய நாடுகள் கழக பாதுகாப்பு மன்றத்தில் இந்தியாவிற்கு தடுப்பாணை அதிகாரம் இருக்கிறது.

### பகுதி - ஆ

1. உலக அரசியலமைப்பு நிறுவனம் என்பதை விவரிக்க.
2. "ஒரே உலகம்" - என்ற சொல்லின் பொருள் என்ன?

### பகுதி - இ

1. ஐக்கிய நாடுகள் கழக பொதுப் பேரவையின் பணிகள் மற்றும் அதிகாரங்களை விளக்குக.
2. தெற்காசிய கூட்டமைப்பு நாடுகளின் தேவையை விளக்குக.

### பகுதி - ஈ

1. தற்போதை உலக நிறுவனம் என்ற முறையில் அணிசேரா நாடுகளின் பொருத்தத்தை விவரிக்க.
2. தற்கால உலகில் ஐக்கிய நாடுகள் கழகம் அமைதி ஏற்படுத்து வதற்கு அளிக்கும் பங்கு, பணியினை திறனாய்க.

### அத்தியாயம் 7

# மக்களாட்சி

## 7.1. பொருளும் விளக்கமும்

அகராதியில் தரப்பட்டிருக்கும் பொருள்படி, மக்களாட்சி என்பது, “சுதந்திரமான தேர்தல் முறைப்படி உயர் அதிகாரம் பெற்ற மக்கள் தெரிந்தெடுக்கும் அரசாங்கம். இதில் மக்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகள் ஆட்சியதிகாரம் பெற்றிருப்பார்கள்”.

ஆப்ரகாம்லிங்கன், “மக்களாட்சி என்பது மக்களால் மக்களுக்காகத் தேந்தெடுக்கப்பட்டு மக்களால் ஆளப்படும் அரசாங்கமாகும்” என கூறுகிறார். பெரும்பாலான விளக்கங்கள், நாம் பின்பற்றும் முறைகள் மற்றும் நிறுவனங்கள் பற்றியவைகளாக இருக்கின்றன.

எத்தனை வகை மக்களாட்சிகள் இருக்கின்றனவோ அத்தனை வகை விளைவுகள், தாக்கங்கள் இருக்கின்றன. கீழே சில விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

மக்கள் என்று பொருள்படும் ‘demos’ மற்றும், ஆட்சியதிகாரம் என்று பொருள் தரும் ‘Kratos’ என்ற கிரேக்க மொழிச் சொற்களிலிருந்து மக்களாட்சி (democracy) என்னும் சொல் வந்தது.

மக்கள் விருப்பத்திற்கிணங்க நடைபெறும் அரசாங்கம். உயர் அதிகாரம் கொண்ட மக்களது அரசாங்க முறை. மக்கள் நேரிடையாகவோ பிரதிநிதிகள் மூலமாகவோ செய்யும் ஆட்சி.

மக்கள் அல்லது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் செய்யும் ஆட்சி. மக்களாட்சி எனும் சொல்லே மக்கள் அவர்களாகவே ஆட்சி செய்கிறார்கள் என்பதையே குறிக்கிறது. மக்களாட்சி என்பது ஆட்சியாளர்களை அவ்வப்போது மாற்றி

மக்கள் தந்துள்ள உரிமை அடிப்படையில்தான் ஆட்சியாளர்கள் ஆட்சி செய்கிறார்கள் என்பதும் அவர்களை அமைதியான முறையில் மாற்ற உரிமை பெற்றிருக்கிறார்கள் என்பதாகும்.

### 7.2. மக்களாட்சியின் வரலாறு

மக்களாட்சியின் வரலாறானது ஒரே சீராகவோ, மித வேகத்துடனோ வளர்ந்ததல்ல என்று புகழ்பெற்ற அரசியல் அறிஞர் சாமுவேல் பி. ஹட்டிங்கன் கூறுகிறார். ஆனால் பல்வேறு வரலாற்று அலைகளால் மக்களாட்சி முன்னேற்றமடைந்துள்ளது. ஹட்டிங்கன் கீழ்காணும் மூன்று வரலாற்று அலைகளால் உருவானது என கண்டறிந்துள்ளார்.

மக்களாட்சியின் முதலாம் அலை பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலிருந்து தொடங்கியது. முதலாம் அலை பெரும்பான்மையான அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆண் குடிமக்கள் வாக்களிக்கும் உரிமை தொடங்கிய காலத்திலிருந்து 1920களில் முடிவடைகிறது. அக்கால கட்டத்தில் 20 நாடுகளில் மக்களாட்சி முறை செயல்முறை படுத்தப்பட்டிருந்தது.

மக்களாட்சியில் முதலாம் அலைவீச்சு மக்களாட்சிக்கு எதிராக ஏற்கெனவே வளர்ந்த முறைக்கு எதிராக மாறியது. 1922ம் ஆண்டு முசோலினியின் பாசிச கட்சி இத்தாலியில் ஆட்சி புரிந்ததிலிருந்து 1942 ஆம் ஆண்டு வரை மக்களாட்சி வீக்கமடைந்தது. அக்காலத்தில் மக்களாட்சியை பின்பற்றுகிற நாடுகளில் எண்ணிக்கை 11 ஆக குறைந்தது.

மக்களாட்சியின் இரண்டாம் அலை நேச நாடுகள் இரண்டாம் உலக போரில் வெற்றி பெற்றதிலிருந்து தொடங்கியது. இரண்டாம் அலை படிப்படியாக வளர்ந்து 1962 ஆம் ஆண்டில் 36 நாடுகள் மக்களாட்சி முறையை பின்பற்றும் அளவிற்கு வளர்ந்தது. இரண்டாம் அலையும் 1970 களில் குன்றத் தொடங்கியது. அக்கால கட்டத்தில்



மக்களாட்சியை பின்பற்றும் நாடுகளின் எண்ணிக்கை 30 ஆக குறைந்தது.

1974 ஆம் ஆண்டு முதல் மக்களாட்சியின் மூன்றாம் அலை தொடங்கியது என்கிறார் ஹட்டிங்கன். மேலும் 30 நாடுகள் மக்களாட்சி முறையை பின்பற்றும் நாடுகளின் எண்ணிக்கையில் சேர்ந்து இரு மடங்காக மக்களாட்சியை பின்பற்றும் நாடுகள் உலகில் உயர்ந்தன.

சாமுவேல் ஹட்டிங்கன் உலகத்தில் பல்வேறு பகுதிகளில் நிகழும் சிக்கலான அரசியல் மற்றும் கலாச்சார சக்திகளை ஆராய்ந்த போதிலும் அவரால் மக்களாட்சிக்கு முடிவான ஒரு விளக்கத்தை அளிக்க முடியவில்லை.

ஹட்டிங்கன் மக்களாட்சியின் மூன்றாம் அலையும் குன்ற எப்பொழுதும் வாய்ப்புள்ளதாக கூறுகிறார். அப்பொழுது மக்களாட்சியின் நான்காம் அலைக்கான வாய்ப்பு இருப்பதாக கணித்துள்ளார். அது இருபத்தொன்றாம் நூற்றாண்டில் நடக்கலாம் என்று கூறுகிறார்.

பெரும்பாலான ஹட்டிங்கன் எழுத்துக்கள் பொருளாதார முன்னேற்றமே மக்களாட்சி வளர வாய்ப்புள்ளதாக கூறுகின்றன. அத்தகைய வாய்ப்புகள் அரசியல் தலைவர்களின் கையில்தான் உள்ளதாக கூறுகிறார்.

மக்களாட்சியை நேரடி மக்களாட்சி மற்றும் மறைமுக மக்களாட்சி என இரு வகையாக பிரிக்கலாம்.

### 7.3. நேரடி மக்களாட்சி

நேரடி மக்களாட்சி முறையில் அனைத்து குடிமக்களும் எவ்வித இடைப்பட்ட பிரதிநிதிகளில்லாமலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பணியமர்த்தப்பட்ட அலுவலர்கள் இல்லாமலும் மக்களாகவே நேரடியாக பொது முடிவுகளில் கலந்து

கொண்டு பொது முடிவுகளை எடுக்கும் முறை நேரடி மக்களாட்சி எனப்படும்.

நேரடியான மக்களாட்சி முறையை நடைமுறைப்படுத்த குறைந்த எண்ணிக்கையிலான மக்கள் உள்ள சமூகத்தின் அமைப்பில் அல்லது இன குழுக்களில் தான் நேரடி மக்களாட்சி முறை நடைமுறைப்படுத்த முடியும். எடுத்துக்காட்டாக தொழிற்சங்கத்தின் குறைவான எண்ணிக்கை உள்ள கிளை கழகத்தில் உறுப்பினர்கள் ஒரு சிறு அறையில் ஒன்று கூடி தங்களுடைய கருத்துக்களை விவாதித்து, பெரும்பாலான உறுப்பினர்களின் விருப்பம் அல்லது வாக்களிப்பின் மூலம் ஒரு முடிவை எட்டுவதாகும்.

பண்டைய கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் நகரத்தில் தான் உலகத்தில் முதன்முதலாக நேரடியான மக்களாட்சி முறை செயல்பட்டுக் கொண்டிருந்தது. அந்நகரில் 5000 மக்களிலிருந்து 6000 மக்கள் வரை ஒன்று கூடி தங்களுடைய பொது முடிவுகளை எட்டினர். தற்பொழுது சுவிட்சர்லாந்து நாட்டில் தான் நேரடியான மக்களாட்சி முறை தேசிய அளவில் இன்றளவும் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.

### 7.4. மறைமுக மக்களாட்சி

ஒவ்வொரு குடிமகனும் தன்னுடைய நாட்டிற்காக நேரடியாகவோ அல்லது சுதந்திரமாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாகவோ அரசாங்கத்தில் பங்கெடுத்துக் கொள்வது மறைமுக மக்களாட்சி எனப்படும்.

குடிமக்களின் விருப்பமே அரசாங்க அதிகாரத்தின் அடிப்படையாக அமைதல் வேண்டும். மேலும் அம்மக்களின் விருப்பமான தொடர்ந்து நேர்மையாக நடைபெறும் தேர்தல்களால், ஆளப்படுதல் வேண்டும். அனைவரும் எவ்வித பாகுபாடின்றி சமமாக தேர்தல்களில் மறைமுக வாக்களிப்பின் மூலமாகவோ அல்லது சுதந்திரமாக வாக்களிப்பதன் மூலமாகவோ தேர்ந்தெடுக்கும் முறையாகும். இந்திய குடியரசு இவ்வகையான மக்களாட்சிக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.



வாக்களிக்கும் முறை மக்களாட்சிக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கிறது. அது தலைவர்கள் சரியான பாதையில் செல்லவும், அவர்கள் மக்களுக்க பணியாற்றவும், எவ்வாறு அவர்கள் பணியாற்றினார்கள் என்பதை மக்கள் தெரிந்து கொள்ளவும் உதவுகிறது.

தேர்தல்கள் நடக்கும் காலகட்டத்தில் குடிமக்கள் அவர் களுடைய வாக்கை அவர்கள் விரும்பியவருக்கு வாக்களிக்கலாம். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மக்களின் பிரதிநிதிகளாவார்கள். அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை பதவி வகிக்க தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

அப்பிரதிநிதிகள் வாக்காளர் தொகுதிகளிலோ அல்லது வகுப்புவாரி பிரதிநிதித்துவ அடிப்படையிலோ அல்லது அவ்விரண்டும் சேர்ந்த பிரதிநிதித்துவ முறையில் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.

### 7.5. அரசியலமைப்பு மக்களாட்சிகள்

மக்களாட்சிகள் பெரும்பாலும் எழுதப்பட்ட அரசியலமைப்பை கொண்டோ அல்லது நாட்டின் மிக உயர்வான சட்டத்தை அடிப்படையாக கொண்டோ செயல்படுகின்றன. அச்சட்டங்கள் சட்டமியற்றுபவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து சட்டமியற்று வதற்கும் துணைபுரிகின்றன.

எழுதப்பட்ட அரசியலமைப்பில் மக்கள் தங்கள் உரிமைகளை அனுபவிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மக்களாட்சியின் உண்மையான வலிமையே அடிப்படை உரிமைகளையும், சுதந்திரத்தையுமே சார்ந்துள்ளது எனலாம்.

அடிப்படை உரிமைகளும், மக்களின் சுதந்திரமுமே மக்களாட்சி வெற்றிகரமாக செயல்பட உதவுகிறது. பல நாடுகளில் அடிப்படை உரிமைகள் மக்களை காப்பதற்காக அரசியலமைப்பிலேயே அதன் பகுதியாக எழுதப்பட்டிருக்கின்றன. இவ்வரசியலமைப்பே இதர அமைப்புகளும் சட்டங்களும் என்ன என்பதை எடுத்துக் காட்டுகிறது.

பெரும்பான்மை பலம் கொண்ட அரசாங்கம் அதன் விருப்பப்படி மாற்றங்கள் கொண்டு வருவதை தடை செய்வதற்காக ஏதேனும் ஒரு தனிப்பெரும்பான்மை அல்லது வாக்காளர்க் கருத்தக் கணிப்படிடையில் தான் திருத்தச் சட்டம் கொண்டு வர வேண்டுமென்று அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 7.6. மக்களாட்சியின் இன்றியமையாதவைகள்

பெரும்பாலான மக்களாட்சிகள் சுதந்திரமான, நியாயமான தேர்தல்கள் நடத்தி தங்களை உண்மையான மக்களாட்சி நாடுகள் என்று கூறுகின்றன. அவ்வகையான மக்களாட்சிக்கு தேவையான அடிப்படை கொள்கைகள் என சிலவற்றை அரசியல் அறிஞர்கள் தந்துள்ளனர்.

தேர்தல்களை மட்டுமே வைத்து ஒரு நாட்டை மக்களாட்சி நாடு என்று கூறிவிட முடியாது. மக்களாட்சி முறையை பின்பற்றும் நாடுகள் மற்றும் மக்களாட்சி பற்றிய கொள்கைகளை ஆராய்ந்து அதனடிப்படையில் கீழ்க்கண்டவை மக்களாட்சி முறைக்கு இன்றியமையாதவை என உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இவற்றின் அடிப்படையில் ஒரு நாடு மக்களாட்சிதானா மற்றும் அது இவற்றை பின்பற்றுகிறதா என்று தெரிந்து கொள்ளலாம்.

1. அரசாங்கத்தின் பொது முடிவுகள் மற்றும் அதன் கொள்கைகளின் கட்டுப்பாடு அந்நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் இருத்தல் வேண்டும்.

2. பிரதிநிதிகள் அவ்வப்போது நடக்கும் நியாயமான தேர்தல்களின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அரசியலமைப்பிற்கு உட்பட்ட தங்களுடைய அதிகாரங்களை செயல்படுத்த வேண்டும்.

4. வயது வந்த அனைவருக்கும் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை இருத்தல் வேண்டும்.



5. வயது வந்த அனைவரும் அரசாங்கப் பதவிகள் பெற உரிமை பெற்றிருக்க வணே்டும்.

6. குடிமக்கள் அனைவருக்கும் தங்களுடைய அரசியல் சார்ந்த கருத்துக்களை அரசின் தண்டனையில்லாமல் வெளிபடுத்துவதற்கான உரிமையை பெற்றிருத்தல் வேண்டும்.

7. குடிமக்கள் அனைவருக்கும் அரசின் கொள்கைகளை தெரிந்து கொள்வதற்கு தேவையான பல்வேறு மாற்று செய்தி சாதனங்கள் வாயிலாக கொள்கைகளை தெரிந்து கொள்வதற்கான உரிமை பெற்றிருக்க வேண்டும்.

8. குடிமக்கள் சுதந்திரமாக கழகங்களை அமைப்பதற்கும், சங்கங்கள் அமைப்பதற்கும், அக்கழகங்களால் சுதந்திரமான அரசியல் கட்சிகளை தோற்றுவிப்பதற்கும், பல்வேறு தன்னலக் குழுக்களை அமைப்பதற்கும் உரிமை பெற்றிருத்தல் வேண்டும்.

9. அரசாங்கமானது தன்னாட்சி உடையதாகவும், அது வேறு எந்தவித வெளிகட்டுபாடுகளால் கட்டுப்படாமல் சுதந்திரமாக செயல்படுவதாகவும் இருக்க வேண்டும். (குறிப்பாக ஒப்பந்தங்கள் போன்றவை) மேற்கூறப்பட்ட தேவைகள் எந்த நாட்டில் பின்பற்றப்படவில்லையோ அந்நாடுகளை உண்மையான மக்களாட்சி என்று கூறமுடியாதென அரசியல் அறிஞர்கள் கூறுகிறார்கள்.

### *மக்களாட்சியின் திறனாய்வு*

குடிமக்களுக்கு மக்களாட்சியை பற்றி கற்பிப்பது, அக்கற்பிப்பவர்களால் மக்களுக்கு அவர்களை சுற்றியுள்ள சமூக, அரசியல் மற்றும் பொருளாதார நிகழ்வுகளை பற்றித் தெரிந்து கொள்ளவும் ஆராய்வதற்கும் உதவியாக இருக்கிறது.

மக்களாட்சி பற்றிய கல்வி குடிமக்கள் அரசாங்கத்தின் செயல் பாடுகளை பற்றி கடுமையாக விமர்சனம் செய்வது, அதிகாரத்தை எவ்வாறு அரசாங்கம் பயன்படுத்துகிறது, மற்றும் தேர்தல்களின் போது வெளியிடப்படும் வாக்குறுதிகளை அடுத்த தேர்தலுக்குள்

அரசாங்கம் செயல்படுத்தியுள்ளதா என்பதை பற்றி குடிமக்கள் தெரிந்து கொள்ள உதவுகிறது.

கற்றறிந்தவர்களின் பல்வேறு விமர்சனங்களால் ஒரு நல்ல கட்டமைப்பை உருவாக்குவது, அதன்மூலம் மற்ற கற்றறிந்தவர் களும் எவ்வாறு நல்ல விமர்சனங்களை அமைதியாக மக்களாட்சியில் செயல்படுத்துவது ஆகியவை மக்களாட்சி ஆய்வில் முக்கியமானது.

**மக்களாட்சி முறையிலான சமுதாயம்**

மக்களாட்சி என்பது அரசியலமைப்பில் சொல்லப்பட்டுள்ள விதிகள் மற்றும் வழிமுறைகளை ஆதாரமாகக் கொண்டு செயல்படும் அரசாங்கம் என்பதாகும். மக்களாட்சி முறையில் அரசாங்கம் ஒரு அங்கம் தான். அது பல்வேறு வகையான சமூக நிறுவனங்களையும், அரசியல் கட்சிகளையும், பல்வேறு கழகங்களையும் ஒன்றிணைந்து செயல்படுகிறது.

இவ்வாறு பல்வேறு சமூக, அரசியல், பொருளாதார நிறுவனங்கள் மக்களாட்சி முறையிலான சமூகத்தில் காணப் படுவதால் அதை நாம் பன்முதன்மை என்கிறோம். அந்நிறுவனங் கள் தொடர்ந்து செயல்பட அரசாங்கத்தின் சட்டத்தையோ, அதிகாரத்தையோ சார்ந்திருப்பதில்லை.

**மக்களாட்சியின் தூண்கள்**

- மக்கள் இறைமையை பெற்றிருத்தல்
- அரசாங்கம் மக்களின் விருப்பத்தின் அடிப்படையில் அமைக்கப் பெற்றிருத்தல்.
- பெரும்பான்மையோர் ஆட்சி
- மனித உரிமைகளை பாதுகாத்தல்
- சிறுபான்மையினரின் உரிமைகளை மதித்தல்
- சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்கள்



- சட்டத்தின் முன் அனைவரும் சமம்
- சட்டமுறைகளைப் பின்பற்றி நடத்தல்
- அரசியலமைப்பில் அரசாங்கத்தின் எல்லையை வரையறை செய்திருத்தல்.
- சமூக, அரசியல் மற்றும் பொருளாதார பன்மைத்துவம்

## 7.7 மக்களாட்சியின் நன்மைகள்

1. ஒவ்வொரு குடிமகனும் அரசாங்கத்தில் பங்கெடுத்துக் கொண்டு அரசாங்கம் சிறப்பாக செயல்பட ஒத்துழைப்பது மக்களாட்சியின் மிக பெரிய நன்மையாகும்.
2. மக்களாட்சியில் பொதுமக்கள் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார விசயங்களில் நன்கு சிறப்பாக விழிப்புடன் இருக்க இது வழிவகை செய்கிறது.
3. மக்களாட்சியில் பொதுமக்களிடையே தேசிய உணர்வை வளர்த்து மக்களை இரத்த புரட்சிகள் ஏற்படாவண்ணம் தடுக்கிறது.
4. மக்களாட்சி, நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக உள்ளது. மேலும் சமூக மாற்றங்கள் அமைதியான முறையில் நிகழ, மக்களாட்சி முறையில் இடமளிக்கிறது.
5. மக்களாட்சி குடிமக்களுக்கு பேச்சுரிமை, கூடுவதற்கான உரிமை, செயல்படுவதற்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது.
6. மக்களாட்சி, சுதந்திரம் மற்றும் சமத்துவம் மனித வளர்ச்சிக்கு உதவவதற்கு பாதுகாப்பளிக்கிறது.

## 7.8. மக்களாட்சியின் குறைகள்

1. மக்களாட்சி சில சமயங்களில் சிறுபான்மையினரின் கருத்துக்கள் நல்லதாக இருந்தாலும், பெரும்பான்மையினரின்

கருத்துக்களை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்துகிறது.

2. அரசியல் கட்சித் தலைவர்கள் அரசாங்கத்தில் பதவியில் இருப்பவர்கள், அரசியல் கட்சி உறுப்பினர்களையும் மக்களாட்சி கட்டுப்படுத்தும் அதிகாரம் பெற்றிருப்பது மக்களாட்சியின் ஒரு குறைபாடாகும்.

3. மக்களாட்சி தனிமனிதன் கருத்துக்களை பிரதிபலிப்பதை ஊக்கப்படுத்துவதில்லை.

4. மக்களாட்சி அதிக செலவினங்களை கொண்ட அரசாங்கத்தைக் கொண்டுள்ளது. தேர்தல்கள் அடிக்கடி நடைபெறுவதால் மக்களின் வரிப்பணம் வீணாகிறது.

5. மக்களாட்சியில் கையூட்டுகளையும், அதிகாரிகளின் சட்ட மீறல்களையும் தடுக்க முடிவதில்லை.

6. மக்களாட்சியில் அரசாங்கத்தில் ஒன்றும் அறியாத புதியவர்கள் அதிக அளவில் பங்கெடுத்துக் கொள்ள முடிகிறது. இது சாதாரண மக்கள் மற்றவர்கள் மேல் ஆதிக்கம் செலுத்தும் போக்கை ஏற்படுத்துகிறது.

## 7.9. நேரடி மக்களாட்சியின் கருவிகள்

மக்களாட்சி இருவகைப்படும் என்று ஏற்கனவே நாம் பார்த்தோம். அவைகளாவன.

1. நேரடி மக்களாட்சி 2. மறைமுக மக்களாட்சி

**நேரடி மக்களாட்சியின் கருவிகள் கீழ்வருமாறு**

1. தொடக்கவுரிமை
2. பொதுமக்கள் வாக்கெடுப்பு
3. திரும்ப அழைத்தல்



மேற்கண்ட கருவிகள் நேரடி மக்களாட்சி சிறப்பாக செயல்பட உதவும் கருவிகளாகும். இவை சுவிஸர்லாந்து நாட்டில் இன்றளவும் செயல்பட்டு வருகின்றன. நேரடி மக்களாட்சி முறையை பல்வேறு நாடுகளில் நடைமுறை படுத்த முனைந்தாலும் அவை வெற்றிகரமாக செயல்படவில்லை. இனி நேரடி மக்களாட்சியின் கருவிகளை பற்றி விரிவாக காண்போம்.

**1. தொடக்கவுரிமை**

தொடக்கவுரிமை என்பது நேரடி மக்களாட்சியின் ஒரு வழிமுறையாகும். அம்முறையில் வாக்காளர்கள் சட்டமன்றத்தில் மக்களுக்கு தேவையான சட்டங்களை இயற்றவில்லை என்று கருதினால் குடி மக்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கு அதைக் கொண்டு வந்து அதற்காக தேவைப்படும் சட்டமியற்ற விழைவது தொடக்கவுரிமை எனப்படும்.

தொடக்கவுரிமையை நடைமுறைப்படுத்த சில வழிமுறைகளும், குறைந்தபட்ச தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். அக்குறைந்தபட்ச தேவைகளின் மிக முக்கியமான ஒன்று. குறைந்த பட்சம் 50,000 வாக்காளர்கள் அரசாங்கத்திற்கு தங்களுடைய மனுவை செலுத்தி தங்களுக்கு தேவையான சட்டத்தை இயற்ற அரசாங்கத்தை வேண்டுவதாகும். அரசாங்கம் அம்மனுக்களை ஏற்றுக்கொண்டு சட்டமியற்றலாம் அல்லது மறுக்கலாம். ஆனால் அம்மக்களின் கோரிக்கைகள் பெரும்பான்மை மக்களின் ஆதரவை பெற மிக முக்கிய காரணியாக அமைந்து அரசாங்கம் சட்டமியற்ற விழையலாம்.

**2. பொதுமக்கள் வாக்கெடுப்பு**

பொதுமக்கள் வாக்கெடுப்பு என்பதும் நேரடி மக்களாட்சியின் ஒரு வழிமுறையாகும். இவ்வழிமுறையின்படி தேசிய பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட முக்கியமான மசோதா பொது மக்கள் வாக்கெடுப்புக்கு விட்ட பின்பே சட்டமாகும். அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட மசோதாக்களை குடிமக்கள் ஏற்கலாம் அல்லது

ஏற்க மறுக்கலாம். மக்கள் ஏற்றுக் கொண்டால் சட்டமாகும். மக்கள் வாக்கெடுப்பு முறையில் இரு வகைகள் உள்ளன.

அவையாவன. 1. கட்டாய வாக்கெடுப்பு 2. விருப்ப வாக்கெடுப்பு. இவ்விரு வகைகளிலும் சில வழிமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன.

**3. திரும்ப அழைத்தல்**

மக்களாட்சியில் வாக்காளர்கள் அவர்கள் பிரதிநிதிகளை தேர்தல் மூலம் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். அவர்கள் தேசிய சட்டமன்றம், ஊராட்சி மன்றங்களுக்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அவர்களுடைய பதவிக்காலம் முடியும்வரை பதவி வகிக்க முடியும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தங்களுடைய கடமைகளையும் பொறுப்புக்களையும் சரிவர செய்யாமல் இருக்கலாம்.

அச்சமயங்களில் வாக்காளர்கள் அப்பிரதிநிதிகளின் செயல்பாட்டில் திருப்தியில்லை எனில் அவர்களை சரிவர செயல்பட கட்டாயப்படுத்த முடியாது. குடிமக்கள் அடுத்த தேர்தல்கள் வரை காத்திருந்து அப்பிரதிநிதிகளுக்கு பதில் மாற்று பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது. அவர்களை பதவி நீக்கம் செய்யவும் முடியாது.

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை பதவி நீக்கம் செய்து அவர்களுக்கு பதில் வேறொரு பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் முறை 'திரும்ப அழைத்தல்' எனப்படும். இம்முறை சில நாடுகளில் பின்பற்றப்பட்டு வருகின்றது. அவைகளில் மிக முக்கியமான நாடு சுவிஸ்சர்லாந்தும், அமெரிக்க ஐக்கிய நாடுகளும் ஆகும்.

## 7.10. இந்திய குடியரசில் அடிப்படை உரிமைகள்

சில உரிமைகள் அத்தியாவசிய தேவையாகும். அவ்வுரிமைகள் மனிதன் உயிர் வாழ்வதற்கு தேவையானவை ஆகும். இவ்வகையான உரிமைகள் தனிமனிதனின் சுதந்திரத்திற்கும், தனிமனிதன் நல்வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உதவுகின்றன.



இவ்வகையான உரிமைகள் அரசியலமைப்பில் இணைக்கப்பட்டுள்ளன. தற்கால எல்லா மக்களாட்சி நாடுகளிலும் எடுத்துக்காட்டாக இந்தியா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இவ்வகையான அடிப்படை உரிமைகள் குடிமக்களுக்கு அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ளன. இந்தியாவில் இவ்வகையான அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பின் பகுதி 111இல் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் அவ்வுரிமைகள் முழுமையாக இல்லை. சில நியாயமான தடைகள் அவ்வுரிமைகளை அனுபவிப்பதற்கு அரசியலமைப்பிலேயே கூறப்பட்டுள்ளன. இந்தியாவில் அடிப்படை உரிமைகளை நீதிமன்றத்தில் கோரி பெறலாம். அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பு விதி 12 முதல் 35 வரை கூறப்பட்டுள்ளன. உச்ச நீதி மன்றமும், உயர் நீதிமன்றங்களும் குடிமக்களின் அடிப்படை உரிமை பாதிக்கப்பட்டால் விதிமுறை நீதிப்பேராணை (writ) மூலம் அவைகளை செயல்படுத்த அதிகாரம் பெற்றுள்ளன. குடிமக்களின் அடிப்படை உரிமை பாதிக்கப்பட்டால் அவர்கள் நேரடியாக உயர்நீதிமன்றங்களுக்கோ, உச்ச நீதிமன்றத்திற்கோ சென்று நீதிப்பேராணை அடிப்படையில் குறைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

முதலில், சொத்துரிமை இந்திய அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த சொத்துரிமை 1978 ஆம் ஆண்டில் 44வது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் நீக்கப்பட்டது.

***சமத்துவ உரிமை***

மதம், இனம், சாதி அல்லது பிறப்பின் அடிப்படையில் உள்ள வேறுபாடுகளை இந்திய அரசியலமைப்பு தடை செய்கிறது. இந்திய அரசியலமைப்பு, எல்லோருக்கும் வேலை வாய்ப்பிலும், அரசாங்கத்தில் வேலை செய்யவும் சமமான உரிமையை உறுதி செய்துள்ளது. இச்சமத்துவ உரிமைகளில் சில விதிவிலக்குகள் உள்ளன. அவை பின்வருமாறு

இந்திய அரசியலமைப்பில் சமுதாயத்தில் நிலவிடும் ஏற்றத்தாழ்வை நீக்கும் பொருட்டு தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பிலும், பதவி உயர்விலும் இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

**சுதந்திர உரிமை**

இந்திய அரசியலமைப்பு விதி 19 கீழ்காணும் ஏழு அடிப்படை உரிமைகளை குடிமக்களுக்கு உறுதி செய்கிறது.

அ. சுதந்திரமான பேச்சுரிமை மற்றும் கருத்துக்களை வெளியிடுவதற்கான உரிமை

ஆ. சுதந்திரமாக எவ்வித ஆயுதங்களில்லாமல் கூடுவதற்கான உரிமை.

இ. சுதந்திரமாக அமைப்புகளையும், சங்கங்களையும் அமைப்பதற்கான உரிமை.

ஈ. சுதந்திரமாக இந்தியா முழுவதற்கும் எப்பகுதிக்கும் செல்வதற்கான உரிமை.

உ சுதந்திரமாக இந்தியாவின் எந்த பகுதியிலும் குடியிருப்பதற்கும், வாழ்வதற்கும் உண்டான உரிமை.

ஊ. சுதந்திரமாக இந்தியாவில் எப்பகுதியிலும் (ஜம்மு மற்றும் காஷ்மீர் தவிர) சொத்துக்களை வாங்குவதற்கும், விற்பதற்கும், நிரந்தரமாக வைத்துக் கொள்ளும் உரிமை.

எ. சுதந்திரமாக எந்தவித தொழிலையும், வேலையையும், வியாபாரம் செய்வதற்கான உரிமை.

மேற்கூறிய அரசியலமைப்பு விதி 19இன் கீழ் இவ்வுரிமைகளை அனுபவிக்க சில நியாயமான தடைகளை அரசியல் சட்டம் விதித்துள்ளது.



**தனிமனித வாழ்க்கை பாதுகாப்பு மற்றும் தனிமனித சுதந்திர உரிமைகள்**

தனிமனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி இந்திய அரசியலமைப்பால் உறுதி செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்பு விதி 21இன் கீழ் எந்தவொரு மனிதனும் அவனுடைய வாழ்க்கை மற்றும் அவனுக்குள்ள உரிமைகளை வரையறுக்கப்பட்ட சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள முறைகள் அடிப்படையில் மட்டுமே தடுக்க முடியும் என்று கூறுகிறது.

1. எந்தவொரு குடிமகனும் சட்டத்தை மீறினாலன்றி அவனை தண்டிக்க முடியாது.
2. எந்தவொரு குடிமகனுக்கும் சட்டத்தை மீறினால் சட்டத்தில் வரையறுத்துள்ள தண்டனைகளை மட்டுமே அவனுக்கு அளிக்க முடியும்.
3. எந்தவொரு குடிமகனும் ஒரே குற்றத்திற்காக இருமுறை தண்டிக்கப்படக் கூடாது.
4. எந்தவொரு குடிமகனும் குற்றம் செய்யப்பட்டதாக நிரூபிக்க அவன் செய்த குற்றத்திற்காக அவனுக்கு எதிராக சாட்சி சொல்ல வற்புறுத்த முடியாது.

**சுரண்டலுக்கு எதிரான உரிமை**

அரசியலமைப்பு விதி 23, விபச்சாரம், கொத்தடிமை மற்றும் 14 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை தொழிற்சாலைகளிலோ, குவாரிகளிலோ மற்றும் விபத்து ஏற்படக் கூடிய தொழில்களிலோ வேலைக்கு அமர்த்துவதை தடை செய்கிறது.

**சமய உரிமை**

இந்திய அரசியலமைப்பு குடிமக்கள் அனைவருக்கும் சுதந்திரமாக எந்த மதத்தையும் தழுவுவதற்கான உரிமையை அளித்துள்ளது. அவ்வுரிமைகளுக்கு அரசாங்கம் சில சமயங்களில்

எடுத்துக்காட்டாக, பொது அமைதி, உடல்நலம் போன்றவற்றிற்கு நியாயமான தடைகளை விதிக்கலாம். மேலும் எந்தவொரு குடிமகனும் எந்த மதத்தை பின்பற்றவோ, நேர்மையான வழியில் மதத்தை பரப்பவோ அரசியலமைப்பால் சுதந்திரமளிக்கப் பட்டுள்ளது.

இந்திய அரசியலமைப்பு அரசால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்களில் சமயம் சம்பந்தப்பட்ட கல்வியை தர தடை விதித்துள்ளது.

**கல்வி மற்றும் கலாச்சார உரிமை**

இந்திய அரசியலமைப்பு சிறுபான்மையினர் சுதந்திரமாக தங்களுடைய சமயத்தையோ, கலாச்சாரத்தையோ, மொழியையோ உரிமையை அளித்துள்ளது.

அனைத்து சிறுபான்மையினருக்கும் அவர் மத அடிப்படையிலோ, மொழி அடிப்படையிலோ இருந்தால் அவர்கள் தங்களுக்கென கல்வி நிறுவனங்களை அமைப்பதற்கும், அந்நிறுவனங்கள் எவ்வித வேறுபாடின்றி அரசு உதவி அளித்தவை அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

**அரசியலமைப்பு சம்பந்தப்பட்ட தீர்வுகள்**

அரசியலமைப்பு விதி 32ன் கீழ் அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று உச்சநீதி மன்றத்திடம் விண்ணப்பிக்க உரிமை இருக்கிறது. உச்ச நீதி மன்றம் நீதிப்பேராணைகள் பிறப்பிக்கும் அதிகாரம் பெற்றிருக்கிறது. உச்சிநீதிமன்றம் ஆட்கொணர்தல் (Habeas Corpus) செயலுறுத்தல் (Mandamus) தடைவிதித்தல் (Prohibition) தகுதி முறை வினவுதல் (Quo warranto) மற்றும் நெறிமுறை உறுத்தல் (Certiorari) போன்ற நீதிப்பேராணைகளை பிறப்பிக்கவும் அவைகளைப் பின்பற்ற வற்புறுத்தவும் அதிகாரமுடையது.



நீதிமன்றங்களால் நடைமுறைப்படுத்தப்படாத உரிமைகளுக்கு அர்த்தமில்லை. அம்பேத்கார் கருத்துப்படி அரசியலமைப்பின் 32 வது விதி அரசியலமைப்பின் இதயமும் உயிருமாகும்.

**உரிமைகளும் பாராளுமன்றமும்**

24வது அரசியலமைப்பு திருத்தச் சட்டப்படி, பாராளுமன்ற விதி 368ல் சொல்லப்பட்டிருக்கிற முறைகளைப் பின்பற்றி திருத்தச் சட்டம் கொண்டு வருவதன் மூலமாக அடிப்படை உரிமைகளை மாற்றவோ, திருத்தவோ, நீக்கவோ அதிகாரம் பெற்றிருக்கிறது.

**அடிப்படை உரிமைகளும் அரசு வழிகாட்டு நெறிகளும்**

25ம் மாற்றச்சட்டம் விதி 31C-யை அரசியலமைப்பில் புகுத்தியது. இவ்விதியின் படி வழிகாட்டு நெறிகளை நடைமுறைப்படுத்த பாராளுமன்றம் சட்டம் இயற்ற முடியும். இச்சட்டம் நீதிமன்றங்களின் அதிகாரம் மற்றும் பணி எல்லைக்குள் வராது. அரசியலமைப்பு விதிகள் 14, 19 மற்றும் 31 இச்சட்டத்தை பாதிக்காது.

42வது மாற்றுச்சட்டம் அடிப்படை உரிமைகளைக் காட்டிலும் வழிகாட்டு நெறிகள் முன்னுரிமை பெற்றவை என்றும் மேலானவை என்றும் மாற்றம் செய்துள்ளது.

## 7.11. அடிப்படை கடமைகள்

உலகிலுள்ள 50 நாடுகளின் அரசியலமைப்பில் அடிப்படைக் கடமைகள் பட்டியல் தரப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 30 நாடுகளின் அரசியலமைப்புகளில் உரிமைகளும் கடமைகளும் ஒரே அத்தியாயத்திலும் இதர நாடுகளில் தனித்தனி அத்தியாயங்களிலும் இவை தரப்பட்டிருக்கின்றன. இந்திய அரசியலமைப்பு பகுதி 4அ-ல் இக்கடமைகள் வருகின்றன. 1976ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 42வது மாற்றுச்சட்டம் 51 அ என்ற விதியைச் சேர்த்தது. இதன்படி 10 கடமைகள் உள்ளன.

*அவை வருமாறு*

1. அரசியலமைப்பில் சொல்லப்பட்டுள்ள அதன் நோக்கங்கள், நிறுவனங்கள், தேசியக் கொடி மற்றும் தேசிய கீதம் ஆகியவற்றுக்கு மரியாதை தந்து அதன்படி நடத்தல்.
2. தேசிய மற்றும் சுதந்திர போராட்டங்களின் உயர்ந்த நோக்கங்களை ஏற்று பின்பற்றுதல்
3. இந்தியாவின் இறைமை, ஒற்றுமை மற்றும் ஒருமைப் பாட்டையும் பாதுகாத்தல் மற்றும் நிலை நாட்டுதல்
4. நாட்டைப் பாதுகாத்தல் மற்றும் அவசியமான போது நாட்டுச் சேவை செய்தல்.
5. சமயம், மொழி, வட்டாரம் அல்லது குறுகிய பிரிவுகளைத் தாண்டி வந்து இந்திய மக்களிடையே சகோதரத்துவம், ஒன்றுபட்ட உணர்வு ஆகியவற்றை ஏற்படுத்துதல் பெண்களின் கண்ணியத்தைக் களங்கப்படுத்தும் பழக்கவழக்கங்களை தவிர்த்தல்.
6. நமது விலை மதிப்பற்றதும் பலவகைப்பட்டதும் தொன்றுதொட்டு வருவதுமான பண்பாடுகளை பாதுகாத்தல்.
7. விஞ்ஞான பூர்வமான உணர்வுகள், மனித நேயம் மற்றும் அறிவியல் ஆராய்ச்சி மற்றும் சீர்திருத்தங்களை ஏற்படுத்துதல்.
8. காடுகள், ஏரிகள், ஆறுகள், காட்டுவிலங்குகள் மற்ற உயிரினங்கள் உள்பட உள்ள இயற்கை சூழ்நிலைகளை பாதுகாத்து அவற்றை மேம்படுத்துதல்.
9. பொது உடைமைகளை பாதுகாத்தல் மற்றும் வன்முறையை விலக்குதல் மற்றும்.
10. முன்னேற்றப் பாதையில் நாடு முனைந்து சிறப்புகள் பெற தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் முயற்சிகள் மேற்கொள்ளுதல்.

மேலே தரப்பட்டுள்ள கடமைகளின் முக்கிய நோக்கம் மக்களுடைய மனப்பான்மை மற்றும் எண்ணம் ஆகியவற்றில் 



மாறுதல்களை ஏற்படுத்தி நாடு அமைதியான வழிகளில் சமுதாய வளர்ச்சியைப் பெற வேண்டும் என்பதாகும்.

## 7.12. மானிட உரிமைகளும் மக்களாட்சியும்

மானிட உரிமைகள் பிரகடனம் குறிப்பிடுவதாவது, "மனிதர்கள் அனைவரும் பிறப்பால், கண்ணியத்தால் மற்றும் உரிமைகளால் சுதந்திரமானவர்கள். அவர்களிடம் காரண காரியங்கள் மற்றும் நியாய உணர்வு அடிப்படையில் எல்லோரும் சகோதர எண்ணத்துடன் செயலாற்ற வேண்டும் என்ற நோக்கம் இருக்கிறது".

1949ம் ஆண்டு டிசம்பர் 10த் தேதி ஐக்கிய நாடுகள் கழகம் பொதுப் பேரவை மானிட உரிமைகள் பிரகடனத்தை அங்கீகரித்தது. இப்பிரகடனம் உலக முழுவதும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10ம் தேதி மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.

அந்த நாளில் மனிதர்கள் அனைவரும் சுதந்திரம் மற்றும் உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள் என்று கொண்டாடப்படுகிறது. இவ்வுரிமைகள் தனிப்பட்டோருக்கும் அரசுக்குமிடையேயுள்ள உறவை ஒழுங்குப்படுத்துகின்றன. தனிமனிதனுக்கு இழைக்கப்படும் அநீதியைக் காப்பாற்றுதல் அரசின் கடமையாகும். எல்லா மக்களும் அவர்களின் தரம் மதிப்பு ஆகியவைகளில் பிறப்பால் சமமானவர்கள். அவர்களுக்கு அத்தகைய பாதுகாப்பைப் பெற உரிமையுண்டு. இவையே மனித உரிமைகள் பற்றி உலகமுழுவதும் எழுந்துள்ள சட்டங்களுக்கும் சட்ட மற்றும் நீதிமுறைகளுக்கும் ஆதாரமாகும். மனித உரிமைகள் மூன்று வகைப்படும்.

1. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள். இவற்றில் உயிர் பாதுகாப்பு, பேச்சு, வாக்கு, தனிமனித பாதுகாப்பு மற்றும் ஒழுக்கம் ஆகிய உரிமைகள் அடங்கும்.
2. பொருளாதார சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகள். இவற்றில் கல்வி, உறைவிடம், நல்வாழ்வு மற்றும் வேலை ஆகியவைக்கான உரிமைகள்.
3. கூட்டு உரிமைகள் : சுயநிர்ணயம், அமைதி மற்றும் ஏற்றுக் கொள்ளத்தக்க சுற்றுச்சூழல் சம்பந்தப்பட்ட உரிமைகள்

**மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கான அவசியம்**

1. மனித உாமைகளை மதிக்கும் தேசீய சட்டங்களை இயற்றுதல். உம். கொடுமைப்படுத்துதல் இரக்கமற்ற கெடுதல்கள் செய்தலை தடுத்தல்.
2. தேசப்பாதுகாப்பு சம்பந்தமான சட்டங்கள் அடிப்படையில் கைது செய்யப்படுபவர்களுக்கு தேவைப்படும் வழக்குரைஞர் கள், துரிதமான விசாரணை, வழக்கு சம்பந்தப்பட்ட குற்றப்பத்திரிக்கைகள், சுதந்தரமான நீதிமன்றங்களுக்கான உத்திரவாதம் தருதல்.
3. பெண்கள், குழந்தைகள், அகதிகள், அடைக்கலம் விரும்புபவர்கள், சிறுபான்மையினர் மற்றும் ஒதுக்கப்பட்ட மக்கள் சம்பந்தப்பட்ட தேவைகளைக் கவனித்தல்.
4. தவறாக செலுத்தப்படும் அதிகாரத்திற்கு எதிரான தடைகள் மற்றும் சமநிலை ஏற்படுத்தல் அளவில்லாத அரசு அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் ஏற்பாடுகள்.
5. பன்னாட்டு மனித உரிமைகள் பாதுகாப்புத் தலங்களைத் தோற்றுவித்தல்.
6. மனித உரிமைகள் மற்றும் பாதுகாப்பு தேசப்பாதுகாப்புக்கு எதிராக இல்லாமல் இணைந்துள்ள நிலைமை. இவைகள் பன்னாட்டுச் சட்டத்திற்கும் பன்னாட்டு உரிமைகளுக்கும் உட்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படுதல்.

## வினாக்கள்

### பகுதி அ

I. **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்**

1. எத்தகைய முறையில் அரசாங்கத்தில் வாக்காளர்கள் மறைமுகமாக பங்கேற்கிறார்கள்?

   அ. நேரிடை மக்களாட்சி ஆ. முடியாட்சி

   இ. சிறுகுழுவாட்சி ஈ. பிரதிநிதித்துவ மக்களாட்சி



2. எது நேரிடை மக்களாட்சியின் கருவி அல்ல?

   அ. துவக்கம் ஆ. கெரிமாண்டரிங்

   இ. குடியொப்பம் ஈ. திரும்பப் பெறுதல்

II. **கோடிட்ட இடத்தை பூர்த்தி செய்க**

1. மக்களாட்சி மக்களுக்காக, மக்களால் நடத்தப்படும் ____________ அரசாங்கம் என்று விளக்கப்படுகிறது.
2. சிறுபான்மையினரின் உரிமைகள் ____________ பத்திரமாக இருக்கின்றன.

III. **கீழ்வருவன சரியா அல்லது தவறா என எழுதுக**

1. நேரிடை மக்களாட்சி மற்றும் சுவிட்சர்லாந்து இரண்டும் ஒன்றே.
2. சொத்துரிமை இந்தியாவில் அடிப்படை உரிமை.

### பகுதி ஆ

1. மக்களாட்சியை விளக்குக.
2. சர்வாதிகாரம் என்பதை விவரிக்க.

### பகுதி இ

1. நேரடி மக்களாட்சியின் அம்சங்களை விவரி.
2. அரசியலமைப்பு மக்களாட்சியை விளக்குக.

### பகுதி ஈ

1. பிரதிநிதித்துவ மக்களாட்சி முறையின் நிறைகள் மற்றும் குறைகளை விவரிக்க.
2. அடிப்படை உரிமைகள் மற்றும் அடிப்படை கடமைகள் பற்றி கட்டுரையொன்று எழுதுக.

## வினாக்கள்

### பகுதி - அ

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக**

கீழ்வருவனவற்றுள் எது உலக அமைப்பு இல்லை

(அ) சார்க்

(ஆ) ஐக்கிய நாடுகள் கழகம்

(இ) பன்னாட்டு நிதி நிறுவனம்

(ஈ) பன்னாட்டு மனித உரிமை கழகம்.

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக**

பாதுகாப்பு சபையில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை

**III. சரியா அல்லது தவறா என எழுதுக**

ஐக்கிய நாடுகள் கழக பாதுகாப்பு மன்றத்தில் இந்தியாவிற்கு தடுப்பாணை அதிகாரம் இருக்கிறது.

### பகுதி - ஆ

1. உலக அரசியலமைப்பு நிறுவனம் என்பதை விவரிக்க.
2. "ஒரே உலகம்" - என்ற சொல்லின் பொருள் என்ன?

### பகுதி - இ

1. ஐக்கிய நாடுகள் கழக பொதுப் பேரவையின் பணிகள் மற்றும் அதிகாரங்களை விளக்குக.
2. தெற்காசிய கூட்டமைப்பு நாடுகளின் தேவையை விளக்குக.

### பகுதி - ஈ

1. தற்போதை உலக நிறுவனம் என்ற முறையில் அணிசேரா நாடுகளின் பொருத்தத்தை விவரிக்க.
2. தற்கால உலகில் ஐக்கிய நாடுகள் கழகம் அமைதி ஏற்படுத்து வதற்கு அளிக்கும் பங்கு, பணியினை திறனாய்க.

அத்தியாயம் 8

# அரசியல் கட்சிகள்

## 8.1. அரசியல் கட்சிகளின் தோற்றம்

நாகரீகம் தோன்றிய காலத்திலிருந்து மக்கள் சமூக, கலாச்சார, பொருளாதார மற்றும் அரசியல் போன்ற பொதுவான நோக்கங்களுக்காக கூட்டாகச் சேர்ந்து பெரிய அமைப்புகளை ஏற்படுத்தி செயல்பட்டு வருகின்றனர். கட்சி என்பது கூட்டு வாழ்க்கைக்கான அமைப்பேயாகும். நிறுவப்பட்ட சமுதாயம் மட்டுமே கட்சி எனப்படும். அரசியல் கட்சி என்பது 200 ஆண்டுகட்குட்பட்ட ஒரு நவீன நிகழ்வாகும்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளை உருவாக்கியவர்களுக்கு கட்சி அமைப்பு முறையில் நம்பிக்கையில்லை. இதனுடைய தாக்கம் மிகவும் மோசமானதாகயிருக்குமென அவர்கள் எண்ணினார்கள். 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா, வடஅமெரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் தான் முதன் முதலாக கட்சியும், கட்சி அமைப்புகளும் ஏற்படுத்தப்பட்டன. அதன்பின்பு தான் மற்ற நாடுகளில் இவை முழுவீச்சில் ஏற்படுத்தப்பட்டன.

அரசியல் கட்சிகள் குடியாட்சி முறை பின்பற்றப்படும் நாட்டிற்கு மிகவும் அவசியமானவை. தற்போதைய உலகில் குடியாட்சிகள் பிரதிநிதித்துவ தன்மையை கொண்டிருக்கின்றன. இத்தகைய குடியாட்சி அமைப்புகளில் அரசியல் கட்சிகள் மக்களுக்கு அரசியலில் ஆர்வத்தை ஊட்டி பங்கேற்க கற்றுத்தருகின்றன.

## 8.2. கட்சி அமைப்பு முறை விளக்கம்

அரசியல் வாழ்க்கையில் தங்களுக்குள் சில கொள்கைகளையும், கோட்பாடுகளையும் ஏற்படுத்திக் கொண்டு நாட்டை வளர்ச்சிப்



பாதையில் கொண்டு செல்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பே கட்சி என்பதாகும்.

1. எட்மண்ட் பர்க் என்பவர் "தங்களது கூட்டு முயற்சியால் குறிப்பிட்ட சில கொள்கைகளின் மீது தேசிய ஆர்வத்தை உருவாக்கி ஒத்த கருத்தை ஏற்படுத்தும் மக்கள் கூட்டமைப்பிற்கே அரசியல் கட்சி" என குறிப்பிட்டுள்ளார்.
2. ஸ்டீஃபன் லீகாக் : குடிமக்கள் ஒன்று திரண்டு அரசியல் பிரிவுகளை ஏற்படுத்தி ஒன்றாகச் செயல்படும் கூட்டமே அரசியல் கட்சி எனப்படுகிறது.
3. கில் கிரைஸ்ட் : ஒத்த அரசியல் கருத்துக்களை செயல்படுத்தும் ஒரு மக்கள் கூட்டமைப்பு அரசியல் கட்சி எனப்படுகிறது.

## *8.3. அரசியல் கட்சிகளின் தேவை*

ஒரு தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கம் அல்லது தேர்ந்தெடுக்கப்படும் அமைப்புகளுக்கு அரசியல் கட்சி என்பது மிகவும் அவசியம். மக்கள் மற்றும் அரசாங்கம், வாக்காளர்கள் மற்றும் பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்குமிடையே ஒரு உறவை ஏற்படுத்தும் பாலமாக அரசியல் கட்சிகள் செயல்படுகின்றன.

ஒரு அரசியல் முறையில் நாட்டின் சமுதாயத் தேவை மற்றும் குறிக்கோளை அடையும் வழிகாட்டியாகவும், எண்ணங்களையும், கருத்துக்களையும் வெளிப்படுத்தும் கருவியாகவும் அரசியல் கட்சிகள் செயல்படுகின்றன. இவை, சில சிறந்த கருத்துக்கள் மற்றும் அரசயில் கொள்கைகளை வழங்கி அரசியல் மதிப்பீட்டினை உயர்த்துகின்றன.

மேலும் மக்களுக்கு அரசியல் பாடம் கற்றுக் கொடுத்து சமுதாய பிரச்சினைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை ஒன்று திரட்டி அரசியல் மற்றும் தேர்தலில் பங்கேற்கச் செய்வதும், நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்காகவும் பாடுபடச் செய்வதே கட்சிகளின் பணியாகும்.

கட்சிகள் தலைமையை உருவாக்கும் நோக்கத்துடன் மக்களில் ஒரு சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பயிற்சியளித்து உள்ளாட்சியிலிருந்து சட்டமன்றம், பாராளுமன்றம் மற்றும் அமைச்சரவையில் பங்கேற்கும் அளவிற்கு அவர்களைத் தயார் செய்யும் நோக்கத்தையும் அரசியல் கட்சிகள் செய்கின்றன.

அரசியல் கட்சிகள் அரசியல் அதிகாரத்தை ஏற்றிச் செல்லும் வாகனங்களாகும். இவை கல்லாமை மற்றும் தீண்டாமை போன்ற சமுதாயக் கொடுமைகளை வேரோடு அழிக்கப் பாடுபடுவதுடன், பஞ்சம், வெள்ளம் போன்றவை மக்களைத் தாக்கும் பொழுது அவற்றிலிருந்து மக்களை கைதூக்கி விட்டு காப்பாற்றுவதற்காகப் பாடுபடுகின்றன. இவை அரசியலுக்காக மக்களை ஒன்று திரட்டி, ஆள் சேர்க்கும் பணியில் ஈடுபடுகின்றன. மேலும் இவை மக்கள் நலனுக்காக சமுதாய நல விழாக்களை நடத்துகின்றன.

## 8.4. கட்சிகளின் வகைகள்

கட்சிகளை அவைகளின் நோக்கம், கொள்கை மற்றும் தங்களின் லட்சியங்களையடையக் கடைபிடிக்கும் வழிமுறைகளைக் கணக்கில் கொண்டு நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவைகள் 1. பழமைவாதிகள் 2. மிதவாதிகள் 3. பிற்போக்குவாதிகள் 4. தீவிரவாதிகள் போன்றவையாகும். இவை தவிர, இடது சாரிகள் மற்றும் வலது சாரிகள் உள்ளனர். அடிப்படை மாற்றங்களையும், சீர்திருத்த சட்டங்களையும் அறிமுகப்படுத்த விரும்பும் கட்சிகள் இடது சாரிகள் என அழைக்கப்படுகின்றன.

மெதுவாக, நிதானமாக, மென்மையாக மாற்றங்களை வரவேற்பவர்கள் வலதுசாரிகள் எனவும் அழைக்கப்படுகின்றனர். சில சமயங்களில் ஒரே கட்சிக்குள் இடதுசாரிகள் மற்றும் வலதுசாரிகள் உள்ளனர். உதாரணத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (இடதுசாரி) மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி என இரு பிரிவு உள்ளனர் (வலதுசாரி).



பிறகட்சிகள் கீழ்க்கண்டவற்றினடிப்படையில் வரிசைப்படுத்தப் படுகின்றன.

1. அரசியல் கட்சிகளில், ஒரு கட்சி, இரண்டு கட்சி மற்றும் பல கட்சிகள் முறை ஆதிக்கம் செலுத்துகின்றன.
2. கட்சிகளின் அமைப்பில் உள்ள முக்கிய குணாதிசயங்கள் யாவையெனில், சில கட்சிகள், தலைவனையும் சில கட்சிகள் கொள்கைகளையும், சில அமைப்புகள் ஆர்வத்தையும் முன்னிலைப்படுத்தி செயல்பட்டு வருகின்றன.
3. கட்சிகள் தேசத்தின் எந்தெந்தப் பகுதியில் ஏற்படுகின்றனவோ அப்பகுதியின் செல்வாக்கைப் பயன்படுத்தி நாட்டிற்குள் ஊடுருவிப் பரவுகின்றன. இவை தேசிய கட்சிகள், மண்டலக் கட்சிகள் மற்றும் உள்ளூர் கட்சிகள் என செயல்படுகின்றன.
4. மௌரிஸ் துவேகர் என்பவர் தெரிவித்துள்ள நான்கு முனைகட்சி அமைப்பு அவை.

   கட்சியின் உட்குழு (caucus)

   உட்பிரிவு (the branch)

   அணு (cell) மற்றும்

   இராணுவம் (Militia) என்பவையாகும்.

***மக்கள் கட்சி* (Mass Party)**

மக்கள் கட்சி என்பது கிளைவகையைச் சேர்ந்தது. இதில் யார் வேண்டுமானாலும் உறுப்பினராகலாம். இது மத்திய தலைமைக்கு உட்பட்டதாகும். இது நிரந்தரமான கட்சி.

இது ஆண்டுமுழுவதும் செயல்பட்டுக் கொண்டிருக்கும். இதன் கிளைகள் நாடு முழுவதையும் உள்ளடக்கி வெவ்வேறு பகுதி மக்களையும் சேர்த்திருப்பது இதன் பலமாகும்.

மேற்படி கிளைகள் கட்சியின் ஆண்டு மாநாட்டிற்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கின்றன. கட்சி மாநாடு, கொள்கையை உருவாக்கும் அமைப்பாக உள்ளது.

**மக்கள் கட்சிக்கு உதாரணம்**

1. ஆங்கிலேய தொழிலாளர் கட்சி (The British Labour Party)
2. ஜெர்மனியின் சமூக குடியரசுக் கட்சி (German Social Democratic Party)
3. இந்திய காங்கிரஸ் கட்சி (Indian National Congress)
4. பாரதிய ஜனதா கட்சி (Bharathia Janatha Party)

## 8.5. ஒற்றைக் கட்சி (Single Party System)

ஒற்றைக்கட்சி அமைப்பில் ஒரே ஒரு கட்சி தான் இருக்கும். இந்த நாட்டின் சட்டம் மாற்று கட்சிகளை அனுமதிக்காது. 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்ட ரஷ்யப் புரட்சியே ஒற்றைக்கட்சி அமைப்பு உருவாவதற்கு அடிகோலியது. இதற்கு உதாரணம் கம்யூனிஸ்ட் சீனா.

**நன்மைகள்**

1. வீண் விவாதங்களில் நேரத்தை வீணாக்காமல் அரசாங்கம் திறமையாக செயல்படும்.
2. உயர்ந்த தேசீய ஒழுங்குமுறையினருக்கும்.
3. அரசியல் எதிர்க்கட்சியினர் இருக்கமாட்டார்கள்.
4. அனைத்து துறைகளிலும் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும் வாய்ப்புண்டு.

**தீமைகள்**

1. கட்சிக்கும், அரசாங்கத்திற்கும் வேறுபாடு இருக்காது.
2. இதில் சட்டமன்றம் கொள்கை உருவாக்கும் அமைப்பாக இருக்கும். அங்கு மனம் திறந்த விவாதங்களுக்கோ, செயலாற்றும் தன்மைக்கோ இடமிராது.
3. இத்தகைய கட்சி ஆட்சி சர்வாதிகார ஆட்சிக்கும் ஏதேச்சதிகாரத்துக்கும் வழிவகுக்கும்.
4. மக்கள் இரக்கமற்ற முறையில் ஒடுக்கப்படுவார்கள்.



5. தனிமனித ஆளுமைக்கு இங்கு மதிப்பிராது.
6. மக்களால் எந்த உரிமையையும் அனுபவிக்க முடியாது.

## 8.6 இருகட்சி முறை

இரு கட்சிகள் இருக்கும். அதில் ஒன்று ஆளும் கட்சி, மற்றொன்று எதிர்கட்சி. இதற்கு உதாரணம்,

1. இங்கிலாந்து - இங்கு பழமைவாத கட்சி மற்றும் தொழிலாளர்கட்சி ஆகிய இருகட்சிகள் உள்ளன.
2. ஐக்கிய அமெரிக்க நாடுகள் **(USA)** - ஜனநாயகக் கட்சி மற்றும் குடியரசுக்கட்சி என்பன.

**நன்மைகள் :**

1. பாராளுமன்ற அரசாங்க முறையில் நிலையான ஆட்சியை கொடுக்கும்.
2. இரு கட்சி அமைப்பில் தான் உண்மையான இரு கட்சிமுறையை ஏற்படுத்த முடியும்.
3. கட்சிகள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளதால் மக்கள் கருத்தை உருவாக்குவது எளிதாகும்.
4. வாக்காளர்கள் இக்கட்சிகளின் கொள்கைகளையும், திட்டங்களையும் நன்கு அறிந்து கொண்டு அவர்களுக்கு பிடித்தமான கட்சியை தேர்ந்தெடுக்கலாம்.
5. எதிர்க் கட்சி சிறப்பாகப் பங்காற்ற முடியும். அரசாங்கத்திடம் உள்ள நிறை குறைகளை சுட்டிக்காட்ட முடியும்.

**தீமைகள் :**

1. அமைச்சரவை எதேச்சைதிகாரத் தன்மையை அதிகரித்து சட்டசபையின் கௌரவத்தைக் குறைக்கும்.
2. ஆளும் கட்சி கொடுங்கோன்மை ஆட்சி புரியும் நிலை ஏற்படும்.

3. சிறுபான்மையினரின் வெவ்வேறு வகையான ஆர்வங்கள் மற்றும் கருத்துக்கள் மறுக்கப்படும்.
4. கட்சி மற்றும் கட்சித் தலைவன் மீது ஒரு கண்மூடித்தனமான விசுவாசம் ஏற்படும்.

## 8.7 பலகட்சி அமைப்பு

சமுதாய அமைப்பில் ஏற்பட்ட பிளவுகளும் தேசிய அளவில் ஏற்பட்ட வேறுபாடுகளும் பலகட்சி முறை அமைப்பு உருவாவதற்குக் காரணம். இதில் இரண்டுக்கு மேற்பட்ட கட்சிகள் இருக்கும். இதற்கு இந்தியா மற்றும் பிரான்சு நாடுகள் உதாரணமாகும்.

**நன்மைகள்**

1. மந்திரி சபை எதேச்சதிகாரம் இருக்காது.
2. தனிமனித சுதந்திரம் அதிக அளவில் இருக்கும். பலவிதமான கருத்துக்கள் இக்கட்சிகளால் பிரதிபலிக்கப்படும்.
3. இம்முறையினால் வெவ்வேறு வகையான நலன்கள் பாதுகாக்கப்பட்டு அவைகளுக்கு போதிய பிரதிநிதித்துவம் கிடைக்கும்.
4. இம்முறையில் வாக்காளர்களுக்கு தங்கள் விருப்பப்படி முடிவெடுக்க அதிக அளவு வாய்ப்பு கிடைக்கும்.

**தீமைகள்**

1. நிலையான அரசாங்கம் இருக்காது.
2. அரசியல் கட்சிகளில் பலபிரிவுகள் உண்டாவதால் நாட்டில் குழப்பம் ஏற்படும்.
3. கட்சிகள் மக்களை எதிரி கூட்டங்களாகப் பிரிக்கும்.
4. எந்த மந்திரி சபையாலும் மக்களுக்கு எவ்விதமான நன்மையும் செய்ய இயலாது. கூட்டணி மந்திரிகள் குறுகிய காலத்திற்கே பதவியில் இருப்பார்கள்.
5. பணம் கொடுத்து ஓட்டுவாங்கும் முறை ஏற்பட்டு அரசியல் புனிதத்தைக் கொடுக்கும்.



## 8.8 தன்னார்வ அமைப்புகள்

அனைத்து சுதந்திர நாட்டிலும் மக்களின் பலவகையான ஆர்வங்களை வெளிப்படுத்தும் முகமாக பல தன்னார்வ அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கும். இவை தங்களுக்குள்ளும் அரசாங்கத்திற்கிடையிலும் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு செயல்படுகின்றன.

இத்தன்னார்வ அமைப்புகள் மக்களின் ஆர்வத்தை அதிகப்படுத்தி அரசியல் கட்சிகளுக்கு பக்கபலமாக இருப்பதுடன் அவற்றின் நோக்கத்தை நிறைவேற்றஉதவுகின்றன. இவை அரசியலில் அங்கீகாரம் பெற்ற சாதனமாகவும், வெளிப்படையாகவும் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டவை.

ஆனால்தன்னார்வ அமைப்புகள் அசாதாரனமானவையாக இருக்கும். இவை ரகசியமாக செயல்படும். இவர்கள் எதையும் ரகசியமாக திட்டம் தீட்டி செயல்படுத்துபவை. சிலசமயங்களில் இத்தன்னார்வ அமைப்புகள் பிறரால் ஏற்றுக் கொள்ளப்படாதவை யாகவும் இருக்கும்.

பேராசிரியர் ஃபைனர் என்பவர் இதனை ‘பெயரிடப்படாத பேரரசு’ எனவும் மற்றவர்கள் இதனை “கண்ணுக்குப் புலப்படாத அரசாங்கம்” எனவும் “அங்கீகாரமற்ற அரசாங்கம்” எனவும் குறிப்பிடுகின்றனர்.

தன்னார்வ குழுக்களைச் சேர்ந்தவர்கள் சமூக பொருளாதார மற்றும் அரசியல் நோக்கங்களுக்காக கூட்டம் சேர்ந்து அமைப்புகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். உதாரணமாக விவசாயிகள், தொழிற் சாலைகளில் பணிபுரியும் தொழிலாளிகள், வியாபாரிகள் மற்றும் வர்த்தகர்கள் போன்றோரும் மருத்துவ நிபுணர்கள், வக்கீல்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் போன்றோரும் பொது நோக்கங்களுக்காகப் போராடவும், தமக்குள் ஒத்தகருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும்

தங்களுக்குள் அமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டு செயல் படுகின்றனர்.

இவர்கள் பொதுமக்களிடம் சாதக கருத்தை உருவாக்குவார்கள். தங்களுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கட்சித்தலைவர்கள், அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகளுக்கு ஆதரவாக மூன்று வகைப்படும்.

1. சங்கம் சார்ந்த அமைப்புகள்
2. நிறுவனம் சார்ந்த அமைப்புகள்.
3. குறிப்பிட்ட காரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட தற்காலிக் அமைப்புகள்.

**1. சங்க அமைப்புகள்**

உதாரணம் : வர்த்தக அமைப்புகள் வியாபார அமைப்புகள், தொழிலாளர்கள் அமைப்புகள், சிறுகடை வியாபாரிகள் அமைப்புகள், மற்றும் வக்கீல் சங்கங்கள்.

**2. நிறுவன அமைப்புகள்**

உதாரணம் : சேவை அமைப்புகளான இராணுவம், காவல் துறை, சீரியல் பணி அதிகாரிகள், கல்வித்துறை ஊழியர்கள் அறிவியல் கூடம் மற்றும் பொதுநிறுவனத்துறை பிரிவுகள்.

**3. குறிப்பிட்ட முக்கிய காரணங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்புகள்**

தற்காலிக தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஏற்படுத்தப்படும் தன்னார்வ அமைப்புகள் அந்தத் தேவைகள் நிறைவேற்றப்பட்டவுடன் கலைக்கப்படும். உதாரணம், விஷால் ஹரியானா இயக்கம், தமிழ்நாட்டிற்கும், ஆந்திராவிற்கும் இடையேயுள்ள தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கவும், கர்னாடகா மற்றும் மகாராஷ்டிராவுக்கு இடையேயான எல்லை பிரச்சினை தீர்க்க ஏற்படுத்தப்பட்ட அமைப்புகள்.



**தன்னார்வ அமைப்புகளின் பணிகள்**

இவற்றின் பணியாற்றும் நடைமுறை அரசியல் அமைப்பு முறைகளுக்கேற்ப வேறுபட்டு கீழ்க்கண்ட 5 காரணிகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

1. அரசியல் நிறுவன அமைப்புகளின் தன்மை அல்லது வகை.
2. கட்சி அமைப்பு முறையின் இயல்பு.
3. தலைவர்கள் மற்றும் மக்களின் நடவடிக்கை மற்றும் அரசியல் பண்பாடு.
4. தன்னார்வ அமைப்பின் வகை மற்றும் பிரச்சினைகள்.
5. சம்பந்தப்பட்ட தன்னார்வ அமைப்புகளின் தன்மை மற்றும் வகை.

வெவ்வேறு வகையான கட்சி அமைப்புகள் வெவ்வேறு விதமான தன்னார்வ அமைப்பு செயல்பாடுகளை ஏற்படுத்துகின்றன. எந்நாட்டில் கட்சி அமைப்பு பலவீனமாக உள்ளதோ அந்த நாடுகளில் தன்னார்வ அமைப்புகள் தாங்களாக செயல்படுகின்றன. சில நாடுகளில் இந்த அமைப்புகள் அரசியல் கட்சிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்துள்ளன.

தன்னார்வ அமைப்புகளின் பணி நாட்டின் பொருளாதார பண்பாட்டு அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. ஒவ்வொரு தன்னார்வ அமைப்பும் அதன் இயல்பு மற்றும் குணாதிசயங் களுக்கேற்ப தங்களது அணுகுமுறை மற்றும் பிரச்சினைகளைக் கையாளும் திறமை ஆகியவற்றை ஏற்படுத்திக் கொள்கிறது.

தன்னார்வ அமைப்புகளால் சட்டப் பூர்வமான மற்றும் சட்டத்திற்குப் புறம்பான விஷயங்களுக்காகப் பணம் பயன்படுத்தப் படுகின்றன. அரசியல் நடவடிக்கைகளில் மக்கள் தொடர்பை அதிகப்படுத்துவதும், பிரச்சினைகளைப் பிரபலப்படுத்துவதற்கு மீடியாக்களைப் பயன்படுத்துவதும் மிகவும் அவசியமானதாகும். பலவீனமான மனம் கொண்ட அதிகாரிகள், மந்திரிகள் அரசியல்

கட்சிகள் மற்றும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு லஞ்சம் கொடுப்பது தெரிந்த விஷயமாகும்.

தன்னார்வ அமைப்புகள் மக்களின் நலனுக்காக அதாவது அமைதிக்காகவும், ஆயுதக்குறைப்பு, சுற்றுப்புறசூழல் பாதுகாப்பு, பிரிவினைவாத எதிர்ப்பு ஜாதி சமத்துவம், மனித உரிமை மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றுதல் போன்றவற்றை காப்பதற்கான இவர்கள் வித்தயாசமான அணுகுமுறையைக் கடைபிடிக்கின்றனர். இவர்கள் இரக்கம், கருணை, நல்ல உணர்வு ஆகியவற்றைப் பயன்படுத்தி அனைத்து கட்சிகளிடமும் ஒற்றுமையை ஏற்படுத்தி பொதுமக்களிடம் நல்ல கருத்தை உருவாக்குவதற்காகப் பாடுபடுகின்றனர்.

சுருங்கக் கூறின் அரசியல் கட்சிகளைப் போல் அல்லாமல் தன்னார்வ அமைப்புகள் அதிகாரத்தைக் காப்பற்றுவதற்காகப் பாடுபடுவதில்லை. அவர்களின் நோக்கம் அளவானதாகவும், குறிப்பிடத்தக்கதாகவும் இருக்கும். குடியாட்சி நன்கு செயல்படுவதற்குத் தேவையான தொடர்புகளை இவர்கள் ஏற்படுத்தித் தருகின்றார்கள்.

## 8.9 பொதுமக்கள் கருத்து

நவீன ஜனநாயக ஆட்சியில் மக்கள் கருத்து மிகவும் முக்கியமான பங்காற்றுகிறது. ஜனநாயகம் என்பது மக்களுக்காகவும், மக்கள் கருத்தினடிப்படையிலும் ஒப்புதலின் பேரிலும் ஏற்படுத்தப்படுவது என விவாதிக்கபடுகிறது.

சர்வாதிகார ஆட்சியில் கூட மக்கள் கருத்துக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. மக்கள் கருத்து என்பது, ஒரு பிரச்சினையின் மீது ஒரு குழு உறுப்பினர்கள் எண்ணங்களின் வெளிப்பாடேயாகும். இந்தக் கருத்து தேர்தலின் போதும், முறையான சட்டம் இயற்றும் போது கொள்கை முடிவெடுக்கும் போதும் வெளிப்படும்.



### பொதுமக்கள் கருத்தின் முக்கியத்துவம்

பொதுமக்கள் கருத்து என்பது நவீன காலத்தில் ஒதுக்க முடியாத ஒரு மிகப் பெரிய சமூக மற்றும் பொருளாதார சத்தியாகும். அனைத்துக் கட்சிகளும் மக்கள் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன.

மக்கள் கருத்தை உருவாக்குவதற்காக செலவழிக்கப்படும் பணம் அவர்களுக்கும் நாட்டிற்கும் நன்மை தருவனவாகவே யிருக்கும் என்று கருதப்படுகிறது.

ஒரு அரசாங்கத்தின் வெற்றி மக்களின் நன் மதிப்பைப் பொறுத்தே அமைகிறது. மக்களின் விழிப்புணர்ச்சியே வெற்றிகரமான குடியரசை ஏற்படுத்தும். மக்கள் கருத்து ஆளுபவர்களின் அதிகாரத்தை அதிக அளவில் கட்டுப்படுத்துகிறது.

மக்கள் கருத்துக்கு எதிராக எடுக்கப்படும் தீர்மானங்கள் அந்தக்கட்சிக்கும், அரசாங்கத்துக்கும் கேடு விளைவிப்பதாக இருக்கும்.

### மக்கள் கருத்துக்குத் தேவையான சூழ்நிலைகள்

1. மக்களின் சிந்தனைத்திறன்.
2. தேசியப் பிரச்சினைகளில் மக்களுக்குள்ள ஆர்வம்.
3. குழுக்கள் அமைத்தல்.
4. அரசியல் தலைவர்களின் வழிகாட்டுதல்.
5. எழுத்தாளர்களின் பங்கு.
6. சமூக ஆர்வம் மற்றும் ஒற்றுமையாக இருத்தல்.

### பொதுமக்கள்கருத்து - பகுத்தாராய்தல்

மேற்கத்திய நாடுகளுக்கும், பின்தங்கிய நாடுகளுக்குமிடையே பொதுமக்கள் கருத்தில் மிகப்பெரிய வேறுபாடுகள் உள்ளன. மேற்கத்திய மக்கள் மிகவும் படித்தவர்கள். எனவே அவர்களிடம் ஒரு உறுதியான கருத்தை மிகச் சுலபமாக விதைக்க முடியும்.

ஆசியா, மற்றும் ஆப்பிரிக்கா போன்ற பின்தங்கிய நாடுகளில் இது முடியாது.

இந்தியாவில் அதிக அளவு மக்கள் கிராமங்களில் தான் வசிக்கிறார்கள். இவர்கள் போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்களிலிருந்து தனிமைப் படுத்தப்பட்டதால் தங்களுக்கென்று ஒரு கருத்தை அவர்களால் ஏற்படுத்திக் கொள்ள இயலவில்லை.

பொதுவாக மக்கள் கருத்து என்பது இந்தியாவில் பெரும் நகரங்களில் தான் தோன்றும். எனவே, அரசியல் கட்சிகள் தங்கள் கவனத்தை நகரங்களின் மீது செலுத்தி கிராமங்களைப் புறக்கணித்துவிடுகின்றன. தேர்தல் நேரங்களில் மட்டும் இவர்கள் கிராமங்களுக்குச் சென்று தங்கள் கருத்துக்களை மக்கள் மீது திணிப்பர். இதனை மக்களும் கண் மூடித்தனமாக ஏற்று செயல்படுவார்கள்.

இந்தியாவைப் பொறுத்தவரை ஆட்சியாளர்கள் அவர்களின் நல்ல குணங்களை வைத்துத் தீர்மானிக்கப்படாமல், ஜாதி, மதம் போன்ற பிற விஷயங்களைக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றனர். இந்த நிலை மாற்றப்பட வேண்டும். மக்கள் கருத்து ஒரு அரசாங்கத்தின் மீது எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்துகிறதோ அந்த அளவிற்கு அது முக்கியத்துவம் பெறுகிறது.

## 8.10 மக்கள் தொடர்பு சாதனங்களின் பங்கு

சினிமா என்பது மக்களுக்குப் படிப்பினையையும், பொழுது போக்கினையும் கொடுக்கும் ஒரு பாரம்பரியம்மிக்க சாதனமாகும். இது நுட்பமான முறையில் மக்களிடம் பொதுக் கருத்துக்களை உருவாக்கக் காரணமாக உள்ளது. இது ஒரு மிக சக்தி வாய்ந்த மக்கள் தொடர்பு சாதனமாகும்.

மின்னணு புரட்சியானது நாட்டின் மூலை முடுக்கு களிளெல்லாம் ஊடுருவிப் பாய்ந்துள்ளது. ரேடியோ, டெலிவிஷன் மற்றும் வி.சி.ஆர் போன்றவை செய்திகள், முக்கியதகவல்கள், விளம்பரங்கள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களை



பலதரப்பட்ட மக்களுக்கும் கொண்டு செல்லும் மிகப்பெரிய சாதனங்களாகவுள்ளன.

ஒலி-ஒளி அமைப்பானது படிப்பறிவற்றவர்களுக்குக் கூட அதன் தாக்கத்தை எற்படுத்துகிறது. கடமைகள், வீடுகள், காய்கறி அங்காடிகள் மற்றும் தெரு முனைகள் ஆகிய இடங்களில் இந்தத் தொலைத் தொடர்பு சாதனங்கள் இருப்பது தொடர்பு அமைப்புகள் மற்றும் சமுதாய வாழ்க்கை ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தி பெரிய மாற்றங்களை உண்டாக்குகின்றன.

பொதுக்கருத்தை உருவாக்குவதிலும், தகவல்களின் அளவை அதிகரிப்பதிலும், விழிப்புணர்ச்சியை விரிவாக்குவதிலும், புதிய அணுகுமுறைகளையும் கருத்துக்களை உருவாக்குவதிலும் மின்னணுசாதனம் மறைமுகமாகவும் நேரடியாகவும் உதவி வருகிறது.

### பத்திரிகை சாதனம்

தினசரி பத்திரிகைகள், வாரஇதழ்கள் மற்றும் மாதஇதழ்கள் போன்றவை அச்சு சாதனங்களாகும். இவை பொதுக்கருத்தை உருவாக்கி அதில் தாக்கத்தை ஏற்படுத்துவதில் சக்தி வாய்ந்த தனி ஏஜென்ஸிகளாகச் செயல்படுகின்றன. பேசுமளவில் வார்த்தைகளைவிட எழுதப்படும் எழுத்துக்கள் மக்களிடம் புனிதத்தன்மை வாய்ந்ததாகவும், சட்டப் பூர்வமானதாகவும் கருதப்படுகின்றன.

செய்தித் தாள்கள் தினமும் விஷயங்களை பல இடங்களுக்குப் பரவச் செய்வதுடன் உண்மை மற்றும் தகவல்களுடன் பத்திரிகை தலையங்கத்துடன் கூடிய விமர்சனங்கள், ஆய்வாளர்கள் மற்றும் வல்லுநர்களின் கருத்துக்கள் போன்றவை பொதுக் கருத்தை உருவாக்குவதற்கு தினமும் நல்ல தீனியாக விளங்குகிறது.

## 8.11 தேர்தல் நடத்துவதற்கான அமைப்பு

சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல் நடத்தும் முறைமைக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் தந்தை

எனப்படுபவர்கள் அதிமுக்கியத்துவம் கொடுத்தனர். எங்கு நேர்மையான சுதந்திரமான தேர்தல் நடக்கிறதோ அதுதான் ஒரு சிறந்த ஜனநாயக அமைப்பின் இருப்பிடமாகும் என அவர்கள் கருதினார்கள்.

எனவே, அதன்படி மேற்பார்வையிடிவதற்கும், வழிபடுத்து வதற்கும், மற்றும் கட்டுக் கோப்புடன் தேர்தல் நடத்துவதற்காகவும் தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டது. அந்தந்த நேரத்திற்குத் தகுந்தமாதிரி வாக்காளர் பட்டியல்களில் திருத்தம் செய்வதும், பட்டியல்கள் தயார் செய்வதும் இந்த ஆணையத்தின் பணியாகும்.

இவ்வாணையம் பாராளுமன்றம், சட்டமன்றம், குடியரசுத் தலைவர் குடியரசு துணைத் தலைவர் ஆகியோரைத் தேர்ந்தெடுப்பதற்கும் தேர்தல் நடத்துகிறது.

**தேர்தல் ஆணையம்**

இவ்வாணையம் தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் இதர சில தேர்தல் ஆணையர்கள் அடங்கியதாகும். இவ்வாணையத்தின் உறுப்பினர்களை தேவையான போது குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

இவர்கள் குடியரசுத்தலைவரால் 5 ஆண்டுகளுக்கு நியமிக்கப்படுகிறார்கள். இவர்களது பணியும், பணிக்காலமும் பாராளுமன்றத்தால் நியமிக்கப்படுகிறது. இவர்கள் பணியிலிருக்கும் போது பணி விதிகளை மாற்ற இயலாது.

உச்ச நீதிமன்ற நீதிபதியைப் பதிவியிலிருந்து எடுக்க எந்த விதியைக் கடைபிடிக்கப்படுகிறதோ, அதே விதியின்படிதான் தலைமை தேர்தல் ஆணையரையும் நீக்க முடியும் எனவே, நினைத்தவுடன் இவரை பதிவியிலிருந்து நீக்கமுடியாது. இவரை இவை வரம்புமீறும் ஆட்சியாளர்களிடமிருந்து பாதுகாக்கிறது.

ஒவ்வொரு மாநிலத்திலும் தேர்தல் ஆணையத்தின் கிளைகளிருக்கும் இதற்கு அந்தந்த மாநிலங்களை கலந்தாலோசித்து



ஒரு முதன்மைத் தேர்தல் அதிகாரியை தேர்தல் ஆணையர் நியமிப்பார். அவர்கள் மாநிலங்களில் தோதல் நடத்த நிலையான தேர்தல் அதிகாரிகளாகவும் அமைப்பாகவும் செயல்படுவார்கள்.

தேர்தல் ஆணையத்தில் பணியாற்றுவோர் எண்ணிக்கை குறைவாக இருக்கும். ஆனால் தேருதல் காலங்களில் தேவையான அதிகாரிகளும், பணியாளர்களும் பணியில் அமர்த்தப்படுவர். (உ.ம்) அரசுத்துறைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள்.

**தேர்தல் ஆணையத்தின் அதிகாரங்களும் பணிகளும்**

இந்திய தேர்தல் ஆணையத்திற்கு பரந்த அதிகாரமும் பணிகளும் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகள்

1. தேர்தல் சமயங்களில் வாக்காளர் பட்டியல் தயார் செய்தல், திருத்தம் செய்தல், அப்போதைக்கப்போது சரிசெய்தல் போன்றவை.
2. தேர்தல் மற்றும் உபதேர்தல் நடத்துதல் மற்றும் கண்காணித்தல்.
3. பாராளுமன்றம் மற்றும் சட்டமன்ற தேர்தலுக்கு வாக்காளர் தொகுதியை பிரித்துத்தருவதும், அவர்களுக்கு தொகுதியை ஒதுக்கித் தருவதும்.
4. தேர்தல் திட்டம் வகுத்துக் கொடுத்தல், வேட்புமனுதாக்கல் செய்வதற்கும் தேதிகுறித்துக் கொடுப்பது, தேர்தலுக்கான ஆயத்தம் செய்வது தேர்தல்முடிவை அறிவிக்கும் தேதி போன்றவற்றைத் தீர்மானிப்பது.
5. குடியரசுத்தலைவர் மற்றும் ஆளுனருக்கு (அந்தந்த மாநிலங்களிலுள்ள) தேர்தல் நிலவரம், வேட்பாளர்களின் தகுதியின்மை போன்றவற்றைத் தெரிவிப்பதும்.
6. தேர்தல் நடைபெறும் நேரங்களில் வேட்பாளர்கள் மற்றும் வாக்காளர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டு மென்பதற்கான நடத்தை விதிகள் தயார் செய்து அறிவித்து

அவற்றை நடைமுறை படுத்த வற்புறுத்துவது. தேர்தல் செலவுகளுக்கு வரம்பு ஏற்படுத்திக் கொடுப்பது மற்றும் வேட்பாளர்கள் தேர்தல் செலவு பற்றிய அறிக்கை கொடுக்கும் பொழுது அவைகளை சரிபார்த்தல்.

தேர்தலில் போட்டியிடும் கட்சிகளுக்கு சின்னம் ஒதுக்கித்தருதல் அவர்கள் வானொலி மற்றும் தொலைக்காட்சியைப் பயன்படுத்தவேண்டிய நேரத்தைக் குறித்து மதிப்பிடுவது தீர்த்து வைப்பது.

## 8.12 தேசியக் கட்சி

பூகோளப் பிரிவு மற்றும் பரப்பு அடிப்படையில் நான்கு வகையான நட்சிகள் உள்ளன, அவை

1. தேசிய கட்சிகள்.
2. மாநிலகட்சிகள்.
3. ஒரு சில மாநிலங்களுக்கு மட்டும் தொடர்புடைய கட்சிகள் **(trans regional parties).**
4. உள்ளூர்கட்சிகள்.

1954-ல் நடந்த லோக்பாவிற்கான பொதுத்தேர்தலின்போது குறைந்தது நான்கு மாநிலங்களிலாவது 4 சதவீதத்திற்குக் குறையாத வாக்குகள் பெற்ற சில கட்சிகளை தேசியக் கட்சிகளாக இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

**அவை**

1. காங்கிரஸ்கட்சி.
2. பாரதிய ஜனதா கட்சி.
3. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.ஐ)
4. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (சி. பி. எம்)



## 8.13 மாநில கட்சி (Regional Party)

இந்தியாவில் மாநிலக்கட்சிகள் அந்தந்த மாநில அடிப்படையிலும், குடியாட்சிமுறைப் பண்பாடு. சமூக பொருளாதார மற்றும் குடிமக்களிடையே நிலவும் பிரிவுகளுக்கு ஏற்ப தோன்றியிருக்கின்றன.

(உ.ம்) இந்தியாவில் அஸ்ஸாம், நாகலாந்து, மிசோரம், பஞ்சாப், ஒரிசா, ஆந்திரா மற்றும் தமிழ்நாடு.

இவை ஒவ்வொன்றும் தனக்கென சில திட்டங்களையும், மாநில தன்னாட்சியை நிறைவேற்றும் எண்ணமும் கொண்டவை. இந்தியா போன்ற கூட்டாட்சி நாடுகளில் தான் வேற்றுமையில் ஒற்றுமையை பார்க் இயலும்.

**முதல்வகை**

இந்தியாவில் மூன்று வகையான மாநிலக் கட்சிகள் உள்ளன. இவற்றில் முதலாவது காங்கிரஸ் அதிருப்தியாளர்கள் தோற்றுவித்ததாகும்.

இவைகள் காளான்கள் போல் மறைந்து விட்டன. தற்காலிகப் பிரச்சினைகளுக்காக தோன்றியவை இவை, பேரம் பேசுவதற்கான சக்தியை இவை பெற்றன. (உ.ம்.) வங்காள காங்கிரஸ், கேரளா காங்கிரஸ், உட்கல் காங்கிரஸ், தெலுங்கானா பிரஜா கமிட்டி.

**இரண்டாவது வகை**

மலைவாழ் ஜாதியினர் கட்சிகள் மலைவாழ்மக்களின் ஒற்றுமை அடிப்படையில் மத்திய அரசிடமிருந்து தங்கள் இனத்தவருக்கு அதிக சலுகைகள் பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்டவை. இவைகள் தங்களின் முழு சுதந்திரத்திற்காகப்பாடுபட்டன. இந்த இயக்கங்களின் செயல்பாடு ராணுவ இயக்கங்கள் போலிருக்கும். (உம்) நாகா தேசியக் குழு, மிசோரம் தேசிய முன்னனி, காரோ தேசியக் குழு, மணிப்பூர் தேசிய மக்கள் கட்சி போன்றவை.

*மூன்றாவது வகை*

தம்ழ்நாடு, ஆந்திரா, பஞ்சாப், ஜம்மு காஷ்மீர் மற்றும் அஸ்ஸாம் போன்ற பெரிய மாநிலங்களில் ஏற்பட்டவை. இக்கட்சிகள் மிகப்பெரியவை. பலகட்சி முறையைக் கொண்ட இந்தியாவில் கட்சிகள் மிகப் பலம் வாய்ந்தவைவையாக அமைக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு அதிக அளவில் வாக்காளர்கள் உள்ளதால் தங்கள் கட்சி உறுப்பினர்களை லோக்சபா மற்றும் ராஜ்யசபாவிற்கு தேர்ந்தெடுத்து அனுப்பி பாராளுமன்றத்தில் உள்ள ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையில் சமநிலையாளர்களாக செயல்படுகின்றனர். இதற்கு (உ.ம்.) தி.மு.க, அ.இ.அ.தி.மு.க, அசாம் கணபரிஷத், பிஜூ ஜனதா தளம், திரிணாமுல் காங்கிரஸ்.

## 8.14 ஜாதிக்கட்சி

பொதுவாக மக்கள் அவர்கள் வசிக்கும் பகுதி, தொழில், ஜாதி, சமுதாயம், மதம், மற்றும் இனம் ஆகியவற்றின் அடிப்படையில் பிரிக்கப்படுகின்றனர். சிலசமயங்களில் அவர்களின் உடல் நிறத்தினடிப்படையிலும் பிரிக்கப்படுகின்றனர்.

இந்தியாவைப் பொறுத்தவரை மக்கள் பல்வேறு குழுக்களைச் சேர்ந்தவர்களாகவுள்ளனர். அதில் ஜாதி ஒருவகை, இத்தகைய பிரிவு இந்தியாவில் மட்டும்தான் உள்ளது. இந்தியாவில் பலவகையான ஜாதி அமைப்புகள் உள்ளன. இந்து மதத்திலுள்ள சாதிப் பிரிவினை வாதம் தான் இதற்குக் காரணம்.

பொதுவாக பெரிய கட்சிகள் ஜாதியைப் பொருட்படுத்து வதில்லை. இருப்பினும் தேர்தல் சமயங்களில் ஜாதியும் முக்கிய பங்குவகிக்கிறது. தங்கள் ஜாதியைச் சார்ந்த தலைவர்களையும், கட்சியையும் தான் மக்கள் ஆதரிக்கின்றனர்.

தங்கள் ஜாதியைச் சார்ந்த மக்களுக்கு அரசிடமிருந்து அதிக சலுகைகளைப் பெற்றுக் கொடுக்கவும், பாதுகாப்புக் கொடுப்பதற்குமே இத்தகைய ஜாதிக் கட்சிகள் ஏற்படுத்தப்



படுகின்றன. தாம் விரும்பும் சலுகைகளைப் பெருவதற்காக இத்தகைய ஜாதிக்கட்சிகள் பெரிய கட்சிகளின் ஆதரவைப் பெறவிழைகின்றன.

## 8.15 வகுப்புவாதக் கட்சி

இனஉணர்வுகள் மற்றும் இனநம்பிக்கையின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டவை ஏற்படுத்தப்பட்டவை தான் வகுப்புவாதக் கட்சிகள். இவைகளும் சாதிக் கட்சிகளைப் போன்று குறிப்பிட்ட இனமக்களைக் கொண்டவையாகும்.

இவற்றின் நோக்கம் தம் இனமக்களுக்கு பாதுகாப்பு மற்றும் அரசிடமிருந்து தம்இனமக்களுக்கு அதிக சலுகைகள் பெறுவதுமாகும். இவர்கள் சுயலாப விரும்பிகளாகவும் இருப்பர்.

இக்கட்சிகள் பொதுவாக மற்ற கட்சிகளின் எண்ணங்களுக்கு எதிராகவே செயல்படுகின்றன. எனவே, ஜாதி, மத, நிற உணர்வில்லாத பிறகட்சிகள் இவர்களுக்கு ஆதரவு கொடுப்பதில்லை. இத்தகைய கட்சிகள் தேசிய உணர்வுகளுக்கு விரோதமாகச் செயல்படுவதால் நாம் இவற்றை ஆதரிக்கக்கூடாது.

### வினாக்கள்

### *பகுதி - அ*

**I. *சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.***

1. இந்திய தேசீயக் காங்கிரசை தோற்றுவித்தவர்

அ) எ.ஓ. ஹியூம் ஆ) அன்னிபெசண்ட்

இ) மகாத்மா காந்தி ஈ) நேதாஜி

2. எப்போது அ.இ.அ.தி.மு.கழகம் தோற்றுவிக்கப்பட்டது?

அ) 1948 ஆ) 1972

இ) 1977 ஈ) 1980

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. இந்தியா ———— கட்சி முறையைப் பெற்றிருக்கிறது.

2. தெலுங்கு தேசம் ————— கட்சியாகும்.

**III. கீழ்வருவன சரியா அல்லது தவறா என எழுதுக.**

1. தேசியத் தேர்தல்கள் தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படுகின்றன.

2. பொதுக்கருத்தை உருவாக்குவதில் பொதுக்கருத்து சாதனங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன.

## பகுதி - ஆ

1. அரசியல் கட்சியின் தேவையை விவரிக்க.

2. வகுப்புவாதக் கட்சியின் தீமைகளை விளக்குக.

## பகுதி - இ

1. இருகட்சி முறையின் நிறைகள் மற்றும் குறைகளை விவாதிக்க.

2. மக்கள் கட்சி என்றால் என்ன?

3. ஒரு கட்சி முறை என்பதனை விளக்கி அதன் நிறைகள் மற்றும் குறைகளை எழுதுக.

4. தேர்தல் முறையை விவரித்து தேர்தலை நடத்துவதில் தேர்தல் ஆணையத்தின் பங்கை விளக்குக.

அத்தியாயம் - 9

# மக்களாட்சி அதிகாரப்பரவல்

## 9.1 அறிமுகம்

மக்களோடு தொடர்புடைய நிறுவனங்கள் எதுவாயினும் அந்நிறுவனங்கள் சார்ந்த முக்கியமான கருத்துக்கள் இரண்டு. அவை ஒன்று அதிகார குவிப்பு மற்றும் அதிகாரப் பரவலாகும். இந்த கருத்துக்கள் அந்த நிறுவனங்கள் அவற்றினுடைய கடமைகளையும், பொறுப்புகளையும் நிறைவேற்றுவதோடு தொடர்புடையவை ஆகும். உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்கள் அவற்றிலும் குறிப்பாக குடியாட்சி அல்லாத அரசாங்கங்கள் அதிகாரங்களை செயல் துறையிடம் குவித்து வருகின்றன. இவ்வாறு அதிகாரங்கள் குவிக்கப்பட்ட போதும் அத்தகைய அரசாங்கங்கள் முழுமையாக திருப்தி அடைவதில்லை.

இது ஒரு முடிவில்லாத நிகழ்வு. இவ்வாறு தனி ஒருவரிடமோ அல்லது குறிப்பிட்ட ஏதேனும் ஒரு ஆதிக்க அதிகாரம் செலுத்தும் அமைப்பிடமோ அதிகாரத்தை குவிக்கும் போக்கு மக்களாட்சி அரசாங்கம் ஏற்படுகின்ற வரையிலும் இருந்து வந்துள்ளது.

இதற்கு பல காரணங்கள் உண்டு. அவற்றில் முக்கியமானவை கீழேத் தரப்பட்டுள்ளன.

1. பரந்த அளவிலான தொழில் நுட்ப அடிப்படையில் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டது.
2. கீழ்மட்டத்திலுள்ள நிறுவனங்களின் அதிகாரங்களை மேலும் மேலும் எடுத்துக் கொண்டது.
3. ஆட்சியாளர்கள் இடையே சுயக் கட்டுப்பாடு இல்லாமல் போனது.

4. குறுகிய காலத்தில் நேர் வழியில் அல்லாமல் குறுக்கு வழிகளில் செல்வந்தராக வேண்டும் என்ற மக்களின் மனப்பான்மை.
5. மேல்மட்ட அரசியல் வாதிகளிடையே நிகழும் அதிகார பேராசை, மற்றும்
6. உற்பத்தியாளர்கள் மற்றும் உபயோகிப்பவர்களிடையே நேரடி தொடர்பு இல்லாமல் போனது.

மேலே கூறப்பட்ட காரணிகள் அரசாங்கங்கள் பொது மக்களுடைய சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் தொழில் நுட்ப வாழ்க்கையை ஒழுங்குபடுத்துவதற்கான அதிகாரங்களை பெறுவதற்கு கட்டாயப்படுத்தின். இவைகளின் தாக்கத்தால் தற்கால மக்கள் அவர்களின் துவக்கம், முன்னேற்றம், தன்னம்பிக்கை போன்ற தகுதிகளை இழந்தார்கள். அவர்களுடைய எதிர்ப்பார்க்கின்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டார்கள். இவ்வாறு அவர்கள் தங்களின் முக்கியத்துவத்தை இழந்து அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு தகுதியும், திறமையும் அற்றவர்கள் ஆனார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் குடியாட்சி முறைகளில் அதிகார பகிர்வு வேண்டுமென்ற போக்கு ஏற்பட்டது. இது அதிகார குவிப்புக்கு எதிர்மறையானது. இந்தியாவில் சுதந்திரம் கிடைத்த உடனேயே பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில் மக்களே அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கான முயற்சிகள் தொடங்கப்பட்டன.

### 9.2 மக்களாட்சி அதிகாரப் பரவல் விளக்கம்

மக்களாட்சி என்பது மக்களால் நடத்தப்படும் ஆட்சி என்று பொருள்படும். இதில் மக்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். மக்களுக்கு முக்கியத்துவம் தந்து ஊக்கப்படுத்துகின் பொழுது மக்களாட்சி குறிக்கோள்களை அடைவது எளிதாகிறது. கிரேக்கத்



தத்துவ ஞானி அரிஸ்டாட்டில் மக்களுடைய நன்மைகளையும் முன்னேற்றத்தையும் அடைவதற்காக அரசு தொடர்ந்து செயல்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளார். அதுவே இக்கால மக்களாட்சியின் குறிக்கோளும் ஆகும். இதை அடைவதற்கு பொறுப்புகளும் நடைமுறைப்படுத்த வேண்டிய பணிகளும் பரவலாக்கப்பட வேண்டும். இதையே பரவலாக்குதல் என்று கூறுகிறோம்.

மக்கள் நலன் சார்நத திட்டங்களை மக்கள் பங்கு கொண்டு அவர்களின் உழைப்பால் குறிக்கோள்களை அடைகின்றபொழுது மக்களாட்சி த்துவங்கள் அடிப்படையில் அவை நிறைவேற்றப்படுகின்றன என்பது தான் மக்களாட்சி அதிகாரப்பரவல் என்பதான் பொருளாகும். அதிகாரப் பரவலின் முக்கியமான பகுதி முடிவெடுக்கும் உரிமையை மேல்மட்டத்திலிருந்து அடுத்த மட்டங்களில் உள்ளவர்களுக்கு தருவதாகும். அதிகாரப் பரவல் என்பது அடுத்தடுத்த நிலைகளிலுள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மக்களுடைய ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் அவர்களே அதனை செய்து முடித்துக்கொள்ள வகை செய்யும் முறையில் பணிகளையும் வளங்களையும் தருகின்ற தொடர்ந்து செயல்படும் நிகழ்வு ஆகும்.

மக்களாட்சி அதிகாரப்பரவலின் மற்றும் ஒரு அம்சம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அரசாங்க பிரதிநிதிகளின் அதிகார எல்லைக்குள் அரசாங்கத்தின் அதிகாரவர்க்கம் பணியாற்றுமாறு செய்வதாகும். இத்தகைய அதிகாரப் பரவலுக்கு அடுத்தடுத்த மட்டங்களிலுள்ள மக்கள் முடிவெடுப்பது, நிறைவேற்றுவது, அவைகளை விளக்குவது அரசாங்கத்தால் கிடைக்கும் நன்மைகளை பகிர்ந்து கொள்வது போன்ற செயல்பாடுகளுக்கு தேவையான வட்டாரவாரியான வட்டார அமைப்புகளை ஏற்படுத்துவதாகும்.

**அதிகாரப்பரவல் மற்றும் அதிகார ஒப்படைப்பு**

அதிகாரப்பரவல் (decentralisation) மற்றும் அதிகார ஒப்படைப்பு (delegation) வெவ்வேறானவை. இரண்டும் ஒன்றாகாது அதிகாரப்பரவல் மேல் மட்டத்தில் அதிகாரத்திலுள்ளவர்கள் சில அதிகாரங்களை கீழ்மட்டத்திலுள்ளவர்களுக்கு அதாவது அடுத்த நிலையில் உள்ளவர்களுக்கு முடிவெடுக்கும் அதிகார உரிமையை தருவதாகும். ஆனால் அதிகாரஒப்படைப்பு என்பது மேல் மட்டத்திலுள்ளவர்கள் அடுத்த மட்டங்களில் உள்ளவர்களுக்கு மேல் மட்டத்திலுள்ளவர்களின் பிரதிநிதிகளாக செயல்படுபவர்களுக்கு குறிப்பிட்ட பணிகளை மாற்றி தருவதாகும். இந்த ஏற்பாட்டின்படி முடிவுகள் எடுக்க அவைகளை நிறைவேற்றுவதற்கு உத்தரவு பிறப்பிக்க அவர்களுக்குள்ள உரிமைகளை மேல்மட்டத்திலுள்ள வர்கள் அவர்களிடமே வைத்துக் கொள்கிறார்கள். அவர்கள் பொறுப்புகளையும் கடமைகளையும் மாற்றித் தருவதில்லை. அவர்கள் செய்வதெல்லாம் கீழ்மட்டத்திலுள்ளவர் அல்லது மக்களுடைய பிரதிநிதிகள் என்னென்ன பணிகளை செய்ய வேண்டுமே அவைகளை நிறைவேற்றுமாறு பணிப்பதே ஆகும்.

இத்தகைய அதிகாரப்பரவலை காலஞ்சென்ற பிரதம அமைச்சர் நேரு அவர்கள் “பஞ்சாயத்து ராஜ்ஜியம்” அல்லது “பஞ்சாயத்து ஆட்சி” என்று குறிப்பிட்டார்கள். எனவே அதிகாரப்பரவல் என்ற கருத்து பஞ்சாயத்து அமைப்புகளை குறிப்பிடுவதாக உள்ளது.

## 9.3 தல சுய ஆட்சி என்பதன் பொருள்

தல சுய ஆட்சி என்பது தனது நிறுவன அமைப்பு முறையிலும், பணிகளிலும், குறிக்கோளிலும் அரசாங்க அமைப்பினின்று வேறுபடுகிறது. கிராமங்களிலும் நகரங்களிலும் வாழும் மக்களின் நல்வாழ்வை உயர்த்துவதற்கான வழிமுறைகளை வகுத்து அவைகளை செல்வனே செயல்படுத்துவதே தல சுய ஆட்சி



நிறுவனத்தின் முக்கிய குறிக்கோளாகும். இது, அரசாங்க அமைப்பிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்றால் சட்டமன்ற, ஆட்சித்துறை, நீதித்துறை ஆகிய மூன்று அமைப்பு முறைகளைக் கொண்டது அரசாங்கம். நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் மட்டுமன்றி அந்நாட்டின் தேசிய வருமான வழிமுறைகளும், அந்நாட்டின் அரசாங்க அதிகார எல்லைக்குள் அடங்கும். அதனுடைய செயல்முறைகள் சமூக பொருளாதார கலாச்சார அரசியல் தன்மை வாய்ந்தவை. அதனுடைய பொறுப்பின் கீழ் நாட்டின் செல்வ நிலையை பெருக்குதல் மக்களின் நல்வாழ்விற்கான வழிமுறைகளைக் கொண்டு வருதல் போன்ற ஒரு நாட்டை ஆளுவதற்கு தேவையான எல்லா வழிமுறைகளும் அதனுடைய பொறுப்பின் கீழ் வரும். எனவே, ஒரு நாட்டின் அரசாங்கத்தின் அதிகார வரம்பு அந்நாட்டின் எல்லை முழுவதிலும் எல்லா மக்களிடமும் பரவியிருக்கிறது. ஆனால், தலசுய ஆட்சி நிறுவனம் நாடு முழுவதும் அல்லாமல் அங்கங்கு பல பகுதிகளில் வாழும் மக்கள் தொகையின் நலனுக்காக செயல்படுகிறது. ஒரு பகுதி எல்லைக்குள் எழும் சிக்கல்கள் போன்றவைகள் அதனுடைய அதுகார வரம்பிற்குட்பட்டவை. தல சுய ஆட்சி நிறுவனம் அரசினால் இயற்றப்பட்ட சட்டத்தின் மூலம் அமைக்கப்படுகிறது. அந்நிறுவனத்தின் பணிகள் எந்த நிலையில், அது எந்த முறையில், செயல்பட வேண்டும் போன்ற எல்லா விவரங்களும் அச்சட்டத்திலேயே குறிக்கப்பட்டிருக்கிறது. எனவே தல சுய ஆட்சி நிறுவனம் அரசாங்கத்திற்கு உட்பட்ட ஒரு நிறுவனம். ஆதலால், அரசாங்கத்தை விட குறைவான மதிப்பையே பெற்றுள்ளது.

## 9.4 தல சுய ஆட்சியின் அவசியம்

தல சுய ஆட்சி சில காரணங்களால் ஒரு அவசியமான நிறுவனமாகிறது. தற்காலத்தில் அரசியலமைப்புப் பெரியதாயும் அதன் பணிகள் பெருகியும் காணப்படுகின்றன. அரசு பெரிய அமைப்பாகவும் அதில் வாழும் மக்கள் தொகையும் பெருகி

இருப்பதால் ஒரு நாட்டின் அரசாங்கம் சிறந்த முறையில் செயல்படவும் அதன் பல்வேறான பகுதிகளில் வாழும் மக்களின் குறிப்பிட்ட தேவைகளை கவனிக்கவும் கடினமாயிருக்கிறது. ஒரு நாட்டில் எழும் சிக்கல்கள் இடத்திற்கிடம் மாறுபட்ட தன்மையுடையவை. ஒரே தன்மையுடையவை அல்ல. எல்லா சிக்கல்களையும் ஒரே மாதிரியான முறையில் தீர்வு காண முடியாது. எனவே அதிகாரத்தைப் பிரித்து பன்முகப்படுத்தி அந்தந்த தலங்களிலுள்ள மக்களிடம் ஒப்படைப்பதன் மூலம் அவர்களே தங்களது தலங்களின் தேவைகளை ஆர்வத்துடன், செயல்படுத்த முடிகிறது. உதாரணமாக சுகாதாரம், தண்ணீர் வசதி, தொடக்க நிலைப்பள்ளி, போக்குவரத்து வசதி இவைகளை தல சுய ஆட்சி நிறுவனங்களால் தல மக்களுக்கு சிறந்த முறையில் செய்து தர முடியும். ஒற்றை ஆட்சியிலுள்ள (Unitary state) மத்திய அரசாலோ அல்லது கூட்டாட்சியிலுள்ள (Federation) மாநில அரசுகளாலோ இவைகளைத் திறமையாக செயல்படுத்த முடியாது. தல சுய ஆட்சியினால் பல நன்மைகள் ஏற்படுவதால் அது ஒரு அவசியமான நிறுவனமாகிறது. கில்க்ரைஸ்டு (Gilchrist) என்பவர் திறமைக் காரணமாகவே தல சுய ஆட்சி மிக அவசியமாகிறது என்று கூறுகிறார். அரசாங்கத்தில் பலதரப்பட்ட நடவடிக்கைகளில் குறிப்பிட்ட சிலவற்றிற்கு மக்கள் அதிக முக்கியத்துவம் அளிக்கிறார்கள். இவைகள் திறமையான முறையில் செயல்படுத்தப்பட வேண்டுமென்றால் வேலைகள் யாரிடம் ஒப்படைக்கப்படுகின்றனவோ அவர்கள் மக்களால் இருக்கவோ, எடுக்கவோ இருக்கும்படியான அதிகார கட்டுப்பாட்டில் இருந்தால்தான் சாத்தியமாகும்.

தல சுய ஆட்சியின் அவசியத்திற்கு இரண்டாவது காரணமாக சிக்கனத்தை சொல்லலாம். அந்தந்த தலங்களின் தேவைகளை அந்தந்த தலங்களே கவனித்து, அவைகளுக்கான செலவுகளையும் அவைகளே ஏற்றுக் கொள்ள வேண்டும். சில சமயங்களில்



அரசாங்கம் மானியங்களை, சில கட்டுத்திட்டங்களை ஏற்படுத்தி வழங்க நேரிடும்; அல்லது அரசாங்கம் உள்ளாட்சி மன்றங்களுக்கு (Local Bodies) சில குறிப்பிட்ட காரியங்களுக்கு கடன் பெற அதிகாரம் வழங்கும்; அல்லது உள்ளாட்சி மன்றங்கள் தங்கள் எல்லைக்குட்பட்ட மக்களிடம் வரி விதிக்கும் அதிகாரத்தை சில வரம்புகளுக்குட்பட்டு வழங்கலாம். வரி விதித்து நிதி பெறுவது உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒரு முக்கிய ஆதாரம். இப்படி வரி கொடுக்கும் மக்கள் உள்ளாட்சி மன்றங்களுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். அதன் மூலம் செலவையும் நிர்வாகத்தையும் அவர்கள் பெரும்பாலும் கட்டுப்படுத்துகிறார்கள் என்று கூறலாம்.

மூன்றாவதாக, பிரதிநிதித்துவ அரசுமுறையை மக்களுக்கு கற்றுணர்த்தும் ஒரு செயலியாக (Agency) இருக்கிறது. தற்கால அரசு முறையில் குடிமக்கள் நேரடியாக, தேசிய ஆளுகையில் பங்கெடுப்பது, ஐந்து வருடத்திற்கு ஒரு முறை வரும் தேர்தல்களின் போது தங்களது வாக்குகளை போடும்பொழுதுதான். இதனால் அரசியல் விவகாரங்களில் பங்கின்மை காரணமாக அதிருப்தி அல்லது ஆர்வமின்மை ஏற்படுவது சகஜமாகிறது. தல சுய ஆட்சிமுறை அவர்களை பொது விவகாரங்களில் ஈடுபடுத்துகிறது. இதனால் அதில் சிறந்த பயிற்சியை அளிக்கும் பள்ளியைப் போல் அது அமைகிறது.

நான்காவதாக, தல சுய ஆட்சி அரசாங்கத்தின் வேலை பளுவை குறைக்க உதவுகிறது. மேலும் தங்களின் நிர்வாகத்திலும், வரி வசூலுத்து தருவதிலும் அரசாங்கத்திற்கு உதவியாய் உள்ளன.

கடைசியாக இவை வரப்போகும் சட்டங்களுக்குத் தேவையான விவரங்கள், ஆலோசனைகள் ஆகியவைகளைத் தருகின்றன.

இதனால் அரசாங்கத்தின் கொள்கைகளை உறுதிப்படுத்தவும், சட்ட மன்றங்களில் தகுந்த சட்டங்களை கொண்டு வரவும் சாத்தியமாகிறது.

இதிலிருந்து தல சுய ஆட்சி முறை என்றால் என்னவென்பதும் தற்கால ஜனநாயக அரசிற்கு அவை எவ்வளவு முக்கியமானவை என்றும் தெளிவாகிறது.

### 9.5 தல சுய ஆட்சியின் சில பொதுவான பணிகள்

தல சுய ஆட்சிகளின் பணிகளை விரிவாக இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம். ஒன்று கட்டாயப் பணிகள் (Obligatory), மற்றொன்று விருப்பப்பணிகள் (Discretionary) தெருக்கள், பொது இடங்கள் இவைகளுக்கு விளக்குகள் போடுதல், தண்ணீர் வசதி, தீயணைப்பு, பிறப்பு இறப்பு பதிவு, தொடக்கக் கல்வி, மருத்துவமனை போன்ற பொது நலத்திற்கு அவசியமானவை கட்டாயப்பணிகளாகும். விருப்பப் பணிகளாவன: பூங்காக்கள் பொது தோட்டங்கள், நூலகங்கள், நீச்சல் குளங்கள், மனமகிழ் மன்றங்கள் போன்ற வசதிகள் செய்து தருவனவாகும்.

### 9.6 வேறு சில சந்தர்ப்பங்களில் தல சுய ஆட்சி நிறுவனம் செய்யும் பணிகள்

சில மாறுபட்ட சந்தர்ப்பங்களில் வேறு சில குறிப்பிட்ட பணிகளையும் தல சுய ஆட்சி மேற்கொள்கிறது.

அ) தலங்களில் சுய ஆட்சி உறுப்புகளாக இருந்து பணிபுரிந்து.

ஆ) தலங்களில் பொதுநலச் சேவைகள் செய்வதன் மூலம் தனிப்பட்டவர்களை நல்ல குடிமக்களாக்குவது:

இ) கிராம நகரப் பகுதிகளில் சீரான திட்ட வளர்ச்சிகள் கொண்டுவர உதவுதல்:

ஈ) தல வருவாய் வாய்ப்புகளைப் பெருக்கிப் பொதுநலத்திற்கு உபயோகப்படுத்துதல்;

உ) கூட்டான முறையில் சமூக, பொருளாதார, கலாசார வளர்ச்சிகளுக்கு உதவுதல்.



சுருங்கக் கூறின் தல சுய ஆட்சி மன்றங்கள் குறிப்பாக இந்தியாவில், "அந்தந்த தலங்களில் தேசியத் திட்டங்களைச் செயல்படுத்தும் செயலிகளாக (agencies) மட்டுமன்றி, மக்களாட்சியின் முதன்மையான உறுப்பாகச் செயல்படுகின்றன. சமூக நலன், உள்ளாட்சிப் பணிகள் முதலியவைகளை ஏற்றுக் கொள்ள அவைகளே சிறந்த நிறுவனங்கள் ஆகும். குடிமக்களுக்குப் பொது சுகாதாரம் போன்ற வசதிகள் மட்டுமன்றி மகப்பேறு, குழந்தைகள் நலம், குடும்ப நலத்திட்டம், கல்வி, வீட்டு வசதி, சேரி ஒழிப்புப் போன்ற சமூக நலத் திட்டங்கள் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு வேண்டிய மக்கள் ஆதரவு, ஒத்துழைப்பு இவைகளை ஒன்று திரட்டுகிறது.

### 9.7 தல சுய ஆட்சி சிறந்த முறையில் செயல்பட வேண்டிய தேவைகள்

தல சுய ஆட்சி சிறந்த முறையில் செயல்பட வேண்டுமென்றால் அதற்கு சம்மந்தப்பட்ட அரசாங்கத்தின் ஊக்கமும் வழிகாட்டலும் மேற்பார்வையும் மிக அவசியம். மேற்பார்வை என்றால் உள்ளாட்சி நிர்வாகத்தில் தேவையற்ற முறையில் குறுக்கிட வேண்டும் என்று பொருளல்ல. தல மக்கள் தங்களது புத்திக் கூர்மையைத் தாங்களாகத் தொடங்கிச் செய்வதற்காக வழி வகைகளும், வாய்ப்புகளும் கொடுக்கப்பட வேண்டும். மேலும், உள்ளாட்சி முறை வெற்றிகரமாகப் பணிபுரிய வேண்டுமென்றால் மக்கள் மனமுவந்து அதன் பணிகளில் பங்கெடுக்கவும் புதிய கருத்துகளையும் முறைகளையும் செயல்படுத்தவும் ஆர்வம் காட்ட வேண்டும்.

இதற்கு இன்றியாமையாதது மக்கள், கல்வி அறிவு படைத்தவர்களாகவும், நல்ல ஆட்சிப் பொறுப்புணர்வு உள்ளவர்களாகவும் இருத்தலே ஆகும். மேலும், உள்ளாட்சியின் பணிகள் பெருகிக் கொண்டே போவதால் அவைகளுக்குப்

போதுமான வருமான வழிகள் தேவைப்படுகின்றன. அவ்வாறு வருமான வழி முறைகள் இல்லையேல் தலப்பிரச்சனைகள் புறக்கணுக்கப்படுவதுடன் உள்ளாட்சி நிர்வாகத்திலும் மக்கள் ஆர்வத்தை இழப்பர்.

## 9.8 தல சுய ஆட்சி முறைகளின் குறைபாடுகள்

தல சுய ஆட்சி முறையில் சில குறைபாடுகள் உள்ளன. தல சுய ஆட்சி முறையினால் மக்களிடம் குறுகிய மனப்பான்மை வளர வாய்ப்புள்ளது. நாட்டில் எழும் ஒவ்வொரு பிரச்சனையையும் தங்களது தலங்களின் கண்கொண்டே பார்க்கக்கூடும்.

இதனால் தேசிய நன்மை பாதிக்கப்படலாம். மேலும் உள்ளாட்சி நிர்வாகத்திலும் கட்சி அரசியலின் தீமைகள் நுழைந்து விடுகின்றன. திறமையற்றவர்கள் கூடத் தங்களது செல்வாக்கினால் கட்சிகளின் சார்பில் வேட்பாளர்களாக நின்று உள்ளாட்சி நிறுவனங்களைக் கைப்பற்றித் தங்களது சுயநலத் தேவைகளுக்குப் பயன்படுத்லாம். திறமையான உள்ளாட்சி நிர்வாகமுறைகூட இதனால் திறனற்றுப் போகிறது.

இக்குறைகளுக்குத் தீர்வு என்னவெனில் ஒவ்வொரு குடிமகனும் தன்னுடைய பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும். தங்களது நலன்கள் இது போன்ற திறமையற்றவர்கள் பதவியில் இருந்தால் பாதுக்கப்படும் என்று உணர்ந்தார்களேயானால் அத்திறனற்றவர்கள் பதவியில் இருக்கவே முடியாது. அவர்கள் அப்படியே பதவிக்கு வந்தாலும் பொறுப்புணர்வுள்ள குடிமக்கள் அவர்களை அடுத்த தேர்தலிலேயே எடுத்துவிட முடியும்.

உள்ளாட்சி முறை சரிவர செயல்படவில்லையென்றால் அதற்குக் குடிமக்களது அலட்சிய மனப்பான்மையும் பொறுப்பற்ற தன்மையும் ஒரு முக்கியக் காரணமாகும். காலதாமதமின்றி வரிகளை ஒழுங்காகச் செலுத்த வேண்டியதும் இப்பொறுப்புணர்ச்சிகளில்



ஒன்றாம். ஒவ்வொரு குடிமகனும் தான் சமூகத்தின் ஒரு பகுதி என்றும், தன்னுடைய ஒத்துழைப்பு இருந்தால்தான் நகரம் அல்லது கிராம வாழ்க்கை முறை வளமுறும் என்றும் உணர வேண்டும்.

சுருங்கக் கூறின், சமூக நல உணர்வை அவன் வளர்த்துக் கொள்ள வேண்டும். இவ்வுணர்வு இருந்தால்தான் சமூகம் வளமுற்றுத் தல சுய ஆட்சி நிறுவனமும் சிறப்பான முறையில் செயல்படும்.

## 9.9 தல சுய ஆட்சி முறை தோன்றிய விதம்

ஆங்கில அரசின் கீழ் இந்தியா இருந்தபோது தல சுய ஆட்சி சில குறிப்பிட்ட காரணங்களுக்காக எழுந்தது. அப்பொழுது இருந்த முக்கியக் காரணம் என்னவெனில், வியாபாரத்தைப் பெருக்கவும் சில சிக்கல்களைத் தீர்க்கவுமேயாகும்.

முதல் முதல் எழுந்த உள்ளாட்சி சட்டம் 1842 ஆம் ஆண்டு வங்காள மக்கள் சட்டம் என்ற பெயருடன் வந்தது. இச்சட்டம் வங்காள மாநிலத்திற்கு மட்டும் சோதனை முறையில் பார்ப்பதற்காக வந்தது. இச்சட்டத்தின் மூலம், உண்டாக்கப்பட்ட தல நிறுவனங்கள் சரியானபடி இயங்கவில்லை. இது எடுக்கப்பட்டு 1850 ஆம் ஆண்டு சட்டம் XXVI ஒன்று இந்தியா முழுவதுக்குமாகக் கொண்டுவரப்பட்டன. இதன் விளைவாகப் பல சுய ஆட்சி நிறுவனங்கள்–உதாரணமாக, கல்கத்தா, பம்பாய் போன்ற நகரங்களில் நகராட்சி மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

தல சுய ஆட்சி நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்படுவதற்காக 1870 ஆம் ஆண்டு இந்தியாவில் வைசிராயாக இருந்த மேயோபிரபு நிதிமுறையை பன்முகப்படுத்துவதற்கான ஆணையைப் பிறப்பித்தார்.

இவ்வாணையின் குறிக்கோள் என்னவெனில் கல்வி, பொதுநலம், சுகாதாரம், மருத்துவ வசதி இவைகளை வளர்க்கவும் உள்ளாட்சி நிறுவனங்களைப் பலப்படுத்தி சுய ஆட்சி முறையை

வளர்ச்சிபெறச் செய்யவுமேயாகும். தல சுய ஆட்சி முறை வளர்ச்சியின் அடுத்த கட்டம் 1882ஆம் ஆண்டில் தொடங்கியது. இந்த ஆண்டில் ரிப்பன் பிரபு தமது சொந்தக் கவனிப்பால் பொது விவகாரங்களில் நிறைய சந்தர்ப்பங்களையும் பொறுப்புகளையும் இந்தியர்களுக்கு அளித்தார்.

1906 ஆம் ஆண்டு தல சுய ஆட்சி தனது வளர்ச்சி முறையில் மற்ற ஒரு கட்டத்தைத் தாண்டியது. அந்த ஆண்டு ராயல் கமிஷன் அதிக முறையில் அதிகாரத்தைப்பன்முகப்படுத்தவதற்கான சிபாரிசைச் செய்தது. அதிக அதிகாரப் பொறுப்பு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் கைகளைப் பலப்படுத்துவது போன்றவை, அக்கமிஷன் செய்த சிபாரிசுகளில் சிலவாகும். அமலும், நிதிமுறை திருப்தியற்ற முறையைக் கண்டு அக்கமிஷன் அரசியல் அமைப்பின் சட்டவரம்பிற்குள் தல நிறுவனங்கள் தாங்களே வழிமுறைகளை முடிவு செய்ய அனுமதிக்க வேண்டுமென்ற சிபாரிசையும் செய்தது. 1918ஆம் ஆண்டில் இந்திய அரசு அக்கமிஷனின் சிபாரிசுகளில் பலவற்றை ஏற்றுக்கொண்டது.

அதன்பேரில் தல நிறுவனங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரித்து. இதிலிருந்து ஆரம்பித்து குறிப்பாக மாண்டேகு செம்ஸ் போர்டு அறிக்கை, இந்திய அரசின் 1918ஆம் ஆண்டு தீர்மானம், இவைகளின் மூலமாக உள்ளாட்சி நிறுவனங்களின் வளர்ச்சி 1947 ஆம் ஆண்டுவரை அதிகரித்துக் கொண்டே போயிற்று.

1947ஆம் ஆண்டு இந்தியா சுதந்திம் அடைந்ததும் உள்ளாட்சி மன்றங்களின் பணிகளும், நிர்வாக முறைகளும் தகுந்த சட்டமாற்றங்களுடன் எல்லா மாநிலங்களிலும் ஜனநாயக முறையாக்கப்பட்டன. கிராமப்புறங்களில் அரசு வளர்ச்சி மிக அவசியம் எனக் குறிப்பாக வலியுறுத்தப்பட்டது. காந்தியடிகள், கிராமப்புறங்கள் முதன்மையான முறையில் முன்னேற வேண்டும்



என்ற கருத்தைக் கொண்டிருந்தார். நகர வளர்ச்சியும், இயந்திரத் தொழில் வளர்ச்சியுமே தற்கால நாகரிகத்தின் தீமைகளுக்கு அடிகோலாகுமென்றும் இவைகளைத் தீர்க்கும் மருந்து எதுவெனில் அக்காலங்களில் இருந்ததுபோல் கிராமங்கள் தன்னிறைவுத் தன்மையை உடையவையாக இருக்கவேண்டுமென்று எண்ணினார். சுதந்தர இந்தியாவின் தலைவர்கள் காந்தியடிகளின் சீடர்கள் என்ற முறையில் அவரது கருத்துகளுக்கு மதிப்புக் கொடுத்து அவைகளைச் செயலாக்க வேண்டுமென்று ஆர்வம் கொண்டிருந்தனர். 1947ஆம் ஆண்டிலிருந்து வெளிவந்த பஞ்சாயத்து அரசுகளும் காந்தியடிகளின் தத்துவச் செல்வாக்கினால் உந்தப்பட்ட அரசியல் தலைவர்களால் கொண்டு வரப்பட்டவையே யாகும். தல சுய ஆட்சி முறையின் வளர்ச்சி முழுவதையும் இங்கு விவரிக்க இயலாத காரணத்தால் மேற்கோள் நூற்பட்டியலில் (Bibliography) புத்தகங்களின் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

## 9.10 இந்திய தல சுய ஆட்சி நிறுவனங்களின் வகை

விரிவாக எடுத்துக் கொண்டால் இந்தியத் தல சுய ஆட்சி நிறுவனங்களை இரு பிரிவாகப் பிரிக்கலாம். அவையாவன; 1) நகர சுய ஆட்சி நிறுவனங்கள், 2) கிராம சுய ஆட்சி நிறுவனங்கள்.

நகர ஆட்சி நிறுவனங்கள் : (Urban Self-Governing Bodies)

***இந்தப் பிரிவின்கீழ்***

1. மாநகராட்சிகள் கார்ப்பரேஷன்கள்
2. நகராட்சிகள் முனிசிபாலடிகள்
3. இராணுவக்கூட வாரியங்கள் (Cantonment Board)
4. நகர்ப்புறக் குழுக்கள் (Township Committees) ஆகியவை அடங்கும். இந்நிறுவனங்களின் அந்தஸ்து, அமைப்புமுறை, பணிகள் அனைத்தையும் அரசாங்கமே நிர்ணயிக்கிறது.

இதற்குத் தக்கவாறு அவ்வப்பொழுது சட்டங்களும் கொண்டுவரப்படுகின்றன.

### கிராமப்புற சுய ஆட்சி அமைப்புகள்

இவ்வகையில் பஞ்சாயத்து அமைப்புகள் வருகின்றன. இவ்வமைப்புக்கள் கிராம மக்கள் அவர்களுடைய அலுவல்களையும் தேவைகளையும் அவர்களே பெற்றுக் கொள்ள உதவுகின்றன. இது கிராமப்புற மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கும் பண்டைக்கால கிராமப்புற அமைப்புகளின் மறுமலர்ச்சிக்கும் வகை செய்யும் என்பது காந்திஜி போன்ற பெருந்தலைவர்களின் கருத்தாகும்.

இந்தியாவில் வட்டார சுய ஆட்சி நிறுவனங்களின் தகுதி, அமைப்பு மற்றும் பணிகள் சட்டப்படி ஏற்படுத்தப்படுகின்றன. இவைகளில், சுதந்திரத்திற்குப்பிறகு அமைக்கப்பட்ட உயர்மட்ட குழுக்கள் பலவற்றின் பரிந்துரைகளின் அடிப்படையில் பல சீரிய மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. இவைகள் இங்கே பின்வரும் பக்கங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

### கிராமப்புறங்களில் தல சுய ஆட்சி (Self-gpvernment in Rural Areas)

### பஞ்சாயத்து அமைப்புகள் (Panchayati Raj Bodies)

தல சுய ஆட்சி முறையின் அவசியம், முக்கியத்துவம் இவைகளைப்பற்றி அத்தியாயத்தின் ஆரம்பத்தில் பார்த்தோம். நகரங்கள், பேரூர்கள் இவைகளில் மட்டும் தல சுய ஆட்சியை நிறுவினால் போதாது. இந்திய மக்கள் தொகையின் எழுபது விழுக்காட்டிற்கும் மேற்பட்டவர்கள் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். இம்மக்கள் நிர்வாக முறையில் எதுவும் பங்கெடுத்துக் கொள்ளவில்லை என்றால் தல சுய ஆட்சி முறையின் குறிக்கோளே முழுமை பெறாமல் வீணாகிவிடும். எனவே, இம்மக்கள் தங்கள் நலனைத் தாங்களே நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் வழிமுறைகளைக் கொண்டுவர வேண்டும்.



காந்தி அடிகள் போன்றோர் விரும்பிய பொருளாதார நிலையில், செழுமை அப்போதுதான் ஏற்படும். மேலும், சுய ஆட்சி முறைக்குத் தேவையான பயிற்சியும் அவர்களுக்குக் கிடைக்கின்றது. புதிய முறைகளைக் கொண்டு வருவதற்கான ஊக்கமும் நம்பிக்கையும் அவர்கள் பெறுகிறார்கள்.

இக்குறிக்கோள்களை மனத்தில் வைத்தே, இந்தியா சுதந்திரம் அடைந்ததும் பஞ்சாயத்து அரசு முறை எல்லாக் கிராமப்புறங்களிலும் கொண்டுவரப்பட்டது. தற்பொழுது பஞ்சாயத்து அரசு முறையே கிராமத்தின் மையமாக அமைந்துள்ளது. இதனைக் கொண்டு வருவதற்கு முன் இந்தியத் தலைவர்களும், அரசாங்கமும் இதனால் என்னென்ன சிக்கல்களும், பிரச்சனைகளும் எழலாம் என்று அறிந்து கொள்வதற்காகப் பல குழுக்களை அமைத்தனர். உதாரணமாக, பலவந்தராய் மேத்தா தலைமையில் 1957, பஞ்சாயத்து நிதிநிலையை ஆராய சந்தானம் தலைமையில் 1963 பஞ்சாய்த்து நிறுவனங்களின் மறு அமைப்புகளுக்கு அசோக்மேத்தா தலைமையில் 1978ல் அமைக்கப்பட்ட குழுக்களை உதாரணமாகச் சொல்லலாம்.

இப்படிப்பட்ட கமிட்டிகளின் அறிக்கைகளை, சிபாரிசுகளை ஒட்டியும், சமூக வளர்ச்சி, கிராமப்புற அபிவிருத்தித் திட்டங்களுக்காக உண்டான திட்டக்குழு, போன்ற அமைப்புகளின் பயிற்சிகளை ஒட்டியும் ஒரு பரந்த அடிப்படை கொண்ட பஞ்சாயத்து அரசு அமைப்பு 1958ல் ஏற்படுத்தப்பட்டது.

1958ஆம் ஆண்டு தொடங்கி அதற்குப் பிறகும் மாநில அரசாங்கங்களால் கொண்டுவரப்பட்ட சட்டங்களின் மூலம் இவவமைப்பு நடைமுறையில் இயங்க ஆரம்பித்த, இருந்தும் பஞ்சாயத்து நிறுவனங்கள் எம் முறையில் இருக்க வேண்டுமோ அம்முறையில் இல்லை என்றும் நாட்டில் ஜனநாயகம் பலமான அடித்தளத்தைப் பெறவில்லை., என்றும் பலர் கருதுகின்றனர். ஆனால், பஞ்சாயத்து நிறுவனங்கள், தொடர்ந்து பணி புரிவதையும் கிராம, சமூகப் பொருளாதாரப் புனரமைப்பிற்கு அவைகள்

இன்றியமையாதவை என்பதையும் எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள்.

## 9.11 தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாயத்து அரசு அமைப்பு

தமிழ்நாட்டில் பஞ்சாயத்து அரசு முறை, 'தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம்' 1958-ன் படி ஏற்படுத்தப்பட்டது. இந்த முறை கிராமப் பஞ்சாய்த்து அடிப்படையில் அமைந்துள்ளது. இதற்கு மேலாகப் பஞ்சாயத்து ஒன்றியங்களும், மாவட்ட வளர்ச்சிக் குழுக்களும் உள்ளன. இந்தப் புதிய அமைப்பு முறையில், மாவட்ட கழகங்கள் (Boards) அகற்றப்பட்டுப் பஞ்சாயத்து ஒன்றியங்கள் அவற்றின் வாரிசுகளாக ஆயின.

பஞ்சாயத்து ஒன்றியத்தின் பரப்பளவு சமூக பரப்பளவு சமூக முன்னேற்றத் திட்டத்திலுள்ள அபிவிருத்தி பிளாக்குகளின் சம எல்லை அமைப்புகளாக அமைக்கப்பட்டன. கிராம மட்டங்களின் மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கொண்ட பஞ்சாயத்துக் கவுன்சில்களில் இருக்கின்றன. மேற்படி உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கின்றனர். இப்பொழுது பஞ்சாயத்துத் தலைவரையும் நேரிடையாக மக்களால் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு முயற்சி இருக்கிறது. பஞ்சாயத்து யூனியனில் அதன் அதிகாரத்திற்குட்பட்ட பஞ்சாயத்துக் கவுன்சில்களின் தலைவர்கள் அங்கத்தினர்களாக உள்ளனர். இவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாயத்து அரசு நிறுவனங்களின் அமைப்பைக் கீழ்கண்டவாறு விவரிக்கலாம்.

1. பஞ்சாயத்துக்கள்

    அ) கிராமப் பஞ்சாயத்துகள்

    ஆ) நகரப் பஞ்சாயத்துகள்

2. பஞ்சாயத்து யூனியன்



3. மாவட்ட அபிவிருத்திக் கஷன்சில்

4. மாநில மட்டத்திலுள்ள பஞ்சாயத்து அபிவிருத்தி

**ஆலோசனைக் குழுக்கள்**

மேற்கூறப்பட்ட அமைப்புகள் 1994ம் ஆண்டுவரையும் அதற்கு பிறகு புதுச்சட்ட அடிப்படையில் தேர்தல்கள் நடைபெறும் வரை வழக்கில் இருந்தன.

## 9.12 தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம், 1994

தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் தமிழ்நாட்டில் பஞ்சாயத்து அமைப்பு வளர்ந்த வரலாற்றில் முக்கியமானதொரு மைல் கல்லாகும். தல சுய ஆட்சி நடைமுறை தமிழ்நாட்டில் இதற்கு முன்பு எதிர்பார்த்த அளவிற்கு சிறப்பாக அமையவில்லை. எனவே தேசீய மட்டத்திலும், மாநிலங்கள் மட்டத்திலும் இவைகள் சிறப்பாக செயல்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று எல்லோரும் விரும்பினார்கள். நாட்டிலுள்ள பெரிய மற்றும் சிறிய அரசியல் கட்சிகளும் பஞ்சாயத்து அமைப்பை பற்றி நன்றாக அறிந்திருந்தவர்களும் அக்கருத்தை ஆதரித்தார்கள், எனவே பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் இந்த அமைப்புகளை வலுப்படுத்துவதற்கு 1985-ம் ஆண்டு முயற்சிகள் அப்போது அவர் எதிர்பார்த்த அளவிற்கு வெற்றி பெறவில்லை.

அவருக்குப்பிறகு தேசீய முன்னணியின் திரு. வி.பி.சிங் சட்டமியற்றுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியும் வெற்றி பெறவில்லை. பிறகு காங்கிரஸ் கட்சியை சேர்ந்த திரு.பி.வி. நரசிம்மராவ் அவர்கள் பிரதம மந்திரியாக இருந்த போது எதிர்க்கட்சிகளின் ஆதரவோடு 73-வது அரசியலமைப்பு திருத்த சட்டம் 1992-ம் ஆண்டு டிசம்பர் மாதம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் இந்தியாவிலுள்ள மொத்த மாநிலங்களில் 50 விழுக்காடு மாநிலங்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டபோது 1993-ம் ஆண்டு மே மாதம் நடைமுறை படுத்தப்பட்டது.

இது திரு. ராஜீவ் காந்தி அவர்களின் கனவை நினைவாக்கியது என்று சொல்லலாம்.

இச்சட்டம் பஞ்சாயத்து அமைப்புகள் அவற்றின் கடமைகள் மற்றும் பொறுப்புகளை தீவரமாக செய்து முடிப்பதற்கு உதவியாக இருந்தது. இச்சட்டம் பிற்காலத்தில் பல முக்கியமான மாறுதல்கள் ஏற்பட வகை செய்தது.

இந்திய கூட்டாட்சியிலுள்ள ஒவ்வொரு மாநிலமும் இந்த பஞ்சாயத்துராஜ் சட்டத்தை நிறைவேற்றவது கட்டாயமாக்கப்பட்டது. பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பது சட்டப்படியானது. ஏதேனும் ஓர் மாநிலம் இந்த சட்டப்பூர்வ கடமையை நிறைவேற்ற தவறினால் அதற்கு மைய அரசின் மானியங்கள் பெற தகுதி கிடையாது என்பது கட்டாயமாக்கப்பட்டது.

மக்களுடைய அன்றாட வாழ்வோடு தொடர்புடைய தெளிவாக கூறப்பட்டுள்ள 29 கடமைகளை பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் முடிவெடுக்க அதிகாரம் தரப்பட்டன.

முடிவுகளை நிறைவேற்றவதைப் பொறுத்தளவில் அவற்றின் பணி முன்பிருந்திருந்ததைப் பொறுத்தளவில் அவற்றின் பணி முன்பிருந்திருந்ததைக் காட்டிலும் சிறப்பாக அமைந்தது. இவைகள் அந்த அந்த மாநிலங்களின் பிரதிநிதிகளாக செயல்படவேண்டும்.

பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுடைய அதிகாரங்கள் பணிகள் எல்லாம் இந்த பஞ்சாயத்து ராஜ் சட்டத்தில் தெளிவாக எடுத்து சொல்லப்பட்டு இருக்கின்றன.

**தமிழ்நாட்டில் பஞ்சாயத்து ராஜ் அமைப்பு முறை**

73- வது அரசியலமைப்பு திருத்த சட்ட அடிப்படையில் தமிழ்நாட்டு அரசாங்கம், தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்டம் 1994ஐ இயற்றியது.

இச்சட்டத்தின் அடிப்படியில் தமிழ்நாட்டில் தற்போது பஞ்சாயத்து அமைப்புகளின் எண்ணிக்கை கீழ்கண்டவாறு உள்ளது.



1. 12619 - கிராம பஞ்சாயத்துக்கள்
2. 385 - ஊராட்சி ஒன்றியங்கள், மற்றும்
3. 29 - மாவட்ட பஞ்சாயத்துகளும் உள்ளன.

இவ்வமைப்புகள் தற்போது முழு வீச்சில் பணியாற்றி வருகின்றன. மக்கள் பிரதிநிதிகள் அவர்களின் பகுதி மற்றும் சமுதாயம் தொடர்புடைய ஒவ்வொரு செயலிலும் தீவிர ஈடுபாடு கொண்டு செயலாற்றுகிறார்கள். இச் சட்டத்தினுடைய முழு விபரங்களும் அதனால் ஏற்பட்ட மாறுதல்களும் முன்னேற்றங்களும் 12 ஆம் வகுப்பிற்கான பாடத்தில் தொடர்ந்து விரிவாக சொல்லப்பட்டிருக்கின்றன.

**வினாக்கள்**

***பகுதி - அ***

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக**

1. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் எந்த அமைப்பு தல சுய ஆட்சியின் கீழ் வரவில்லை.

அ) கிராம பஞ்சாயத்து இ) தாலுகா அலுவலகம்

ஆ) சமிதி ஈ) ஜில்லா பரிஜத்

2. பின்வருவனவற்றைப் பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) அசோக் மேத்தா | - | மூன்று அடுக்கு முறை |
| ஆ) பல்வந்தராய் மேத்தா | - | கிராமப்பஞ்சாயத்து |
| இ) தலைவர் | - | மாவட்ட பஞ்சாயத்து |
| ஈ) பெருந்தலைவர் | - | இரண்டு அடுக்கு முறை |

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. தல சுய ஆட்சி அரசாங்கங்கள் மானியங்கள்___________ இருந்து பெறுகின்றன.

2. கடைசியாக இயற்றப்பட்ட பஞ்சாயத்துராஜ் சட்டம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது.

**III. கீழ்வருவன சரியா அல்லது தவறா என எழுதுக**

1. தற்கால பஞ்சாயத்து முறை அமைப்பிற்கு ராஜீவ்காந்தி முதல் முயற்சி எடுத்துக் கொண்டார்.

2. பஞ்சாயத்துராஜ் அமைப்புகளுக்கு மாநில தேர்தல் ஆணையம் தேர்தல்களை நடத்துகிறது.

**பகுதி - ஆ**

1. தல சுய ஆட்சி என்பது என்ன?

2. கிராம பஞ்சாயத்தை விவரி.

**பகுதி - இ**

1. அதிகார பரவல் கருத்தை விளக்குக.

2. 73- வது அரசியலமைப்பு திருத்த சட்டத்தின் முக்கியத்தை விளக்குக.

**பகுதி - ஈ**

1. பஞ்சாயத்து ராஜ் அமைப்பு முறையை விளக்குக.

2. இந்தியாவின் தல சுய ஆட்சியின் வரலாற்றை பற்றி எழுதுக.

அத்தியாயம் - 10

# பன்னாட்டு அரசியல் நிறுவனங்கள் அமைப்பு

## 10.1 அறிமுகம்

உள்நாடு மற்றும் உலகநாடுகளின் உறவுகளில் ஏற்படும் மாறுதல்கள், மற்றும் சமுதாயத்தை பன்னாட்டு போக்கு என்ற சொல் குறிப்பிடுகிறது.

பன்னாட்டு உறவுகளின் தன்மையையும் போக்குகளையும் அறிவதற்கு பல அணுகுமுறைகள் இருக்கின்றன. அவைகளில் இரண்டு அணுகுமுறைகள் இந்த அத்தியாயத்தில் விளக்கப் படுகின்றன. அவை,

1. வரலாற்று அணுகுமுறை; மற்றும்
2. நிறுவன அணுகுமுறை

## 10.2 வரலாற்று அணுகுமுறை

கடந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளை கருத்தில் கொண்டு பன்னாட்டு உறவுகளை அறிந்துக் கொள்ளும் முறைக்கு வரலாற்று முறை என்று பெயர். இம்முறை இரண்டு முக்கிய அம்சங்களை அழுத்தமாக குறிப்பிடுகிறது.

1. உள்நாடு மற்றும் பன்னாட்டு உறவுகளின் போக்கு நிலையானதாக இல்லாமல் அவ்வப்போது மாறுகின்ற தன்மையை உடையதாக இருக்கிறது.
2. தற்கால உலக நாடுகளின் போக்கு அதன் அம்சங்களை மற்றும் வரலாற்றை ஆதாரமாகக் கொண்டு அறிய முற்படுகின்ற பொழுது ஒவ்வொரு நாடும் முக்கியமானதாகும்.

## 10.3 நிறுவன அணுகுமுறை

பன்னாட்டு உறவுமுறையில் உள்ள அம்சங்களை அறிய முற்படுகின்றபொழுது வரலாற்று மற்றும் நிறுவன அணுகுமுறைகள் முக்கியமானவைகள் ஆகும்.

இவ்வணுகுமுறைகளைத் தெளிவாக அறிந்துகொள்வதற்காக அவை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன.

1. முதல் பகுதி வரலாறு மற்றும் நிறுவனங்களின் தன்மையை விளக்குகிறது.
2. இரண்டாவது பகுதி வட்டார மற்றும் பன்னாட்டு நிலையங்களின் அமைப்பு, அவை எவ்வாவறு செயல்பட்டன மற்றும் எந்த அளவிற்கு வெற்றி பெற்றன போன்ற கருத்துக்களை விளக்குகின்றன.

தற்போது உலகமயமாக்கப்பட்ட பொருளாதார முறை மற்றும் தொடர்பு துறையில் ஏற்பட்டிருக்கின்ற பெரும் மாறுதல்களை உலக நாடுகள் அமைப்பில் நாம் காண்கிறோம். அத்தகைய சூழ்நிலைகளில் வாழ்கின்ற அளவிற்கு நாம் உள்ளாக்கப்பட்டிருக்கின்றோம்.

உள்நாடு மற்றும் உலக நாடுகளில் உறவுகளில் ஏற்படும் தொடர்ச்சி மற்றும் மாறுதல்களுக்கு ஏற்ப பன்னாட்டு வரலாற்று எழுதப்படுகிறது. இதனைத் தெளிவாக அறிந்துக் கொள்வதற்காக சில நிறுவனங்கள் சார்ந்த கருத்துக்கள் இந்த அத்தியாயத்தில் விளக்கப்பட்டிருக்கின்றன.

மாணவர்கள் பன்னாட்டு அமைப்புகள் எதற்காக எவ்வாறாக ஏற்படுத்தப்பட்டன அல்லது விட்டுவிடப்பட்டன மற்றும் அவைகள் எவ்வாறு சமூக ஒழுங்கு மற்றும் முன்னேற்றம் கருதி மாற்றி அமைக்கப்பட்டன என்ற விவரங்களையேல்லாம் தெரிந்துக் கொள்வது அவசியமாகும்.

குழப்பமான சூழ்நிலையில் முன்னேற்றமோ நிலையான தன்மையோ அமைதியான முறையில் மாறுதல்கள் ஏற்படவோ முடியாது என்பது தெளிவாக வேண்டும்.

எனவே போராட்டங்கள் மற்றும் குழப்பமான சூழ்நிலைகளை விளக்கி அமைதி எவ்வாறு ஏற்படவேண்டும் மாறுபட்ட நிலைகள் எவ்வாறு தோற்றுவிக்கப்பட வேண்டும் இதற்கு கூட்டு முயற்சியும்



ஒத்துழைப்பும் எவ்வளவு அவசியமானது என்பதை அறிய வேண்டும்.

உள்நாட்டு, வெளிநாட்டு உறவுகளில் குழப்பங்கள் ஏற்படுவது இயல்பானதே. இவைகளை சமாளித்து அமைதியையும் ஒழுங்கையும் எவ்வாறு ஏற்படுத்த வேண்டும் என்பதையும் சம்மந்தப்பட்ட மக்களினுடைய முன்னேற்றத்திற்கு எத்தகைய நடவடிக்கைகளை எடுத்து அவற்றை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்பன போன்ற கருத்துக்களை எல்லாம் அரசியல் அறிவியல் மாணவர்கள் தெரிந்து கொள்வது மிக அவசியமாகதாகும்.

மேற்க்கூறப்பட்ட கருத்துக்களை தெரிந்து கொள்கின்ற முறையில் தேசிய, வட்டார மற்றும் பன்னாட்டு ஏற்பாடுகள் என்னென்ன செய்யப்பட்டன, அவைகள் எந்த அளவிற்கு சம்மந்தப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு பயன்பட்டன என்பதை சில உலக அமைப்புகளையும் அவற்றின் நடைமுறைகளையும் கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

இதற்கு உதாரணமாக, உலகநாடுகள் கழகம், ஐக்கிய நாடுகள் அமைப்பு, அணிசேரா நாடுகள் அமைப்பு, மற்றும் தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பு ஆகிய நிறுவனங்களைக் கூறலாம்.

## 10.4 பன்னாட்டு அரசியல் நிறுவனங்களின் தொடர்ச்சி மற்றும் மாறுதல்

பன்னாட்டு அமைப்பு, நாடுகளில் எல்லைகள், அவைகள் பின்பற்றும் விதிகள், நடைமுறைகள், அவற்றிற்கு கிடைக்கின்ற வளங்கள் ஆதாரங்கள் மற்றும் அவைகளை நடைமுறைப்படுத்துகின்ற முறையில் மாறுபடுகின்றது.

நாடுகளுக்கிடையே உள்ள தொடர்புகள், அவைகள் அமைந்திருக்கின்ற இடங்கள் மற்றும் காலங்களைப் பொறுத்து அமைகின்றன. அவை சூழ்நிலைகளுக்கேற்ப மாறுபடும் தன்மையுடையவை.

இந்த மாறுதல்களுக்கேற்பவோ அந்தந்த நாடுகளில் செயல்படுகின்ற நிறுவனங்களுடைய திறமைகளுக்கும் அனுபவங்களுக்கும் ஏற்பவோ அவற்றினுடைய வரலாறுகள் அமைகின்றன அரசியல் துறையில் ஏற்படும் இழப்புகள் மற்றும் சாதனைகள் அதற்கு தகுந்தாற்போலவே சிறந்ததாக மற்றும் நிலையானதாக அல்லது தற்காலிகமானதாக மற்றும் சிறப்பற்றதாக மாற்றம் பெறுகின்றன.

குறிப்பாக 1648-இல் செய்துகொள்ளப்பட்ட வெஸ்ட் பாலியர் ஒப்பந்தம் உலகநாடுகள் அமைப்பில் பல நிகழ்வுகளை ஏற்படுத்தி மாற்றங்கள் செய்வதற்கு காரணமாக இருந்தது. அவற்றை முழுவதுமாக வரலாற்று நூல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

இந்த ஒப்பந்தத்திற்கு பிறகு 1917-ஆம் ஆண்டில் சோவியத் குடியரசுத் தோன்றியது. ஐக்கிய அமெரிக்க நாட்டிற்கு பெரிய சவாலாக வளர்ந்தது. அதனால் பன்னாட்டு அரசியலில் பல மாற்றங்களும் உயர்வுத் தாழ்வுகளும் ஏற்பட்டன. ஆனால் சோவியத் குடியரசு மறைந்த பிறகு பன்னாட்டு உறவுமுறைகளில் பெருத்த மாற்றங்கள் ஏற்பட்டன. ஐக்கிய அமெரிக்க நாட்டிற்கு ஏற்பட்ட சவாலும் அத்துடன் ஒழிந்தது.

### 10.5 இன்றைய உலக அமைப்பு முறை

சோவியத் யூனியன் மறைவுக் காரணமாக இரண்டாக பிரிக்கப்பட்டிருந்த இருமுனை (Bipolar) உலக அமைப்பு மறைந்தது சோவியத் குடியரசு இருந்த வரையிலும் சில நாடுகள் அமெரிக்காவை ஆதரிப்பவை என்றும் வேறு சில நாடுகள் சோவியத் யூனியனை ஆதரிப்பவை என்றும் உலகம் பிளவுப்பட்டிருந்தது.

சோவியத் யூனியன் மறைவிற்குப் பிறகு உலகம் ஒரு முனை உலக அமைப்பாக (Uni polar) அதாவது அமெரிக்கா ஒன்றே உலகம் முழுவதும் ஆதிக்கம் செலுத்தும் செல்வாக்குள்ளதாக இருந்து வருகிறது.



### 10.6 ஒரு நாட்டு ஆதிக்கம்

1991-ல் நடைபெற்ற வளைகுடா நாடுகளுக்கு இடையிலான போர் ஒரு நாட்டு ஆதிக்கத்திற்கு வழி ஏற்படுத்தியது 1990-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2-ம் தேதி குவைத் அரசு மீது ஈராக் அரசு போர்த்தொடுத்தது.

இதனை எதிர்த்து ஐக்கிய நாடுகள் கழக அமைப்பின் தீர்மானத்தை ஒட்டி ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்து. வளைகுடா போரின்போது எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பின்படி அமெரிக்கா ஐக்கிய நாடுகள் ஐக்கிய நாடுகள் கழக அமைப்பையும் மிஞ்சியதாக அதையும் கட்டுப்படுத்துவதாக இருந்தது என்று தெரிய வந்தது.

இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நாடுகளின் மேலாதிக்கம் மறைந்து ஒரு நாட்டு மேலாதிக்கம் நடைமுறையில் இருக்கின்றபோது சிறிய நாடுகள் மதிக்கப்படாமல் அவைகளுக்கு தீங்கு இழைக்கும்போக்கு அதிகரித்து வருகிறது.

### 10.7 உலக நாடுகள் கழகம் (League of Nations)

உலக நாடுகள் கழகம் ஐக்கிய நாடுகளில் கழகம் தோன்றுவதற்கு முன்னோடி அமைப்பாக அமைந்தது. இரண்டும் ஒரே மாதிரியான காரணங்களுக்காக, ஒரே மாதிரி சூழ்நிலைகளில் ஏற்பட்டன.

முதலாம் உலகப்போர் முடிந்து வர்சேல் ஒப்பந்த அடிப்படையில் உலக நாடுகளிடையே ஒத்துழைப்பு, அமைதி ஏற்படுத்துதல் மற்றும் தேச பாதுகாப்புக்கு உறுதியளித்தல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 1919-ம் ஆண்டு உலக நாடுகள் கழகம் தோற்றுவிக்கப்பட்டது.

அதே காலகட்டத்தில்தான் உலக தொழிலாளர் அமைப்பும் ஏற்படுத்தப்பட்டது. இரண்டாம் உலகப்போர் ஏற்படுவதை தடுக்கத் தவறிய காரணத்தால் உலக நாடுகள் கழகம் செயலற்றதாயிற்று.

**உலக நாடுகள் கழக தோல்விக்கான காரணம் (1921-1939)**

அரசியலில் உலக நாடுகள் கழகம் தோற்றுவிக்கப்பட்டதுதான் முக்கியமான ஒரு உலக நிறுவனத்திற்கு உதாரணமாகும். இதன் தோல்விக்கு முக்கியமான காரணம் அப்போது நடைமுறையில் இருந்த நாடுகள் அமைப்பை அப்படியே பராமரிக்க வேண்டும் என்ற நோக்கமேயாகும்.

அதாவது வர்சேல் ஒப்பந்தத்தின் படி நடைமுறைக்கு வந்த உலக அமைப்பை பராமரிப்பதே ஆகும். இதர முக்கியக் காரணங்கள் வருமாறு;

1. அது உலக அமைப்பு என்ற தன்மையை இழந்தது.
2. அது ஐரோப்பியர்களின் மடமாக செயலாற்றியது.
3. அமெரிக்க மேல் சபை உலக நாடுகள் கழக ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தது. அதனால் இக்கழகத்தை ஏற்படுத்துவதற்கு காரணமாக இருந்த அமெரிக்கா மற்றும் அதன் தலைவர் உட்ரோவில்சன் அதில் உறுப்பினராக சேரமுடியாமல் போனது.
4. 1931-ஆம் ஆண்டு மஞ்சூரியா மீதான ஜப்பான் ஆக்கிரமிப்பை தடுக்க முடியாமல் போனது.
5. 1931-ஆம் ஆண்டு முசோலினி அபிசினியாவை ஆக்கிரமித்தப் பொழுது தடைச் செய்ய முடியாமல் போனது.
6. ஐரோப்பாவின் இதர பகுதிகளில் குடியாட்சிகள் மறைந்து சர்வாதிகார ஆட்சிகள் ஏற்பட்டது.
7. ஜெர்மனியில் ஹிட்லர் ஆட்சிக்கு வந்தது. அவருடைய சோசலிசக் கட்சி அங்கு முக்கிய பங்கு வகித்தது.
8. உலகப் பொருளாதாரத்தில் இக்கழகத்திற்கு எவ்வித பங்கு பணியும் இல்லாமல் போனது.
9. இக்கழகத்திற்கு அமெரிக்கா தரவேண்டிய சந்தா தொகையை 25 விழுக்காடு அளவிற்கு குறைத்தது.



10. ஆக்கிரமிப்பு அரசுகளின் அடாவடித்தனத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனது.

**இக்கழகத்தின் வெற்றிகள்**

1. 1932-ம் ஆண்டு ஆயுத ஒழிப்பு மாநாடு நடைபெற முயற்சி எடுத்துக்கொண்டது.
2. அபின் மற்றும் மயக்கந்தரும் மருந்துப் பொருட்கள் வியாபாரத்தை வெற்றிகரமாக கட்டுப்படுத்தியது.
3. இக்கழகத்தின் அனுபவங்கள் ஐக்கிய நாடு கழகங்கள் அமைப்பிற்கு பொருத்தமானதாக அமைந்தது.

## 10.8 ஐக்கிய நாடுகள் கழக அமைப்பு (The United Nations Organisation)

ஐக்கிய நாடுகள் கழகம் என்ற பெயர் அமெரிக்க ஜனாதிபதியான ரூஸ்வெல்த் என்பவரால் தேர்ந்தெடுக்கப்பட்டு 1942-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி ஐக்கிய நாடுகள் கழக பிரகடனத்தில் முதன்முதலாக உபயோகத்திற்கு வந்தது. இரண்டாவது உலகப்போரின் போது எதிரிநாடுகளுடன் போரை தொடர்ந்து நடத்துவதற்கு 22 நாடுகளின் பிரதிநிதிகள் ஒத்துழைப்பு அளிப்பதாக வாக்குறுதித் தந்தார்கள். பிறகு 1945-ம் ஆண்டு ஐம்பது நாடுகள் அடங்கிய மாநாடு சான்பிரான்சிஸ்கோ நகரில் நடைப்பெற்றது.

அமெரிக்க, இங்கிலாந்து, சோவியத்யூனியன் மற்றும் சீன நாட்டு பிரதிநிதிகள் கொடுத்த ஆலோசனையின் பேரில் 1944-ம் ஆண்டு அக்டோபர் மாதம் டம்பார்ட்டன் ஒக்ஸ் என்ற ஊரில் நடந்த மாநாட்டில் ஐக்கிய நாடுகள் கழகசாசனத்தின் உள்ளடக்கங்கள் முடிவுச் செய்யப்பட்டது.

1945-ம் ஆண்டு சூன் மாதம் 26-ம் தேதி ஐம்பது நாடுகளின் பிரதிநிதிகள் இந்த சாசனத்தில் கையெழுத்திட்டனர். இந்த மாநாட்டில் கலந்துக்கொள்ளாமல் இருந்த போலண்ட்டு நாடு பிறகு தன்னுடைய கையெழுத்தை இட்டத்தின் மூலமாக அவற்றின் எண்ணிக்கை 51-ஆயிற்று.

1945-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ம் நாள் ஐக்கிய நாடுகள் கழகம் அதிகாரப்பூர்வமாக நடைமுறைக்கு வந்தது. இந்த அடிப்படையில் ஐக்கிய நாடுகள் கழக தினம் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 24-ம் தேதி எல்லா நாடுகளாலும் கடைப்பிடிக்கப் படுகிறது.

1945-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற்ற யால்தா (Yalta) மாநாட்டில் ஐக்கிய நாடுகள் கழக அமைப்புக்கான முடியும் அக்கழக சாசனத்தில் சேர்க்கப்பட வேண்டிய அம்சங்களும் சர்ச்சில், ரூஸ்வெல்த் மற்றும் ஸ்டாலின் ஆகியத் தலைவர்களால் முதன்முதலில் ஏற்றக்கொள்ளப்பட்டன. அதற்கு சான்பிரான்சிஸ்கோ மாநாடு இறுதி வடிவம் கொடுத்து மேலே சொல்லப்பட்டபடி ஐக்கிய நாடுகள் கழகம் செயலாற்றத் தொடங்கியது.

ஐக்கிய நாடுகள் கழக பேரவை 1948-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ம் தேதியன்று உலக மனித உரிமைகள் பிரகடனத்தை அறிவித்தது.

1. விதி1- அப்பிரகடனத்தின் விதி 2-ன் படி மக்கள் அனைவரும் பிறப்பினால் சமமானோர்கள். அவர்களுக்கு மரியாதையும் உரிமைகளும் சமஅளவில் உண்டு. அவர்கள் அனைவரும் அவர்கள் மனசாட்சிப்படி நடந்துக்கொண்டு மற்றோர்களை சகோதரத்துவ அன்போடு நடத்த வேண்டும்.

2. விதி2-ன் படி எல்லா மக்களும் இனம், நிறம், மொழி, சமயம், அரசியல் மற்றும் கருத்துக்கள் அடிப்படையிலோ ஆண் பெண் என்ற அடிப்படையிலோ வித்தியாசம் இல்லாமல் எல்லா சுதந்திரங்களையும், உரிமைகளையும் பெற்றுள்ளார்கள் என்று கூறுகிறது.



வில்சனால் வற்புறுத்தப்பட்ட கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட உலக நாடுகள் கழகத்தின் கொள்கை பெரும்பாலானவை ஐக்கிய நாடுகள் கழகத்தின் கொள்கைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

### ஐக்கிய நாடுகள் கழக சாசனம் (UNO Charter)

ஐக்கிய நாடுகள் கழக சாசனம் அதில் அங்கம் வகிக்கும் நாடுகளுடைய உரிமைகள் அவை நிறைவேற்ற வேண்டிய கடமைகள் மற்றும் அக்கழகத்தின் உறுப்புகள் அதைப்பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ஆகியவற்றை விரிவாக எடுத்துரைக்கிறது.

### நோக்கங்கள்

ஐக்கிய நாடுகள் கழக சாசனத்தில் உலக அமைதி மற்றும் உலக நாடுகளின் பாதுகாப்பு முக்கியமான நோக்கங்களாக சொல்லப்பட்டிருக்கிறது.

1. உலகநாடுகளுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்துதல்.
2. பொருளாதார சமூக பண்பாடு மற்றும் மனிதாபிமான பிரச்சனைகளை தீர்த்து வைப்பதில் ஒத்துழைத்தல்.
3. சுதந்திரம் மற்றும் உரிமைகளை மதித்து அவைகளுக்கு ஆதரவுத் தருதல்.
4. மேற்கூறியவற்றை அடைவதற்கு வழிவகைகள் கண்டு அவை நிறைவேற கருவியாக இருத்தல்.

### அமைப்பு

ஐக்கிய நாடுகள் கழகத்தின் ஆறு முக்கிய உறுப்புகள் உள்ளன. அவை

1. பொதுப்பேரவை
2. பாதுகாப்பு மன்றம்

3. பொரளாதார மற்றும் சமுதாய மன்றம்

4. தர்மகர்த்தா கழகம்

5. உலக நீதி மன்றம்

6. செயலகம்

இவைத் தவிர ஐக்கிய நாடுகள் கழகத்தைச் சேர்ந்த பதினைந்து பிரதிநிதி மன்றங்களும், இவை எல்லாவற்றிற்கும் பொதுவான பல்வேறு இதர அமைப்புகளும் உலகெங்கும் இருக்கின்றன. இவைகளுடைய நோக்கங்களும் திட்டங்களும் உலகளாவியவை.

**ஐக்கிய நாடுகள் கழக குடும்பம்**

மேற்க்கூறப்பட்ட அமைப்புகளோடு குழந்தைகள் நல நிதிக் கழகம், முன்னேற்ற திட்ட குழு இன்னும் சிறப்புமிக்க இதர பிரதிநிதி மன்றங்கள் பல உள்ளன. இவையெல்லாம் உலக நாடுகளில் சமுதாய முன்னேற்றம் பொருளாதார வளர்ச்சி மற்றும் தேவைப்படும் உதவிகள் சீர்த்திருத்தங்கள் ஆகியவற்றிற்கு தகுந்த ஆலோசனைகள் வழங்குவதோடு அவற்றிற்கு பொருளாதார உதவிகளையும் செய்து வருகின்றன.

**ஐக்கிய நாடுகள் கழக பொதுப் பேரவை**

இப்பேரவை ஐக்கிய நாடுகள் கழகத்தின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஆதாரமாக இருக்கிறது. அதில் உறுப்பு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இருக்கிறார்கள். ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரே ஒரு வாக்கு மட்டும் தரப்படுகிறது. அமைதி, பாதுகாப்பு புது உறுப்பினர்களை அனுமதித்தல் மற்றும் நிதி சம்மந்தப்பட்ட பிரச்சினைகள் பற்றிய முடிவுகளை பேரவை எடுக்கிறது.

**பொதுப் பேரவையின் குழுக்கள்**

பேரவையில் குழுக்களின் எண்ணிக்கை ஆறு.

1. முதல் குழு, ஆயுத ஒழிப்பு மற்றும் உலக நாடுகளின் பாதுகாப்புப் பற்றியது.



2. இரண்டாவது குழு, பொருளாதார மற்றும் நிதி சம்மந்தப்பட்டது.
3. மூன்றாவது சமூக மனிதாபிமான மற்றும் பண்பாடுப் பற்றியக் குழு.
4. நான்காவது, காலனி ஒழிப்பு மற்றும் சிறப்பு அரசியல் நிலை.
5. ஐந்தாவது நிரிவாகம் மற்றும் வரவுச் செலவுத் திட்டம் பற்றிய குழு.
6. ஆறாவது, சட்டம், நீதி பற்றிய குழு.

குறிப்பிட்டச் சில பிரச்சினைகள் குழுக்களின் முழுக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்டு கூட்டம் முடிவில் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. குழுக் கூட்டங்களில் முடிவுகள் சாதாரன பெரும்பான்மை அடிப்படையிலேயே எடுக்கப்படுகின்றன.

இவ்வாறு குழுக்களால் எடுக்கப்படும் முடிவுகள் பொதுப்பேரவையின் பார்வைக்கு அனுப்பப்படுகின்றன. பொதுப் பேரவையில் கலந்துக் கொண்டுள்ள பல்வேறு அரசாங்கங்களின் பிரதிநிதிகள் சம்மந்தப்பட்ட பொருள்கள் மற்றும் பிரச்சனைகள் பற்றிய கருத்துக்களையும் அவற்றின் நிறைவுகளையும், குறைகளையும் எடுத்துரைக்கின்றனர்.


பேரவையில் விவாதங்கள், எடுத்துக் கொள்ளப்பட்டப் பொருள்களின் தராதர அடிப்படையில் நடைப் பெறுகின்றன. விவாத முடிவில் வாக்கெடுக்கப்பட்டு பெரும்பான்மை அடிப்படையில் நிறைவேற்றப்படுகின்றன.

இவ்வாறு பொதுப் பேரவையால் ஏற்றுக் கொள்ளப்படும் தீர்மானங்கள் ஐக்கிய நாடுகள் கழகத்தின் பணிகளுக்கு ஆதாரமாகும்.

மேல்சொல்லப்பட்டவாறு எடுக்கப்பட்ட முடிவுகள் கீழே தரப்படும் முறைகளின் அடிப்படையில் நடைமுறைப் படுத்தப் படுகின்றன.

ஆயுத ஒழிப்பு, அமைதி காத்தல், வளர்ச்சி மற்றும் மனித உரிமைகள் பற்றி பொதுப் பேரவையால் நியமிக்கப்படும் குழுக்கள் மற்றிம் இதர அமைப்புக்கள் இவற்றைப் பற்றி விவாதித்து தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

**ஐக்கிய நாடுகள் கழகத்தின் அமைப்பு**




சில சமயங்களில் பொதுப் பேரவையால் அழைக்கப்படும் உலக மாநாடுகளிலும் இவை விவாதிக்கப்பட்டு நிறைவேற்ற நடவடுக்கைகள் எடுக்கப்படுகின்றது.



ஐக்கிய நாடுகளின் கழக பொதுச் செயலர் மற்றும் செயலகம் அந்த செயலகத்தில் பணிபுரியும் பல நாடுகளைச் சேர்ந்த ஊழியர்கள் போன்றவர்களாலும் நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

**பணிகளும் அதிகாரங்களும்**

**பொதுப்பேரவை**

**பொதுப் பேரவையின் பணிகளும் அதிகாரங்களும் வருமாறு,**

1. உலக அமைதி காத்தல், உலக நாடுகளின் பாதுகாப்பை உறுதி செய்ய ஆயுதங்கள், மற்றும் போர்க்கருவிகள் பற்றி தீர்மானிக்கப்பட வேண்டிய கொள்கைகள் அவற்றை நிறைவேற்றுவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி ஆலோசித்து முடிவெடுத்தல்.
2. ஐக்கிய நாடுகள் கழக நிறுவனங்களின் பணிகள் மற்றும் அதிகாரங்கள் பாதிக்கப்படும்போது அதைப் பற்றி ஆலோசித்து முடிவெடுத்தல்.
3. உலக அரசியல் நடப்புகள், வளர்ச்சி, பன்னாட்டு சட்டம், மனித உரிமைகள், மனித சுதந்திரம், மற்றும் பொருளாதார, சமூக, கல்வி, சுகாதாரம் மற்றும் பன்பாட்டுத் துறைகளில் எடுக்கப்பட வேண்டிய முடிவுகள் பற்றி ஆய்வு செய்தல்.
4. நாடுகளுக்கு இடையே ஏற்படும் சச்சரவுகளை அமைதியான முறையில் தீர்த்து வைக்கக் கூடிய பரிந்துரைகள் பற்றி முடிவெடுத்தல்.
5. பாதுகாப்பு மன்றம் மற்றும் சமுக பொருளாதார மன்றம் ஆகியவற்றிற்கு தற்காலிகமாக நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினாகளைத் தேர்ந்தெடுப்பது.
6. பன்னாட்டு நீதி மன்றத்திற்கு நீதிபதிகளை தேர்ந்தெடுத்தல்.
7. ஐக்கிய நாடுகள் கழக பொதுச் செயலரை தேர்ந்தெடுத்து நியமித்தல்.

8. பொதுப்பேரவையின் வருடாந்திர கூட்டங்கள் செப்டம்பர் மாதத்தில் தொடங்குகின்றன. ஒவ்வொரு வருடமும் நடைபெறுகின்ற கூட்டத்திற்கானத் தலைவர் அப்போதே தேர்ந்தெடுக்கப்படுவார். இருபத்தொரு துணைத் தலைவர்கள், முக்கியக் குழுக்களின் தலைவர்கள் எல்லோரும் கூட்டத் தொடக்கத்திலேயே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பூகோள ரீதியாக ஆப்ரிக்கா, ஆசியா, மேற்கு ஐரோப்பா, இலத்தீன் அமெரிக்கா, கரிபியன் மற்றும் மேற்கு ஐரோப்பாவைச் சேர்ந்தவர்கள் இப்பதவிகளுக்கு தேர்வு செய்யப்படுகிறார்கள்.

9. ஆண்டு தோறும் நடைபெறுகின்ற முறைப்படியான கூட்டங்கள் தவிர தனிக்கூட்டங்களும் கூட்டப்படலாம். இக்கூட்டங்கள் பொதுப்பேரவை உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் அல்லது பாதுகாப்பு மன்ற உறுப்பினரில் யாராவது ஒருவர் கேட்டுக் கொள்ளும்பொழுது கூட்டப்படுகின்றன. வருடாந்திரக் கூட்டங்கள் கூடும்போது பொதுப் பேரவையில் பொதுவான விவாதங்கள் நடைபெறுகின்றன. இத்தகைய கூட்டங்களில் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் கலந்துக் கொண்டு உலக நிலவரம், உலக அரசியல் இவை பற்றிய பிரச்சனைகளை அவர்களுடைய உரைகளில் குறிப்பிட்டு பேசுவது நடைமுறையில் இருந்து வருகிறது.

**பாதுகாப்புச் சபை**

பாதுகாப்புச் சபையின் தலையாயப் பொறுப்பு பன்னாட்டு அமைதியையும், பாதுகாப்பையும் உறுதி செய்வதாகும். அது அதனுடைய பணிகளை தொடர்ந்து செய்வதற்கு வசதியாக உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நிரந்தரமாக தங்கியிருப்பார்கள்.

எப்பொழுதெல்லாம் அமைதிக்கு பங்கம் விளைகிறதோ, அப்பொழுதெல்லாம் பாதுகாப்புச்சபை உடனடியாக கூடி தனது பரிந்துரைகளை போரில் ஈடுபட்டுள்ள நாடுகளை அமைதியான



முறையில் ஒப்பந்தம் ஏற்படுத்த முனையும். பல விஷயங்களில், பாதுகாப்புச்சபை நேரடியாகவே தனது சோதனை செய்யவும், சமாதானப்படுத்தவும் விழையலாம். பாதுகாப்புச்சபை சிறப்பு தூதுவர்களையும், பிரதிநிதிகளையும் அல்லது பொதுச் செயலாளரை அத்தூதுவர்களை நியமிக்க பணிக்கலாம். மேலும் பாதுகாப்புச்சபை அமைதியான முறையில் போரை முடிவுக்கு கொண்டுவரலாம். எப்பொழுதெல்லாம் நாடுகளுக்கிடையேயான பிணக்குகள் போருக்கு இட்டு செல்கிறதோ அப்பொழுதெல்லாம் பாதுகாப்புச்சபையின் முழு முதன் நோக்கம் போரை முடிவுக்குக் கொண்டுவருவதாகும்.

பல நேரங்கள் பாதுகாப்புச்சபை போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்த பாடுபட்டு போட்டி நாடுகளுக்கிடையே பிணக்குகளை தீர்த்து வைக்கிறது. பாதுகாப்புச்சபையே ஐ.நா அமைதிப்படையை அனுப்பி அமைதியான முறையில் போரை தீர்த்து வைக்க உதவுகிறது.

பாதுகாப்புச்சபை அமைதிக்கு பங்கம் விளைவிக்கின்ற நாட்டின் மீது பொருளாதார தடை விதிக்கவும், கூட்டாக இராணுவ நடவடிக்கையும் மேற்கொள்ளலாம். ஐ.நாவின் எந்த உறுப்பு நாடு ஏதேனும் பாதுகாப்புச்சபையின் நடவடிக்கைக்கு எதிராவோ, பணிய மறுக்கவோ செய்தால் அவ்வுறுப்பு நாட்டின் உரிமைகளையும் சலுகைகளையும் ஐக்கிய நாடுகள் கழக பொதுச் சபையிலிருந்து நீக்கலாம். பாதுகாப்புச்சபை ஐ.நா வின் உறுப்பு நாடுகள் ஐ.நா வின் சாசனத்தை மதிக்காமல் இருந்தால் ஐ.நா உறுப்பு நாட்டிற்கான பிரதிநிதித்துவத்தை நீக்கலாம். பாதுகாப்புச்சபையின் உறுப்பினரல்லாத ஐக்கிய நாடுகளின் சபையின் உறுப்பு நாட்டை பாதுகாப்புச்சபையின் விவாதங்களில் பங்கேற்க அழைக்கலாம். ஆனால் அந்நாட்டிற்கு வாக்களிக்கும் உரிமையில்லை. மேலும், ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளிடையேயும், உறுப்பு நாடுகள் அல்லாத நாடுகளுக்கிடையே பிணக்குகளை தீர்த்து வைக்க உதவுகிறது. அந்நாடுகளையும் விவாதங்களுக்கு அழைக்கலாம்.

பாதுகாப்புச்சபையின் தலைவர் ஆங்கில எழுத்து முறையில் மாதம் ஒரு முறை சுழற்சி முறையில் உறுப்பு நாடகளுக்கிடையே தேர்ந்தெடுக்கப்படுகின்றார். பாதுகாப்பு சபையின் 15 உறுப்பு நாடுகள் உள்ளன என ஏற்கனவே பார்த்தோம். ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகள் தவிர 10 நிரந்திரமில்லாத உறுப்பு நாடுகள் பொதுச் சபையின் மூலம் இரண்டாண்டுகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

**பாதுகாப்புச்சபையின் நிரந்தர உறுப்பு நாடுகள்**

1. அமெரிக்க ஐக்கிய நாடுகள்
2. ரஷ்யா
3. ஐக்கிய இங்கிலாந்து
4. பிரான்ஸ்
5. சீனா

ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு வாக்கு என்ற முறையில் முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு 9 வாக்குகள் தேவைப்படுகின்றன. அவ் 9 வாக்குகளில் 5 நிரந்தர உறுப்பு நாடுகளின் வாக்குக் கட்டாயம் தேவை. தீமானம் ஒன்றை ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளும் ஏற்றுக் கொள்ளும் விதி "வல்லரசு ஒற்றுமை" என்று அழைக்கப்படுகிறது.

இவற்றில் ஒன்று ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும் அத்தீர்மானம் நிறைவேறாது. அம்முறை தடுப்பாணை (Veto) அதிகாரம் எனப்படும். ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளும் பாதுகாப்புச்சபையில் எடுக்கப்படும் முடிவுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். பாதுகாப்புச்சபையின் முடிவுகளை உறுப்பு நாடுகள் ஏற்றுக் கொள்வது கட்டாயமாகும்.



**பொருளாதார மற்றும் சமூக கழகம்**

ஐக்கிய நாடுகள் கழகத்தைச் சேர்ந்த 14 ஏஜென்சிகளின் அலுவல்களை இது ஒருங்கிணைக்கிறது. மேலும் பத்து பணிசார்ந்த கழகங்கள் மற்றும் ஐந்து பிரதேச கழகங்கள் மற்றும் பதினொன்று ஐக்கிய நாடுகள் கழக நிதி நிறுவனங்கள் சம்மந்தப்பட்ட திட்டங்கள் கொள்கைகள் ஆகியவைகளை இக்கழகம் பரிசீலித்து ஐக்கிய நாடுகள் கழகத்திற்கு மேற்கொண்டுநடவடிக்கைகள் எடுக்க பரிந்துரைக்கிறது. இக்கழகம் வேலைவாய்ப்பு பொருளாதார வளர்ச்சி சமூக முன்னேற்றம் ஆகிய துறைகளில் உயர் நிலையை எட்டுவதற்கு உறுப்பு நாடுகளுக்கு உதவுகிறது. இந்த பணிக்காக கிட்டத்தட்ட 2100-க்கும் அதிகமான கல்வியாளர்கள், வர்த்தகப் பிரதிநிதிகள் மற்றும் இதர அமைப்புக்களை இது கலந்து ஆலோசிக்கிறது. இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டு இதன் தலைவராக எச்.ஈ. கேர் ரோசந்தால் என்பவர் இருக்கிறார். இக்கழகம் அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தைக் கூட்டி முடிவெடுப்பதற்கு தேவையாக உள்ள ஆலோசனைகளை வழங்குகிறது.

**தர்மகர்த்தா கழகம்**

1994-ஆண்டு நவம்பர் மாதம் 1-ஆம் தேதி முதல் இக்கழகம் செயல்படவில்லை. கடைசியாக இருந்த தர்மகர்த்தா நாடான பலோ 1994-ம் ஆண்டு அக்டோபர் முதல் தேதி சுதந்திரம் பெற்றது. இக்கழகம் செய்ய வேண்டிய கடமை அத்துடன் முடிந்துப் போனது.

இக்கழகம் சுதந்திரம் பெறாமல் இருந்த நாடுகளுக்கு சுதந்திரம் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை நோக்கமாகக் கொண்டிருந்தது. முதலாம் உலகப்போருக்கும் இரண்டாம் உலகப்போருக்கும் பின்னால் சுமார் 100 நாடுகள் சுதந்திரம் பெற வேண்டியவைகளாக இருந்தன. இவற்றில் பல அவைகளாகவே விடுதலைப் பெற்றுவிட்டன.

விடுதலைப் பெறாமல் இருந்த இதர நாடுகளுக்கு சீனா, பிரான்ஸ், ரஷ்யா, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து விடுதலைப் பெற்றுத் தரும் பணியை இது மேற்கொண்டிருந்தது. இப்பணியை சம்மந்தப்பட்ட நாடுகளிலிருந்து விண்ணப்பங்களைப் பெற்று அவற்றின் மேல் நடவடிக்கை எடுத்து விடுதலைப்பெற்றுத் தரும் பணியை இது செய்தது.

### உலக நீதி மன்றம்

ஐக்கிய நாடுகள் கழகத்தில் இது ஒரு முக்கியமான அங்கமாகும். நீதிமன்றம் நெதர்லாந்து நாட்டில் தி.ஹேக் என்ற ஊரில் "அமைதி அரண்மனை" என்ற கட்டிடத்தில் துவக்கப்பட்டு 1946-ஆம் ஆண்டு பணியாற்றத் தொடங்கியது. இது உலக நாடுகள் கழகத்தால் ஏற்படுத்தப்பட்ட உலக நீதி மன்றத்தின் மறுபதிப்பாகும்.

### இந்நீதிமன்றத்தின் பணிகள்

இந்த நீதி மன்றம் இரு வகையான பணிகளைச் செய்கிறது. முதலாவது ஐக்கிய நாடுகள் கழகத்தில் உறுப்பினர்களாக உள்ள நாடுகளுக்கிடையே ஏற்படும் சட்டம் மற்றும் நியாய அடிப்படையில் ஏற்படும் தாவாக்களில் பன்னாட்டுச் சட்ட அடிப்படையில் அவைகளைத் தீர்த்து வைக்கிறது.

இரண்டாவதாக ஐக்கிய நாடுகள் கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனங்களுக்கிடையே சட்ட சம்மந்தமான பிரச்சனைகள் ஏற்படும்போது அவைகள் பற்றி ஆலோசனை வழங்குகிறது.

### நீதிமன்றத்தின் அமைப்பு

இந்த நீதிமன்றத்தில் மொத்தம் 10 நீதிபதிகள் இருக்கின்றார்கள். இவர்களின் பதவிக்காலம் 9 ஆண்டுகள் ஆகும்.



மூன்றில் ஒரு பங்கு நீதிபதிகள் மூன்றாண்டுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பதவிக்காலம் முடிந்தாலும் அவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம் இந்த நீதிபதிகள் பல்வேறு நாடுகளை சேர்ந்தவர்களாக இருப்பார்கள்.

அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்களோ அந்த நாட்டில், உயர் நிலையில் உள்ள நீதிமன்றத்தில் நியமிக்கப்படுவதற்கு என்னத் தகுதிகள் வேண்டுமோ அந்தத் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். இவர்கள் அவர்கள் சேர்ந்த நாட்டினுடைய பிரதிநிதிகளாகக் கருதப்படமாட்டார்கள்.

இந் நீதிமன்றம் உலகத்தில் நடைமுறையில் இருந்து வரும் பண்பாடு, மற்றும் நீதி வழங்கும் முறைகளை பிரதிபலிப்பதாக செயல்பட வேண்டும். இந்த நீதிபதிகள் ஐக்கிய நாடுகள் கழக பொதுப் பேரவையால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதனை பாதுகாப்புச் சபையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

### ஐக்கிய நாடுகள் கழக செயலகம்

ஐக்கிய நாடுகள் கழகத்தில் பல்வேறு பகுதிகளில் இயங்கும் அலுவலகங்களில் பல்வேறு நாடுகள் சேர்ந்தவர்கள் அலுவலர்களாக நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் ஐக்கிய நாடுகள் கழகத்தில் கொள்கைகயையும் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தும் பணிகளை செய்கிறார்கள்.

இவர்களுக்கெல்லாம் தலைவராக பொதுப்பேரவையால் பரிந்துரைக்கப்பட்டு பாதுகாப்புக் சபையால் நியமிக்கப்படுகின்ற பொதுச் செயலாளர் தலைமை வகிக்கிறார். இவருடைய பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும். இவர் மீண்டும் இந்த பதவிக்கு நியமிக்கப்படலாம்.

செயலகத்தில் பணிகள் பலதரப்பட்டவை இவற்றில் முக்கியமானவை உலக அமைதிக்கான நடவடிக்கைகளை செயல்படுத்துவது அரசுகளுக்கிடையே ஏற்படும் சச்சரவுகளில்

சமரசம் செய்வது சமூக பொருளாதார துறைகளில் ஏற்படும் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றின் அடிப்படையில் தேவையான திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதல், மற்றும் மனித உரிமைகள் மீறப்படாமல் பாதுகாத்தல் போன்றவையாகும்.

இச்செயலகம் ஐக்கிய நாடுகள் கழகம் என்னென்னப் பணிகளையும் கடமைகளையும் செய்து வருகிறது என்பதை தகவல் தொடர்பு சாதனங்கள் மூலமாக அவ்வப்போது உலக நாடுகளுக்குத் தெரிவிப்பது. உலகப் பிரச்சனைகள் பற்றி மாநாடுகள் நடத்துவது, மற்றும் ஐக்கிய நாடுகள் கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அதிகாரப்பூர்வமான மொழிகளுக்கு மொழி பெயர்ப்புகளை இதர மொழிகளில் வெளியிடுவது ஆகிய பல பணிகளைச் செய்து வருகிறது.

ஐக்கிய நாடுகள் கழகத்தின் தலைமையகம் அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரில் இயங்குகிறது. இதனுடைய கிளைகள் பல நாடுகளில் இருக்கின்றன. அவற்றில் குறிப்பிடத் தக்கவை அடிஸ் அபாபா, பேங்காக், பேரூட், ஜெனிவா, நைரோபி, சாண்டியாகோ மற்றும் வியன்னா நகரங்களில் செயல்படுகின்றன.

## 10.9 ஐக்கிய நாடுகள் கழகத்தின் இதர பிரதிநிதித்துவ அமைப்புகள்

**ஐக்கிய நாடுகள் கழகத்தின் முக்கிய அமைப்புகள்**

- ஐக்கிய நாடுகள் கழகத்தின் உணவு மற்றும் வேளாண்மை **(FAO)**-க் கழகம்.
- சர்வதேச அணுசக்தி அமைப்பு **(IAEA),** வியன்னா, ஆஸ்திரியா
- சர்வதேச விமானப் போக்குவரத்து அமைப்பு **(ICAO)** மனிடிரியல் - கனடா,



- சர்வதேச ஆட்சிப் பணி ஆணையம், **(ICSC)** நியூயார்க், ஐக்கிய அமெரிக்கா.
- பன்னாட்டு நீதிமன்றம் **(ICJ)** திஹேக், நெதர்லாந்து.
- பன்னாட்டு முன்னேற்ற அமைப்பு **(IDA)** வாஷிங்டன் ஐக்கிய அமெரிக்கா, (உலகவங்கி குழு)
- பன்னாட்டு நிதி - வேளாண்மை வளர்ச்சி வங்கி **(IFDA)** - ரோம், இத்தாலி.
- உலக தொழிலாளர்கள் அமைப்பு **(ILO)** ஜெனிவா, சுவிட்சர்லாந்து.
- பன்னாட்டு கடல்வாழ் அமைப்பு **(IMO)** லண்டன், இங்கிலாந்து.
- உலக நிதி நிறுவனம் **(IMF)** வாஷிங்டன் ஐக்கிய அமெரிக்கா.
- சர்வதேச பெண்கள் முன்னேற்றம், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி அமைப்பு **(INSTRAW)** சாந்தே டோமின்கே.
- பன்னாட்டு தொலை தொடர்பு மையம் **(ITO)** ஜெனிவா, சுவிட்சர்லாந்து.
- உலக வர்த்தகமையம் **(ITC)** - ஜெனிவா, சுவிட்சர்லாந்து **(UNCTAD / WTO)**
- ஐக்கிய நாடுகளின் கூட்டு செயல் திட்டம் - **HIV / AIDS (UNAIDS)** ஜெனிவா, சுவிட்சர்லாந்து.
- செய்தி சாதனமும் அமைதி நிறுவனமும் **(University of Peace)** பாரிஸ், பிரான்ஸ்.
- ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நலநிதி **(UNICEF)** நியூயார்க், ஐக்கிய அமெரிக்கா நாடுகள்.
- ஐக்கிய நாடுகளின் வார்த்தக முன்னேற்ற மாநாடு **(UNCTAO)** ஜெனிவா, சுவிட்சர்லாந்து.
- ஐக்கிய நாடுகளின் சர்வதேச மருந்து கட்டுப்பாடு **(Drug Control)** திட்டம் **(UNDCP)** வியன்னா, ஆஸ்திரியா.

- ஐக்கிய நாடுகளின் பெண்கள் நல முன்னேற்ற நிதி. (UNIFEM) - நியூயார்க், ஐக்கிய அமெரிக்க நாடு.
- ஐக்கிய நாடுகளின் முன்னேற்ற திட்டங்கள் (UNDP) நியூயார்க், அமெரிக்க ஐக்கிய நாடு.
- ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு (UNESCO) பாரிஸ், பிரான்ஸ்
- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டப்பணிகள் (UNEP) நைரோபி - கென்யா
- ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையம், (OHCHR) ஜெனிவா, சுவிட்சர்லாந்து.
- ஐக்கிய நாடுகளின் தொழில் துறை முன்னேற்ற அமைப்பு (UNIDO) வியன்னா, ஆஸ்திரியா
- ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதி - (UNFPA) நியூயார்க், ஐக்கிய அமெரிக்க நாடு.
- ஐக்கிய நாடுகளின் பல்கலைக்கழகம் (UNU) டோக்கியோ, ஜப்பான்.
- ஐக்கிய நாடுகள் தொண்டர்கள் (UNU) பான், ஜெர்மனி
- பன்னாட்டு அஞ்சல் கழகம் (UPU) பெர்ன், சுவிட்சர்லாந்து
- பெண்கள் காப்பகம் - நியூயார்க், அமெரிக்க ஐக்கிய நாடு
- உலகவங்கி குழுமம் - வாஷிங்டன், அமெரிக்கா ஐக்கிய நாடு
- உலக உணவு திட்டம் (WFD) ரோம், இத்தாலி
- உலக சுகாதார நிறுவனம் (WHO) ஜெனிவா, சுவிட்சர்லாந்து.
- உலக அறிவுசார் பொருள் கழகம் (WIPO) ஜெனிவா, சுவிட்சர்லாந்து
- உலக வானிலை அமைப்பு (WMO) ஜெனவா, சுவிட்சர்லாந்து
- உலக சுற்றுலா அமைப்பு - மேட்ரைட் - ஸ்பெயின்
- உலக வர்த்தக மையம் - (WTO) ஜெனிவா, சுவிட்சர்லாந்து



## I. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு : (SAARC)

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் ஒத்துழைப்புக் கழகம் துவங்க 1980-இல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு 1981-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கையின் தலைநகர் கொழும்புவில் முதல் மாநாடு நடைப்பெற்றது. இதில் ஏழு நாடுகளைச் சேர்ந்து வெளிநாடு அல்வல்களை கவனிக்கும் செயலர்கள் கலந்துக் கொண்டார்கள். இவர்கள் பிறகு ஒரு குழுவாக அமைந்து சார்க்கில் அங்கம் வகிக்கும் நாடுகளின் நோக்கங்கள் மற்றும் பணிகளை முடிவுச் செய்தனர். அவற்றை இந்த நாடுகளைச் சேர்ந்த உயர்மட்டத் தலைவர்கள் ஏற்றுக் கொண்ட பிறகு நடைமுறைக்கு வந்தன கூட்டுறவு, வேளாண்மை, ஊராக முன்னேற்றம், செய்தித் தொடர்பு, வானிலை, நல்வாழ்வு மற்றும் மக்கள் தொகை பற்றியத் துறைகளில் இந்த நாடுகள் எல்லாம் கூடி காண வேண்டிய வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை முடிவுச் செய்து நடைமுறைப்படுத்த ஏற்றுக் கொள்ளப்பட்டது.

### இவ்வமைப்பின் உறுப்பினர்கள்

பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலத்தீவுகள் நேபாளம், பாகிஸ்தான் மற்றும் ஸ்ரீலங்கா ஆகியவை அங்கம் வகிக்கின்றன.

### நோக்கம்

இக்கூட்டமைப்பிலுள்ள மக்களுடைய தன்மைபிக்கை ஒத்துழைப்பு ஆகிய துறைகளில் இதர வட்டார அமைப்புகள், உலக அமைப்புகளோடு தொடர்பு வைத்துக் கொண்டு தேவையான உதவிகளை பெற்று வளர்ச்சிக்கு ஒன்றுபட்டு பணியாற்றுதல்.

### வெளியுறவு அமைச்சர்களின் நிலைக் குழு

இந்நிலைக்குழுவில் உறுப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் அங்கம் வகிக்கிறார்கள். தேவைக்குத் தகுந்தார் போல இக்குழு அதன் கூட்டங்களை நடத்தலாம் இருப்பினும் வருடத்தில்

இரண்டு முறைகள் தான் கூட்டங்கள் நடைப்பெறுகின்றன இக்குழுவினுடைய பணிகள் நிறைவேற்றத்திற்கு தேவையான உபக்குழுக்கள் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றன. இக்குழுவுக்கு செயலகம் ஒன்று இருக்கிறது. இதனுடைய நிதி ஆதாரம், பணிகள், கடமைகள் மற்றும் இதர அம்சங்கள் அதனால் ஏற்படுத்தப்படும் திட்டக்குழுவால் முடிவுச் செய்யப்படுகிறது.

**செயலகம்**

இதனுடைய செயலகத்தில் ஆறு நெறியாளர்கள் மற்றும் பொதுப் பணியாளர்கள் இருக்கிறார்கள். இதனுடைய தலைமைச் செயலர் உறுப்பு நாடுகளின் அமைச்சர்கள் குழுவால் இரண்டு ஆண்டு பதவிக் காலத்திற்கு நியமிக்கப்படுகிறார். இச் செயலகம் உறுப்பு நாடுகளுக்கு இடையே உள்ள ஒற்றுமை, மற்றும் கூட்டுறவை வளர்க்க அதனால் இயன்ற அனைத்தையும் சிறப்புடன் செய்து வருகிறது.

## II. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு (ASEAN)

1967-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8-ஆம் நாள் இவ்வமைப்பு பேங்காக் நகரில் தோற்றுவிக்கப்பட்டது. இதில் இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் தொடக்கத்தில் சேர்ந்தன. பிறகு 1999-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ஆம் நாள் கம்போடியாவும் அதில் சேர்ந்துக் கொண்டது. தற்போது இந்தியாவும் அதனுடைய தோழமை நாடாக இருந்து வருகிறது.

**நோக்கங்கள்**

**இவ்வமைப்பின் நோக்கங்கள் வருமாறு**

தென் கிழக்கு ஆசிய நாடுகளின் ஓட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி சமுதாய மேம்பாடு மற்றும் பண்பாட்டு வளர்ச்சி ஆகியவற்றை அறிந்து முன்னேற்றம் காண்பதற்கான நடவடிக்கைகளை அமைதியாக முறையில் செய்வது.



2-வது ஐக்கிய நாடுகள் கழக கொள்கைகள் அதன் முடிவுகள் வழிக்காட்டுதல்களை ஆதாரமாகக் கொண்டு உறுப்பு நாடுகளில் சட்டம் ஒழுங்கு மற்றும் நீதி ஆகியவற்றைப் பின்பற்றி இந்த நாடுகளின் உறுதியான நிலை மற்றும் அமைதி ஆகியவற்றிற்காகப் பாடுபடுதல்.

**அமைப்பு**

இவ்வமைப்பின் கொள்கை முடிவிற்கு உறுப்பு நாடுகளின் தலைவர்கள் அல்லது அரசாங்கத் தலைவர்கள் பொறுப்பேற்கும் குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அல்லாமலும் வெளியுறவு அமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்று இதற்கு உதவியாக இருந்து அவ்வப்போது தகுந்த ஆலோசனைகளை வழங்கிவருகிறது.

இக்குழுக்களின் கூட்டம் ஆண்டுக்கொரு முறை நடைப்பெறுகிறது. தேவைப்படும்பொழுது கூட்டங்களை நடத்தவும் வகைச் செய்யப்பட்டிருக்கிறது.

இக்கூட்டங்களில் வேளாண்மை, காடுகள், பொருளாதாரம், எரிசக்தி, சுற்றுச்சூழல், நிதி ஆதாரங்கள், செய்தித் தொடர்பு, முதலீடு செய்தல், தொழிலாளர் நலம், ஏழ்மை ஒழிப்பு, அறிவியல் குற்றங்கள், சுற்றுலா இளைஞர்நலன் மற்றும் முன்னேற்றம் ஆகிய பொருள்கள் பற்றி விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்படுகின்றன.

இவ்வமைப்பிற்கு அமைச்சர் தகுதியுடைய பொதுச் செயலர் ஒருவர் நியமிக்கப்படுகிறார். இவர் ஐந்தாண்டு காலம் பதவியில் இருப்பார். இவருக்கு உதவியாக இதர அலுவலர்கள் திறந்த முறை தேர்வுக் கொள்கை அடிப்படையில் உறுப்பு நாடுகளைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

இவ்வமைப்புக்கு உதவியாக பிரதிநிதிக்குழுக்கள் பலவும் பல நாடுகளில் தகவல்கள் சேகரித்து வேண்டிய உதவிகளை அவ்வப்போது செய்கின்றன.

**அரசியல் கூட்டுறவு**

சகிப்புத்தன்மை அடிப்படையல் பிரதேச ஒற்றுமை உறுதிப்பாடு மற்றும் முன்னேற்றம் ஆகிய துறைகளில் இந்நாடுகள் அரசியல் முடிவுகளை எடுக்கின்றன. இவைகளை நிறைவேற்றும்போது தன்னம்பிக்கை, தற்காப்பு, கூட்டுறவு, சகோதரத்துவம் மற்றும் ஒருவரை ஒருவர் மதித்து நடக்கும் கொள்கைகள் அடிப்படையில் அரசியல் முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

இதனால் ஏறத்தாழ 30 ஆண்டுக்காலமாக இந்நாடுகளில் ஒற்றுமை நிலவுகிறது. எதிர்ப்பு அநேகமாக இல்லை.

**பொருளாதார மற்றும் பணிசார் ஒத்துழைப்பு**

இக்கூட்டமைப்பு தோன்றிய போது உறுப்பு நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் மற்றும் வியாபாரம் சொல்லும்படியாக இலலை. ஆனால் 1967 முதல் 1970 வரை அதற்கும் பிறகு 1977 வரையிலான காலக் கட்டங்களில் இந்த நாடுகள் இத் துறைகளில் பல சலுகைகளை அளித்தன.

அதனால் வர்த்தகம் நிதி மற்றும் பொருளாதாரத் துறைகளில் முதலீடு செய்யும் துறையில் தடைகள் நீக்கப்பட்டன. இதனால் நெடுஞ்சாலைகள், இரயில்வே அமைப்புகள், முக்கியமானத் துறைமுகங்கள் மற்றும் கால்வாய், கடல் மற்றும் விமானப் போக்குவரத்துத் துறைகளில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன.

இதன் காரணமாக எல்லாத் துறைகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களும் வளர்ச்சிகளும் ஏற்பட்டதனால் மக்களினுடைய நலன் பாதுகாக்கப்படுகிறது.

**வெளியுறவுகள்**

2020-ஆம் ஆண்டுக்குள் விரைந்து முன்னேற்றம் காண வேண்டும் என்ற குறிக்கோளோடு இக்கூட்டமைப்பு நாடுகள் இதர உலக நாடுகளுடன் தங்களுடைய சாதனைகள் வளர்ச்சிகள், முன்னேற்றம் ஆகியவற்றை பகிர்ந்துக் கொள்கின்றன.



இந்த அடிப்படையில் 1992-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்த நாடுகளின் உச்சி மாநாட்டில் உலகில் உள்ள இதர நாடுகளோடு தொடர்ந்து நல்லுறவுகளை ஏற்படுத்திக் கொண்டு முன்னேற்றம் காண வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. எனவே ஆஸ்திரேலியா, கனடா, சீனா, நியூசிலாந்து, கொரியா போன்ற நாடுகளோடு நல்லுறவுகள் ஏற்படுத்திக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**III. அணிசேரா இயக்கம் (NAM)**

அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியன் நாடுகளுக்கிடையே 1949-89 ஆகிய காலக்கட்டத்தில் பனிப்போர் நடந்த போது அணிசேரா இயக்கம் தோன்றியது. இவ்வியக்கம் ஆரம்பத்தில் எழை நாடுகளுக்காக என்று ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் பிறகு எண்ணெய் வளம் மிக்க நாடுகளும் இதன் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

1995-ஆம் ஆண்டு இதன் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 113. இதனில் 85 எண்ணெய் உற்பத்திச் செய்யும் நாடுகள் இருந்தன. உலகப் பொருளாதார அடிப்படைக்கு மேல் வருமானமுள்ள நாடுகள் ஏழு மட்டுமே இருந்தன.

ஆனால் அணிசேரா நாடுகளினுடைய கூட்டு மக்கள் தொகை உலக மக்கள் தொகையில் பாதிக்கு மேலாகும். அணிசேரா இயக்கம் என்பது கொள்கை அல்ல. ஆனால் ஒரு நடைமுறை. இந்த இயக்கம் எந்த அணியையும் சேர்ந்திராமல் நடுநிலை வகித்தது.

துவக்கம் : சில சமயங்களில் பொதுப் பேரவையால் அழைக்கப்படும் உலக மாநாடுகளிலும் இவை விவாதிக்கப்பட்டு நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகளின் கழக பொதுச் செயலர் மற்றும் செயலகம் இந்த செயலகத்தில் பணிபுரியும் பல நாடுகளைச் சேர்ந்த ஊழியர்கள் போன்றவர்களாலும் நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

உலக நாடுகள் அமெரிக்காவையும் சோவியத் யூனியனையும் தலைமையாகக் கொண்ட தனித்தனி அணிகளாக பிளவுப்பட்டிருந்தன. இருப்பினும் 1920-இல் முன்றாம் அணி ஒன்று அணிசேரா இயக்கமாக தோன்றியது.

இந்த இயக்கம் இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு சுதந்திரம் பெற்ற நாடுகளை கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்தோனேசியாவில் பாண்டுங் என்ற நகரில் 1955-இல் ஒரு மாநாடு நடைப்பெற்றது. இந்த மாநாட்டில் அணி சேரா நாடுகள் இயக்கம் ஆரம்பிக்க பூர்வாங்க முயற்சிகள் நடைபெற்றன.

இதில் இந்தியப் பரதமர் பண்டித ஜவஹர்லால்நேரு, கானா நாட்டு பிரதமர் என்குரமா எகிப்து நாட்டுத் தலைவர் அப்துல் நாசர், இந்தோனேசியா நாட்டுத் தலைவர் சகர்ணோ மற்றும் யூகோஸ்லோவியா நாட்டுத் தலைவர் டிட்டோ ஆகியவர்கள் எல்லோரும் சேர்ந்து பெல்கிரேடு நகரில் நடைப்பெற்ற மாநாட்டில் இவ்வியக்கத்தை 1961-இல் ஏற்படுத்தினார்கள்.

**பனிப்போரின்போது அணி சேரா இயக்கம்**

பனிப்போர் நடைபெற்றக் காலத்தில் இவ்வணியைச் சார்ந்த நாடுகளை தங்களின் பக்கம் இழுக்க அமெரிக்காவும் சோவியத் யூனியனும் பல முயற்சிகளை மேற்கொண்டன. அவற்றிலிருந்து தான் அஸ்வான் நதி அணைக்கட்டு கட்டுவதற்கு எகிப்து நாட்டிற்கு சோவியத் யூனியன் செய்த பொருளுதவியாகும்.

வட அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகளைப் போல அணிசேரா நாடுகள் ஒற்றுமையாக இருக்க முடியவில்லை. இதனால் வல்வரசுகள் அவைகளை தங்கள் பக்கம் இழுப்பதற்காக பொருளாதார மற்றும் இதர உதவிகளை செய்ய முன் வந்தன.

இந்த இயக்கத்தில் சேர்ந்ததின் காரணமாக அணிசேரா நாடுகளின பலம் மற்றும் மதிப்பு உயர்ந்தது.

ஐக்கிய நாடுகள் கழக பேரவையிலும் இதர அமைப்புகளிலும் அணிசேரா நாடுகள் பல சமயங்களில் ஒன்று சேர்ந்து



செயலாற்றினார்கள் இருப்பினும் வல்லரசுகளின் ஆதிக்கத்தையும் அவர்களுடைய பலத்தையும் இவர்களால் சந்திக்க முடியவில்லை இவ்வியக்கத்தில் ஆரம்பத்தில் 25 நாடுகளும் அதன்பிறகு 113 நாடுகளும் பார்வையாளர் தகுதியுடைய 17 நாடுகளும் 2000-ம் ஆவது ஆண்டில் அங்கம் பெற்றிருந்தன.

இவ்வியக்கத்தில் ஆசியா, ஆப்ரிக்கா, தென் அமெரிக்கா, மத்திய அமெரிக்கா, கரிப்பியன், மால்டா போன்ற பகுதிகளைச் சேர்ந்த நாடுகள் சேர்ந்திருந்தன. யூகோஸ்லோவியா மட்டும் தான் ஐரோப்பாவைச் சார்ந்த நாடாகும். இவ்வியக்கம் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை அதன் கூட்டத்தை நடத்தியது.

பனிப்போர் முடிந்த பிறகு இவ்வியக்கம் தோற்றுவிக்கப்பட்ட முக்கியக் காரணி இல்லாமல் போயிற்று. இருப்பினும் ஏழ்மையை அகற்றுதல் சுற்றுசூழலைப் பாதுகாத்தல் அணுகுண்டு தயாரிப்பதை தடுத்தல் மற்றும் போதைப் பொருட்கள் கடத்தலை ஒழித்தல் ஆகிய நோக்கங்களை அடைவதற்காக இந்த இயக்கம் தொடர்ந்து இயக்குகிறது.

**அணிசேரா இயக்கத்தின் தற்கால பொருத்தம்**

பனிப்போர் முடிவிற்கு வந்துவிட்டாலும் தீவிரவாதம், புறக்கணித்தல், கொடூரத்தன்மை வாய்ந்த தேசியம், பயங்கரவாதம், உலக அழிவிற்கு வழிவகுக்கும் ஆயுதக்குவிப்பு போன்ற சக்திகள் இன்றும் உலகை பயமுறுத்திக் கொண்டு இருக்கின்றன.

அது மட்டுமல்லாமல் உலக மயமாக்குதலில் புதுப்புது பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவை எல்லாம் தற்கால உலகப்பொருளாதாரம், நாடுகளுக்கிடையேயான ஒற்றுமை ஆகியவற்றை பாதிக்கின்றன.

இவற்றை எதிர்கொள்வதற்கும் அவைகளால் ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கும் தற்சால உலகமைப்பில் அணிசேரா நாடுகள் பெரும் பங்காற்ற முடியும். (உ.ம்) முதலீட்டாளர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் பன்னாட்டு

வர்த்தக அமைப்புகள் இதர நாடுகளில் அவர்கள் மேற்க் கொண்டுள்ள வர்த்தகத்தில் ஏற்படும் சட்டப்பிரச்சினைகள் மற்றும் உலகம் தழுவிய இயற்கை சூழல்கள் சட்டப்பிரச்சினைகள் மற்றும் உலகம் தழுவிய இயற்கை சூழல்கள் பராமரிப்பு வர்த்தக மற்றும் பொருளாதார நடவடிக்கைகளிலும் பெரிய நாடுகளின் பாதிப்பு இல்லாமல் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

ஜி.8 நாடுகளுடைய பாதிப்பு நடவடிக்கைகளை எதிர்த்து பொருளாதார துறையில் பின்தங்கிய நாடுகளுக்கு உதவி செய்ய முடியும்.

**இவைகள்**

1. ஐக்கிய நாடுகள் கழகம் மற்றும் பாதுகாப்பு சபை எடுக்கும் முடிவுகளுக்கு கட்டுப்படாமல் இருத்தல்.
2. எதேச்சதிகார போக்குகளை பின்பற்றி மற்ற நாடுகளை துன்புறுத்தும் அடாவடி நாடுகளின் போக்கு, மற்றும்.
3. மூன்றாவது உலக நாடுகளுடைய பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக முன்னேற்றத்தை தடைப்படுத்தும் முயற்சிகள் ஆகிய துறைகளில் அணி சேரா நாடுகளின் இயக்கம் சிறந்த பணியாற்ற முடியும்.

மேலே கூறப்பட்ட துறைகளில் இந்தியா தகுந்த நடவடிக்கை களை எடுத்து விரைவான முன்னேற்றம் காண்பதற்கு சிறந்த பணியாற்ற முடியும். அணிசேரா நாடுகளிடையே புதுஉத்வேகம் தற்போது காணப்படுவதால் இந்தியா, இந்த துறையில் முயற்சி மேற்கொள்வது பொருத்தமாக இருக்கும்.

குறிப்பாக பெரும் வல்லரசுகளின் போட்டியில்லாமல் ஒரே ஒரு வல்லரசு என்ற நிலைமையில் உலகம் இப்போது முன்பைக் காட்டிலும் இன்னும் சிறப்பாக செயலாற்ற முடியும். அதற்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்ற கருத்து நிலவுகிறது.



**உலக அரசியலமைப்பின் பண்புகள்.**

இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் உலக அமைப்பின் பண்புகள் என கீழ்க்கண்டவற்றை குறிப்பிடலாம்.

**கொள்கைப்பிடிப்பு**

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோஷலிசக் கொள்கைகள் மறைந்து மக்களாட்சி முறை சார்ந்த முதலாளித்துவ போக்கு தற்போது மேலோங்கி இருக்கிறது.

அமெரிக்காவை சேர்ந்த மக்கள் தொடர்பு சாதனங்கள் பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களின் அபகரிக்கும் போக்கு பொருளாதார சுரண்டல் ஆகிய பண்புகள் தொழிற் நுட்ப வளர்ச்சி காரணமாக தற்போது மேலோங்கி இருக்கிறது. சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் அமெரிக்கா, மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கம் மேலோங்கி உள்ளது.

**குறிக்கோள்கள்**

ஜி. 7 நாடுகள் அமைப்பு அவர்களுடைய நிதி நிறுவனங்கள் வளர்நதுவரும் உலக வர்த்தகம் ஆகியவை இதர நாடுகளின் வளர்ச்சியில் பெரும் பங்கு வைக்கின்றன.

இவை யெல்லாம் சரியான முறையில் நடைபெறுவதாக எடுத்துக் கொள்ள முடியாது. ஏனென்றால் ஜி.7-நாடுகள் நல்லா வகையிலும் பலம் பொருந்தியவை. இவைகளன் ஆதிக்கத் திலிருந்து பாதுகாத்துக் கொள்ளுதல் பெரிய நோக்கமாகும்.

**அதிகார விநியோகம்**

இரு உலக ஆதிக்க சக்தி மறைந்த ஒரே உலகமென்ற யுத்தி மேலோங்கியிருக்கிறது. இதில் முன்னணியில் இருப்பது ஜி.7-நாடுகள்.

இந்த நாடுகள் அமெரிக்கா மற்றும் பன்னாட்டு நிதி நிறுவனம் ஆகியவற்றின் ஆதரவோடு மூன்றாவது உலகம் என்று

சொல்லப்படுகின்ற முன்னேறிவரும் நாடுகளின் மேல் ஆதிக்கம் செலுத்துகின்றன. இந்த ஆதிக்கத்தின் தன்மையை பின் வருமாறு குறிப்பிடலாம்.

அ) பாதுகாப்பு – உலக முழுவதற்கும் தலைமை தாங்குவதற்கான ராணுவ வளர்ச்சியும் மற்றும் அதிகாரத்தையும் அமெரிக்காப் பெற்றுள்ளது.

ஆ) பண்பாடு – அமெரிக்கா, ஜெர்மனி மற்றும் ஜப்பான் ஆகிய கூட்டமைப்பின் பங்கு செய்து கொள்ளப்பட்ட குழுவின் அதிகாரம் மேலோங்கி இருக்கிறது.

இ) அரசியல் / இராஜ தந்திரம் – வளர்ச்சி காணாத நாடுகளின் கட்டுப்படுத்தும் தன்மை இப்பொழுது குறைந்துவிட்டது. இருப்பினும் அந்தந்த பகுதிகளில் மூன்றாம் உலகத்தை சேர்ந்த நாடுகளுடைய முக்கியத்துவம் குறையாமல் அவ்வாறே இருக்கிறது.

**இந்தியாவிற்கு சாதகமான சூழ்நிலைகள்**

இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகள் சேர்ந்த நாட்டிற்கு இப்போதுள்ள உலக நடப்பில் சாதகம் மற்றும் பாதகமான சூழ்நிலைகள் இருக்கின்றன.

அவைகள இந்தியாவிற்கு நன்மை தரக்கூடிய சில கீழே தரப்பட்டு இருக்கின்றது.

அ) அமெரிக்காவோடு உள்ள உறவில் தற்போது பாகிஸ்தானைக் காட்டிலும் இந்தியாவிற்கு சாதகமான சூழ்நிலைகள் இருக்கின்றன. ஏனெனில் இந்தியா, பரப்பளவிலும் மக்கட்தொகையிலும் பொருள் விற்பனைச் சந்தையிலும் மற்றும் இதர துறைகளிலும் மேலோங்கி நிற்கிறது. இதனால் ஜி7 நாடுகள் அதிக அளவில் இந்தியாவிற்கு உதவி செய்ய விரும்பலாம்.



ஆ) இரு உலக பேரரசுகளுக்கிடையேயான போட்டிகள் தற்போது மறைந்து விட்டதனால் அமெரிக்காவோடு உள்ள இந்தியா உறவு மேம்பட்டுக் காணப்படுகிறது.

இ) சமீபத்தில் இந்தியா மற்றும் சீனா அரசுகளுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தம் ரஷ்யாவினோடு உள்ள உறவுகளை பாதிக்காது என தோன்றுகிறது.

ஈ) தெற்காசிய நாடுகளில் இந்தியாவிற்குள்ள முக்கியத்துவம்.

உ) ரஷ்யா மற்றும் இதர சோவியத் குடியரசுகளிலிருந்து நவீன ஆயுதங்களை செலவில்லாமல் பெற்று இந்தியாவினுடைய தொழிற் நுட்பத்தை வளர்த்துக்கொள்ளும் சூழ்நிலை.

ஊ) இதர நாடுகளில் முதலீடு மற்றும் உயர் தொழிற்நுட்ப பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

எ) உலகப்பொருளாதாரத்தில் இந்தியா தனக்கென சில பகுதிகளை தேர்ந்தெடுத்து அதனுடைய ஏற்றுமதிக்கு ஊக்கம் அளிக்க முடியும்.

ஏ) மூன்றாம் உலக நாடுகளின் வளர்ச்சியடைந்த நாடு என்ற அடிப்படையில் அவைகளுக்கு தலைமை ஏற்கும் தகுதியுடையது.

ஐ) இந்தியாவும், பிரேசிலும் ஓர் புதிய உலகத்தையும் அதற்கான சூழ்நிலையையும் வெற்றிகரமாக செயல்படுத்தக்கூடிய நிலையில் இருக்கின்றன.

**இந்தியாவின் முன் உள்ள சவால்கள்**

அ) ஐக்கிய நாடுகள் கழகத்தில் பாதுகாப்பு சபையில் இந்திய நிரந்தர உறுப்பினர் ஆகவேண்டும் கட்டாயம்.

ஆ) பொருளாதாரத் துறையில் இந்தியா வளர்ந்த நாடுகளோடு போட்டியிட வேண்டிய சூழ்நிலை.

இவைகளை இந்தியா சமாளிக்க கூடிய வளர்ச்சி அடைகின்ற போது இப்பகுதியில் இந்தியாவின் ஆதிக்கம் மேலோங்கும்.

## வினாக்கள்

### பகுதி - அ

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக**

கீழ்வருவனவற்றுள் எது உலக அமைப்பு இல்லை

(அ) சார்க்

(ஆ) ஐக்கிய நாடுகள் கழகம்

(இ) பன்னாட்டு நிதி நிறுவனம்

(ஈ) பன்னாட்டு மனித உரிமை கழகம்.

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக**

பாதுகாப்பு சபையில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை

**III. சரியா அல்லது தவறா என எழுதுக**

ஐக்கிய நாடுகள் கழக பாதுகாப்பு மன்றத்தில் இந்தியாவிற்கு தடுப்பாணை அதிகாரம் இருக்கிறது.

### பகுதி - ஆ

1. உலக அரசியலமைப்பு நிறுவனம் என்பதை விவரிக்க.
2. "ஒரே உலகம்" - என்ற சொல்லின் பொருள் என்ன?

### பகுதி - இ

1. ஐக்கிய நாடுகள் கழக பொதுப் பேரவையின் பணிகள் மற்றும் அதிகாரங்களை விளக்குக.
2. தெற்காசிய கூட்டமைப்பு நாடுகளின் தேவையை விளக்குக.

### பகுதி - ஈ

1. தற்போதை உலக நிறுவனம் என்ற முறையில் அணிசேரா நாடுகளின் பொருத்தத்தை விவரிக்க.
2. தற்கால உலகில் ஐக்கிய நாடுகள் கழகம் அமைதி ஏற்படுத்து வதற்கு அளிக்கும் பங்கு, பணியினை திறனாய்க.